


உ


கடவுள் துணை.



பகவற்கீதை-மூலமும் உரையும்.



பாயிரம்.



டுகொள்க. ஐவகைப்பொருளென்பது-பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-என்கின்ற பஞ்சபூதங்களுக்கும்பொருந்தும்.) (௧)

மன்னருள்விஜயன்கேட்ப வாளமர்தனமேலிட்டு......... ...*
மின்னவிர்படைக்கைமாய னுரைத்தமெய்ப்பொருளையெல்லாம்
பன்னருமறைகள்கோத்த பழமுனிபணித்தவண்ண ... ...*
மென்னறிவளவினாலே தமிழினாலியம்பலுற்றேன் ... ...*

(இ-ள்) எல்லாரையுங் கொல்லலாகாதென்று அவர்கள்மேல் கிருபை வைத்து அருச்சுனன்கேட்க அவனை யெல்லாரையுங் - கொல்லத்தக்க கீர்த்திபிரகாசிக்கிற சன்னையின்மேலிட்டு ஒளிபிரகாசிக்கிற பஞ்சாயுதந் தரித்த திருக்கைக்களையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி யுபதேசித்தஉண்மைப்பொருளையெல்லாம் ஓதவரிய பழைய வேதங்களை நாலாகக்கோத்த வியாசமஹாமுனி கிரந்தமாகவருளிச்செய்தபடிக்கு அடியேனுடைய அறிவு எவ்வளவோ அவ்வளவினாலே தமிழாகச் சொல்லத் தொடங்கினேனென்றவாறு. * (அறிவளவென்பதனால் வேதத்தை கோர்வையிட்டவருடைய அறிவினாலே செய்ததை அடியே னறிவளவினாலேசொல்லுகிறது
...ற்பமாகையால் அவர் சொன்னதுபோலிருக்காமற் பெரிதே...
...லைதாயினும் அடியேன் ஆசையினா...
...விவுக்கு ஏட்...

பாயிரம்.—

{ கிருஷ்ணஸ்வாமி செப்பிரமாக உபதேசித்த திருவார்த்தையை எல்ரு மோதப்பட்டசிறப்பையுடைய பரமார்த்த தரிசனமென்றுசொல்லப்பட்ட திருநாமமுடைய இக்கீதையைத் தமிழினலேசொல்லுவாமென்றவாறு * (இதனுலிந்நூற்பெயரும் பயனும் கூறியது - இதனுன் அவையடக்கமும் வினையிலுவமமும் பயனுவமமுங் கண்டுகொள்க, இவைநான்கும் பாயிரம் இந்நூலுக்குப் பரமார்த்த தரிசனமென்றுகிரந்தப்பெயர் தமிழிற் பரமபொருட்காட்சியென்று மொழிமாறுபெயர் வழங்குகிறது,) (௫)

பாயிரம் முற்றுப்பெற்றது.

முதலாவது.

சே . க - அத்தியாயம்.

வாக்கியார்த்தம்.

கௌரவர்களும், பாண்டவர்களும், குருக்ஷேத்திர பூமியிலேசண்டைக்குப்போன அன்று திருதராட்டிரன் சஞ்சயனுடனே விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில் வியாசமஹாமுனிவந்து விசாரந் தீரச்சொன்னார் கேட்ட திருதராட்டிரன் சண்டையைப் பார்க்கமாட்டேன் கேட்கவேண்டுமென அதற்கு நல்லதென்று சஞ்சயனுக்குத்தூரப்பார்வையுந் தூரகேள்வியுமுண்டாகவும் ஆயுதம்படாமலும் முன்பின் வாராமலுந் திரிகால ஞானமுமிருக்கத்தக்கதாக வரங்கொடுத்தேன் இவனலேயெல்லாங் கேட்டறியென்று சொல்லிப்போனார் அவர்போனபின் சஞ்சயன் சண்டை சமாசாரஞ் சொல்லிக்கொண்டுவந்த பத்தாநாள் - இராத்திரி சொல்லுகிறதில் பீஷ்மருக்குச் சேனாதிபதிபட்டங்கட்டிமுதல்நாள்சண்டைக்கு எதிர்த்துப் போர்க்களத்தில் நின்றபோது நடந்த - செய்திசொல்லுகிறது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

புண்ணியபூமியென்னும் புகல்குருபூமிதன்னி............ *
னண்ணியபின்னர்நன்னா ளவர்களுநமருமாங்குக்... ... ...*
கண்ணியதென்னையென்று கண்ணிலாவரசன்கேட்பத். ....*
தண்ணியவினியசொல்லாற் சஞ்சயனுரைக்கலுற்றான்... ...*

(இ-ள்) உலகத்திற் புண்ணியபூமியென்று சொல்லப்பட்ட கீர்த்திபெ
குருக்ஷேத்திரத்தில் சண்டை பண்ணவேண்டிக் [illegible]

ஞராகிய பாண்டவர்களும் நம்முடையவர்களும் அங்கே நினைத்தெ னவென்று கண்ணில்லாததிருதராட்டின்கேட்கஅதற்குக்குளிர்ந்த ய சொல்லினாலே சஞ்சயன் சொல்லத்தொடங்கின னென்றவாறு.

போர்முகமாகின்ற புல்லலார்படையைப்பார்த்துக்.........*
கார்முகவுழவனுய கலைமறையவனைநோக்கி.................*
வார்முரசதிருந்தானை வாளரவுயர்த்ததோன்ற...............*
மேர்முகின்முழக்கமென்ன வின்னனவியம்பலுற்றான்... ...*

(இ-ள்) தோலாற்கட்டின பேரிகை- முழங்கப்பட்ட-சேனைகளுடனே பிரகாசமுடைய பாம்பைக் கொடியாக வுயரப்பண்ணின துரியோதனன் சண்டைமுக மாகின்ற சத்துருக்களான பாண்டவர்க ளுடையசேனை யைப்பார்த்து வில்லாகிய கலப்பையாலே பகைஞராகிய-நிலத்தை யுழு கிறவராகிய சாஸ்திரவேத வல்லவரான - துரோணரைப்பார்த்து நீருண்ட அழகிய மேகமுழக்கம்போல இவ்வண்ணமாகச் சொல்லத்தொடங் னொ னென்றவாறு. (உ)

கொச்சகக்கலிப்பா.

வீமனையும்விஜயனையு நிகர்தருபோர்வில்லாள..............*
ரோர்மருவுசிலையபிம னுள்ளிட்டாரெனப்பலருந்...... ....*
தார்மருவுதலைவர்களாய்த் தலைப்பெய்ததானையினை... ......*
மாமருவுபெருந்தேராய் பாரொன்றுமறித்துரைப்பான்... ...*

(இ-ள்) வீமனையும் - அருச்சுனனையும்-ஒப்பாகத்தரப்பட்ட சண்டைக்கு உபகாரமான ஆயுதங்களையுடையவர்கள் அங்கு தங்கின வில்லையுடைய அபிமன்னன் முதலான உள்ளிட்டாரென்ற அநேகருந் தம்மை மாலைதரித்துச் சண்டைக்கு ஆயுத்தமான நாயகர்களாகப் - பின்னிட்டு முன்னிட்டசேனையைக் குதிரைகள்கட்டின பெரியதேரையுடைய ஆசாரியரோ பாருமென்று திரும்பவுஞ்சொல்லுவா னென்றவாறு, (௩)

கலிவிருத்தம்.

கங்கையாள்பெறு காதலனுட்புக.............................*
றுங்கர்கோனென தாருயிர்த்தோழனு.......................*
நங்கள்தாழ்துணை நம்பிநீயுமிங்.. .. ..*
குங்களாருயி ரொன்பொருட்டொக்குநீர்...................*

(இ-ள்) கங்காநதி யானவள்பெற்ற குமாரனுகிய பீஷ்மரும்கீர்த்திபெற்ற அங்கதேசத்தாருக்கு அரசனை னென்னுடைய அரிய உயிர்த்தோழனுகிய கன்னனும் நம்முடைய செல்வத்துணையான- அசுவத்தாமாவும் நீரும் மற்றவிடங்களிலே யேற்றக்குறைச்சலாயிருப்பினும்அன்பினாலே இங்கே என்னிமித்தமாக உங்களுடைய அரிய- சீவன்களெல்லாம் ஒத்திருக்குந்தன்மை-என்றவாறு, (௪)

அன்றியேயு மரசரனேகரால்...... ....*
வென்றியேதர வல்லதுவேண்டலா......................*
ரொன்றியேத மெனக்குறுமேலுயிர் ... .*
பொன்றியேயது போக்குதன்மேற்கொண்டார் ... ...*

(இ-ள்) அல்லாமலும் என்மேலன்பினாலே வுங்களை யொப்பாக இசைப்பட்ட அரசர் அனேகம்பேர் அவர்கள் எனக்கு வெற்றியேதரவேண்டுவர், வெற்றியல்லாத தோல்வியை வேண்டார் எனக்கு அவசியமான குற்றம்வந்துகலந்தாலுமாகிற்றங்களுடைய சீவனைவிட்டே யந்தக் குற்றத்தைப்போக்கிச் செய்ததை வருவிக்கிற உத்தியோகத்தை மேற்கொண்டார்க ளென்றவாறு. (௫)

எய்தவெங்கள் பிதாமகனேவலாற் ....*
கைகொள்கின்ற கடற்படை கண்ணுறீல் ....*
வெய்யவீமன் வியப்பொடுகாத்தடு............ ....*
மைவர்தம்படைக் காற்றவற்றாகுமோ ....*

(இ-ள்.) சேனாதிபதியாகிவந்த எங்கள்பாட்டனை பீஷ்மருடைய ஏவலினாலே கைகலந்துகொள்ளுகிற கடலையொப்பான சேனையைப்பார்த்தாற் கொடுமையான வீமன் அதிசயத்துடனே காக்கப்பட்டபஞ்சவர் களுடையசேனைக்கு ஆற்றத்தக்கதாகுமே-எ-று. * (இதனுள்வீமன்மேற்றனக்கிருக்கின்ற பயத்தைச்சேனைமேல்வைத்துச்சேனை நடுங்குமென்றும் பாட்டன்கிழவனென்றும் சேனையைச் சேனாதிபதிகாப்பார் நமக்கென்னவென்று பராமுகமாயிராமலுந் தெரிவிப்பதுகுறிப்பு) (௬)

மேல்வகுத்ததுகாமின்விராந்தெனு... ....*
மேல்வயிற்றிறல்யாதவர்தம்மொடுங் ... .*
கால்வளைத்தசிலைக்கங்கையாண்மகன்....................*
வால்வளைத்திரடன்னையும்வாய்மையா...................*

(இ-ள்,) இனிமேல் யூகாகாரமாக வகுத்தவிடத்தில் எவரெவரையெவ்வெவ்விடங்களிலே யெங்கள்பாட்டனார் வைக்கிறாரோ, அவ்வவ்விடங்களிலே அவரவரிருந்து அதைச்சீக்கிரப்பட்டுக்காத்துக் கொள்ளுங்களென்கிறபோது திறமையுடைய யாதவர்களுடனே நின்று நாணையேற்றிக்காலவளைத்துவில்லைத்தரித்தகங்காபுத்திரனாகியபீஷ்மர்வெள்ளைநிறமாக சங்குக்கூட்டங்களை வாயில்வைத்து(எ-று.) (௭)

வஞ்சர்செய்த வினைமறலிக்குண ....*
வெஞ்சமர்விளைந்தென்னவும்வேந்தர்கோ ....*
னெஞ்சமுண்மகிழ் வெய்தவுநேரலா.....................*
ரஞ்சவுங்கனன் றூர்த்தனர்சங்கமே ... .*

(இ-ள்) வஞ்சகர் செய்தகாரியம் யமனுக்குப்பொசிக்கக் கொடுமையான சண்டைவிளைந்ததென்னவும்இராஜாதிராஜனைத்துரியோதனனுடைய

துரியோதனன் முன்னோசங்கோஷமுடையவும்பகைகளுமான பாண்டவர்க்
கப்படாந் கோபித்துச் சங்குகளை முழக்குகிறார்கள். (எ-று)(மேலொன்
றும் வந்தகவிப்பாட்டும் ஒருதொடர்.)

கலி நிலைத்துறை.

ஆர்த்தனவளைகளெங்கு மதிர்ந்தனபல்லியங்கள் ....*
போர்த்திடப்படைநின்றப்பாற் புவனமீரேழும்பூத்த ......*
தீர்த்தனுந்தனதுசங்கைச் செங்கையால்வாங்கிக்கொண்டு *
கார்த்திரள்முழக்கமென்னக் கடல்கலர்ந்தார்த்ததென்ன...*

(இ-ள்.) சங்கங்கள்முழங்கின - பலவாத்தியங்களும் எங்குமதிர்ந்த சேனைகள்நின்று இந்தப்பூமியைப்போர்த்துக்கொண்டதுபோல நிறைய அப்போது பதினாலுலகத்தையும்பெற்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமியுந் தன்னுடையபாஞ்சசன்னியமென்கிற சங்கைச் சிவந்ததிருக்கையாலே வாங்கிக்கொண்டு மேகக்கூட்டங்களின் முழக்கமென்று சிலர்சொல்ல எட்டுத்திக்கொன்றாகக் கூடிப்பொங்கியெழுந்துமுழங்கினவென்று சிலர்செ. (எ-று.)

கலி விருத்தம்.

வையமனைத்தையும் வாரிமுன்வைக்குஞ் ... .*
செய்யதிருப்பவ ளத்திடைவைத்தா ....*
னாவமெமக்குயி ராதலினாலே...... ... .*
யுய்வதுமக்கிலை யென்பதையொத்தே ... .*

(இ-ள்.) முற்காலத்திலே பூமியெல்லாவற்றையும்வாரியுள்ளேவைக்கப்பட்ட சிவந்தபவழத்தையொப்பான திருவதரத்தில்வைத்து முழக்கினா - அதெப்படியிருந்ததென்றால், பஞ்சவர்களெமக்குச் சீவனாகையாலேதப்பிப்பிழைப்பதுஉமக்கில்லையென்றுஅண்டகடாகமறியச்சொன்னதையொத்ததென்றவாறு. * (ஆர்த்தனவென்றகவியும். வையமனைத்தையென்றகவியு மொருதொடர், சகலசீவன்களும் உமக்கரிதென்று பாடமாயில், உங்களுக்கரிது பஞ்சவருக்கெளிதெனவரும், இல்லையென்பது நிச்சயம், அரிதென்பது - சந்தேகம், ஆகையாலே சந்தேகமாகத் தெய்வஞ்சொல்லாததினாலே அரிதென்றுபாடம் ஓதக்கூடாது) (ம)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

தருமன்பலவீமனருச்சுன னகுலன்சகாதேவன் ......*
திருமருவுசயம்பவுண்டரந் தேவதத்தமெழின் ... ...*
மருவுசுகோடகமணிபுட்பகக் கொடுமெனவியற்றி ... *
றுராமனையகுராலெதிர்ந்தோர் செவிப்போர்ப்பவூதினான்.

(இ-ள்,) இப்படிச்சுவாமியானவர் பாஞ்சசன்னியமென்கிற சங்கை கிளவு... தருமராஜா ...ப்பும்பொருந்திய விசயமென்கிற சங்கம்

ஓதலாகா நிமித்தங்க ளொன்றோபல்லபலவுளவாங்...........*
காதலரைக்கொன்றுபெறும் பயனேதொன்றுங்காணேனே. *
ஞாதலாலிவ்வெற்றியுட னரசுரிமையானதனை......... .. *
ஏதலாவதென்கின்ற தியாதினைப்பொருட்டோவிழைப்பாயால்...*

(இ-ள்) சொல்லலாகாத நிமித்தங்க ளொன்றுதானேயல்ல அனேக முண்டாகிறது என்மேலே அன்புடையவர்களைக்கொன்று பெறப்பட்ட பிரயோசனமோ நான் ஒன்றுங்காணேன் ஆதலால் வெற்றியுடனே அரசுரிமையான அதனை விரும்பிக்கொள்ளாகு முலகாசமென்ன நேசுகிற எச்சாகிறது இப்போது இந்தச்சண்டை பலகாரியித்தமோ சொல்லுவாய்-எ-று.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அரசம்வரசால்வரும்போக மதனாலின்பமெய்துமேலோ................. *
உரைசெய்பொருள்களியாவர்சிலர் பொருட்டாலுலகை யுழைந்தடைவார்
வரைகொள்புயனேயவர்தம் பொருளைத்தங்கள்வாழ்நாளும்... ... ...*
நிரைசெய்தொருவரொருவரின்முன் னிகிலவந்துநின்றாரால்........ ... ...*

(இ-ள்) மலையைக் குடையாகக்கொண்ட புயத்தையுடைய சுவாமி அரசு அந்த அரசால்வருகிறபோகம் போகத்தினாலே வருகிற சுகமென்று சொல்லப்பட்ட மூன்றுபொருள்களையுஞ் சிலபேர்நிமித்தமாக வருந்தி யார்பூமியை யடைவார்களோ அவர்கள் தங்களுடைய அரசுபோகம் சுகமென்ற மூன்றுபொருள்களையும் தங்களுடைய ஆயசுகளையும் விட்டுவந்து வரிசைவரிசையாக ஒருவர்முன்னே யொருவர்நின்றார்கள்-எ-று * அரசு போகஞ் சுகமென்ற மூன்றுபொருளு மூன்றுபேறு-அவை தகப்பன் தாய் குரு சினேகர் உறவினர் பெரியவர்கள் நல்லவர்கள் இவர்கள் முதலானபேர்க ளனுபவிக்கவேண்டிப் பெறுகையால் இப்போது இந்தசண்டையில் இவர்களைக்கொன்று பெறுவதாகவந்திருக்கின்றது - அதேதெனில் இவர்களே எனக்குமுன்னே யெனக்குமுன்னேயென்று அவசரப்பட்டு ஒருவர்முன் ஒருவர்வந்து நிற்கையால் இவர்களைக் கொன்றுவரும் பிரயோசனம் ஆகாதென்பது குறிப்பு. (கக)

ஆனபொருளிதாதலினா லவரைக்கொன்றுலருள்சேர............ ......*
தினமல்லாமெங்களுக்கோ ரின்பமெங்குமில்லையால்...... ... .*
கனவரிவிற்கொண்டென்னைக் கொலினுமவரையான்கோறல்......... ..*
வானம்பெறினுமினிவேண்டேன் மண்ணின்பொருட்டால்வல்லேனே *

(இ-ள்,) இந்தச்சண்டையினாலானபொருளிது ஆதலால் அவரைத்தையி ல்லாமற்கொன்றால் குற்றமேயல்லாமல் எங்களுக்கு ஒரு சுகமாகிலும் எந்துயில்லை-ஆகையால் வளைந்துவரிந்த வில்லைக்கொண்டு அவர்கள் என்னைக்கொன்றாலும் அவர்களை நான்கொல்லுகிறது பெருக தேவலோகத்தைப்பெற்றாலும் இனி ஆசைப்படேன் இப்படித் தேவலோகத்தைவேண்டிக்கொல்லாத நான் மண்ணுலகிற்காகக் கொல்லவே மாட்டேன்-எ-று) (உ.)

கொற்றவர்தங்குலங்கெடுத்தால் வருகின்றகுற்றமுமெய்........... ...*
யுற்றவர்தந்திறம்பிழைத்தா லுறுகின்றவுயர்பழியு... ....*
மற்றவர்களறியாது மறந்திடுகமறந்தாலுங்...................... ... .*
குற்றமெனவறிந்தவியான் குறிக்கொள்ளாதொழிவேனே...............*

(இ-ள்.) இராஜாக்கள் தங்கள்குலத்தைக்கெடுத்தால் வருகிற குற்றமுஞ் சத்தியசங்கற்பமானவர்கள் தங்களுடைய ஒழுக்கத்தைவிட்டால்அடையப்பட்ட பெரியபழியும் அவர்களறியாததற்குமுன்னே மறக்கவேண்டும், அப்படி மறந்தாலும் ஆகாது-செய்தாற் குற்றமென்றறிந்தயான் இனியெப்போதும் நினைவாயிருக்கிறபடிக்குத் திடமாய்க்கொள்ளாமல் மறந்துவிடுவேனோ விடேன்-(எ-று.) * (இதுவல்நினையாமல் மறந்து ஆயுதமானேன் இனி அறிந்தபின்பு அதையொப்புக்கொள்ளேனென்பதுகுறிப்பு.)

குலங்கெடவேவருகின்ற குலதருமங்கெடுதரும்... ...*
நலங்கெடவேகுலம்பாவ நண்ணுமதுநண்ணவே ... *
இலங்கிழையார்நெறிதிரிவ ரிவர்களைநெறிதிரியாவே ... *
தலங்குலவுமுறைமையெலாந் தலைதடுமாறுகுமால் ...*

(இ-ள்) குலநாசமாகவே அநாதியாகத்தொடர்ந்துவருகிற குலதருமம்நாசமடையும், குலநலமான தருமமழியவே குலத்தைப் பாவமூடிக்கொள்ளும், அந்தப்பாவங்கள் கூடினமாத்திரத்திலே பிரகாசிக்கிற பொன்னாலும் மணியாலுஞ்செய்த ஆபரணம்பூண்டபெண்கள் தங்கள் மார்க்கத்தைத் தப்புவார்கள்-இந்தப்பெண்கள் பதிவிரதாமார்க்கத்தைத் தப்பி விபசாரியம்பண்ணவே பூமியிலேவழங்கின வரிசையான் முறைமையெல்லாந் தலைதடுமாற்றமாகும்-எ-று. (௨௨)

தடுமாற்றமக்குலத்தைச் சார்ந்தார்க்குஞ்சாராதே... ... ...*
கெடுமாற்றநினைத்தவர்க்குங் கெடாநிரயங்கிடைப்பிக்கும்...*
படுமாற்றமென்னுரைக்கேன் பண்டிறந்தோர்களுந்தமக்கொன்
றிடுமாற்றமவர்கள்பெறு திருணரகத்திழிவர்களால் ... .*

(இ-ள்.) முறைகெட்ட தடுமாற்றம் சங்கரமான அந்தக் குலத்தையடைந்தவர்களுக்கும் அந்தக்குலத்தைத் தான்சாராமல் அழியும்படிநினைத்தவர்களுக்கும், எந்தக்காலமும் அழியாதநரகத்தை யனுபவிக்கப்பண்ணும், ஆகையால் உண்டானவசனத்தை யென்னசொல்லுவேன் முன்மரணமான பிதுர்த்தேவர்களுக்குத் தங்களுக்கிடுவதொன்றான பிண்டவுதகக்கிரியைகளை இடுவாரில்லாததினாலே பெரும இருண்டநரகத்திற்பிதுர்க்க ளிறங்குவார்கள்-(எ-று) * இது அதோகதியான நரகிலே தலைகீழாக விழுவது.) (௨௩)

வாராநின்றகுலமயங்கப் பண்ணினோர்க்குமற்றவரை...... ...*
சாராநின்றகுலத்துக்குந் தருமந்தளர்ந்துசாயுமாற்...... ...*
சாராநின்றகுலந்தரும மிரண்டுந்தளர்ந்துசாயவே... ... ...*
போராநிரயமெய்துமெனப் பெரியோர்யாரும்பேசுவரால் ...*

(இ-ள்) பூமியுள்ளான் முதலாக வரப்பட்ட குலத்தை பயங்கப் பண்ணிச் சந்தோஷமடைந்தவர்களுக்கும், அந்தக்குலத்தைக் கெடுத்தவர்களைச் சார்ந்துநின்ற குலத்தாருக்கும் நரகமெய்தி விழுந்துபோம், இந்தவுலகத்தைச்சார்ந்துநின்ற குலமென்றும், தருமமென்றுஞ்சொல்லப்பட்ட இரண்டும் நிலைகெட்டுவிடுமே அப்படியானதாகளுக்கு நீங்காத நரகங்கிடைக்குமென்று பெரியோர்சொல்லாநின்று சொல்லுவார்கள்-எ-று. * (குலத்தாருங் குலத்தைக்கெடுத்தாரும் நரகத்திலேக்காலமு மிருக்கவேண்டுமென்பதினாலே போராசிரியமென்றேன்.) (உ௪)

மின்னேடனைய செல்வத்தை வேண்டித்தங்கண்மெய்யுயிரைக் ....*
கொன்னேகழிக்கவென்றவரைக் கொலைத்துணிந்தகொடுவினையே ... ...*
னென்னேகொடியபெரும்பாவ மெய்தநின்றேன்தெளியானுமிவர் ....*
முன்னேபுடைவிட்டயர்ந்துநின்றால் கொல்வாரோமுனிவாரோ ... .*

(இ-ள்) மின்னலைப்போலான செல்வத்தை வேண்டித்தங்களுடைய சரீரத்துயிரை வீணிலேபோக்க நின்றவர்களைக்கொல்லத் துணிந்தகொடும்பாவியான நான் என்னவோ அளவுபடாதபெரியபாவத்தையடையநினைத்தேன் நானும் இவர்களுடையமுன்னே ஆயுதத்தைவிட்டுச் சண்டையை வெறுத்துநின்றால் இவர்கள்கொல்லப்பார்களோகொல்லார்- எ-று. * (மின்காட்டின அத்தகைத்தாமேமறைகையாற் செல்வம்நிலையாதென்பதுகருத்து) (உரு)

கலி விருத்தம்.


கொல்லினுமெனக்கது பொறுக்கைகுணமென்றே ....*
கல்வினுபாதேரிடையிலே கவலையனெதிர்சென்றி ....*
வில்லுடனேயகழி சோரவிழுசோரச் .. ..*
செல்வமணியாழிபொருதேர்மிசையிருந்தான் ....*


(இ-ள்) சிராயுகமென்றுபாராமல் என்னைக்கொன்றாலும் அதுபோகிறது எனக்கு மிகுதியுமில்லை என்று மலையையொப்பாகவுயர்ந்ததோள்களையுடைய காளையாகிய அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ணசுவாமி முன்னேசொல்லி வில்லுடனே அம்புகளுங் கால்களுநீர்த்துளிக்க அழகிய வண்டலான இடியைப்போல பூமியைப்பிளக்கப்பட்டதேர்மேலிருந்தான்-எ-று

சோக அத்தியாயம்- முற்றுப்பெற்றது.



பாயிரமுட்பட - அ - திருவிருத்தம் - உ௯.





இரண்டாவது.

சாங்கியயோக-அத்தியாயம்.

கொச்சகக்கலிப்பா.

இவ்வண்ணம் பரிவோதுங்க வெழுகின்றவிரகத்தாற் ....*
செய்வண்ண மறியாது திகைத்திருந்த தேர்விசயன் ....*
உய்வண்ண மதுநாடி யொருவண்ண முலகோதுங் ... .*
கைவண்ண மலருடைய கார்வண்ணன் கட்டுரைப்பான் ......*

(இ-ள்) இந்தப்படிக்கு அறிவுவிகை வெழும்புகிற தயையினாலே செய்யத்தக்கதை யறியாமற்றகைத்துத் தேரிலிருந்த அருச்சுனன் மயக்கந்தீர்ந்து பிழைக்கத்தக்க தென்னவென்று ஆலோசனைபண்ணி உலகத்தார் தோத்திரம்பண்ணக் கொடுத்தருளுகின்ற செந்தாமரைப் பூவையொப்பான திருக்கையையுடைய மேகநிறமான ஸ்ரீகிருஷ்ணசுவாமி உபதேச மார்க்கங்கள் அனேகத்தில் ஒருவிதத்தைச்சொல்லுகிறார்-எ-று. * (இரக்கமாவது பகைஞரைநம்முடையவாகவென்று அபிமானத்தாலெழும்புகிற இரக்கம்.) (க)

ஆயாதவர்க்குமலிகட்கு மடுப்பதழியாப்பழியினது.........*
தேயாவறிவைத்தேய்ப்ப தறச்சிறுமைகளினுஞ்சிறுமையது,
சாயாநரகத்திடைசாய்ப்ப துன்போல்பவர்க்குத்தகாததுவம்*
தேயாநிலத்திலுனையையவெவ்வாறடைந்ததெனவறியேன்...*

(இ-ள்.) ஐயா வேதசாஸ்திரங்களை விசாரியாதவர்களுக்கும் ஆணும் பெண்ணுமல்லாத அலிகளுக்கும் அடுப்பது தீராத பழியையுடையது, கெடாவறிவைக்கெடுப்பது மெத்தவும் அற்பமானவைகளிலும் அற்பமானது - ஒழியாதநரகத்தினிடத்திலே விழப்பண்ணுவது உனையொப்பானவர்களுக்குத் தகாதது - இப்படிக்கொத்த அஞ்ஞானம்வந்து இந்தப் போர்க்களத்திலே யுன்னையெப்படி யடைந்ததென்றறியேன்-எ-று. (உ)

ஒவ்வாதிதொழிந்தமர்மே லொருப்படுகென்றருக்கநிய......*
செவ்வாயின்றிருமொழியத் தேர்விசன்செப்புவான் ....*
மெய்வாயினெடுமனத்தான் மிகப்போற்றற்குரியானை ......*
எவ்வாறுகொலைபுரிவே னென்றிவ்வாறியம்பினன்............*

(இ-ள்) இந்த அக்ஞானம் பெரியோர்களுக்கு ஒவ்வாது இதைவிட்டு யுத்தியத்தின்மேலே ஒருமைப்படுவென்றுகரியதிருமேனியுஞ்சிவந்த வாயுமுடையசுவாமி திருவாக்கருளிச்செய்ய விசாரிக்கிற அருச்சுனன்சொல்லுவான் - மனோவாக்குக்காயமென்கிற மூன்று காரணத்தாலும் மிகவும்

நிச்சித்தேற்குரியவரான பீஷ்மர் துரோணர் முதலானவர்களை எப்படி கொலைசெய்வேனென்று நீங்கப்படி சொன்னான்-எ-று. * (தேர் சயனே) தர்மேறுக்கும் என்ன உபாயன்களில் எல்லாரு பிரசங்கமாகிவர்களை யுதைபாமேகடாது, தெரிந்தும் விசாரித்தும், மையபாவே விசாரிக்கப்படு நுக்கனாக குடியபிக்கிறதற்கே உன்னால் விசாரித்தென்று து - தன்வையருமது திரிகரணத்தொட்டது. (௩)

மாற்றலர்கள் எனவிவரைக் கொன்றுபெறும்பெருவாழ்வில் .. *
னைப்பு முத்திபாவ் பயங்கரமான்மையெனுவே . *
பற்றையதுநிருபோராக்கு ,பெரியகுருபூதர்... ......*
சோறுடையிதாகவன்றே யான்கொன்றுப்பயதெல்லாம்

(இ-ள்) பாட்டன் - குரு-இவர்கள் முதலான பெரியோர்களைப் பகை ஞுனென்று கொன்றுவெட்டப்பட்ட பெரிய காரியங்களால் அவர்களுடைய பகி மைகளைச்சொல்லுவன்னியரிடத்தில் காரியச்சாகபெற்றதுண்டது இனி பகல்லவோ அவர்களுயிரானென்றே பெறுவன்டாலும் அவர்களுடைய இரத்தத்திலேகுழைந்தசோறு இனியதாகவல்லவோநான் அவர்க ளைக்கொன்றபின்பு போசிப்பதெல்லாம்-எ-று. (௪)

தவர்சொல்படைவிகைகையோ தவிர்கைகையோதருவதுமம் ...*
றவர்களினைவெல்வரோ யான்வெல்வனோவறியே...........*
னவர்களிலிறந்தக்கா லதனாலென்னுயிர்போ ... ...*
மவர்களமர்தொடங்குகவென் றடல்குறித்துநின்றனரால் ...*

(இ-ள்) வில்லிலே தொடுத்துக்கொல்லப்பட்ட அம்பு விடுவதோ தவி ர்வதோ இந்தவிரண்டிலே தருமான தெதுவோ அல்லாமல் - அவர்களை ன்னைச் செயிப்பரோ நான் அவர்களைச்செயிப்பனோ அவர்களிற் சிலரிற ந்தால், அதினாலே என்னுடைய உயிரும்போம் அவர்கள் சண்டை தொடங்கென்று பலத்தைக்குறித்து நின்றார்கள்-எ-று. (௫)

ஆதலாலறிவாயவிழியினைமற்றுங்கவர்பாதம்... ... .*
காதலாலிருள்மறைப்ப நெறியெங்குங்காணேனு............*
ஞாதலாலெனக்குறுவ தறிகிலேனுரைத்தருள்வாய்ச்...... ...*
சாதலானதும்பிறப்பு மில்லாத தனிமுதலே.................*

(இ-ள்.) ஆகையாலறிவாகிய ஞானக்கண்ணை அவர்களிடத்தில்வைத்த ஆ சையினாலே அஞ்ஞானமாகிய இருள்மறைக்க நானெங்கும் வழிகாணே ன் ஆகலால் உறுதியானதை யறிவில்லாதவனுக்குறுதியைச்சொல்லி யரு ளவேண்டும், சாகின்றதானமரணமும் பிறப்புமில்லாத ஒப்பற்ற முதன் மையான சுவாமி-எ-று (௬)

உஞ்சேபோகுநெறிபாளாவனைப்பனேவென்றனங்கருதி......*
தஞ்சேயென்றுன்சரண்டைந்தேன் தனியபருக்கேடேங்குமனைக்கன்
மஞ்சேயுன்றன்மாறைக்கவுப்பாதமலரிடனைந்தே............ *
னஞ்சேலென்றிங்கடியேன்செய் வினைகளையியாவ்வாயே......*

(இ-ள்) செந்தாமரைப் பூவையொப்பான திருக்கண்களையுடையவே கேசவனே தப்பப்பிழைத்துப் போகப்பட்ட வழியைக் கேளாமற்சொல்லுகிறேனென்று திருவுளத்திலே நினைத்தருளவேண்டாம் அடைக்கலம் புகுந்துவிட்டேனென்று உம்முடைய மறைவுபுகுந்தேன் இடைவிடாதபத்திசெய்கின்ற உம்முடைய சிஷ்யனுடைமது திருவடித்தாமரைகளை அடியேனுடைய சிரசிலே தரித்தேன் பயப்படாதேயென்று இங்கேஅடியேன்செய்த வேண்டியகாரியங்களை யேவல்செய்தருளி யாளுவாய்-எ-று. (௭)

கலிவிருத்தம்.

மண்ணாளு நேற்பெருஞ்செல்வ மன்றியேமாயாத...............*
விண்ணாடுபெற்றிடினு மென்னுடையமெய்யுணர்வு... ......*
கண்ணுமலடுதுயர நலியாமற்காப்பதனைக்... ....*
கண்டிலனிங்கெவ்விடத்துங் காண்கிலேனெனக்கலுழ்ந்தான்*

(இ-ள்) அழியப்பட்ட பூமியையாளுகிற பெரிய செல்வமுமல்லாமல் அழியாத தேவலோகத்தைப் பெற்றாலும், என்னுடைய மெய்யானவறிவு சோராமற் கெடுக்கப்பட்ட துக்கமானது என்னைவருத்தாமற்காக்கப்பட்டதை நீயன்றி எவ்விடத்திலேயும் கண்டிலேனென்று அழுதான் எ-று. (௮)

மெய்ம்மார்பிற்சொரிவதென நெடுங்கண்கணீர்சோர.........*
விம்மாநின்றவன்காதல் வெந்தீயால்வேவாமே......... ... ...*
கைம்மாறொன்றின்றியுயிர் காக்கவேகடன்பூண்ட•••....... ...*
வம்மாயன்றிருவாய்மை யருண்மாரியாலவிப்பான்... ... ...*

(இ-ள்) மார்பிலே நெய்சொரிவதுபோல நீண்டகண்கள் நீர்சிந்தவிம்மியிருக்கின்ற அருச்சுனன் உறவின்மேல்வைத்த ஆசையான உஷ்ணமுள்ள நெருப்பாலே வேவாமல் முன்னேதானேபிரதியுபகாரமில்லாமல் புருஷர்களுடைய ஜீவனைக்காக்கிறதே கடனாகப்பூண்ட அந்த கிருஷ்ணஸ்வாமி திருவாக்கிலே பொழியப்பட்ட கிருபையாகியமழையால்அவிக்கவேண்டி-எ-று. (௯)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

மின்னையனையதிருநகைகொண்டருளிவிரைத்தாமரைநாறும்...........*
பொன்னையணிபுந்திருமார்பன் போகாத்துயர்போம்பரிசெண்ணி......*
முன்னைமறைகளொடுத்துரைத்து முடியாப்பொருளைமுதற்பொருளாய்.*
தன்னையுளவாபரிசவர்க்குத் தானேசாற்றத்தொடங்கினார் ....*

(இ-ள்) பரிமளித்த பொற்றாமரைப் பூவினிற்றோன்றிய மகாலட்சுமியைத்தரித்த திருமார்பையுடைய ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி மின்னையொப்பான திருநகைகொண்டருளி எப்போதும்போகாத துக்கம் போம்படிக்கு நினைத்தும் பழையவேதங்களொடுத்துச் சொல்லியுமுடியாத பொருளை முதன்மையான பொருளினாலே தன்னையுள்ளபடி அந்த அருச்சுனனுக்

குத் தாமேசொல்லத்தொடங்கினர்-எ-று. ※ (எதிர்த்துச் சொல்லவொ
ண்ணாமலானபொருள்களாலே தூக்கிச்சொல்லிய மடங்காதபொருள்தானே
யென்றது தன்னைக்குருமுகமாக அறியாமற்றுளே அறிவித்தாரென்ற
து இதனாலே குருவென்பது தெய்வமென்பது குறிப்பு.) (௰)

கட்டளைவிருத்தம்.

சாவதிலையாக்கை நிற்பதுவுந்தானே.......... ... ...※
மாய்வதினை நீநொந்து மாதவாக்கில்லை........ .... ※
தேவரியதின்னினைப் படைக்கப்படுவே.......... ....※
வீவதன் முன்வாழுக்க வேண்டுமென்பேன் மேல் ... .. ※

(இ-ள்) எல்லாருஞ்சாகிறபடியினாலே அதுநிற்க சாவார்களென்று நினைக்
கப்பட்ட பெரிய தேர்க்காரரெல்லாம் ஒன்றுஞ்செய்ய அரிதானதா
வங்களைச்செய்யாமையினாலே சாகிறதற்குமுன்பே தேவலோகத்தை
மேன்மேலுஞ் சேருவார்கள்-எ-று. ※ (பலவுயிரையுமழியாவண்ணம் யாகங்க
ள் மகாதானங்கள் முதலானவைகளால் தீராதபாவங்களை செய்யாததனாலே
தேவலோகத்தைச் சேருவார்களென் றுதகருத்துடையர் காகில்ல முவரா
மொன்ற கருத்தாபத்தி.) (௰௧)

அன்னவர்கள் சோதித நெறிமுதலாலும்... ... .※
பன்னவரியோர்கள் மொழி பேசுதலாலும் ... . ※
மன்னுபயமேதருமெனக் கிளைசொல்லப்பா ... .※
தின்னமொழிலானவை யடக்கிக்கையுங்கேள் ....※

(இ-ள்) அப்படிப்பட்டவர்கள் பெரியவர்களாய்த் தேவலோகத்தைச் சேருகி
றவர்களாயிருக்கிற அந்தச்சோதிக்கத்தக்கவர்களை சோதிதரென்றும் பெ
முகிறதினாலும் பேசவரியவரானவையென்று அறிந்தும் அறியாதவர்கள்
போல நீபேசுகிறவசனத்தையே சொல்லுகிறதினாலும் நிலைமையான ம
யக்கமேற்கொண்டு புத்திமயங்கினையோ இந்தத் துக்கத்தொழிலானதுஉ
னக்குத்தகாது இதைமறந்துவிட்டு நானுஞ்சொல்லுகிறதையுங்கேள்-எ-று.
※ (அற்பசுகத்தையு மகாதுக்கத்தையு முடைய பூமியை விட்டுமகாசுகத்
தையுடைய தேவலோகத்தைப்பெறுகிற சந்தோஷமுடையவர்களைத்து
க்கமுடையவர்களென்று துக்கிக்கிறதினாலும், அறிந்துமறியாதவர்களான
வாதிகளைப்போலே பேசுகிறதினாலும் புத்திமயங்கினையென்றதுபன்னவரி
யோர், பெரியோர்மன்னவரியோர் பாவிகள்வாதிகளென்று சொல்லுகிற
து வாதிகளையறிந்தும் அறியாதவரான பிரஞ்ஞாவாதகளென்று சொல்லு
தென்னையென்றால், தர்க்கபுத்திகளை நன்றாகவறிந்து வாதிக்கிறதினாலே
சொன்னது இவனுடனே பேசுகிறதே அரிதென்று பயப்பட வைக்கிற
தினாலே, வாதியைப் பன்னவரியோரென்றுபாடினர்.) (௰௨)

மாயுமலவாலுமுயிர் வாழுமலவாலும்................ ....※
மாயுமதினோர்களறி யாமையறியாயே........ ....※

நீயுமிலதாருமிசர் நாறுமெய்த்தேரி.................. ....*
லேயும்வகைபாலுலகி லென்றுமுளமேகாண் ....*

(இ-ள்.) சாகிறவர்களாலுஞ் சீவன் வாழ்கிறவர்களாலுஞ் சகலத்தையும் ஆராயப்பட்ட அறிவுடையவர்கள் மனத்திடமழிந்து துக்கப் படாததைநீயறியாயோ, இவர்களை யெப்படிக் கொல்லுவே னென்றழுகிற நீயும் உன்னுடைய இரக்கத்துக்குரியவரான இவர்களும் எல்லாவற்றையும் நடத்துகிற நாமுஞ் சாகிறவர்களோ இருக்கிறவர்களோவென் றிந்தமாத்திரத்தை விசாரிப்ப தருமத்துக் கிடாக விசையப்பட்ட வெண்பத்து நாலுலக்ஷம் அச்சப்பேதவகையாலே யென்றுமிருக்கிற நாமேயல்லாமல் இல்லாத நாமல்ல கண்டாயென்றவாறு. (௰௩)

பொன்றுவதுடம்பதனு ணின்றபொருள்பென்று............*
தென்றுமொரு பெற்றியினி னிற்குமியல்பைக்கேள்.........*
முன்றொடர் மகப்பருவம் விட்டிளமைமூப்போ... ....*
டொன்றுமுட லாயினு முயிர்க்கியல்பதன்றால் ....*

(இ-ள்) அழிவதுதேகம் அந்தத்தேகத்துக்குள்ளே நின்றவுயிர் அழியாது அந்தவுயிர் என்றும் ஒருசுபாவத்திலே நிற்கும் அந்தச்சுபாவத்தை மகேள் அர்ச்சுனா முன்னே தொடர்ந்து வரப்பட்ட குழந்தைப்பருவத்தை விட்டு இளமையோடும் மூப்போடுந்தேகங்கூடினாலும் அதுவுடலுக்குச் சுபாவமேயல்லாம லுயிருக்குச் சுபாவமல்ல - எ - று. * (விட்டென்று சொன்னதினாலே என்றுங் குழந்தைப் பருவமாகவே யிராமல் விட்டு இளமையான யௌவன பருவத்தைக்கூடி யப்படியே யானாலுமிராமல் அதையும்விட்டு கௌமாரப்பருவத்தையடைந்து அப்படியுமிராமல் அதையும்விட்டு மரண திசையை யடைந்து அப்படியுமிராமல்அதையும்விட்டு உற்பத்தியைக்கூடி அப்படியு மிராமல்அதையும்விட்டுக்குழந்தைப் பருவத்தைக் கூடி இப்படிக் கொள்ளிவட்டம்போலச் சுழலுகையால் உடலுக்குப் பருவஞ் சுபாவம்போல மரணமுஞ் சுபாவமே யாகையால் உயிருக்கு ஒருகாலமும் நாசமில்லையென்பதுகருத்து.) (௰௪)

அன்னவகையாலுரு வழிந்துவருமங்கே............ ....*
என்னதுருவாமறி விறந்துபிறவாதார்.................. ....*
பின்னதறிவானுட லழிந்துபிரிபோதுங்.......................*
தன்னதெனவேதுமோர் சலிப்பதறியானன்.................*

(இ-ள்) அந்தந்தவகையினாலே அந்தந்த விடத்திலே தேகமழிந்துவரும் என்னுடைய சொரூபமான ஆன்மா வழிந்து பிறவாது ஆதலாற்பின்பு அதையறிந்தவன் உடம்பு அழிந்து ஆன்மாவுடம்பைப் பிரிகிறபோதுங் கூடுகிறபோதும் எவ்வளவுந்தனதென்று சலியான்-எ-று. * (தானென ஆன்மாவுக்கு ஒன்றுமில்லை உடம்பிற்கேமரணமும் பிறப்புமாகையால், அதுவந்தபோது நம்முடையதல்லவென் றிருப்பான் நம்முடையதென்றுசயானென்பதுகருத்து.) (௰௫)

இவ்வகையதாகியவுஞ் சீதமிடம்பெறு......... ... . *
செவ்வகையிலாதறிஞ சேர்க்குவதேதெனிற்... ... .. *
மெய்வகையினல்லைவிளைந்ததுதாமேய........... ... ...*
வைவகையினுடல ஹமபோறிபுகையா.....................*

(இ-ள்) இப்படிச்சொன்னதைக்கேட்ட அருச்சுனன் சொல்லுவது இந்தப்படி சனனமரணம் உண்டாகுக்கு இல்லாவிட்டால் உஷ்ணம், சீதளம், துக்கம், சுகம், இவைகளைத் தன்னுடையதல்லவென்று செப்புமபடியில்லாமல் ஆன்மாவிலே சேர்ந்து சுட்டதென்றுங் குளிர்ந்த தென்றுங் கிலேசித்தலுஞ் சந்தோஷித்தலுஞ் செய்வதென்னவென்று கேட்டதற்கு ஸ்ரீகிருஷ்ணசுவாமி வாக்கியம் அச்சுப்பேதத் தேகவிதங்களினு லிவைகளுண்டாக்கி வரவற்ற துக்கசுகத்தைப் பஞ்சீகரண பேதத்தினு லுண்டாகிய பஞ்சதன்மாத்திரைகளாகிய சத்த பரிச ரூப ரச கந்தமென்கிற ஐந்து ஞானேந்திரியமாகிய மெய் வாய் கண் மூக்கு செவி என்கின்ற ஐந்துவுருவாய் அடைந்து அநுபவிப்பதல்லாமல் ஆன்மா அநுபவிப்பதல்லவை-எ-று. (௧௬)

கொச்சகக்கலிப்பா.

சீதமுஷ்ணமுதலவற்றின் செயல்கேட்கிலநித்தியமாய்ப்... ...*
போதலொடுவருவனவா யிருக்குமவைபொறுநீயு... ... ...*
மாதலினென்பயனென்னி லவைபொறுத்தபெரியோரை ... *
ஏதமவைநிலைகலக்கா தவன்வீடேய்துவனல்....... ...*

(இ-ள்) சீதள உஷ்ணமுதலானவைகளின் செயலைக்கேட்கில் அநித்தியமாய்ப்போகிறதும் வருகிறதுமாயிருக்கும் அவற்றைப் பெரியோர்கள் பொறுப்பார்கள் நீயும்பொறுத்தால் ஆகிறபிரயோசன மென்னவென்றால் அவைகளைச் சமமாகப்பொறுத்த பெரியோரைக் குற்றமான அந்தச்சீதள உஷ்ணமுதலானவை நிலைபைக்கலக்கி வாதியாது அவர் மோக்ஷத்தையே அடைவார் நரகமடையார்-எ-று. (௰௭)

மண்ணினுயவிகாரமுமம் மண்ணேயந்தமன்னொழிந்து ...*
பண்ணினுருமற்றில்லைப் பன்னப்பட்டபலபொருள்க ... *
ளென்னவருங்காலமுமதுமற் றிறந்தவிடத்துநிகழ்விடத்துங்
கண்ணினுடின்மன்னொழியக் கண்டாருளரோகட்டுரையாய்*

(இ-ள்) மண்ணிலுண்டாகிய விகாரங்களான கடமுதலானவெல்லாம் அந்தமண்ணேயல்லாமல் வேறல்ல-அந்தமண்ணைவிட்டு மற்ற அப்பு தேயு வாயு ஆகாசங்களாலே கடமுதலானவைகளைப் பண்ணின பேருமில்லை - அப்படிப்பன்னப்பட்ட பலபொருள்கள் நினைப்பாலுண்டாகியவருங்காலத்திலும் போங்காலத்திலும் இப்போது நடக்கிற காலத்திலுநினைத்து விசாரிக்கில் மண்ணைத்தவிர வேறுபூதங்களாகக் கண்ட பெயரு

ண்டோ சொல்லுவாய்-எ-று. ❋ (கண்ணினலென்று பாடமாயிற்கண்ணி
னாலே பார்க்கிலென் றுரைகொள்ளும், அப்படியுரைசெய்தால் கண்டது
மெய் காணாதுபொய்யென்ற சாருவாகனமதாம் அது கூடாது.) (௧௯)

கலிவிருத்தம்.

வையாரயிலுழவாவதன் வகையேயதன்வகைகேண் ....❋
மெய்யாநதுநசியாதித னுடன்வேறெனவிரவும்... ... ...❋
பொய்யானதுநிகழாதிவை புலனாகியபொருளே......... ...❋
மையாவெனையறிவாரிவை யறிவார்பிறரறியார்.. ....❋

(இ-ள்) கூர்மைபொருந்திய ஆயுதத்தினாலே பகையரசரான பூமியை யுழுது பிளக்கப்பட்ட அருச்சுனா அந்தந்தப் பூதங்களாலாகிற இதங்கள் அதனதனாலே யாகிறதல்லாமல் ஒருபூதத்தின்தொழிலை வேறொருபூதஞ்செய்யமாட்டாது-அதனதன் விதத்தைக்கேள் சத்தியமான ஆன்மாவானது அழியாது-இந்த ஆன்மாவினுடனே வேறான அநான்மாவென்று கலக்கப்பட்ட பொய்யானதேகமானது நித்தியமாகாது-இந்த அருத்தம் அறிவாலுண்டாகிய பொருளேயல்லாமல் வேறல்ல ஐயா இந்த அர்த்தத்தை என்னையறிந்தபே ரறிவார்கள்- அறியாதவர்கள் இதை யறியமாட்டார்கள்-எ-று. ❋ (தெய்வத்தை கர்த்தாவென்றும், ஆன்மாவை யகர்த்தாவென்றும், உடலை யநான்மாவென்றும் வழங்கப்படுகையால் வேறெனவிரவுமென்றும் பாடினார்-பொய்யைத் தேகமென்றும், மெய்யை ஆன்மாவென்றுஞ் சொன்னதேதென்னில், இவ்விடத்திற் சொன்னதெல்லாமுடலுயிரிரண்டின் செய்தியாகையாலும் உடல் மாயாசம்பந்தமா யழிகையாலும், உயிர் நித்தியஞானசம்பந்தமா யிருக்கையாலும் சொன்னது. ()

யானும்வகையதுகேளெழு மொலியேமுதலியாவும்.......❋
வானதியில்வருபூதமும் வருநால்வருமிடர.. ....❋
யானதெழுமறியாரையு மறிகாரணமதுவாய்......... ..... ❋
போனனொடுவருநாள்வழி புணராததோர்பொருளே ... ...❋

(இ-ள்) நானாகிறவிதத்தைக்கேள் அருச்சுனா, எழும்புகிற சத்த முதலான அஞ்சும் ஆகாசாதிபூதங்களில் வரப்பட்ட மகாபூதங்களும் உண்டாகிறகாலம் வருமிடமாய் நீங்காமலெழும்பப்பட்ட அறியாரையும் அறியப்பட்ட காரணமாய்ப் போகிறகாலத்துடனே வருகிறகாலத்தின்வழியைப் பொருந்தாத பொருளேநான்-எ-று. ❋ (மகாபூதமாவது பஞ்சீகரணத்தில் ஒன்றோடொன்று கலக்காமல் நின்ற முதற்பாகபூதம் இந்தமகாபூதங்க ளுண்டாகிறகாலம் பிறக்கிறவிடமாய் அறியாரையும் அறிவாரையும் அறியப்பட்ட காரணமாய் திரிகாலத்தைச் சேராதபொருளே நானென்றது.) (௨௰)

அழியாதமெய்யாத்மாதெனி லவிகாரத்தையுருவா ....*
மொழியாவிசாரமெய்மீது மெனுதியானெனமுரையா ... ...*
வழியாமதியியல்பாலிது சிலமாறுகொள்குவதாய் ... .*
மொழிவார்செயல்முடியாமையிற் முயலாவிடைவிலர் ...*

(இ-ள்.) அழியாத சத்தியமெதுவென்றுகேட்கில் விகாரமில்லாத ஆத்மா விகாரத்தையுருவமாம அறுவகைவிடமாகிலும் விட்டொழியாமல் நிறைந்தபரிபூரணத்துடனே வலர்ந்தது, எனைதென்கிறசுத்தரும், நானென்கிறஆங்காரமும் அழியாதவழியானதுஅதுசுபாவத்தினாலேஇதுசிலவே றுபாடு கொள்கிறதாய்ச் சொல்லுவாருடைய சொல்லும் தொழில் முடியாததினாலே முயற்சியன்றாக நீக்கப்படாததாய்ச் சேடத்துக்கு அன்னியமாயிருப்பது ஆன்மா-எ-று * (சில மாறுகொள்ளுவதாவது மாயையுடனேகூடியபோது தேகியாய்ச்சுதந்தரியாய் ஆங்காரியாய் நிற்பது கருத்து.) (உக)

இல்லாமையினியல்கேளெழு கழுதாழியினடையே ....*
யல்லாதெழுபுனல்போலழி வுறவேயழிகுதலா...............*
லெல்லாவகையினுமாயதில் வுருவேயழிவதுதான்........... *
கொல்லாதழிகொலையானது குறுகாததனைநீகேள் ....*

(இ-ள்) இனி எப்போதுமில்லாதது இருக்கும் உள்ளதுபோலக் காணுகிற தேகத்தினுடைய சுபாவத்தைக்கேள் அருச்சுனா, கோடையிலே மூம்புகிற பேய்த்தேராகிய கானலினிடத்திலே நிச்சயமான சலமில்லாமற் பொய்யாகவெழும்பப்பட்ட சலத்தைப்போல அழிவுண்டாக அழிகிறதினாலே பொருந்தாத விதத்தினாலும், பொருந்தும் விதத்தினாலும் உண்டாகிய இந்தத்தேகமே யழிவது - ஆன்மா அழிவதில்லை அது அவிகாரியானதினாலே தான்கொல்லாது-தான் எல்லாவற்றுக்கு மன்னியமாகையாலே அதைக் கொலையானதுசேராது அந்த ஆன்மாவினுடைய சுபாவத்தைக்கேள் என்றவாறு. * (கொலைசேராதென்பது அதை யாராலும் கொல்லப்படாதெனபது எல்லாவகையிலுமென்ற உம்மை எதிரது தழுவிய உம்மையாகையால் எல்லாம்வகையினுமென் றெதிர்தழுவியது.) (உஉ)

கொச்சகக்கலிப்பா.

ஊறுபடவொன்றிலே பிறத்தல்பிறந்துளதாதல் ....*
வேறுபடவளர்தல்வளர்ந் தயலொன்றாய்விளைந்தமைதன்...*
மாறுபடத்தேய்தலற மாய்தலெனவருகின்ற... ....*
வாறியல்பமுடம்பன்றி யறிவுடையாதாதலினால் ....*

(இ-ள்,) தூலசரீரமுண்டாக ஒன்றோடொன்று பரிசப்பட ஒன்றிலே பிறக்கிறது பிறந்திருக்கிறது - அந்தப்பருவம் வேறுபடவளருகிறதுவளர்ந்து அன்னியமான தொன்றாகவிளைந்து அமருகிறது இவையெல்லாம

நற்றிற்கு மாறுபட கிழத்தனமாய்க் குறைகிறது-இந்த வைந்துந் தீரச்சா கிறது என்றுசொரப்பட்ட ஆறுசுபாவமும் உடம்பையல்லாமல் ஆன்மா வையடையாவாம்-(எ-று) * அறிவை யான்மாவென்றது அசேதனமான தேகத்தைநடத்துகையால். (உஙு)

கலிவிருத்தம்.

நில்லாவுடற்கேநின்றேயு நித்தமாகியதுநாச.............................*
மில்லாததுபோய்ப்பிறப்பிறப்பொன் றறியாததுமற்றதுவறிந்தோ ... *
சொல்லார்கொலையேவலுஞ்செய்யார் கொலேமேலிட்டிக்குலமறைக ... *
ளெல்லாம்விதித்ததொழிலினையே யியம்பிற்றென்றேயிதுதெளிநீ ... *

(இ-ள்) நிலைமையாய் நில்லாமல் அழிகிறவுடலுக்கே ஆதாரமாக நின்றும், அந்தவுடலைப்போல அநித்தியமாகாமல் நித்தியமாகியது அழிவில்லாதது பொய்யான பிறப்பிறப்பென்ற இரண்டிலொன்று மறியாதது-ஆன்மா அதை அறிந்தவர்கள்சொல்லார்-கொல்லுவிக்கிறதுஞ் செய்யார்-நாலொன் றொருசாதியான வேதங்களெல்லாம் கொலையைமேலிட்டுக் குலாசாரதன்மத்தைச் சொல்லிற்றென்று இதைநீதெளிவாய்-எ-று, * (ஆன்மாவை நித்தியமாய் நாசமில்லாததாய் செனனமரண மில்லாததாய் அறிந்தவர்கள் கொலைசெய்தாலும் செய்வித்தாலும் செய்ததும் செய்வித்ததுந் தமக்கல்ல-தேகத்துக்கென்று சாட்சியாய்ப் பார்ப்பார்கள் என்பது கருத்து.) (உச)

இதுவுங்கலிவிருத்தம்.

கீறியபோர்வையைப் பெயர்த்தும்பின்னரோ... ... ...*
வேறியபோர்வையை விரும்புவாரென................ *
ஊறியவுடம்பினி லுத்தவுண்மைதான்......... ... ...*
மாறியோடரும்பினே மருவுமன்னனே.................*

(இ-ள்.) கிழிந்த போர்வையைவிட்டுப் பின்பொரு வேறான போர்வையை ஆசைப்பட்டுப் போர்த்துக்கொள்ளுவாரைப்போலச் சீரணமுடைய தூலமானவுடம்பிலே பிரவேசித்த ஆன்மா அந்தச்சீரண தூலதேகத்தைவிட்டு விலகி வேறொரு தூலதேகத்தைக்கூடும் இராஜாவே - எ-று. * (இதனுள் தேகியான ஆன்மா சீரணதேகத்தைவிட்டு நூதன தேகத்தை தரிப்பதல்லாமல் அத்தேகத்தைப்போலத் தேகி நாசப்படாதென்பது கருத்து. * போர்த்துமென்றது பிறினபோர்வையைவெறுத்துவிட்டுப் பின்பு வேறொருபோர்வையை விரும்பும்போது முந்தினபோர்வை யைப் போலச் சிலநாளிலே கிழியுமென்றறிந்தும் இனிமேல்கிழிகிற போர்வையை இப்போது புதிதுகெட்டியாயிருக்குமென்று போர்த்துக் கொள்வதுபோல அழிந்ததேகத்தைவிட்டும் இனியொன்றை யெடுத்தாலும் அழிவது தானென்றறிந்து சும்மாயிராமல் வேறொருதேகத்தைக் கூடுமென்றவுமை.) (உரு)

இதுவுங் கலிவிருத்தம்.

உருப்பாகிலைமற்றவனுக் கொருநாளுமின்மையால்.........*
செருக்காம் வெம்படைக்கலங்கள் சேதிக்கமாட்டாவால் ... ...*
நெருப்பால் வெந்தழியாது நீரால் நனைக்கொணாது ....*
மருத்தாலுஞ் சலியாது மற்றதன்றனியல்கேளாய்...........*

(இ-ள்) தேகசுபாவம் அந்தத்தேகிக்கு ஒருநாளுமில்லையாகையால் அந்தத்தேகியைச் சண்டையிடத்துக்கு உபகாரமான கொடுமையுள்ள ஆயுதங்கள் பிளக்கமாட்டாவாய் நெருப்பால் வெந்து அழியாததுவன்றி நீரால் நனைக்கக்கூடாது காற்றினால் சலியாது இதுவுமன்றி இன்னம் அதினுடைய சுபாவத்தைக்கேள்-எ-று. * (தேகத்துக்குச் சலனமுண்டென்பது கருத்து, சுகத்துக்குச் சுபாவமானது தேகம், தேகசுபாவமானது தேகியாகையாற் சௌமியமானதுக்கதேகத்துக்குச் சுபாவமாகையால் அதற்குத் துக்கப்படத் தேவையில்லை யென்பது, ஆயுதமாவது பிருதிவியுடையகாரியமாகையால் காரியத்தையுடைய காரணமான ஆகப் பிருதுவிமுதல் நாலுபூதத்தாலும் அழியாதென்றது இவ்விடம் ஆன்மசொரூபம்.) (உசு)

அறுசீரடி யாசிரி விருத்தம்.

எல்லாப்பொருட்கும்பழையதனை யெங்குந்தானாயிருப்பதனை .. *
நில்லாத்தன்மையில்லதனை நித்தியத்துவத்தைநிலைப்பேற்றை ...*
யல்லாப்புலன்கள்பதினாலு மறியாவறிவையறியாதே.............*
இல்லாப்பொருள்போலழியுமென விரங்குகின்றனென்கண்டோ..*

(இ-ள்) எல்லாப் பொருளுக்கும் பழையபொருளானதை எங்குந் தானாயிருக்கின்றதை நிலையாய் நில்லாமல் அழிகிறசுபாவமில்லாததை இன்றுபோலென்று மிருக்கின்றதைப் பெயர்ந்து போகாமல் நிலையாய் நின்ற பேறுடையதை இந்தக்குணங்களை யல்லாத பதினாலு கரணங்களு மறியாத அறிவான சைதன்னியத்தை இப்படிக்கொத்த ஆன்மாவை யறியாமல் இல்லாத பொருளைப்போல அழியுமென்றிரங்குகிறது என்னகண்டோ-எ-று. * (பழையதென்பது, அநாதி எங்குந் தானென்பது பூரணமான தன்மையில்லாதென்பது, அழியாததுபதினாலுகரணமாவது இந்திரியம்பத்து கரணம்நாலு ஆகபதினாலும்இல்லாப்பொருளென்பது மாயாசம்பந்தமானதேகாதி பிரபஞ்சத்தை. (உஎ)

கலி விருத்தம்.

ஜீவனைக்கொடு மெய்தளர்வாயேல்.................. ...*
யாவர்பிறப்பவர் யாவர்களேனுஞ்................. ... ..*
சாவர்பெயர்த்துமவ் வாறுசனிப்பர்...... ....*
காவலிதற்குமோ சோகமேனோ.........................*

ந்திற்கு மாறுபட கிருத்தனமாய்க் குறைகிறது-இந்த வைந்துந் தீரச்சா கிறது என்றுவரப்பட்ட ஆறுசுபாவமும் உடம்பையல்லாமல் ஆன்மாவையடையாவாம்-(எ-று) * அறிவை யான்மாவென்றது அசேதனமான தேகத்தைநடத்துகையால். (உரு)

கலிவிருத்தம்.

நில்லாவுடம்பைக்கேநின்றேயு நித்தமாகியதுநாச.............................*
மில்லாததுபோய்ப்பிறப்பிறப்பென் றறியாததுமற்றதுவறிந்தோர் ... *
கொல்லார்கொலையேவலுஞ்செய்யார் கொலைமேலிட்டிக்குலமறைக ... *
சொலலாய்விதித்ததொழிலினையே யியம்பிற்றென்றேயிதுதெளிநீ ... *

(இ-ள்) நிலையாய் நில்லாமல் அழிகிறவுடலுக்கே ஆதாரமாக நின்றும், அந்தவுடலைப்போல அநித்தியமாகாமல் நித்தியமாகியது அழிவில்லாதது பொய்யான பிறப்பிறப்பென்ற இரண்டிலொன்று மறியாதது-ஆன்மா அதை அறிந்தவர்கள்சொல்லார்-கொல்லுவிக்கிறதுஞ் செய்யார்-நாலொன்றுருசாதியான வேதங்களெல்லாம் கொலையைமேலிட்டுக் குலாசாரதர்மத்தைச் சொல்லிற்றென்று இதைநீதெளிவாய்-எ-று, * (ஆன்மாவை நித்தியமாய் நாசமில்லாததாய் ஜெனனமரண மில்லாததாய் அறிந்தவர்கள் கொலைசெய்தாலும் செய்வித்தாலும் செய்ததும் செய்வித்ததுந் தமக்கல்ல-தேகத்துக்கென்று சாட்சியாய்ப் பார்ப்பார்கள் என்பது கருத்து) (உச)

இதுவுங்கலிவிருத்தம்.

பீறியபோர்வையைப் பெயர்த்தும்பின்னரோ... ... ...*
வேறியபோர்வையை விரும்புவாரென.................*
ஊறியவுடம்பினி லுத்தவுள்ளமைதான்......... ... .. *
மாறியோடரும்பினை மருவுமன்னனே.................*

(இ-ள்.) கிழிந்த போர்வையைவிட்டுப் பின்பொரு வேறான போர்வையை ஆசைப்பட்டுப் போர்த்துக்கொள்ளுவாரைப்போலச் சீரணமுடைய தூலமானவுடம்பிலே பிரவேசித்த ஆன்மா அந்தச்சீரண தூலதேகத்தைவிட்டு விலகி வேறொரு தூலதேகத்தைக்கூடும் இராஜாவே - எ-று. * (இதனுள் தேகியான ஆன்மா சீரணதேகத்தைவிட்டு நூதன தேகத்தை தரிப்பதல்லாமல் அத்தேகத்தைப்போலத் தேகி நாசப்படாதென்பது கருத்து. * பேர்த்துமென்றது பீறினபோர்வையைவெறுத்துவிட்டுப் பின்பு வேறொருபோர்வையை விரும்பும்போது முந்தினபோர்வை யைப்போலச் சிலநாளிலே கிழியுமென்றறிந்தும் இனிமேல்கிழிகிற போர்வையை இப்போது புதிதுகெட்டியாயிருக்குமென்று போர்த்துக்கொள்வது போல அழிந்ததேகத்தைவிட்டும் இனியொன்றை யெடுத்தாலும் அழிவதாமென்றறிந்து சும்மாயிராமல் வேறொருதேகத்தைக் கூடுமென்றவுரைமை.) (உரு)

இதுவுங் கலி விருத்தம்.

உருப்பாசினமையற்பவனுக் கொருநாளுமின்மையால்.........*
செருக்காய்ந்தவெம்படைக்கலங்கள் சேதிக்கமாட்டாவா ... ...*
நெருப்பாலெரிந்தழியாது நீராலேகொளுகாது ....*
மருத்தாலுஞ்சலியாது மற்றதன்றன்மையிற்கேளாய்...........*

(இ-ள்) தேகசுபாவம் அந்தத்தேகிக்கு ஒருநாளுமில்லையாகையால் அந்தத்தேகியைச் சண்டையிடத்துக்கு உபகாரமான கொடுமையுள்ள ஆயுதங்கள் பிளக்கமாட்டாவாய் நெருப்பாலெரிந்து அழியாதுமன்றி னீராலாகியோடாது காற்றாலுமசையாது இதுவுமல்லாமல் இன்னம் அவனுடைய சுபாவத்தைக்கேள்-எ-று. * (தேகத்துக்குச்சலவருத்தமுமுண்டென்பது கருத்து, சுகத்துக்குச்சுபாவமானது தேகம், தேகசுபாவமானது தேகியாகையாற் சென்மமரணதுக்கங்கள் தேகத்தாலுஞ்சுபாவமாகையால் அதற்குத் துக்கப்படத் தேவையில்லை யென்பது, ஆத்மாவது பிருதிவியுடையகாரியமாகையால் காரியத்தையுடைய காரணமானவன் ஆகப் பிருதுவிமுதல் நாலுபூதத்தாலும் அழியாதென்றது இவ்விடம் ஆன்மசொரூபம்.) (உ௬)

அறுசீரடி யாசிரி விருத்தம்.

எல்லாப்பொருட்கும்பழையதனை யெங்குந்தானாயிருப்பதனை.. *
நில்லாத்தன்மையில்லதனை நித்தியத்துவத்தாநிலைப்பேற்றை ...*
யல்லாப்புலன்களபதினாலு மறியாவறிவையறியாதே..............*
இல்லாப்பொருள்போலழியுமெனவிரக்குகின்றதென்கண்டோ..*

(இ-ள்) எல்லாப் பொருளுக்கும் பழையபொருளானதை எங்குந் தானாயிருக்கின்றதை நிலைமையாய் நில்லாமல் அழிகிறசுபாவமில்லாததை இன்றுபோலென்று மிருக்கின்றதைப் பெயர்ந்து போகாமல் நிலையாய் நின்ற பேறுடையதை இந்தக்குணங்களை யல்லாத பதினாலு கரணங்களு மறியாத அறிவான சைதன்னியத்தை இப்படிக்கொத்தஆன்மாவை யறியாமல் இல்லாத பொருளைப்போல அழியுமென்றிரங்குகிறது என்னகண்டோ-எ-று. * (பழையதென்பது, அநாதி எங்குந் தானென்பது பூரணமான தன்மையில்லாதென்பது, அழியாததுபதினாலுகரணமாவது இந்திரியம்பத்து காரணம்நாலு ஆகபதினாலும்இல்லாப்பொருளென்பது மாயாசம்பந்தமானதேகாதி பிரபஞ்சத்தை. (உ௭)

கலி விருத்தம்.

சீவனைக்கொடுமெய்தளர்வாமேல்............... ... .*
யாவர்பிறப்பவர் யாவர்களேனுஞ்............... ....*
சாவர்பெயர்த்துமிவ் வாறுசனிப்பர்..... ....*
காவலிதற்குள தோகடனோகான்......... ....*

(இ-ள்) இவர்கள் சாவார்களென் றெண்ணிக்கொண்டு நீ சரீரங்களைக் குறித்துத் துயரடைவாயாகில் ஆர்பிறப்பார்களோ அவர்களானாலுஞ் சாவார்கள்திரும்பவு மப்படியே பிறப்பார்கள் இதை வராமல்காக்கத்தக்க காவலுண்டோ இல்லை இதுவிதியேயல்லாமல் வேறில்லைகண்டாய்-எ-று. (உஅ)

பிறந்ததெவ்வாறிவ ரென்றறிதோராய்...... ... ...*
பிரிந்திவர்போமிட மும்பெரிதோரா............ ....*
யறிந்ததுநீநடு வேசிலநாளே... ....*
எறிந்திடுவேலிவர் பாலிடரென்னே...... ... ...*

(இ-ள்) இவர்கள் சிருஷ்டிகாலத்துக்கு முன்னே யெப்படி யிருந்தார் களென்றதை யறியாய் -இவர்க ளிந்தத்தேகத்தைப்பிரிந்து போகிற விடமும் வெகுவாய் விசாரித்தாலும் அறியாய் இவர்களைநீயறிந்ததுநடுவேசி லநாளையல்லாமல் அனேகநாளில்லை எறியப்பட்ட வாயுதத்தையுடைய அருச்சுனா இவர்களிடத்திலே யுனக்குத்துக்கமென்னமோசொல்வாய்-எ-று * வேலை யருச்சுனனென்றதாகுபெயர்.) (உகூ)

கொச்சகக்கலிப்பா.

ஒருவனென்றுங்கண்டறியா ததைக்கண்டாற்போலுணர்ந்திருக்கும்...*
ஒருவனென்றுங்கேட்டறியா ததனைக்கேட்டான்போலுவக்கும்........*
ஒருவனென்றுமுரைத்தறியா ததனையுரைத்தான்போலுரைக்கும் ... ...*
ஒருவனென்றுங்கேட்டாலு மறியானிந்தவுண்மையினை.................*

(இ-ள்) இந்த ஆன்மாவை ஒருவனென்றுங் கண்டறியாததைக் கண் டாற்போலப் பார்த்திருப்பான் ஒருவனென்றுங் கேட்டறியாததைக்கேட் டவனைப்போலச் சந்தோஷப்படுவான் ஒருவனென்றுஞ் சொல்லியறியா ததைச் சொன்னவனைப்போலச் சொல்லுவான் ஒருவனென்றுங்கேட்டா லுங் கண்டாலுஞ் சொன்னாலு மறியான்-எ-று. * (கேட்டாலுமென்ற உம்மையாற் கண்டாலுஞ் சொன்னாலும் அறியானென் றெதிரதுதழுவியது

இதனையெவருமறியாத பொருளைத்தெரிந்துகொண்டுநீ. ....*
இதனாலிவரையான்கொன்றே னென்பதொழிவாயின்னங்கேள்
மதனாலாயமறைமொழியு மன்னர்தருமம்வாளமரென்... ...*
பதனாலமரோ துடங்கிதனை யறனென்றேநீயையுறேல்... ... ...*

(இ-ள்.) சகலதேசங்களிலு மிருக்கிறவனும் எவர்களுமறியாத ஆன் மாவை நீ தெரிந்துகொண்டு இவனாலே யிவர்களைநான்கொன்றேனென் று அகம்பாவிக்கிறதைவிடுவாய் அருச்சுனா, இன்னமுங்கேள்சாதிநாலாகச் சொல்லப்பட்டவேதவாக்கியமும் அரசர்தருமம், கீர்த்திப்பிரகாசமுள்ள சண் டையென்று சொல்லுகிறதினாலே சண்டையையேதொடங்கு இந்தச்ச ண்டையைத் தருமமல்லவென்று நீ சந்தேகப்படாதே எ-று. (ஙக)

கலிவிருத்தம்.

செய்திடின்றியத் தேவர்கள்வாழுல......... ... ...*
செய்தகின்ற திருபெறுவார்கள்கேள்... ....*
எய்திகர்தரு மாதவமேற்கொடு........................ ...*
மெய்திருந்திய வேந்தர்களல்லரோ......... ... ...*

(இ-ள்) தவந்தானமுதலான வருத்தஞ் செய்யாமலே அந்தத்தேவர்களுடைய தேவலோகத்துக்குப்போக நின்றது இப்படிக்கொத்த சண்டையைப் பெறுவார்களைக்கேள் வேதவாக்கியஞ்சொல்லப்பட்ட பெரிய தவத்தை மேலாகக்கொண்ட திருத்தமான தேகங்களையுடைய அரசர்களல்லவோ-எ-று. (௩௨)

இன்றுவாளமர் தன்னிலெதிர்த்துநீ............. ... ...*
பொன்றல்வானவர் போற்றவின்காத்துல............*
வென்றிசேரிற்கு வேந்தரெலாந்தொழ......... ... ...*
நின்றுஞால மளிக்குவையோ........................*

(இ-ள்) இப்போது இந்தக்கீர்த்திப்பிரகாசமுள்ள சண்டையிலெதிர்த்து நீசெத்தால் தேவர்கள் தோத்திரம்பண்ணத் தேவலோகத்தை யாளுவாய், சாகாமற்செயமடைந்தால் இந்தராஜாக்களெல்லாம் வணங்கிநிற்கப் பூமியையாளுவாய்-எ-று. (௩௩)

ஆவதான வமர்தொடங்காயெனிற்................ ......*
போவதாமுகழ்ந்தருமமும்.................. .. ...*
பாவமாம்பழி யாமிப்பழியினிற்......................*
சாவதானதுவே தலையல்லவோ.............. ....*

(இ-ள்) இராஜதருமமான சண்டையைத் தொடங்காமலிருந்தால் தருமமுங்கீர்த்தியும் போய்ப் பாவமும் பழியுமாகும் அந்தப்பழியிலும் சாவே தலைமையல்லவோ-எ-று. * (சாவு சிரேஷ்டமாகிப் பழிகாணக்கெடுக்கிறதாய் ஆகையாற் சாவிலுங்கெட்டது அபகீர்த்தியென்பது கருத்து.)

அன்றியும்முனை யஞ்சினனென்பரா ... .*
லின்றியங்குலத்து முன்னீசெய்த ... .*
வென்றியும்பழி யாயிற்குமேலவை ... .*
யொன்றியம்பினன் றங்கிதன்மேனுண்டோ ... .*

(இ-ள்) அல்லாமலும் உன்னைப்பயந்தானென்றுங் கொஞ்சமாசப்பேசுவார்கள் முன்னே பூமியிலே நீ செய்ததில்லமையாக நின்று விளங்கப்பட்ட வெற்றியும்பழியாக எக்காலமுநிற்கும் மகாரதக்காரருன்னையொன்று சொன்னால் அதற்கு மேலான பொல்லாங்கு வேறே யுண்டோ

எ-று. * (மேலவரைப் பெரியோரென்றுசொன்னால் ஏற்றக் குறைச்சலில்லாதவர்களைப் பெரியோரென்று உலகஞ்சொல்லுகையாம் - இந்தக்கவியிலே பயப்படப்பண்ணுகிறவனைப் பயந்தவனென்றுஞ் சண்டைபண்ணிச் செயித்த வெற்றியை பகைவனைபண்ணிச்செயித்த பழியென்றுஞ் சொன்னதினாலு மிப்படிச் சொல்லுகிறவர்களைப் பெரியோர்களென்று சொல்லக்கூடாததினாலும் அதிரதர் சமரதர் அர்த்தரதரெனச் சொல்லக்கூடாததினாலும் மகாரதரென்றுசொல்லப்பட்டது.) (கரு)

துற்றவின்பமுந் துன்பமுந்தோல்வியும்.............*
வெற்றியும்மிழி வும்மிகுபேறுமென்............ ... ...*
றற்றவின்னவா றொத்தமனத்தனாய்............ ... ...*
கொற்றவெஞ்சமர் செய்குற்றமில்லையாள்...... ... ...*

(இ-ள்) சௌக்கியங்களுக்கதுக்கமும், அபசெயமும், நஷ்டமும், மிகுந்லாபமு மென்றுவந்த இவைகளுக்குச்சமமான மனதுடையவனாய் வெற்றியும் உக்கிரமுமுடைய சண்டையைச்செய்ய இப்படியானாற் குற்றமில்லை-எ-று. * (குற்றமாவது-பாவம்) (கசா)

கலிவிருத்தம்.

கதுவியபொருள்ஞானங் கறையறுமுறைமையாலே......*
பொதுவறுவகைநீயும் புலனறிவகையானு...... ......*
யெதுவொருவினையாலே யிருவினைகளும்வீடு........*
மதுதனையறியார்வீ டணைபவமதுகேளாய்......... ...*

(இ ள்.) இப்படி யுறுதியாகப்பிடிக்கப்பட்ட பொருளானது ஞானம் இந்த ஞானத்தைக் கறையற்ற வசனத்தினாலே யெல்லாருக்கும் பொதுவென்பதில்லாமல் அறும்படிக்கு நீயும் ஐம்புலன்களாலும் அறியும்படியானாய் எந்தக்கர்மமானது ஒரு கர்மத்தினாலே நல்வினை தீ வினையான இரண்டும் அழியுமோ அந்தக்கர்ம்மத்தை அறிகிறவர்களே மோட்சத்தையடைவார்கள் அந்தக்கர்ம்மத்தை யினிச்சொல்லுகிறோம் கேட்பாயாக எ று * (ஒருகர்மத்தினாலென்பதாவது அநேககர்ம்மமென்று பயப்படாமல் ஒருகர்ம்மத்தினாலே யிரண்டுகர்ம்மங்களும் கெடச்சொல்லுகிறோம் கேள் என்றது.) (கஎ)

அரிதினொடியேனுஞ் செயிலுமதழிவாகா ....*
திரிதரவிடையூறும் வகைகளுமிடைகூடா ....*
தெரிபொருள்சிறிதேனும பெறுமயநெருமானு ......*
லுரியதிவ்வுலகோர்பா விதுவலதுளதோதான் ....*

(இ ள்) அந்தக்கர்மத்தை நாலுபாதமாகப் பிரித்து அதிலதில் அரிதாக ஒருபாதம் செய்தாலும் அதுநாசமாகாது இடைவிட் டோடித்தக்க

இடைபூறுனவிதங்களும் நடுவேவந்துகூடாது-இப்படிப்பலனை இச்சியாத கர்மமென்றுதெரியப்பட்ட பொருள் கொஞ்சமானாலும் பெரியபயத்தைக்கெடுக்குமானால் அதுவேபரிபது -இந்த வைகத்தாரிடத்திலேது அல்லாமல் வேறுண்டோ இல்லை-எ-று. ❋ (காமிய கருமங்கள் அனேகபாதகமு மறுப்பது - பலனிச்சியாத கரும மொருபாதகம்- அதுவொரு பாதகமானாலும் அந்தப் பாதகத்தையே செய்யென்பதுகருத்து.)

தெளிவருணர்வொன்றே தெளிவருணர்வோதிற் ... ...❋
மளிர்கிர்பலவாகுந் தருபயனதுமே...... ... ...❋
மொளிமறைநெறிமேலா புணர்பொருளெனவோது.........❋
மளியவர்தெளியாதா லவையலதறியாரால்........... ......❋

(இ-ள்) பலனை ஆசைப்படாமல் மோக்ஷத்தில் இச்சையுண்டாய்க்கருமஞ்செய்யத் தெளிவுடையவர்களுக்கு அறிவு ஒன்றேயல்லாமல் அனேகமாயிராது -காமியகருமங்களையேசெய்கிற தெளிவில்லாதவர்களுடைய அறிவைச்சொல்லில் நிச்சயமில்லாத களிரைப்போல அனேகமாகுங்கருமத்திலேவரப்பட்டபிரயோசனத்தைச்சொல்லியிருக்கப்பட்ட பிரகாசமுள்ள வேதமார்க்கத்தையே மேலாயறியப்பட்ட பொருளென்றுவாதுபேசப்பட்ட அளியவர்களே மயங்குந் தெளியாதவர்கள் அந்த அளியவர்கள் அந்தக்காமியகருமத்தையல்லாமல் மோக்ஷத்தையறியார்கள்-எ-று ❋ (அளியவர்களாவது பிறரால் அளிக்கத்தக்கார் தனக்கென வொருஅறிவில்லாதாரென்பது - அதாவது கருமமேயல்லாமல் வேறில்லையென்று திடமாகப்பேசுதல்) (௩௯)

புன்ணியவுலகத்தைப் பொருண்முடிவில்வைப்பார்.........❋
கன்ணியபிறவிக்கே கருத்தழிநெறிநிற்பார்........ ... .❋
பண்ணியவினைகட்கே பயனினையவர்கட்பா.................❋
னுன்ணியபொருள்செப்பார் நுணிகியவறிவுற்றோர்........❋

(இ-ள்) பலனையிச்சித்து யாகாதி கருமங்களைப் பண்ணினவர்கள்புண்ணியலோகமான சொர்க்கத்திலே பிரயோசன முடிவை வைத்துப்போகங்களை அநுபவிப்பார் - அறிவுடையவர்கள் பொல்லாதென்று நினைத்துப் பிறவியினாலே கெற்பவழியிலேபிறந்து அந்தக் காமியகருமங்களையே செய்து சொர்க்கபூமியிரண்டுக்கும் போக்குவரத்தாய் ஆத்ம ஞானங்கெட்டுநிற்பார் - பண்ணப்பட்ட கருமங்களுக்குள்ள பலனை நினைக்கிறவர்களிடத்திலே நுன்மையான பொருளைச்சொல்லார்கள், நுண்மையான அறிவுபெற்ற பெரியோர்கள்-எ-று, ❋ நுன்மையாவது சூட்சுமம்) (௪0)

தவைதருகுணமுப்பா னனுபவலனுப்த்தார்... ... .❋
சுவைமிகுகுணமைப்பார் தொழுமறைநெறியற்றே... ...❋

கவைதருகுணமூன்றோர் கருமமதிடனூற்றார்... ... .*
அவைகெடவருமெய்ப்பா லறிவினையெனநிற்பார்............*

(இ-ள்.) ஆனால் காமியகருமங்களை வேதத்திலே சொல்லுகிறதேயெ ன்றால் கேள் குற்றத்தைக்கொடுக்கப்பட்ட குணங்கள் மூன்றினிடத்தி லேபுலனைவைத்து நிறைந்தபலவிஷயத்தில் சுவையைத் தெரியப்பட்ட முக்குணங்களிலே வைப்பாகவிருந்த கருமங்களை வேதத்திலேசொன்ன மார்க்கத்துடனே சேர்ந்துமூன்றாகப்பாகத்தரப்பட்ட மூன்றுகுணத்தை யு மடைந்தவர்களே பலனையிச்சித்த கருமத்தினிடத்திலேகூடினவர்கள் அந்தமூன்று குணங்களுங்கெட விட்டுக் குணாதீதமாகிய அரிய ஆத்மா வினிடத்தில் ஞானியென்று திடமாகநிற்பார்-எ-று. (௪௧)

குளமுதலியவற்றே குளிர்முதலியதுய்ப்பா....................*
ளளவறுபுனல்பெற்றா லவைகொளலருமைத்தோ... ... ...*
வளமுறுகருமத்தால் வருசிறுசுவையற்றா...... ....*
லுளமகிழ்பிரமத்தே யுட்கொளலுரிமைத்தால்..................*

(இ-ள்) ஆனால்வேதஞ்சொன்ன கருமங்களை விடலாமோவென்றால் கு ளிர்ச்சிமுதலாகியன வேண்டிய தாகமானவன் குளமுதலான வற்றில் அளவற்றதண்ணீரைப்பெற்றால் அவற்றில்தனக்குவேண்டியதண்ணீரையெ டுத்துக்கொள்ளுகிறது அருமையோ அல்லவே அதுபோலவளமையான கருமத்தினாலேவருகிற அற்பவிஷயத்தை இச்சியாவிட்டால் இருதயம கிழப்பட்ட பிரமத்திலேயுள்ளதைக் கொள்ளுகிற துரித்தாம்-எ-று. * (வேதங்களிற்சொன்ன அனேகத்தில் அறிவுள்ளவன்மோட்சத்துக்கு அ திகாரியென்பதுகருத்து.) (௪உ)

அறிவினையறிகிற்பா யகிலமுமடைகுற்றே...... ... .*
பிறிபொழுதினிலொத்தே பெருவினைதனினிற்பாய்.........*
செறிதருமறிவெட்டா வகைவினைதனினிற்பார்... ... .*
சிறியவெனமிக்கோர் தெளிபவர்செயலைக்கேள்...... ......*

(இ-ள்.) விவேகியான நீ அறியத்தக்க கருமத்தையறிவாய், தருமத்தி னால்வருகிறபலன் சகலமுங்கிடைத்தபோதும் பிரிந்தபோதுஞ்சமனாகி ய பெருவினையாலுள்ள கருமங்களில் நிற்கிறவர்கள் கொஞ்சமானவர்கள் இவர்களால் என்னையறியக்கூடாது என்னைப்பெரியோர்கள் தெளிந்தறி வார்கள் அவர்கள்செய்கிற கருமத்தைக்கேள்-எ-று. * (பெருவினையாவ து-பலனையிச்சியாதகருமம்.) (௪௩)

தருபயனதுவிட்டே தகுவினைசெயலுற்றா............ ......*
லருமயலறுமற்றா லறிவுறுமறிவுற்றா................ ... ...*
லிருவினைவிடும்விட்டா லிழிவொடுபெறுதப்பா... ....*
லொருமனம்வருமத்தா லெனையுணருளர்கிற்பார்............*

(இ-ள்) கொடுக்கப்பட்ட பிரயோசனத்தை நிச்சயமாகவிட்டு அவரவருக்குத்தக்க காரியத்தைச்செய்தால் வேறொன்றுமின்றாக மயக்கமறும், மயக்கமற்றால் அறிவுண்டாம், அறிவுண்டானால் நல்வினை தீவினையான இரண்டு கருமமும்விடும், இந்த இரண்டும் விட்டால் இறக்கிறதுடனே பெறுகிறதுமான நஷ்டம் வந்தவிடத்திலும் ஆதாயம் வந்தவிடத்திலும் ஒரு மனதாகவரும், அந்த மனநிலை என்னை யறிவார்கள் அறிவுடையவர்கள் - என்றவாறு. * பலனை யிச்சித்தால் மயக்கம் விடாது விடாவிட்டால் ஞானம்பிறவாது பிறவாவிட்டால் புண்ணியபாவம்விடாது விடாவிட்டால் இலாபநஷ்டத்திலே மனது ஒருமைப்படாது, படாவிட்டால் என்னையறியமாட்டாரென்பது அருத்தாபத்தி ஒருமனமாவது இலாபம்வந்தபோது சந்தோஷமில்லாமலும் நஷ்டம்வந்தபோது துக்கமில்லாமலும் இந்த இரண்டும் பிராரத்தவசமென்றிருத்தல் - தகுவினையாவது குலத்தருமம், தகாவினையாவது பரதருமம், தருபயனதுவிட்டே தகுவினைசெயலொன்று சொன்னது பிரயோசனத்தை யிச்சியாதவன் தகாவினையுஞ் செய்பலாமென்றெண்ணாமல் தகுவினையே செய்ய வேண்டுமென்பது கருத்து.) (௪௪)

பேதைமையடைகுந்நெறிதுறமனமற்றே ....*
பேதமிலெளிவுற்று னியாதொருபொழுதப்போ ....*
ஓதலொடுலகதத்தே யுரைகளினுளமவிட்டா ....*
னுகலிலெனையெய்ப்பா டடைதருநெறியைக்கேள் ....*

(இ-ள்) அறியாமையையடைந்து மோட்சத்துக்குவேறான சொற்காதிபதங்களை இச்சித்திருக்கப்பட்ட மனதானது அந்த அறியாமையை நீக்கிச் சொற்காதிபதங்கள் அநித்தியமும் துக்கமுமென்று குற்றமில்லாத தெளிவையடைந்தால் அது எப்பொழுதோ அப்பொழுதே உலகத்திலே சொல்லுடனே யுரைகளிலே மனத்தை யிருத்தாமல்விட்டான் - ஆகையாலேயென்னைமெய்யாக அடைகிற மார்க்கத்தைச் சொல்லக்கேள்-எ-று. * (அறியாமையாவது மயக்கம் மனத்தில் தெளிவாவது சொற்காதிபதங்களை நித்தியமென்றுஞ் சுகமென்றுந்தமையறி மயங்காமல் அநித்தியமென்றுந் துக்கமென்றும் நிச்சயம்பிறந்ததுக்கு மெய்ஞ்ஞானமென்றுந் திடஞானமென்றுந்தெளிவென்றும் பேராசையாற்குற்றமில்லாததெளிவென்றார் - இந்தத்தெளிவுபிறந்தபோதே நூல்களிலும் அதினுரைகளிலும் மனம்போகவிட்டானென்பது கருத்து.) (௪௫)

விடலரும்வகையிதால் விளைபயனதுவிட்டே ....*
கடவியவினைமுட்டா வகைசெய்துகழிவுற்றே..............*

ருடலொழிவ்வுலகத்தே யானெனைநிகழ்பெற்றே ....※
இடர்களையறவிட்டா ரெனையறிவகைபெற்றார் ....※

(இ-ள்.) விடுதற்கரிதான இந்த வகையினாலே விளையப்பட்ட பிரயோசனத்தைவிட்டே நடக்கப்பட்ட காரியத்தைத்தடைபடாதபடி செய்து கழித்தபேர்கள் இந்தவுலகத்திலே இப்போதிருக்கிறார்போல எப்போதுந்தேகத்துடனே யிருக்கிறாரென்னப்பட்ட பேறுபெற்றே துன்பங்களை யறுத்ததாக விட்டபேர் என்னையறியப்பட்டவகையைப்பெற்றார்-எ-று ※ (கடவிய வினையாவது தெய்வச்செயலாலே நடத்தப்பட்டகாரியம், விளைபயனாவது உண்டாகிறபிரயோசனம் விடலருவகையாவது அனுமானத்தைநம்பிப்பிராயத்தியட்சத்தைவிட அரிதாகையால்விடலரிதென்றது)

கொச்சகக் கலிப்பா.

தலைநின்றபொருளினிற்சந் தேகமின்றிச்சலியாதே ....※
நிலைநின்றதியாதொருபோ தப்போதுநெறிநின்றாய் ....※
கலைநின்றமெய்ஞ்ஞான யோகங்கூறுமென்னச்............※
சிலைநின்றதோள்விஜய னிவ்வண்ணஞ்செப்பினான் ....※

(இ-ள்) எல்லாவற்றிற்குந் தலைமையாக நின்றபொருளிலே சந்தேகமில்லாமற் சலியாமல் நிலையாகநின்ற தெப்போதோ அப்போதுமோட்சமார்க்கத்திலே நின்றாய் அதினாலே சாத்திரங்களிலே அசையாமல் நின்றமெய்ஞ்ஞானயோகம் காணப்படுமென்று கிருஷ்ணசுவாமி சொல்ல, வில்லு நிற்கப்பட்ட கையையுடைய அருச்சுனன் இந்தப்படி சொன்னான்-எ-று. ※ (கலைநின்றஞானமாவது, வாசகஞானத்தை நம்பாமல் மயங்குகையிலந்தமயக்கமிராவும், நம்பவும், இடம்பிறக்கவும், வேதமுதலான துகளிலே சொல்லாநின்ற ஞானத்தைக்காட்டுகையாம்.) (சஎ)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இவ்வகையவனின்றோ ரெவ்வகையுரைப்பராந்தச் ....※
செய்வகையிலாதோன்செய்யுஞ்செயல்களென்செப்புமாறென்
மெய்வகையருளுகென்ன விண்ணையேமுதலாக்கொண்ட...※
வைவகைப்பொருளுமீன்ற வவனிதையருளிச்செய்தான்...※

(இ-ள்) இந்தப்படி பிரமமே நித்தியமென்று சலியாமல் நின்று அடுத்த காரியத்தைச்செய்து அடுக்காத காரியத்துக்கு முயற்சியல்லாமலிருக்கிற சமாதியறிவுடையவன் அவனே தவிர நின்ற பேர்கள் எப்படிச் சொல்லுவார்கள் - அந்தச்செய்யும்வகை யென்று மில்லாதவன் செய்யப்பட்ட செயல்களென்ன பேசுகிற வழியென்ன இவைகளை மெய்யானவகையாக அருளிச் செய்யுமென்ன ஆகாயத்தையே முதலாக எ[illegible] வைத்துக் கொண்ட ஐந்து வகை பூதங்களையும் உண்டாக்

னை அடக்கசுவாய் இருக்கவுருக்கச்செய்வார் - என்றவாறு. * (இப்பிருவரியுரு தலாக வருங்கிறுவட, சோதக்காரர், சத்காரி, வாக்காத், கைவுனில் தவா ன தத்துவ உட்பத்தியுஞ் செயலும், இரு வகையும் சொல்லுமபோது, இரு வரு-தலோர் வைத்துக்கொண்டிருந்தால் ப்ரதிபோதாரம் வருவதுதா.)

ஆறியவினையுடிதாக வடிக்கெலாவடாவடிக்கி................ ...*
வெறிதருகெடுதலாகாம மயக்கத்திலிங்பதும்பம்...... ......*
வறிகெழுவொருநிலவாடி படுத்தியெய்திவயுமாய்த்துப்*
பொறிதருபுழுந்திக்கும் போற்றல்பொருளைமபோக்கி ...*

(இ-ள்) ஆத்மஞானத்தை நன்றாகவறிந்து அந்த மனதுக்கும் புத்தி யிந்திரியங்களாலும் வருகிற மேல்லா ஆசைகளையும் போக்கி யேதப்ப ட்டகோபம் ஆசைமயக்கம் இந்த மூன்றையும் விட்டுவிருதாவாகச் சுகது க்கங்களெழும்புகிறபோது சந்தோஷமுங் கிலேசமுமென்றறிந்தவாகன டையுங் கெடுத்து உலகத்திலெழுதி பிருத்தின கீர்த்தியைப்பரிபாலித்த லும், அபகீர்த்தியைப் பரிபாலியாததும்போக்கியென்றவாறு. (சுக)

ஆமைதன்னுறுப்போரைந்தும் தன்னுளேயடக்குமாபோற் .. ...*
தீமைசெய்புலன்களைந்துந் தன்னுளேசெறியச்சேர்த்தி... ... ...*
வாய்மையினிகழுமன்னே வழுத்தவும்படுகின்றாராம்... ... .*
தூய்மைசெய்தவையைத்தானுச் சொல்லுவதவன்றன்சொல்லே*

(இ-ள்) ஆமையானது தன்னுடைய வுறுப்பான காலுகாலும ஒருதலை யும் ஆகிய ஐந்தையுந் தன்னுக்குள்ளேயடக்குகிறவழியைப்போலப்பொ ல்லாங்குசெய்யப்பட்ட ஐந்து புலன்களையுந் தன்னுள்ளேயடங்கச் சேர் த்து வாக்கினாலே நிந்திக்கிறதும் வாழ்த்துகிறதுஞ் செய்கிறவர்களாலே இரண்டையுஞ் சமனுக்கி யப்போதே மனதைச் சுத்தஞ்செய்து அந்தம னதே தானுய்ச்சொல்லுகிறது அவனுடையசொல்லென்றவாறு. (ருஉ)

குறையுமாற்பணியற்றாலுங் கொண்டவிப்புலன்களெண்ணி*
லறைகடலனையநெஞ்சத் தவாவறுவறிவினில்லோர் ... .*
மறைமொழிபலவுமோதி யடக்குவான்மனத்தைவாங்கிப் ...*
பொறைகெடப்புலன்களைந்தும் பொறியிலேபோக்குங்கண்டாய்

(இ-ள்) இப்படியடக்கிக்கொண்ட இந்த ஐந்துபுலன்கள் செயலற்று லும் ஆத்மஞானங் குறையுமாகில் அளவில்லாத அலைகளாலேசத்தமுள் ளகடலையொப்பான மனதிலே ஆசைபற்றாது ஆத்மஞானத்தில் நில்லாம ல் வேதவாக்கியங்களை அனேகமும் ஓதி யடக்குகிறவனுடைய மனதை ஐந்து புலன்களும் வாங்கிப் பொறுமை கெடத்தக்கதாக ஐந்து பொறிக ளிலும் போகவிட்டுக் கெடுக்குங்கண்டாய் அருச்சுனு-எ-று. * (ஆத் மஞானம் வளருமாகில் ஆசைவிடுமென்றும் ஆத்மஞானத்தில் நில்லாவ

னுடையபுலன்களை விடயங்களாகிய புலன்கள் கெடாதென்றும் அப்போ தும் இந்திரியங்கள் செயலற்றுச் சடமாமென்றும் அருத்தாபத்தி இந்திரியங்களுடைய செயலாவது விஷயங்கள் அனைத்தையறிதலாவது அனுபவியாது இருக்கும் ஆகையால் ஆத்மஞானமில்லாமல் இந்திரியங்களை அடக்கி விஷயங்களை யனுபவியாமல் விட்டாலும் ஆசைவிடாதென்பதும் ஆத்மஞானத்தில் நில்லாமல் வேதவாக்கியங்களினு லடக்குகிறவனுடைய மனதை விஷயங்களிந்திரியங்களிலே போகக்கெடுக்குமெனவேமோக்ஷத்திலேசெலுத்தாதென்பதுங்குறிப்பு. (௫௧)

அகலாப்புலன்களைந்து மடக்கரிதடங்காவாகிற்..............*
நிகலாங்கருத்துந்தீதா லவற்றிலேசெல்லுஞ்சென்றும்... ...*
காதலாம்புகைந்துவெய்ய காமமாக்கொளுமக்காம .. ..*
மேதிலாக்காமத்தியா வெகுளியாயெரியுமன்றே...... ... ...*

(இ-ள்) ஆத்மஞானமில்லாதவனுடையமனதைவிஷயங்களிந்திரியங்களிலேசெலுத்தும் ஆகையாலே ஐம்புலன்களையும் அடக்குவது அரிது அது அடங்காதாகிற் பொல்லாதல்லாத நல்லமனதும் பொல்லாதாய் அந்தப் பொல்லாங்கிலேபோம் போனால் விஷயவிச்சையினாலே அந்தமனது புகைந்து விருப்பத்தையுடைய காமமாகக்கொள்ளும் அந்தக்காமம் மனதிற்கு அன்னியமாகாமலொன்றாகிய பொல்லாதகோபமாகியெரியும்-எ-று (விடயங்களடங்காவிடில் மனதுபுகைந்து கொளுத்தியெரியுமென்பது மனது எதனுடனே கூடிற்றோ அதுபோலே நடக்கையாலும் ஞானத்தைக்கூடி மோட்சத்தைபெறச்செய்வதுமாகையால்நல்லமனதென்றார்.

எரிசினவெகுளிபொங்க மயக்கம்வந்தெய்துமெய்தத் ......*
தெரியவைசிந்தையுமுள்ளந் தெரிந்தறிவசிதைந்தபோதே *
பரியமெய்யுணர்வுமாயு முணர்வுமாய்ந்தொழிந்தவாறே ... *
யரியவென்றறிஞர்பேசு மனைத்துமாய்ந்தொழியுமன்றே ... *

(இ-ள்) இப்படி நெருப்பை யொப்பான கோபம் கொதித்தெழும்ப அப்போது அஞ்ஞானமுண்டாம் அஞ்ஞான முண்டாகவே அப்போதே ஆத்மஞானத்தைத்தெரிகிற புத்தியழியும் மனதுதெரிந்த புத்தியழிந்தபோதே யநித்தியாசத்தியஞானம் நாசமாம் தெளிந்த ஞானம் நாசமாய்ப்போனவுடனே பெரியவர்கள் அரிதென்றுசொல்லப்பட்ட சகலமும் நாசமாய்ப்போம்-எ-று. (௫௨)

வேண்டல்வேண்டாமையின்றி மிகைசெலாப்புலன்களாலே *
பூண்டபோகங்கடிப்பபான் மனமகலக்குறுன்மற்றத்தா ...*
வீண்டியதெளிவுண்டாமாற் றெளியவேயெல்லையின்றிய ... *
நீண்டநோக்கீக்குநிற் புலனலாபொருளுந்தோன்றும் *

(இ-ள்) தன்றன்பட்ட போகமடைக்கிற விஷயங்களாலே யதேசமையுள்ள போகங்களை விருப்பு வெறுப்பு இல்லாமல் அநுபவிக்கிறவனுடைய மனது கலக்கமடையான்-அந்தக்கலக்கமில்லாததனாலே மருள்நீங்கித் தெளிவுண்டாம், தெளிவாலே ப்ராமாணமில்லாமற் பூண்ட பிறவி முதலான வியாதி நீங்கும், நீங்கினால் விடையங்களையெல்லாம் விலக்கினதனாலே அந்த விடையங்களல்லாத பரமாத்மாவும் பிரசன்னமாம்-எ-று. ✻ (விளங்கிய பொருளென்றது தோன்றாப்பொருளுந் தோன்றுமென்ற சிறப்பும்மை.) (௫௪)

அடுத்ததன்றொழில்செய்யாதார்க் கறிவில்லை யறிவின்றாக ...✻
விடுத்தமெய்யுணர்வின்றாம் மெய்யுணர்வில்லையாகத் .. ✻
தொடுத்தபின்சித்தசாந்தி தோன்றிடாததுதோன்றாதே ... ✻
லெடுத்தநல்லின்பமென்று மில்லையேயிசைக்கவேண்டாம். ✻

(இ-ள்) பிரசன்னமாகவே அடுத்த பரமாத்மாவினுடைய தொழிலான ஞானயோகத்தைச் செய்யாதவர்களுக்கு ஞானமில்லை- ஞானமில்லையாகவே சகலமுமித்தையென்று பெரியோர்கள் கைவிட்ட மெய்ஞ்ஞானமில்லையாம், மெய்ஞ்ஞானமில்லையாகவே மோக்ஷத்தையடைதலாகத் தொடுத்த இனிதான சித்தசாந்தி தோன்றாது அது தோன்றாதாகில் மேலாக வெடுத்த மோட்சசுக மென்னப்படுகிற இன்பமில்லையென்று சொல்லவேண்டாம என்றவாறு. ✻ (மித்தையாவது பொய்.) (௫௫)

ஆறுசெய்பொருள்களுக்கு மைம்புலன்களுக்கும்பின்னே.. ✻
காறுடர்நெஞ்சையந்தப் புலன்களே கலக்குமாகே........ ✻
ஏறுசெய்கடலுளோடுங் கலத்தினைப்புடன்செல்காற்றே.. ... ✻
வேறுசெய்தழித்துமாட்டு வீழ்த்துமாபோலவேயாம் ... ✻

(இ-ள்,) வழியாகப் போகப்பட்ட போகங்களை யநுபவிக்கப் பட்ட விடையங்களைத்துக்கும் பிறகே காலந்தொடரப்பட்ட மனதை யறிந்த ஞானத்தைச்செய்யப்பட்ட விடயங்கள்தானே கலக்குகிற வழியைக்கேள் அருச்சுன கடலினிடத்தோடுகின்ற மரக்கலத்தை அந்த மரக்கலத்துடனே கூடப்போகின்ற காற்றுத்தானேமோதி வேறுப்படுத்தி அழித்துவிழுப்பண்ணுகிறாப் போலவேயாகும்-எ-று. ✻ (இதனால் விடையங்களின்பிறகே தொடருகிற மனதை அந்தவிடயங்களே தெளிவைக்கலக்கி ஆத்மஞானமில்லாமல் மயங்கப்பண்ணுகிறது-எப்படிப்போலவென்னில் கடலி லோடுகிற மரக்கலத்தைக் கூடப்போகிறகாற்றே கெடுத்தது போலவாமென்பது ஆத்மஞானத்துக்கு உவமை கடல் அதிலோடுக்கிற மனதுக்குவமை மரக்கலம் அதைக்கெடுக்கிறவிடையங்களுக்கு உவமைகாற்று ஆகையால் விடையங்களின்பிறகே தொடராமல் தத்வஞானத்தைத் தொடரவேண்டுமென்பது குறிப்பு) (௫௬)

யாதொருபொருளையெல்லா வுயிர்களுமிருள்போற்காணு... ✻
வோதருஞானியத்தை யுளங்கையிற்கனிபோற்காணும் ... ✻

யாதொருபொருளையெல்லா வுயிர்களுமெங்குங்காணும் ... *
காதலில்யோகியத்தைக் கண்ணினுற்றெரியக்காணன்... ...*

(இ-ள்) எல்லாச்சீவன்களும் யாதொருபொருளை யிருள்போல எங்குங்காணுமோ அந்தப் பொருளைச்சொல்ல வரிதானஞானி உள்ளங்கையிலிருக்கிற நெல்லிப்பழத்தைப்போலக் காண்பான்- எல்லாச்சீவன்களும் யாதொருபொருளை எங்குங்காண்பனவோ அந்தப்பொருளை ஆசையில்லாத யோகி கண்ணினுலே தெரியக்காணன்-எ-று. * (தேகிகாணும் பொருள் ஆத்மா-தேகிகாணும்பொருள் விஷயங்கள் ஆகையால் ஆத்மாவை ஞானிகாண்பான் - விஷயத்தை யோகிகாணனென்பது குறிப்பு.) (௫௭)

நீரினுனிறைந்துநின்ற கடலிலேநெறிமேற்கொண்டு.........*
நீரினுனிறைந்தவாறு விழுமதுநெறியுறாது..................*
தேரினுலதுபோலாசை செறிந்தவர்திறமேநோக்கிச்... ... *
சாருமாலாகிலத்தை யவர்களுஞ்சலித்தல்செய்வார்... ......*

(இ-ள்) சலத்தினுலே நிறைந்துநின்ற சமுத்திரத்திலே சலத்தினுலே நிறைந்த ஆறானது ஓடுகிறவழியை மேற்கொண்டுவிழும், அந்த ஆற்றுச்சலத்தினுடைய வழியை அந்தக்கடல்சேராது - எப்போது முள்ளபடியே யிருக்கும், அதுபோல நாம்விசாரிக்கில் ஆசையானது சித்தசாந்தியான கடமுடையவர்க ளிடத்தைக்குறித்துச் சேருமாகில் அந்த ஆசையை யவர்களுஞ் சலித்தல்செய்யார்கள்-எ-று. * (இதனால் கடலிலெத்தனை யாற்றுச்சலங்கூடினாலும் கடலானது அதிககுறைச்சலும் ஆற்றுச்சத்தினுடைய குணமில்லாமல் தன்சுபாவப்படியேயிருக்கிறதுபோலச் சகல ஆசைகளும் வந்தாலும் அதிலே பற்றில்லாதவர்கள் சலனப்படார்கள என்பது கருத்து-இச்சையுள்ளவனுக்குச் சாந்தமில்லையென்ற தருத்தாபத்தி.) (௫௮)

யானெனதென்பதின்றி யெவ்வகைப்பொருளும்விட்டான் ... *
றானெனச்சரிக்கின்றான்யா ரவனேயேயடையுஞ்சாந்தி... ...*
ஈனமதடையாதித்தை யடைந்தவரிறக்கும்போதின் ... ...*
ஞானமேயடைவாரென்னை நண்ணுவார்பிறவிநண்ணார்......*

(இ-ள்) நானென்கிற அகங்காரமும் என்னுடையதென்கிற சுதந்திரமுமில்லாமல் எந்தவிதப் பொருள்களையும் விட்டவன் சகல பொருள்களுந் தானேயென்று சஞ்சரிக்கிறவனெவனே அவனேயே சாந்தியடையும் அஞ்ஞானமடையாது-இந்தச்சாந்தியை யடைந்தவர்கள் மரணமாகிறபோது ஞானத்தைச்சேர்ந்து பிறகு என்னைச்சேருவார்கள்-பிறவியடையார்கள்-எ-று. * ஞானமேயென்ற தேற்றேகாரத்தினுலே சாந்தியானபிரமத்தினுடைய பத்தினை நிசமான அப்பியாசம்பண்ணினவன் ஞானத்தைப்பெற்று மோட்சத்தையடைவானென்பது கருத்து.) (௫௯)

கலிவிருத்தம்.

பின்னையோவிவ் வுலகமெலாம்பெற்ற.................. *
மன்னையோதிரு மார்பத்தணைத்தவன்.................*
முன்னையோர்புகழ் வேதமுடிவையோ...... ... ...*
தன்னையோவுள்ள வாறெலாஞ்சாற்றினேன்...............*

(இ-ள்) மகாலட்சுமியோ உலகமெல்லாம்பெற்ற தாயோ அவளைத் திருமார்பிலேயணைத்த கிருஷ்ணசுவாமி பெரியோர்கள்புகழப்பட்ட வேதாந்தத்தையோ தன்னையோ அந்தப்பிரமத்தை யுள்ளபடி யெல்லாஞ் சொன்னேனென்றவாறு. (௯௰)

௨-வது-சாங்கியயோக அத்தியாயம்-முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-௨-க்குக்கூடியசெய்யுள்-௯௰.



மூன்றாவது

தேவபூசா-அத்தியாயம்.



கொச்சகக்கலிப்பா.

அலையிலேகடந்கிடந்த வருமறைகளானவற்றின்......*
தலையிலேயிருக்குமவன் றேரிலேநின்றருளிக்...... ...*
கலையிலேபொருள்விரித்துக் காட்டவும்மெய்காணாதே*
சிலையிலேயுயர்விசய னிவ்வண்ணஞ்செப்பினான்......*

(இ-ள்.) திருப்பாற்கடலில் ஆலையிலேபள்ளிகொண்டவர் ஓதவரிய வேதங்களின் சிரசிலேயிருக்கிறவர் - இப்படிக்கொத்த கிருஷ்ணசுவாமி தேரிலேநின்றருளிச் சாத்திரத்திலேசொன்னபொருளை விரித்துக்காட்டவும் உண்மையாகக்காணாமல் வில்லிலே அதிகனென்று பெயர்பெற்ற அருச்சுனன் இந்தப்படிசொன்னான்-எ-று. * (கிடந்ததையும் இருந்ததையுங் கண்ணாலேகண்டதில்லை-தேரின்மேலே காணநின்றருளி வேதாந்தப்பொருளை விரித்துக்காட்டவுங்காணாத அருச்சுனன் கிடந்தபோதுமிருந்தபோதுஞ் சொல்லுவது ஒருசொல் வேதாந்தப்பொருள் மகாசூட்சுமம் அப்படிக்கிடந்தபோது மிருந்தபோதுங்காணாமற் கேட்கப்படுகிற ஒருசொல்லாலே மகாசூட்சுமத்தைக் காணமாட்டோமோ மாட்டாமனென்பது குறிப்பு.) (௧)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

நன்றேவினையின் ஞானமென வுரைத்தாய்மீளவினைநல்ல ...*
வென்றேயுரையாநின்றனையா னிவற்றிலெதுநன்றெனவுரைக்.
குன்றேயனையாயுனையடைந்தேன் குற்றத்துயரநீக்குவதா.. *
மொன்றேயாகவுரைத்தருள வேண்டுமென்னவலனுரைப்பான்

(இ-ள்) கருமத்திலும் ஞானமே நல்லதென்று சொன்னீர்திரும்பஞானத்திலுங் கருமமேநல்லதென்று சொல்லாநின்றீர் இந்தக்கருமம் ஞானம் இரண்டில் எது நல்லதென்று நான் அறியவேண்டும், நீலமலையையொப்பான திருமேனியையுடையகூோ உம்மை சரணமாக அடைந்தேன் என்குற்றமான துக்கத்தைத்தீர்க்கிறது கருமஞானமிரண்டில் ஒன்றே நிச்சயமாக உபதேசித்தருளவேண்டுமென்று கேட்ககிருஷ்ண சுவாமி சொல்லுவார்-எ-று. (உ)

கலி விருத்தம்.

ஆதியிலுலகினை யாக்கியன்றுநா ....*
ஞோதியபொருளிவை யிரண்டுமுண்மையே ... .*
நீதியல்வாகுறுன் செயலைமாற்றுவான்..................*
மீதியல்வினையுறுன் விடுமேவிடான் ... .*

(இ-ள்) ஆதிகாலத்திலே யுலகத்தை யுண்டாக்கியபோது நான்சொன்னபொருளான இந்தக்கருமஞானமென்ற விரண்டும் நிசசயமே இவற்றில் ஞானிகளுக்கு ஞானமுங் கருமிகளுக்குக் கருமமுமென்று நீங்கட்டிருந்தும் மறந்தாய் பொல்லாங்கே சுபாவமான ஆசையையறுதவன் கருமத்தைவிடுவான் ஆசையைவிட்டவன் கருமத்தைவிடான் - மேலான சுபாவமுள்ள கருமத்தையடையாதவன் மோட்சத்தையடையான் என்றவாறு. * மீதியல்வினையாவது பலனையிச்சியாதகருமம் ஆசையை யறுதவன் கருமத்தைவிடுவது ஆசையறவேண்டி அந்தவேண்டலேஆசையாயிற்று - ஆகையாற்கருமத்தைவிட்டாலும் விட்டவனல்ல-கருமத்தையடையாதவன் மோட்சமடையானென்பதென்னவெனில் ஞானோபதேசமும் அநுசந்தானமுங் கருமமாகையால் மோட்சம்வேண்டிக் கருமத்தைவிடும்போது ஞானோபதேசமும் அநுசந்தானமுங் கூடவிடும், இதைவிடவே மோக்ஷமடையான்.) (௩)

ஒருவருமொருபொழு தினுமோர்காலமு.............. *
மிருவகைவினைசெயா தவர்களில்லையா ... .*
லருமையினவாவறு வினையடக்குவான் ... .*
பருவரலொடுபொய்யே பாவிப்பானரோ ... ...*

(இ-ள்.) ஒருவரும் அனேகரும் ஒருநாளிலும் அனேகநாளிலும் ஒருகாலமும் அனேகங்காலமும் நல்வினைதீவினையென் றிரண்டு வகையான கருமத்தைச் செய்கிறார்களேயல்லாமல் செய்யாதவர்க ளில்லையாகையால் அருமையினாலே ஆசையறுதவன் கருமத்தையடக்கினால் அவன்

விசாரத்துடனே பொய்யேயாவிக்கிறவன்ன-று.*(மருத்ரனுகிலுங் கரும ஞ்செய்யாதவனில்லை - கருமஞ்செய்யாத காலமுமில்லை, ஆகை யாலும் கருமத்தையடைகிறவனே பொய்யேயாவிக்கிறவனென்றதுகரு மத்தையடக்கி ஞானியானால் பலனையிச்சியாத கருமானுஷ்டானத்தினு லே ஞானயோகஞ்சாதிக்கவேண்டிமே விஷயங்களை நினைத்துக்கொண் டிருக்கிறவனை (மைமித்தியாசாரனென்று) சொல்லப்பட்ட விசாரமாவ து கருமத்தையடக்கி ஞானியென்று பேசிவித்துக்கொண்டோமே வி ஷயத்திலே பிரவேசித்தால் உலகம் நிந்திக்குமே யென்கிற விசாரம்ஆ கையால் இந்த நிந்தியை மித்தியகருமத்தைவிட்டதினுலேகருமஞ்செய்யா மலிருக்கிறதில்லை முன்னுமெல்லென்பது குறிப்பு) (ச)

பலனைவைபொருட்டு நீ டோக்குமாறுமெய்ப் ....*
பலனுறவினைகளைப் பொருட்டுப்பண்ணுவாய் ... ...*
நலனுறுமப்பவினை நாகமன்றியே.......................*
சலமுறுபிறவியுந் தவிர்க்குந்தன்மைகேள்... ... .*

(இ-ள்) விஷயங்களை ஐம்பொறியானவிந்திரியங்களிலே செல்லுகிற தையிலக்கி மெய்யானபலனை யுறப்பட்டகருமத்தைஎன்னுடையநிமித்தி யமாகப் பண்ணு தன்மையுடையஅந்தக்கருமமானது நரகமல்லாமல்வை ரமடைந்த பிறவியையுந்தவிர்க்கும் அந்தச்சுபாவத்தைக்கேள் எ-று. * (என்பொருட்டெனவே யுன்பொருட்டாக இப்படிச் செய்யாதேயென் றது நரகமன்றியென்றது நரகையிலக்கும் அதுமாத்திரமோ பிறவியையு ந்தவிர்க்குமென்றது இப்படிப்பலனையிச்சியாமல் கருமானுஷ்டானம் ப ண்ணுகிறவனைச் சுத்தஞானநிஷ்டனிலும் அதிகமென்றுசொல்லப்படும் தேகமெடுத்தவனுக்கெல்லாங் கருமம்பண்ணுகிறதுநியமம் ஆகையால் நீ யும்நிசமான கருமத்தைப்பண்ணு கருமத்தைவிட்ட ஞானத்திலும் கரு மத்துடனே கூடினஞானம்நல்லது - கருமம்பண்ணமாட்டேனென்றால்ச ரீரத்துக்குநடக்கவேண்டிய கருமத்தைவிடவேண்டும், இவையெல்லாம் அருத்தாபத்தி - தன்மைகேளென்றதாவது இந்தக்கருமம்பண்ணிற் பந் தமென்றால் இந்தக்கருமமேபந்தமல்லாமல்தேவதாபூசையான எஞ்ஞா ர்த்தமான கருமபந்தமல்ல அதெப்படியென்றால் அதினுடைய சுபாவத் தைக்கேளென்ற தருத்தாபத்தி தேவதாபூசையென்றும்,எக்கியார்த்தமெ ன்றும், பாட்டிருக்கிறதோவென்றால் பின்வரும்பாட்டுக்களாலும் இந்தப் பாட்டில் என்பொருட்டென்று இருக்கிறதினுலுஞ்சொன்னது.) (ரு)

வேறு.

தேவர்களைமகிழ்விக்குஞ் செயலோடேதெரிந்திந்த...... ...*
மூவகையவுலகினையு முன்படைத்தமுதன்மொழிவான்......*

மேவரியசுரர்பூசை யிலுநீங்கள்வேண்டினன்...... ... . *
யாவுகையுந்தருமின்ன மிதுகேட்பிரெனவிசைப்பான்... ...*

(இ-ள்.) தேவர்களைச்சந்தோஷப்படுத்துகிற கருமத்தோடேகூடவிந் தமூன்றுவிதமான உலகங்களையும், ஆதிகாலத்திலே விசாரித்துண்டாக் கின பிரமதேவர் அந்தச்சனங்களுக்குச்சொல்லுவார், இதுவுடையஅரி யதேவர்பூசை இந்தத்தேவர்பூசை நீங்கள்வேண்டிய இஷ்டார்த்தவித மெல்லாம் கொடுக்கும் இதையின்னமுங் கேட்பீர்களென்று சொல்லுவா ர்-எ-று. * செயலோடேயென்றது - மகிழ்வியாத செயலோடு என்றது பாராமல் மகிழ்விக்குஞ்செயலோடேயென்றது நிச்சயஞ் சொன்னது ; தெரிந்தென்றது சிருஷ்டிக்குமுன்னே பிரமதேவர் ஆலோசனைபண்ணி னது இந்தச்சிருஷ்டியைச் சத்கருமத்துடனே உண்டாக்கவேண்டுமே, அதற்குச்சத்கருமமே தேவர்களை மகிழ்விக்குஞ்செயல், ஆகையால் அ துவுடனே சிருஷ்டிக்கவேண்டும், அதல்லாத துற்கருமத்துடனே சிரு ஷ்டிக்கலாகாதென்று ஆலோசனையில் விசாரித்துத் தெரிந்தபின்பு இந்த மூவுலகமும் படைத்தாரென்றது, இதுவென்றது சொல்லும் பொருளைக் காட்டல்.) (௬)

செயல்வகையாநீங்களவர் திறம்போற்றுமாங்கவரும் ... ...*
புயல்வகையாலுங்களையே புறம்போற்றிபரந்தருள்வா... ...*
ரியல்வகையானதுபிழையீ ரொனிவிரண்டுதிறத்தீரு... ......*
முயல்வகையாலெனையடைவீ ரெங்நிலத்தோர்க்குரைத்தனனால்

(இ-ள்) நீங்கள்செய்யும் விதங்களினாலே அந்தத்தேவர்களின் விதங்க ளைப்பூசைசெய்யுங்கள் - அப்போது அந்தத்தேவர்களும்மேகமென்கிற விதத்தினாலே உங்களையே புறம்பேகாத்துத் தயைசெய்வார்கள் உங்களா லிரண்டுவிதமானது தப்பாமற்செய்வீராகில் இரண்டுவிதமான தேவர்ம னிதரான நீங்களும் தப்பிப்பிழைக்கிற விதத்தினாலே யென்னைச் சேரு வீரென்று மனிதருக்குச்சொன்னார்-எ-று. * (இதனுள் எக்கியம் பண் ணித் தேவர்களைச் சந்தோஷம்பண்ணுங்கள் - அவர்கள் மேகங்களாலே மழையைப்பெய்வித்துப் புறம்பேகாத்துரட்சிப்பார்கள் - இப்படியிருவ கையாருந் தப்பாமல்நடந்தீர்களாகில் லென்னைச்சேருவீர்களென்றுமனி தரைப்பார்த்து இருவகையாருக்குஞ்சொன்னார், ஒருவனைப்பார்த்திருவ ருக்குஞ் சொன்னதேதென்னில் ஒருவன் முன்னேசெய்தால் மற்றொரு வன் பின்னேசெய்யவேண்டிய விதியாகையால் முன்னே செய்யவேண்டி மனிதரைப்பார்த்துத் தேவர்படத்தையுங்கூடச்சொன்னது தப்பிப்பிழை க்கிறவிதமாவது - நான் எனதென்கிற ஆங்காரசுதந்திரமிரண்டினாலும் கெடாமலிருத்தல் இப்படியொருவருக்கொருவர் அன்னியோன்னியமாக விருந்தால் மேன்மையை யடைவார்களென்பது குறிப்பு. (௭)

மடமைசர்க்கத்துகொண்டு மெய்ப்பிக்கவாப்பேருதாஸ்...... ..*
தத்தவர்புகழ்பழித்துரைத்த கள்வரிறுக்கடைப்பட்டார்...*
பெட்டமைப்பொகண்டவர்ப்பேணிப் பிறைழுத்துகொண்டென்றுரைத்த
படைத்துதம்பொருட்டாக வுண்பவர்களிருள்வின்றுவர் ..... *

(இ-ள்.) எக்கியத்திலே பூசையின்பொருட்டாக்கு அவர்க்கு தேவர்க ள்கொண்டதெரிசொடுத்தார்கள் அவர்கள் கொடுத்தவை கொண்டு இருப்ப அதனைத்தேவர்களைப் பூசியாமல் பெரியோர்கள் பூசனைபழித்துச் சொ ன்ன திருடரிலுங்கடையானவன் அவன் உத்தம தேவர்களாலே வெரிந்த ப்பெற்றதைக்கொண்டு அவனைப் பூசியாது அவைகளிலே யிந்த த்தைக்கொண்டு பொசிப்பாகக் கொடுத்ததைத்தன்னுடைய நிமித்தமாகப் பொசித்தவன் பாபத்திலே விழுவாப்பட்டவன்-எ-று. * (எக்கியத்தி லே மிஞ்சினதைப்பொசிக்காமல் பாபத்தில் விழப்பட்டவனென்பதற்கு தாபந்த.) (ரு)

கலி விருத்தம்.

உணவாமுயிருணவாலுள வயர்மாரிபிறுளவாம் ... . *
வளவான்மழைபுயர்வானவர் மகிழ்வாம்வருமதுதா ....*
விளைவாளிடனோபாயினை தொழிலாக்கருமிசையி ... .*
னுளவாமறைதருஞால்மறை யறிவாலறிவுறுமால் .... *

(இ-ள்) இப்படிக்கொத்த பொசிப்பாலே ஆத்மாவுண்டாம் இந்தப் பொசிப்பு உயர்ந்தமழையாலுண்டாம், இந்த வளமையுள்ளமேகம் பொ ழியுமழை நித்தியமுடைய தேவர்களின் சந்தோஷத்தால்வரும் இளமை யும் பிரகாசமுமுள்ள யெக்ஞத்தையொப்பான அருச்சனை, அந்தமழைதா ன் சொல்லப்பட்ட எக்கியமான கருமத்தினால்வரும் இந்தக் கருமத்தை ச்சொல்லுகிற வேதஞ்சொல்லினாலுண்டாம் இந்தச் சொல்லா லுண்டான நாலுவேதத்தினுடைய அறிவினாலே அறிவுண்டாமென்றவாறு. (சு)

இதனால்வினைகளிலேவினை வனயாவையுயிர்க்கு.........*
னெதிரால்வருவினையாழியி னெறிசேரலர்திரிவார் ....*
மதனாரிப்புலனேமகிழ் விடயாகவுமுடையா ... .*
ரதனாலவரவமேழ் பவராமெனவறிநீ ... .*

(இ-ள்) இப்படி யொன்றொன்றுண்டான இதனாலே கருமங்களி லே சகலமும் வினையப்பட்டன இவ்விடத்திலே எக்கியத்திலே யுள்ள யிருக்கிற பரமபுருஷனெல்லாருக்கும் தருமசக்கிரத்தினுடைய மார்க்கத் தைச்சேரவில்லாதவராய்த் திரிவார்களே மதமுண்டாகிய விஷயங்க ளிலே சந்தோஷப்படுமிடமாகவும் விஷயங்களே சந்தோஷமாகவுமு டையவர்கள் அதனாலே அவர்கள் விருதாவிலே நாசமாகிறவர்களாமென் று நீயறிவாய்-எ-று. *(நிதனவது-உள்ளானவன் அதிதனைதுகடந்தவன்)

சந்தவிருத்தம்.

கண்ணினிற் கருதுங் கருமமுமிலைவக் கருதிய வழியே மிகவருகளிகூர்வோ........*
னெண்ணிலை ... ருபருபயனுமற்றிவேகை யிசையாறுதலின்வினையாவும்.*
பண்ணிப்பெறுவதோர்பயனுண்டோ வவைபண்ணுதறுவதோர்பழிப்பு
முண்டோ, மண்ணிற்பிறரிவ னிலையுற்றிலனெனமதியாரவைசெய்த விதி
யாரால்,......... ... .*

(இ-ள்) கண்ணாலேகாணவும், மனதாலேநினைக்கவும், அரிதாகிய ஆத்மாவைத்தரிசனமுந் தியானமுஞ்செய்து அந்த ஆத்மாவே நஷ்டமில்லாமல் இருந்திருக்க அதனால்வரப்பட்ட களிப்புமிருந்தவன் விசாரித்தாலவனுக்குச்செய்யவேண்டிய காரிய மொன்றுமில்லாததினாலே கருமத்தாலுண்டாகிறபலனை யடையும் படிக்குச் சம்மதியான் ஆதலால் ஆத்மதரிசனஞ் சித்தியானவனுக்குச்சகலமும் அதுவேயல்லாமல்வேறேசகலகருமங்களையும் பண்ணிப்பெறுவதொரு பிரயோசனமுண்டோ அதுவில்லை ஆனால் அந்தக்கருமத்தைப் பண்ணாததினாலே யடைகிறதொருபழியுண்டோ அதுவுமில்லை ஆனாலிவனை யுலகத்தில் மற்றப்பொருள் இவன் இந்தக்கருமத்தைச்செய்து இந்தப் பிரயோசனத்தை யடைய வில்லாதவனென்று மதியார்கள் யென்றவாறு, * (விதியென்கிறதை விதியாரென்றது, உபசாரம் விதியாவது பிரமம் பலனையிச்சியாதவனுக்கு உலகம்மதித்தாலென்னப்பிரயோசனம் மதியாமையால் என்னநஷ்டம் இரண்டு மில்லையென்பது கருத்து.) (௰அ)

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

ஆதலானீயும்பலத்தின்மேலவவ றடுத்தகாரியஞ்செய்வர்யதனாற் ......*
றீதிலாவீடேசேருவாய்முன்னஞ் சேர்ந்தவரனேகர்முன்றேறிற் ... ...*
சாதலாலரசன்சனகனேமுதலோர் கருமமோடொழுகியேயன்றோ......*
போதலாவுலகுபுக்கதுமற்றும் புகுந்தனரனேகர்முன்பொலிவார் ......*

(இ-ள்) ஆகையால்நீயும் பலத்தின்மேலாசையற்று இராஜாக்களுக்கு அடுத்தகாரியததைச்செய்வாய் அதனாலே குற்றமில்லாத மோக்ஷத்தையேசேருவாய் இப்படி முற்காலத்திலேசோந்தவர்கள் அனேகம்பேர் அவர்களாரென்று ஆசையாலே முன்னே விசாரிக்கில் ராஜாவான சனகனேமுதலானவர்கள் கருமத்தோடே நடந்தேயல்லவோமற்றவர்கள் யாரும் போகமாட்டாத மோக்ஷமாகிய உலகத்திற் புகுந்துபின்னையுமுன்னே புகுந்தன ரனேகர் விளங்குவா ரென்றவாறு. * (விளங்குவாரென்றது அவர்களை யுலகர் புகழ்ந்துகொண்டே யிருக்கையால் விளங்கு வாரென்றார்-பலத்திலாசை யற்றவன் அடுக்காத காரியத்தை முயற்சி பண்ணான், அடுத்தகாரியத்தைச்செய்வான் அடுத்ததாவது பசிவந்தபோது தனக்கில்லையென்று பொசித்தது அடுக்காதாவது பசியில்லாதபோது பொ

செப்பைக்கண்டாற் பசியாற்றம் [illegible] பொசிக்கவேண்டும் [illegible] பொசிக்க ல் இன்னமும் ஆசித்தாலது அவரவர் [illegible] கருமம் [illegible] இக்காதது பகருமமும் சனகராஜாவைச் [illegible], இந்த அர்த்தம் ஆங்கிலசாதிக்கென்று [illegible] கருத்து.) [illegible]

பெரியவர் பயின்றபடி உலகம் பயிலும் [illegible] ..... [illegible]
னிரியலிவ்வுலக மூன்றிலுமெனக்குச் செய்யவேண்டியது [illegible]
வரியவையென்று [illegible] ....
பரியவிவ்வுலகுமகிழவும்வினைதான் பண்ணுகின்றேன் [illegible] ...

(இ-ள்) பெரியவர்கள் ஆசரித்தபடியே மற்ற சாமான்ய ஜனங்களும் [illegible] ர்களேயல்லாமல் மற்றொன்றையும் [illegible] ங்களாசரியார்கள் [illegible] ன்று சொல்லப்படும் ஆப்படியாகிய [illegible] லோகமென்ற மூன்றுலோகங்களிலும் என்னிச்சையாய் [illegible] எனக்குச் செய்யவேண்டிய தொன்றுமில்லை [illegible] வுங்கூடத்தக்க வரியதும் என்னாலிக்கத [illegible] இப்படியெங்கும் என்னிச்சையாயிருந்து [illegible] மேற் கூடுகிறவனுமல்லாத எனக்குச் செய்யவேண்டியதொன்றுமில்லை [illegible] இப்படிக்கொத்தவனாயிருக்கிற இந்த உலகங்கள் [illegible] க்கவும் [illegible] வும் கருமம்பண்ணுகிறேன் இப்படிப் பலனையிச்சியாமற் [illegible] ணுகிறதற்குமுன்னே ஜனகமகாராஜன் முதலானவர்களைப் பார்க்கச் சொன்னேன் இப்போது என்னைப்பார்-எ-று [illegible] யாற் [illegible] என்னையுமென்று [illegible] காலத்துச்சனகன்முதலானோரையும் இந்தக்காலத்திலென்னையும் பார்வென்று முற்பாட்டோடியைந்துரைப்பது.) [illegible]

என்செயறவிறில்யான்செயாவினைக ளியாவருஞ்செய்யாதனரே..... ...
முன்செய்தகுலங்கள் மயங்கிமாய்ந்திடுவோர்மற்றவர்மற்றதற்காகப் ... ...
பின்செயலறியாதவாவொடுமுயலும்பேதையைப் போற்றிப்பொருட்டா
லுன்செயல்களைச்செய் யவைசெய்வார்தம்மையுணர்வோர்க்கலுமுறைபி
யான்..

(இ-ள்) இப்படிக்கொத்த வென்னுடைய செயலானது செய்யாமல்விட்டால் நான்செய்யாதகருமங்களையாருஞ்செய்யார்கள் ஆதலால் [illegible] யாகச்செய்த குலங்கள் மயங்கி நாசமாவார்கள் ஆனவிந்த நாசங்களை பண்ணினவனாவேன் மற்ற அஞ்ஞானியான ஜனங்கள் ஆர்க்கக்கருமத்தைத் தங்களுக்காகச் செய்து பின்னேவருகிற அனுபவச்செயலை [illegible] ஆசையுடனேசெய்யப்பட்ட மூடனைப்போல நீயும் [illegible]

ன்கருமங்களைச்செய் அந்தக்கருமத்தைச்செய்கிறவர்களை யறிவுவேறாக்குவதையுஞ்சொல்லுவார் எ-று. ❀ (என்செயல்தப்பில்யாவருந்தப்பாவாரென்றதினாலேஎன்செயல்தப்பாவிடில்யாவருந்தப்பாரென்றது அருத்தாபத்தி குலங்கள்மயங்குவதாவது எல்லாமொன்றாகிச் சங்கிரமாகிறது கருமத்தைவிட்டது நானைபடியினாலே அந்தகாசமும்என்னாலேவந்ததென்றது கருமத்தைதத்தங்களுக்காகச்செய்தாற்பின்னாலேவருகிறது ஜெனனமரணசுகதுக்கமென்றறிவது மூடன் தனக்காக எப்படிகருமம்பண்ணுவானோ அப்படி பிறருக்காக வுன்கருமத்தைப் பண்ணென்றதுஉனக்காகப்பண்ணுதேதென்ற கருத்தாபத்தி. (௰௪)

மெய்வகைதனக்கும்புலன்கட்குமுள்ள வேறுபாட்டினைமிக வறிந்தேன், ஐவகையிடத்தகைபுலன்களைபொறியுமுழுந்துகின்றனவெனமயங்கானிவ்வகையறியாதவனிருவினையுமியான்செய்தே னெனவிளைந்தெங்கும்
உய்வகையிதுநீயுணர்ந்துனக்கடுத்த வினைசெயென் றுரைத்துமீட்டுரைப்பான்..❀

(இ-ள்) உள்ளபடிக்குத் தனக்கும் விடயங்களுக்குமுள்ளவேறுபாட்டை நன்றாகஅறிந்தவன்ஐந்துவிதசுபாவத்தையுடையவிஷயங்களை இந்திரியங்களில்விழுந் தழுந்துகின்றனவென்றுமதான்மயங்கான் இப்படி யறியாதமூடன் புண்ணிய பாவமான இரண்டுகருமமும் நான்செய்தேனென்று அகங்காரம்பண்ணியிளைத்துத்திகில்படுவன் தப்பிப் பிழைக்கிறவகையிதுநீயறிந்துஉனக்கு அடுத்தகருமத்தைச் செய்யென்றுசொல்லித் திரும்பவுஞ் சொல்லுவான் - எ-று. ❀ (மிகஅறிதலாவது நன்றாகஅறிதல் பொறியுழுவது புலன்களேயென்ற தேற்றேகாரத்தினாலே விஷயங்களேயல்லாமல் ஆத்மாவல்லவென்ற நிச்சயமயங்காளென்றபாடத்தை அகங்காரமென்றுபாடமோதில் அசையானென்றுரைகொள்ளும் இளைத்தலாவது அகங்காரத்தினாலே பிறந்திறந்துசுகதுக்கங்களையனுபவித்து துடுன்றிளைத்தல் திகிலாவது இந்தத்துன்பம்எப்போதுதீருமோயாராலே தீருமோ இது நம்மைவிடாதோவென்றே வருந்தல்.) (௰௫)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

என்பாற்பொறுமையினைத்தவிர்ந்தேன் கருத்தாயுள்ளவினையதனை......❀
யன்பாற்பயில்வாரியாவர்சில ரவர்கள்வினைகளறவிட்டா... ... ...❀
ரென்பாற்பொறுமையாலேயா னுரைத்தவிவற்றையிகழ்கிற்பார்........❀
வன்பார்த்தீரையிலெழுமரம்போன் மாய்ந்தாரறிவுமாய்ந்தாரே... ......❀

(இ-ள்) என்னிடத்திற் பொறுமையைவிட்டுத் தன்கருத்தே என்கருத்தாய் அவரவருக்குள்ள கருமத்தைஅன்பினாலே ஆசிக்கிறவர்களாரோ

சிலபேர் அவர்களை கருமங்களை அடையிட்டவர்கள் இ[illegible]டத்திற் பொறுமையாலே நான்சொன்ன இந்தவாக்கியத்தையிகழுகிறபேர்கள் பாதையான தரையிலே முளைத்தமரம்போல மாய்ந்துபோவார்களாதலால் அறிவுடையோர் இந்த பேர்களென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் என்றவாறு. (௰௬)

கலிவிருத்தம்.

பன்றுசின்றபழவினையின்பட .... ※
கொன்றுதின்றுசுவை யவர்கட்கும்............ ....※
கன்றுநின்றவர் கற்பனையென்செயு ....※
மூன்றுகேட்டதே நாகன்றறியோ.............. ......※

(இ-ள்.) தேகமெடுத்திருக்கிறபேருக்கு முன்னே பழையதாயிருந்த வினையின்படி கைகூடுமென்று வஸ்துவைக்கண்டிருக்கிறபேர்களுக்குக் கற்பனையான வினையென்னசெய்யுமென்று அறுவகைச் சுவையுண்டு நல்லதென்றுலது நாவுடனேசேரும், அப்படிப்போல வஸ்துவைக்கண்டு இருக்கிறபேரை வினைசேராது என்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௰௭)

இதுவுங்கலிவிருத்தம்.

ஐந்சுபுலன்வழிதொடரு மஞ்சுபொறியினையாம்.....※
வெஞ்சுரனலுற்றுயிர் வெம்பியழிவதுவே...........※
ருஞ்சுபுகும்வழிதனைய வொன்றுபகையுளகே........※
ளெஞ்சுதலின்பயிட ரென்பவையையிகழ்... ... ...※

(இ-ள்) ஐந்துபுலனையும் ஐந்துபொறிதொடருமதினால் உலகத்திலிருக்கிறபேர் கோபத்தினாலேயுமுன்று உயர்வெம்பியழிந்துபோவார்களப்படிக்கொத்தபேர் பிறந்திருக்கிறவழியை மறிக்கிறதற்கு ஒருவகையுண்டுசொல்லுகிறேன் கேள்அது எப்படியென்றால் சுக துக்கமென்கிறவையிரண்டு இழந்துவிடுகிறதே பிறந்திருக்கிற வழியை மறிக்கிறவகை ஆகையினாலேயிகழ்ந்துவிடுமென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்என்றவாறு.()

தடுத்ததொழில்செய்வதுத காததுதனக்கே...........※
யடுத்ததொழில்செய்துகொடு மேனுமழகையா ... ...※
விடுத்தகருமம்பெரிது செய்வதெவரின்மேலோர்... ...※
தொடுத்தகருமஞ்சிறிது செய்கைதொழிலென்றான்...※

(இ-ள்) ஞானவான்கள் வேண்டாமென்னத் தொழிலைசெய்கிறது ஆகாது - தனக்கு அடுத்ததொழிலைச்செய்வது யாதாகிலும் கொடுக்கிறதே அழகையாமென்று விட்டுவிட்ட கருமத்தைத் திரளாய்ச் செய்கிறதினாலேயு மேலோரான ஞானவான்கள் செய்கிறகாரியம் கொஞ்சமாகிலுமாம

தைச் செய்கிறதே தொழிலென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்ற வாறு. (யகூ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மாயனிவையென்றுரைசெய்ய விசையன்மறுத்துக்கூறுவான்......✽
தீயவினைசெய்யாதவரைத் திகைப்பச்செய்துநிடலாலே... ... ...✽
யேயபணிகொள்வாரைப்போ லியற்றுவிப்பாராரென்றான்.........✽
பாயல்பரவையாக்கொண்ட பழையோனில்வாறெனப்பணித்தான்

(இ-ள்) இந்தவிதம் ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்ல அதற்குத் திரும்பவும் அருச்சுனராஜன்கேட்கிறான் - அது எப்படியென்றால், கொடிதான வினைசெய்யாதபேரைத் திகைக்கச்செய்து வல்லமையினாலே வேண்டிய தொழில்செய்வித்துக் கொள்ளுகிறவர்களைப்போலச் செய்விக்கிற பேர் ஆரொன்றுகேட்க அதற்கு யாக்கையென்கிற பொம்மையை ஆட்டிவைக்கிற ஸ்ரீகிஷ்ணதேவர்சொல்லுவார்-எ-று. (உ0)

கலிவிருத்தம்.

தீமனந்தனி லேஞ்சனனஞ்செயக்...................... ✽
காமமென்னுங்கைத் தாய்வளர்கின்றது...... ... .✽
வேமனங்கொள் வெகுளியென்கிறபது... ....✽
நாமமற்றதன் னன்னலந்தன்னைக்கேள்........ ....✽

(இ-ள்) அக்கினியிலேபிறந்தது, மனது மனதிலேபிறந்தது,காமம்காமத்திலேபிறந்தது, குரோதகர்யமென்கிற தாயினுடையகைபோலச் சகலமும் வளர்கின்றது - குரோதமென்கிறது மதனமயங்கொண்டு மிருககிறது - இது இரண்டையும் பேரற விட்டுவிடுகிறதே நல்லநலம், அதை இன்னந் தெரியச்சொல்லுகிறேன் கேளென்று சொன்னார்ஸ்ரீகிருஷ்ண தேவர்-எ-று. (உக)

எவ்வகைப்பய னுந்தினவல்லது......................✽
மெவ்வகைப்பெரும் பாவமுமிவ்வகை...... ... .✽
யெவ்வகைப்பொருட் கும்பகையாவகை................✽
யெவ்வகைத்தெனப் பேசுவதின்னங்கேள்... ....✽

(இ-ள்) எந்தத்தருமஞ்செய்தாலு மந்தத்தருமத்தை விழுங்கிப்போடுகிறதும், எந்தவகையினாலேயும் வெறும்பாவத்தை யுண்டாக்கிறதும்,எந்தப்பொருளுக்கும் பகையாக்கிறதும், எந்தவகையினாலேயுந் தினம்பேசுகிறதும், காமக்குரோதத்தினாலேயென்று இன்னஞ் சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உஉ)

நெருப்பைமுற்றிய தூமமுநீடொளி......... ....✽
தருப்பணத்தை மறைத்தனமாசுமொத்..... ....✽
துருப்படைத்தக ருள்ளுணர்வியாவையும்...... ....✽
விருப்பமுற்றவெங் காமம்விழுங்குமால்........... ...✽

(இ-ள்) புகையினாலே மறைக்கப்பட்ட அக்கினிக்கு மிகப்பிரகாசம் பொருந்திய மனதைக் காமமானது எப்படிமறைத்ததுவென்றால் தங்கப்பணத்தை மாசுமறைத்தாற்போல உலகத்திலே யிருக்கிறபேர்களுக்கு என்றும் ஒன்றாகிய உள்ளுணர்வான மனதெல்லாவற்றையும் விருப்பமுற்ற காமமும் விழுங்கிப்போடுமென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௩)

காதலாற்றமிக் காமப்புலன்களை.........................*
வாதலாற்புகுந் துள்ளமயக்குவ ....*
நாதலாற்புலனைத் தடக்கிய... ....*
யேதலாற்கெடக் காமமிறக்குவாய் ... ...*

(இ-ள்) ஆசையினாலே தவிக்கிறகாமமானது ஐம்புலன்களினுடைய வாசலிலேபுகுந்து மயக்குமானபடியினாலே ஐந்துபுலனையு மடக்கி ஞானத்தில் பேதகமாக்குரோதபாரத்தை யடக்கப்போவாயென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௪)

ஆற்றயில்லுடம் பிற்பரமைம்புலன் ... ...*
மாற்றுமைம்புல னிற்பரமாமனம் ....*
போற்றும்புத்தியி னிற்பரமாத்துமா ... .*
ஞேற்றமிக்கிவை காண்பதுதொல்பரம் ....*

(இ-ள்) வாயுவினாலே சஞ்சரிக்கிற தேகத்துக்குப் பரமாயிருக்கிறது ஐம்புலன் தேகத்தைமாற்றும் ஐம்புலனுக்கும் பரமாயிருக்கிறது மனது மனம்போற்றுகிறதற்குப் பரமாயிருக்கிறது புத்தி - அந்தப்புத்தியிலே பரமாயிருக்கிறது காணுமதைக்காண்பது மேலானபரமென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௫)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மேலாயுள்ளவிப்பொருளை மெய்யாவறிந்துபொய்மாய......*
மாலான்மயங்குமனதினையு மடக்கியத்தமனங்கலக்குங்... ..*
காலாயுள்ளகாமத்தைக் காப்பாயென்றுசட்டுரைத்தான் ... *
சேலாயுலகமுறுபுலனோர் செவியின்பிணைவிற்செலுத்தினன்.*

(இ-ள்) சகலத்துக்கு மேலாயிருக்கிற வஸ்துவை மெய்யாக வறிந்து பொய்யானது இறந்துபோகத்தக்கதாக மயங்குகிற மனதையடக்கிக் கலக்கிறதற்குக் காலாயிருக்கிற காமத்தைக்காப்பாயென்று முன்சேலாயுலகத்திலே அவதரித்து இப்போது ஜனங்கள் செவியின்வழியாக ஞானத்தைப்போதித்தார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௬)

௩-வது-தேவபூசா அத்தியாயம்-முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-௩-க்கு-கூடியசெய்யுள்-௱௰௬.



நான்காவது.

சம்பிரதாய அத்தியாயம்.

கலி விருத்தம்.

நற்றவமகிழ்தரு கருமஞானமு ....*
மற்றதுமறவுனக் கறியக்கூறினேன் ....*
மற்றவைகளினிவர் வாறுகேளெனக் ....*
குற்றமிலாழியங் கையன்கூறுவான் ....*

(இ-ள்) நல்ல தவமகிழ்வினாலே யுண்டான தல்லாமல் முன்னிருந்த பேருக்குஞ் சொன்னேனென்றும், கருமஞானமிரண்டு முனக்கு மயக்க மறத்தக்கதாக அறியச் சொன்னேனென்று சொன்னதல்லாமல் முன்னிருந்தபேருக்குஞ் சொன்னேனென்றுமவர்கள்பெயரையுஞ்சொல்லுகிறேன் கேளென்று குற்றமில்லாதகையிலே சங்கு சககரத்தைத்தரித்த ஸ்ரீகிருஷ்ணதேவர்சொன்னார்-எ-று. (க)

எவமறமுன்பியா னிரவிக்கோதினே ....*
னவன்மனுவரசனுக் கறியக்கூறினா ....*
னுவகையோடகனுமிக் குவாவுக்கோதினான் ....*
தவமுயலரசனி யறியுந்தன்மையா ....*

(இ-ள்.) மயக்கமறக் கியானத்தை முன்னாலே சூரியனுக்குச் சொன்னேனென்றும், சூரியனு மனுராசனுக்குத் தெரியச் சொன்னானென்று மனுராசனுங் குவாவுக்கு வகையாய்ச்சொன்னானென்று மாயையினாலே ஞானயோகத்தைமுயன்று ஆசரிக்கிறபே ரிதை யறிவார்களென்று மின்ன மதன்வகையைத் தெரியச்சொல்லுகிறேன் கேளென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உ)

கருதரும்வகைநிகழ் காலஞ்சேரலா ....*
னருவரும்வகையதாய் மறைந்தவாய்மையை ....*
யிருவினைகெடவரு யோகநீர்மையை ....*
யொருவருமறிவரி தாயவுண்மையே ....*

(இ-ள்) முக்காலத்திலே மாயைவஸ்துச்செந்து அனேக விதமுண்டான வகையுங் கருவுண்டாய் முன்பிறந்திறந்துபோன வகையையு மிப்போது பிறந்து இனியிருக்கிறவகையையு மிருவினைகள் கெடவருகிறயோகநிலையையு முன்னுடைய வுண்மையு மறிகிறதற்கு எவர்களாலேயுமரிதென்றுசொன்னா னருச்சுனன்-எ-று. (ங)

நல்லகாதல்செய் நண்பெனுமாயனே ....*
பல்லதியாவு மறியலேயாதலால் ....*

சொல்லவந்திட்டினை தேன் மன்னாபவர் ....*
மெல்லவேறு விசயன்விளம்புவான்...................*

(இ-ள்) இந்தவகைகளெல்லா மறிகிறதற்கு எனக்குத் தோன்றுகிறபடி எம்பெரியோர் பரம்பரை யனாதுலைத்தாலன்றே பரியவேண்டுமென்னை யல்லாம லறியப்போகாது ஆகையினாலே யிதுமெய்யென்று ஞாயவனான ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்ல, விசயனான அருச்சுனன்கேட்டுமெய்யாகச் சொல்லுவான்-எ-று. (௩)

கலி விருத்தம்.

ஞானமாமிது நல்லவர்கேட்டிடப் ....*
போனகாலமும் யான்புகன்றேனென ....*
ஆனதாமிது மக்கு முன்பிது ....*
தானதாய்வகை தாமறிந்தனர்தா...........................*

(இ-ள்) ஞானமானதை நல்லவர்கள் கேட்கத்தக்கதாகமுன்காலத்திலே யும் நான் சொன்னேனென்று சொல்லுகிறீர் யுமக்கு மெனக்கு முன்னே மாயாதேகம் வந்தவகையுமிப்போது தேகம்வந்தவகையும் நமக்குத் தெரியுமோவென்று அருச்சுனராஜன் கேட்டான்-எ-று. (௪)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

சொல்லார்விசையனிதுமொழியத் துளபமுடியோனருள்செய்வான் ...*
பல்லாயிரங்காலுடம்பெடுக்கு முனக்குமெனக்குமெய்ப்பிறந்த ... .*
இதெல்லாமறிவன்யானீயு மேதுமறியாயிதுவன்றே ... .*
வில்லார்தோளாய்நமக்குள்ள வேறுபாடுவிளம்புங்கால் ... .*

(இ-ள்) விசேடத்தினாலே விசையனான அருச்சுனராஜன் இந்தவகை கேட்க அதற்குத் துளபமாலை முடியோனான ஸ்ரீகிருஷ்ணதேவர் கிருபைபண்ணிச் சொல்லுகிறா ரதுஎப்படியென்றால் பல்லாயிரமாய் எங்கும் வியாபித்திருக்கிற தேகங்களானவைக்கென்றும் உனக்கென்று முனக்குமுன்னே தேகம்வந்து அழிந்துபோனதுமிப்போது தேகம்வந்ததும்நா னெல்லா மறிவேனென்றும் நீயேது மறியாயென்றும் இவையல்லாமல் வில்லைத் தோளிலேதரித்த அருச்சுனராஜனே நமக்குள்ள வேறுபாடான விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௫)

கலி விருத்தம்.

சாவாதுபிறவாது தனிமுதலாயிருந்தவனு... ....*
ஆவாதுவுலகுபடு மழிதுயர்தீர்ப்பதற்காக... ....*
மேவாதுநின்றேயென் மாயையினால்மெய்போல... ...*
மேவாதுபிறந்திடுவ னுகந்தோறுமுகந்தோறும்... ...*

(இ-ள்) என்னுடைய விருத்தாந்த மெப்படியென்றால் நான் சாகிறது மில்லை பிறக்கிறதுமில்லை தனிமுதலாயிருக்கிறவனான் என்னையறியாமல்

லகத்திலே யிருக்கிறபேர் நாலுவிதமாய்ப்பிறந்து அழிகிற துயரத்தி
ற்கிறதற்காக உலகத்தைச்சேராமலிருந்து என்மாயையினாலேமெய்போ
ல ஒப்பில்லாமலும் தலங்கள்தோறும்பிறந்திடுவேனென்று சொன்னார்ஸ்ரீ
கிருஷ்ண தேவரென்றவாறு. (எ)

மெய்வகையதிதுவென்ன வேண்டியார்வேண்டியன ....*
வைவகையதேயமுமா யானேகாணவிப்போது ... .*
மிவ்வகையென்செயல்கள் ... யறிந்தாரிவ்விடும்பையினின் *
றுய்வகையநெறிபெற்றுயர்ந்தாரையுரைப்பரிதால். ... ...*

(இ-ள்,) இந்தவகை நான்சொன்னதேமெய்யென்றுளவரொவர்களுக்கு
ந்தத்தெய்வத்தின்பேரிலேயிச்சையோ அந்தவிதம்பலவகையான தெ
ய்வங்களையுண்டாக்கினவ னானென்றுமென்செயல்களை யிந்தவகையென்
று அறிந்தபேரிடும்பையானசனனமரணவகையைச்சேராம லுலகத்தார்
க்கெல்லாமுயர்ந்தகதியடைவார்கள் அவர்கள்பெருமையைச்சொல்லுகிற
து அரிதென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று. (அ)

செயலாலுங்கருத்தாலுஞ் செயநாடுங்குணநாலு...... ......*
மியலானமுற்படைத்தே னிப்பொழுதுகாப்பேனன்........*
மியலாலவ்வினைப்பயனின் மனமவையேன்மற்றதனு ... ...*
லயலாயேயிருக்குமெனக் கவையிவைவேரறிவாரார்... ... ..*

(இ-ள்) மகிமையுண்டான நான்குகுணத்தை வல்லமையினாலேயுமன
லுலேயு மியலாதமுன்னே யுண்டாக்கினவனான் இப்போதெல்லாவற்
றையுங் காக்கிறவனும்நான் ஆனாலும்லே காவப்பலத்தின்பேரிலே மய
லாகியமனதைக்காற்றினாலேயென்னையெதுவுஞ்சேராமலிருக்குமிப்படிச்
சேராமலிருக்கிறனென்கிறதை அறிகிறபேர் ஆரென்றுசொன்னார்ஸ்ரீகிரு
ஷ்ணதேவர்-எ-று. (கூ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உய்யும்பரிசிலுணர்ந்தவர்க ளுணர்ந்தவினைமேலொருபடுநீ... ....*
செய்யுங்கருமஞ்செய்யாமை தீயகருமமொன்றிலதை......... ....*
பெய்யும்பொய்யுமறிவரிய வேண்டுமொருவனுமிவையன்றி...... ......*
மெய்யுஞ்சிலைக்கையுரவோய்மற் றிவற்றின்செயலையியம்பக்கேள்... ...*

(இ-ள்) வினையொழிக்கிற காரிய மறிந்தபேர்செய்த கருமத்தின்பேரி
லே நீயு மொருமையாய் மனதைவைத்துச் செய்யென்றுமுன்னே செய்
த கருமமெல்லாந் தீதானகாரியமென்றறிந்து அதைச்செய்ய வேண்டா
மென்று மெய்யான ஞானத்தையும் பொய்யானகருமத்தையும் விசாரித்
து வத்துவை நன்றாயறியவேண்டுமென்று கருமத்தைச்செய்கிற வில்கை
யுடைய அருச்சுனராசனே மனதினுட்செயலைச் சொல்லுகிறேன்கேளெ
ன்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (ய)

ஓடுகின்றபுலன்பாற்று ... ...*
மாடுநின்றமரமோடத் தானின்றும்போல்வாய்ச்செய்தே ... *
நீடுநின்றமரங்களிலை நிற்குமியற்கைத்தன்மனத்து.. ... ...*
லோடுகின்றன்யானெயென் முனையர்வழிக்கோ னர்ந்தாற்போல்

(இ-ள்) ஆறுபோலோடுகிற புலன்வழியாய் மனதோடுகிறபேர் மா ... க்குச்சமானமென்று மதுவல்லாமல் மனமானது ... நிற்கு மரம்போல வோற்று ஆற்றிலே யோங்கையில் உருவாய்நிற்குக்கிடமா த்திலே தட்டுப்பட்டுநின்றும்போலச்செய்து நிற்குமியற்கையாக மனதை நிறுத்தி ஓடினது மரம்நிறுத்தின அறநெறியராதுறுமே மெல்லா ...னை யென்று அறிவுறைந்தபேர் ... ...சொன்னா ர் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (...)

செயல்மேனின்றவழி நடமே செயலின்மையுஞ்செயல்செய்யா
வியன்மேனின்றபுலன்களிலே டெல்லாமினை ... மனைவது ...
மயன்மேவின்றியறிந்தாரியா ரவினைடெல் ... ... *
முயன்மேனின்றயோகியு நல்வினைகளில்லாமுற்றுவாறும்... *

(இ-ள்) மனதிற்கு மேலாயிருக்கிற அறிவு மனைநின்றடங்கி மனதுமா றிபோகாதென்று மனதிற்குமேலாயிருக்கிற புலன்களிலே யெல்லாவினை யுஞ்சேருமென்றும் விகாரமேலிடாமல் ஞானத்தை யறிந்தபேர் ஆரோ அவர்களெல்லா மறிந்தவர்களென்றும் அவர்களே மனதிற்கு மேலாயிரு க்கிற யோகிகளென்று மவர்களே நல்ல கருமங்களையெல்லாஞ் செய்கிற பேர்களென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று. (...)

கலிவிருத்தம்.

ஆவதென்பது மாசையமற்றது....... .... *
மேவுஞானவெந் தீயிலுட்வெந்தி.................. *
யாவர்தந்தொழி லிவ்வகையோர்களோ...............*
சாவதும்பிறப்புந் தவிர்ந்தார்கடாம்...................*

(இ-ள்) என்னுலே ஆகிறது என்கிறதையுமெனதென்கிறதையுமற்றதே மேலானஞானமென்றுந் தன்தொழிலே ஞானக்கினியிலேவெந்து வெந்த தியாக்கும்பேராரோ அப்படிக்கொத்தபோ சனனமரணத்தைச் சுட்டுச்சா ம்பலாக்கினபேரென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (...)

என்னுமின்றி யிகபரன்யாளிவை.................. ...*
பன்னுகின்றன னென்றுமப்பான்மைபோ............*
யுன்னுமேவினை யுன்னெனவோர்கிலர் ....*
நன்னுகின்ற வினைநவியுன்னுமோ.............. .. *

(இ-ள்) இகபரமா யென்றமிருக்கிறவனும் இகபரத்தையுண்டாக்கின வனும் நானென்கிறதா யறிந்தபேர் மனதிலே வினையை யென்றதிலும்

பேட்டு வினையுண்டென்று சொல்லார்கள் அப்படிச் செய்திருக்கிறபேர் களோ வினையானது கலிபலன்னுமோ வென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதே வா என்றவாறு. (கசு)

அடங்குகின்ற புலன்களோடாசைபோய் .... *
மடங்குகின்ற மனத்தினனானவை................... .. *
னுடையர்க்கன்பொருட் டாலுளதாமெனத்............... *
தொடங்குகின்ற வினைத்தொடக்குண்ணுமே.......... *

(இ-ள்) ஆசைசேர்ந்திருக்கிற புலன்களுடனே மனது சேர்ந்திருக்கிற பேர்களுக்கு யுதிறலே தேகமுண்டாம தேகந்தனதென்று எண்ணி வி னைதொடர்ந்திருக்கிற பேர்களுக்கு வினையென்கிற தொடக்குக் கெட்டுப் போகாதென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (கடு)

பெற்றதெகொடல் வைத்துமுன்பேறிழ............ ...*
யுற்றபோழ்தி லொத் தொன்றுமொருவர்பாற்... ..... *
செற்றமேது மிலாதவன்செய்வினைக்............ ... ...*
குற்றமோவவும் நின்றிறக்கூறக்கேள்.. ....*

(இ-ள்) தேகமுண்டானதுகொண்டு ஐம்புலாதிகளின் விவரத்தைநன் றாக முன்னேதெரிந்த ஞானவான்க ளவைமேலொன்றிலேயுஞ் சேருகிறது மில்லை அவர்களுக்கு மொருவ ரிடத்திலேயும் சிநேகமுமில்லை அப்படி க்கொத்தபேர் செய்கிறவினை குற்றமாமோவென்று மனதினுடைய விவர த்தை இன்னஞ்சொல்லுகிறேன் கேளென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ண தேவர்-எ-று. (கசு)

விட்டுமுற்றும் வினைகள்வினைப்பயற்............... ...*
றிட்டமற்றிவை தன்னிலெழுங்கருத்.. ....*
தொட்டநின்றவன் யாகப்பொருட்டுறப்.......... ..... *
பட்டகாமப் பலத்துடன்மாயுமால்..... ....*

(இ-ள்) கருமங்களையெல்லாம்விட்டுக் கருமபயத்தினுடைய நடத்தை யுமற்று லோகததிலேயுண்டான கருவைத்தொட்டவஸ்துவே தானுகவெ ண்ணியிருக்கிற ஞானவான் செய்கின்றகருமம் பலத்துடனே மாயுமென் றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (கஎ)

பிரமநேயம் பிரமநெருப்பிடை................. ... ...*
பிரமமாகிய மந்திரந்தன்னிறைற்..................... ...*
பிரமமாய சருவுடன்பெயதுபின்..... ....*
பிரமமேயடை வாருளர்பின்னுங்கேள்.................*

(இ-ள்) நேசப்பிரம்மான பிரமாக்கினியிலே நேசப்பிரமமா யிருக்கிற மந்திரத்தினலே பிரமம்மாயாசமித்தான தேகத்தை யாகுதிபண்ணிப்பி ன்பு பிரமத்தையடைகிறபேருண்டு இதுவல்லாமல் இன்னம் பிரமத்தைத்

படைகிறபேர் செய்கிற விசுத்தைச் சொல்லுகிறேன் கேளென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௰௮)

அறிவதாகிய வக்கியிலேகொள ....*
வறிவையேசில ராகுதிபண் ணுவர்....................... ...*
செறிவதாஞ் சமத் தியிடைபோசில................ .....*
செறியதாய புலன்களையிவர்கள் ....*

(இ-ள்.) அறிவாகிய அக்கினியிலேசொரத்தக்கதாக அறிவைத்தானே சிலபேர் ராகுதிபண்ணுவார்களென்றுஞ் சமத்திறலே தா முண்டாகின அக்கினியிலே குறிவைத்தெரிவதுபோலச் சிலபேர் ஐம்புலாதிகளையிவா ர்களென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௰௯)

புந்தியாட்டபாறி வைச்சையைப்போக்கவே ... .*
பிந்தியக்கரு வாயிடுவார்சில ... .*
சிந்தியத்தொழில் யாவையுஞானசெய்...................*
சிந்தியொக்கவெங் கிட்டுவார்சிலர் ... .*

(இ-ள்.) நடுவாயிருந்து ஐந்தபொறியையும். இந்திரியாக்கினி வாயிலேயிடுகிறபேர் சிலபேரென்று மிந்திரியத்தொழி லெல்லாவற்றையும், ஞானமென்கிற நெய்வார்த்துயோகத்தினாலேவெந்த அக்கினியிலேயிடுகிறபேர் சிலரென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௰)

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

தேடியபொருள்களாலுஞ் செயலறிதவங்களாலும் .. *
நாடியயோகத்தாலு மவின்மறைஞானத்தாலும் ... ...*
கூடியபரிசில்வேள்வி குலாவுவாரனேகர்க்குப் ... ...*
பாடியவிவர்களன்றி யினஞ்சிலபரிசுங்கேளாய் ... ...*

(இ-ள்.) சம்பாதித்த திரவியங்களினாலேயும், வல்லமையினால் செய்த தவங்களாலேயும், பிரமத்தை நாடிச்செய்த யோகத்தினாலேயும், சொல்லுகின்ற நால்வேத ஞானத்தினாலேயும், பிரமத்தைக்கூடுகிற நிமித்தியம் யாகஞ்செய்கின்றபேர் அனேகம்பேருண்டென்று மிப்போது சொன்ன விவரமல்லாம லின்னம்பிரமத்தைச்சேருகின்ற விவரமுண்டு அதையுஞ் சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் என்றவாறு.

கொச்சகக்கலிப்பா.

மிகமேவின்றபிராணனை யங்கபானனிடையேபுகவிட்டுள் *
ளகமேவின்றவபானனையிப் பிராணனிடையாகுதிபண்ணி *
யிகமேயிரண்டுமெய்க்காமலிருப்பார்சிலமற்றிவர்கள்காண் *
டகமேவின்றபிராணாயாமத்தே தவமிட்டவரென்பார்...........*

(இ-ள்) முகத்திலேயிருக்கிற பிராணனை அபானனிடத்திலே போகவிட்டு மன்றுக்கு அதிகமாயிருக்கிற அபானனை இந்தப் பிராணனிடத்திலே யாகுதிபண்ணி இகத்திலேயிந்த இரண்டுமயக்கமு மறத்தக்கதாகவிருக்கிறபேர் சிலபேருண்டு பின்னையும் இப்படிக்கொத்தபேர் தேகத்துடனேயிருந்தாலும், பிராணாயாமத்திலே மேலாயிருக்கிறபேர் ளென்பார்கள் என்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உஉ)

கலி விருத்தம்.

இன்னவர்கள்யாவர்களும் யாகமறிவாரோ............... ❋
யன்னவர்களேயரனிற் றீமையினகன்றார்............... ❋
சொன்னபரிசாலிவைதொ டங்கிமுடியாதார்க் .... ❋
கென்னபரிசாலுமிக மில்லைபரமுண்டோ ... . ❋

(இ-ள்) இப்படிக்கொத்தபேரெல்லாரும் பிரமத்தைச்சேருகிறவிவரத்தையறிவார்களென்றும், அதுவல்லாமலிவர்களே தீமையைநீங்க அறுத்திருக்கிறபேர்களென்றும், நான்சொன்னபிரகார மிந்தவகைசெய்துமுடியாதபேர் எந்தவகைசெய்தாலு மவர்களுக்கு இகபர மிரண்டு மில்லை என்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உ௩)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

இப்படியுரைத்தவிந்த யாகங்கள்யாவு முன்னுஞ் ...... ❋
செப்பியமரத்தின்கண்ணே செனித்தனசெய்யுங்காலே ❋
யொப்பரிதாயபுத்தி கருமத்தினுளவாமுள்ள .... ❋
தப்படியறிந்துநீயும் பாவத்தினகலநிற்பாய்............ ❋

(இ-ள்) இந்தவிதஞ்சொல்லுகின்ற யாகங்களெல்லா முன்னேசொன்னபிரமத்தினுடைய கண்ணிலேபிறந்தனவென்று மதுவல்லாமல் ஒப்புக்கு அரிதானபுத்தி கருமத்துக்குள்ளாவாயென்றும் இதுவுண்டானகாரியமென்று நீயுமறிந்து பாவத்துக்கு அகல நில்லென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உ௪)

கலிவிருத்தம்.

தொன்மையாகமுன் சொன்னதொகைக்கெல்லாம் ... ❋
நன்மையாமிகப் பாலதுஞானமே ... . ❋
பின்மையாலுறத் தாங்கதுபேணிடுந் .... ❋
தன்மையாதெனி லாங்கதுசாற்றுவாம் ... . ❋

(இ-ள்) என்போலாகிறதற்கு விவரமாய் முன்னேசொன்ன தொகைக்கெல்லாம் நன்மையானதென்னவென்றால் களங்கமில்லாத அமிர்தமாயிருக்கின்றது ஞானமென்றும், இதுவல்லாமல் பின்னையுந்தேகம் நானுகத்தானே செய்கின்றவகை யெப்படியென்றாலதுவுஞ் சொல்லுகிறேன்கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உ௫)

சிறியாமெனவறிவாலறி [illegible] துவார்பிறவைசேம... ... ...*
வழிபாடுசெய்தவர்சேவடி யமர்ந்து டைவர்தா... ... ...*
மொழிபாதவர்களுக்கமைய மொருசீடரிடையே ..*
பழிபாவமையத்துவர்வேதா மடுமேயாதுருவால் ... ...*

(இ-ள்) அறிவினாலவ்வசமாய் வழிபாடுசெய்தவர்கள் சேவடியிலே ம னந்தைவைப்பர்கள் [illegible] அவர்களுக்கு வழிபோ லே அறிவினாலே அறிந்துகொண்டாலொன்று யாவையுமானுலே எல்லாவற்றை ம் [illegible] போதினை [illegible] சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உசு)

அதனுள்வருபரம்பொருளின் [illegible] முதலாய்... ...*
பிறனுடம்பினை [illegible] பேருக்குடைவார் ...*
திறனுடைய [illegible]............*
மனத்தைகளைசேர்வார்க [illegible] கொளிப்பெருகென்

(இ-ள்) [illegible] மெய்வாமல் உலகத்திலே யிருக்கிறபேர்க ளுக்கு அதனால்வருகிற பயமென்னவென்றால், பழிபாதக முதலானவெ ல்லாமுண்டாம் வினையென்கிற சமுத்திரத்திலேவிழுந்து அழுந்திப்போ வார்களதெப்படியென்றால் [illegible] ஞானிகளானவர்களாலே வினையெல்லாவற்றையும் சகலத்தால் எப்போதும் [illegible] பங்களைசேருவார்க ளதெப்படியென்றால் அதுவுஞ்சொல்லுகிறேன் கேளென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (உஎ)

எறியாமெவருகாளிடை பெரியதவமெவையதா......*
அறியாவழிவுடை [illegible] மயிலைதுமதுபோரு... ......*
குறியால்வருகுணா ஞானமே மனமேலேகொளுவிடுமே..*
பொறியாலவருவினையாவிலை பொடிபட்டதுபொருளோ

(இ-ள்.) காடானது வெந்துபோமென்றறியாமல் காட்டுமரந் தானேயி ணைந்து பற்றிப்பட்டுக் காட்டுவெந்ததுபோல மனதினாலே வருகிறதையு ங் குணத்தினால்வருகிறதையும், மெய்ஞ்ஞானமென்கிற அனல்கொளுத் திப்போடுமென்று அறியாதவர்களென்றும், அதுவல்லாமல் பொறியினாலேவருகிறவினைப் பொடியாக்கிறது ஞானமேயென்று ஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்(எ-று.) (உஅ)

கலித்துறை.

நிதப்பாலாம்வினைபுரிவோருஞ்செல்லாமே..............*
வைதப்பாலாட்டுவழி தக்கோயாமென்னி........ ....*
வோதப்பாவப்பாகுமிக் குன்னைப்பொருள்பாலும் ...*
[illegible]*

(இ-ள்) கருமத்தைச்செய்கிறபேர் சிலநாளையிலே கருமத்தைப் போலத் தீதையடைவர்க ளறிவைநன்றாக வறிந்தபெரியோர்களாலொன் றால் ஞானத்தைச்சொல்லுகிற பெரியோர்களிடத்திலேயு முண்மையான வஸ்துவிடத்திலேயுங் காதலுடனே மனதுவைத்தபேர்களவர்களேஐம்பு லனையும் வென்றபேர்க ளென்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்என்றவாறு

சொல்லருஞானப் பொருடெரியாதுசொன்னாலு......*
மல்லவிதாமென் றையுறுவாரிங்கன்பில்லா.... ....*
ரில்லவராவ ரிகபரமில்லா ரிவர்கண்டாய..............*
தொல்லறிவாலே யையுறவற்றார் துறவுற்றார்...... ......*

(இ-ள்) கருமிகளுக்குச் சொல்லுதற்கரிதான ஞானத்தி னுட்பொ ருள்தெரியாது அல்லவென்று ஞானத்தை எத்தனைசொன்னாலும் இது பரமல்லவென்று சந்தோஷப்படுவார்கள், சொல்லுகிற ஞானத்தினிடத் திலே யன்பில்லாதபே ரவர்களுக்குச் சுக மிகபரத்திலுமில்லை பேரறிவி னாலே சந்தேகமற்றிருக்கிறபேர் துறவானஞானத்தை யறிந்தபேர்களெ ன்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் - எ-று. (ஙய)

அறுசீரடியாசிரியவிருத்தம்.


அறியாமையிலேபிறந்துன்ற னகத்தேவளர்ந்தேயையுறவை... ...*
நெறியாகின்றஞானமெனும் வாளால்வெட்டியறநீக்கிக்... ....*
குறியாயுன்றன் வினைவிளைத்துக் கொள்வாயென்றுங்கூறினான் ...*
உறியார்வெண்ணெய்தொட்டுண்டிவ் வுலகமுண்டபெருவாயான். .*

(இ-ள்) என்னையறியாமையினாலே யிதுவரைக்கும்உலகத்திலேயனேக சனனமெடுத்தாய் இனி யுன்னுடைய மனதிலேவளர்ந்த சந்தேகத்தைச் செவ்வையா யிருக்கின்றஞானவாளினாலே நீக்கியற வெட்டிப்போட்டுக் குறிப்பாய் என்பேரிலேமனதைவைத்து உன்னுடையகருமத்தைச்செய் துகொண்டுவாவென்று வெண்ணெயுறிதாவி யெட்டியுண்டுபூலோகத்தை யுமுண்டபெருவாயனான ஸ்ரீகிருஷ்ணதேவர்சொன்னாரென்றவாறு. (ஙக)

ச-வது-சம்பிரதாய அத்தியாயம்-முற்றுப்பெற்றது.



ஆக-அத்தியாயம்-ச-க்கு-கூடியசெய்யுள்-ளசஎ.



ஐந்தாவது.

சந்நியாசயோக- அத்தியாயம்.

கலிவிருத்தம்.

பூத்தருளியொருமலராற் புவனமவையீரேழுங் ... ...*
காத்தருளிவிளையாடிக் கபடயோகிக்கண்வளரும் *
தீர்த்தன்மறைமுறையோர்ந்த திருவாக்குத்தெரியாது ...*
பார்த்தனவனெதிர்நின்று சிலபின்னும்பகரலுற்றான்...*

(இ-ள்) திருவுந்தித் தாமரைப்பூவொன்றிலே ஆதியிலே பதினாலு லோகத்தையுஞ் சிருஷ்டித்தருளி நடுவிலே அதைக்காத்தருளிக்கொண்டு கூட நின்றுதிருவிளையாடலாடி அந்தத்திலே யொடுக்கியோக நித்திரை செய்தருளுகிற சுவாமி வேதவிதியாகச்சொன்னதிருவாக்குத்தெரியாமல் அந்தச்சுவாமி முன்னேநின்று பின்னையும் அருச்சுனன் சிலவசனஞ்சொல்லுகிறா னென்றவாறு. * (கடையெனபதனாலே ஆதிமத்தியம்வந்தது அருத்தாபத்தி ஒடுக்குதலாவது திருவயிற்றிலேயடக்குதல்) (க)

சந்தவிருத்தம்.

கருமநன்றெனவுமெதிர் களறுகின்றனைதுறவை ... .*
யருமருந்தெனமொழிதி யவையிரண்டினுமமல ....*
ஒருமையென்றுயர்தலெவை யுரைசெயென்றனன்விசைய...*
னிருமையின்பரிசுமிது வெனவியம்பிடுமிறைவன் ... .*

(இ-ள்) கருமத்தை நல்லதென்றும் முன்னேசொல்லுகிறீர் ஞானத்தை அரிதான அமிர்தசஞ்சீவியென்றும் பின்னேசொல்லுகிறீர் நின்மலமான சுவாமீ அந்தக்கர்மஞானமென்றவிரண்டிலுமொன்றென்று அதிகமானதேது அதைச்சொல்லுமென்றான் அருச்சுனன் அதற்குச்சுவாமி யிரண்டின் விதமுமிதுவென்று சொல்லுவானென்றவாறு.*(மருந்தெனவுமெ ன்றும்மை வருவிக்க.) (உ)

துறவுநன்றருவினைசெய் தொழிலுநன்றிவைதுணியி ... ...*
லறவுநன்றருவினைகள் விடலிலங்கவைமுயல்கை...........*
பெறலினின்பமுமிழவி னிடருமொன்றிலர்பெரிது ....*
துறவினின்றவர்பிறர்க ளெரிவினின்றிடுதொழிலர் ... .*

(இ-ள்.) ஞானமும் நல்லது அரியகாரியத்தைச் செய்கிற கருமமும் நல்லது இந்த இரண்டிலும் அதிகமேதென்றுசொல்லத்துணிந்தால் அரிய கருமங்கள் மெத்தவும் நல்லது அந்தக்கர்மங்களை விடுகிறதினுஞ் செய்கிறது நல்லது பலன்பெறுதலிலே சந்தோஷமும் இழக்கிறதிலே துக்கமும் இவைகளொன்று மில்லாதசர்மிகளே பெரியஞானத்தில் அ

..சயாமல் நின்றவர் இப்படி இல்லாதவர்களான ஞானிகளே துக்கத்திலசையாமல் நிற்கிற கருமிகள் எ-று. ※ (பிறர்களாவது பெறுதலிலேசஞ்சலமும், இழக்கிறதிலே துக்கமுமுள்ள ஞானிகள் பெரிய கருமியென்று சொல்வது) (௩)

பெருமையொன்றிய துறவு கருமமொன்றிருமையினு... ......※
மருமையொன்றினையறிரு ரவையிரண்டையுமுடைய......※
ரிருமையென்றறியுமவ ரிவையறிந்திலரியல்பி.............※
னொருமையென்றுணருமவ ரிவையுணர்ந்தவருணர்வில் ... ※

(இ-ள்) பெருமைபொருந்திய ஞானம் கர்மம் என்கிற இரண்டிலுமொன்றை யிருமையாக அறிந்தவர்களே அந்த இரண்டையுமுடையவர்கள் இரண்டையுமொன்றென்றறியாம லிரண்டென்றறிகிறவர்களே இரண்டையுமறிய அறிவில்லாதவர்களிந்தயிரண்டும் ஒருசுபாவத்திலே அறிவிலொன்றென்றறிகிறவர்களே யிரண்டையுமறிந்தவர்கள்-எ-று. ※ துறவாவது விடுதல் இந்தவிடுதலை ஞானமென்றுரையெழுதுவானேனென்னில் அறம் பொருளின்பமான கர்ம மூன்றையும் விட்டதே ஞானமாகையாலே துறவை ஞானமென்றுரையெழுதினது இரண்டாக வறிதலினாலேகர்மபக்ஷப்பிரவினென்பது இயல்பி னொருமையென்றுணருமவனென்பது கர்மானுபவத்தையும், ஞானானுபவத்தையும், புன்னிலாராய்ந்து மனதிற்கொண்டுக்கொண்டது சுபாவம் இந்தச்சுபாவத்தினாலே யிரண்டனுபவத்தை யொன்றாகக் கண்டு கொண்டபோது இரண்டனுபவமு மொன்றானதினாலே ஞானகருமமென்றுயிரண்டும் ஒன்றென்றுகொண்டறிகிறவர்களென்பது இதனாலே யிரண்டென் றறிகிறவர்கள் அறிந்த விரண்டையுமே அநுபவமென்பது ஒன்றாக அறிந்தவன் ஞானியென்ப தருத்தாபத்தி.)(௪)

வினை முயன்றிடவதனில் வினைதருந்துறவதுகொ............※
டேனையடைந்திடுவரெவர் களுந்தன்செயலெதெனி ....※
னினைவருந்தகையபொரு ணெறியறிந்தவர்களெறி.........※
யனைபதந்தொழில்புரியு மவர்களென்பதனையறி... ... .※

(இ-ள்) பலனை யிச்சியாத கருமத்தைச்செய்ய அந்தக்கருமபலத்தில் ஞானம்வினையும் அந்த ஞானத்தைக்கொண்டு எவர்களும் என்னைச்சேருவார்கள் அந்தக்கருமத்தின்செய்கை யெதென்றால் நினைக்க அரிதான சுபாவமுள்ள பொருளின் மார்க்கத்தை அறிந்தவர்களுடைய வழியை யொப்பான தங்கள் கருமத்தைச்செய்கிறவர்களென்கிறதை நீயறி யென்றவாறு. ※ (என்னையுடைதலாவது-பிரமத்தை யடைதலென்பதுஇந்த பிரமத்தை யடைகிறது இன்னாருக்குண்டு இன்னாருக்கில்லை யென்பதில்லை எவர்களும் கருமநிஷ்டனாகிற பிரமத்தையடைவார்கள் அந்தக்கருமச்செயலேயென்னில் பிரமத்தையடைகிறவர்கள் வழியே கருமம்நினைக்க அரிதானசுபாவமுள்ளபொருளாவது பிரமம், நினைவருந் தகைய் பொருணெறி யறிந்திந்த வரிதனையதந்தொழில் புரியுமவரறிந்திடுவரறி

என்று பாடமோதல் [illegible] துஆ [illegible] னில், அதை [illegible] தங்களுடைய கருமத்தாற் [illegible] ர் அதைநீயறிகின்றனை யென்றும்) (௬)

கலை [illegible] குன்று மிகு கனிதருட்டவறுமெனு .. ..*
[illegible] க [illegible] யாவர்...........*
[illegible] .... .. *
[illegible] தெக்......... *

(இ-ள்) கருமத்தைக்காப்பட்ட [illegible] டவினை [illegible] விலே [illegible] கருமத்தைச்செய்தாலும் அத்தக [illegible] அவ்வருத்தமாட்டாது [illegible] அந்தக்கருமத்தருமே [illegible] டவனையே [illegible] டந்தவர்கள் [illegible] அவர்களை [illegible] து இச்சிந்தவர்கள் [illegible] ய ஆழுக்கடையுமெய்யது.) (௬

அறுசீர் விருத்தம்,

காணுக்கேட்குமுமுகக்கும் [illegible] .... *
பேணுந்துறக்குஞ்சுவிக்கும் பேசும்விழிக்குஞ்சா [illegible] ... .. *
பூணுமின்னும்பலவெளிறும் புலன்சேர்பொறி [illegible] பென்மேகன் *
தாணுங்கிரியுமெனவென்றும் [illegible] யோன். *

(இ-ள்.) கண்பார்க்கும் காதுகேட்கும் [illegible] முகக்கும் கால்நடக்கும் [illegible] பேசும் கண் விழிக்கும் [illegible] லும் [illegible] அநுபவமென்றே [illegible] யாக இவையெல்லாம் தான் பண்ணினவல்லவென்றும் தூணைப்போலும் மலையைப்போலும் என்னைக்குக் கலங்காத அறிவு விளங்கப்பட்ட துணிவையுடையவன் எ-று. * [இவையெல்லாம் தான் பண்ணினவல்லவெ ன்றும் தன் அநுபவமென்றும் அறிந்தவன் இருட்டைப்போலும் ஆணு வைப்போலுந் [illegible] காதவன் துளக்குவ னென்றும்.] (எ)

யாரும்வினைகளொன்பொருட்டா [illegible] யவர்கள்... ......*
சேரும்வினைகளவற்றேடு சேராரோவத்திடனுரைக்கில் ....*
சாருமுடனேபிறப்பதெழிறுந் தண்டாமரையின்மகையிலே...... ... ...*
நீருமெனலாயிருப்பாது நின்றுற்கென்றுதிகழாதால்............ ....*

(இ-ள்) ஆராவது மென்னிமித்தமாகக் கருமங்களைச் செய்துபிரமோ சனத்தை விட்டவர்கள் தங்களைச் சேரப்பட்ட கருமங்கள் [illegible]

சேரார்கள் அந்தக்கருமங்களோடு சேராதவர்களுடனே அந்தக்கருமங்க ள சேர்ந்தவிதத்தைச் சொல்லில் சார்பாகப்பட்ட தண்ணீருடனேகூட ப்பிறந் தெழும்பினாலுங் குளிர்ந்த தாமரையினிடமான இலையுந்நீரும் ஒ ன்றோடொன்றுங் கூடினாலும் ஒட்டாதுபோலவிருப்பார்கள் அப்படி ஒ ட்டாமல் நின்றவர்களுக்கும் என்றைக்கும்அந்தக்கருமம் நடவாது-எ-று (நடவாதாவது அவர்களுடனே கூடி நடவாது அப்பொழுதேயழியுமென் பது ஒழினுமென்ற வும்மை சிறப்பும்மை, நீரிலேபிறந்துநீரிலேவளர்ந்து நீரிலெழும்பி எல்லாம் நீராலே விளங்கினாலு மந்தநீரும்இலையுங் கூடினா லும் ஒட்டாதநீரிலே சிறப்பும்மை.) (அ)

கொச்சகக்கலிப்பா.

உடனுடைய நானு மனனுமுடம்பனாலும்.....................*
நடமாகுமெனமுயல்வா நாடோறுமுயன்றாலும்... ... .*
விடமாகும்வல்வினையே வீடாகும்வினைப்பயனைக் ... .*
கடனாகுமெனமுன்வா னவற்றாலே கட்டுண்பான்...........*

(இ-ள்.) கருமத்துக்குடனாகிய விஷயத்தினாலும் மனதினாலும் உடம் பினாலும் பலசங்கம் நஷ்டமாகுமென்று கருமத்தைச்செய்வார்கள் இ னந்தினமுஞ் செய்தாலும் விஷயத்தை யோப்பாக வெறுக்கப்பட்ட வலுமையான கருமமே மோக்ஷமாகும் கருமபலனைத்தனக்கு அனுப விக்கக்கடனுமென் றிச்சித்துச்செய்கிறவன்அந்தக்கருமத்தாலேகட்டுண் பான்-எ-று. * (பலசங்க நஷ்டமாவது கருமபலத்துடனே கூட்டம் நாச மென்பது பலத்துடனே கூடின சித்தத்துக்குப் பலசங்கம் நஷ்டமாக வெசித்த சுத்தியாமென்றறிவது பலனை விஷயமாக நினைத்துச் செய்கின்ற கருமிக்கு அந்தக்கருமமேமோக்ஷமாம் வேறில்லை கருமம்பலனை அமிர் தம்போல அனுபவிக்கக் கடனுமென்றிச்சித்தவன்கருமபந்தம்படுவனெ ன்பது விஷயத்தால்வந்த அமிர்தம் ஆகுபெயர்.) (கூ)

கலிவிருத்தம்.

அன்பவினையாகுப்பயன் விட்டமைந்தியாலே .... *
யொன்பதுபொய் வாயிலமையூரதனினுள்ளே ... ... *
இன்பவுருவாயினி திருப்பனியல்பாயே ....*
முன்பயில்வதாம்வினைசெய்யன்முயல்வியேனும். ... .*

(இ-ள்) தோற்றுங்கருமத்தாலுண்டாகிறபிரயோசனத்தைவிட்டுஅடங்கி யமைந்த விவேகசித்தத்தினாலேஒன்பதுபொய்வாசலமைந்தஊரானதே கம்அந்தத்தேகத்தினுள்ளேசுகசொருபமாய்ச் சுகமாயிருப்பான்கருமமா னது சுபாவமாகவே அநாதியே வந்தபழக்கமாம் நான் கருமத்தைச்செய் யேன் செய்வியே னென்றவாறு. * இதன்பொழிப்புரை இந்திரிய செய முண்டானவன் எப்படியிருப்பானென்னில் அடங்கியமைந்த விவேகசி த்தத்தினாலே கருமத்தாலுண்டாகிற பிரயோசனத்தை விட்டுத் தான் க ருமம் பண்ணேனென் பண்ணுவியேன் கருமமானதுநவத்துவார புரமான தேகத்துக்குச்சுபாவமாக அநாதியேவந்தபழக்கமென்று அந்தத்தேகத்

னுள்ளே சுகசொரூபமாய்ச் சுகமாயிருப்பனென்பது இந்நியமைதியா லே வினையாகுபயன்விட்டு வினைசெய்யேன் முயல்வியேனென்பது பொ ய்வாயிலவையூரியல்பாயே முன்பயில்வதாமதனி னுள்ளே யின்புருவா யினிதிருப்பனெனமாறுக.) (௰)

இவ்வகையினுபசெயல் யாவுமியல்போகா... ... .*
வெவ்வகையமாயையத ஞலறிவறுதே...............*
செய்வகையன் யானென்று செய்கையிவையென்றே...*
பொய்வகையினலறிவ ரோவறிவிலாதார்...... ... .*

(இ-ள்) இந்தவிதத்திலுண்டாகியகருமங்களெல்லாஞ் சுபாவமே கண்டாய் அருச்சுனு அந்தவிதமான மாயையினுல் அறியமாட்டாமல் கருமங்களைச்செய்தவன் நான் இந்தக்கருமங்கள் நான்செய்தேனென்றுநிச்சயமாகப் பொய்விதத்திலே நாசமாகிறவனே யறிவில்லாதான் - என்றவாறு, * என்றேயென்ற ஏகாரமும், இயல்பேயென்ற ஏகாரமும் உறுதேயென்ற ஏகாரமும் அறிவதேயென்ற ஏகாரமும் தேற்றேகாரம், அறியமாட்டாமலாவது கருமங்களைச் சுபாவமென்றறிய மாயாமயக்கத்தினுலேமாட்டாமலேநான்செய்தேன் என்கருமமென்றே பொய்யானஅகங்கார சுதந்தரவிதத்திலேயறிவில்லாதானுசமாகிறதே யல்லாமல் இருக்கமாட்டுவானே மாட்டானென்பது இயல்பேயாவது சுபாவமேயல்லாமல் வேறல்லவென்பது அறிவுறுதேயாவது அறிய மாட்டாமலே யல்லாமல் அறிந்தல்லவென்பது என்றேயாவது நான்செய்தேன் கருமமென்றே யெல்லாம்சுபாவமாகச்செய்யப்பட்டது சுபாவமாகவுள்ளகருமமென் றெண்ணுமலென்பது, அறிவதேயாவது அறிவதல்லாம லிருப்பதில்லையென்பதுஅறிவு இளவர்கள் மாயைநீக்கிச்சுபாவமென்றறிந்து தஞ்செயலுஞ் சுதந்திரமும் மற்றும் அறியாமலிருப்பனென்பதருத்தாபத்தி. (௰௧)

கலிவிருத்தம்.

அறிவினலறிவிலா தவையெலாமழியவே...............*
செறிவினறிவுவா னிரவிபோற்றிகழுமா... ... ...*
னெறியினனிதனினேர் நிலையுமாயிதனிலோர்.........*
பிறிதிலாவகையினர் பிறவியானவையிலார்... ... .*

(இ-ள்) ஞானத்தினுலே அஞ்ஞானமெல்லாம்நாசமாகவேகனமானவர்கள் ஞானமானது ஆகாசத்திலேவிளங்குகிற சூரியனைப் போலப் பிரகாசிக்கும், இந்தமார்க்கத்தினுலே ஞானத்திலே நிலைமையும் நிஷ்டையுமாகி இந்தஞானத்மாவான சைதந்நியனிடத்தில் வேறென்றில்லாத விதத்திலே பாவசத்தையுடையவர்கள் இனிமேற் பிறக்கிறதானசனனமில்லாதவர்கள்-எ-று * (வேறென்றாவது அஞ்ஞானத்திலே மயங்கி ஆங்காரத்தையடைந்து மறுபடியும்பிறக்கிறது.) (௰௨)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

நன்றேஞானம்வருமறையோ னாட்டினாயினிறைச்சியினைத் ... ...*
தின்றேயழலுமவன்யானை யாவேனறிந்ததிறத்தெல்லா............*
மன்றேயென்னுதாமென்னு தறிவாய்நின்றவனேயெங்கும்... ......*
ஒன்றேயாகக்கண்டிருப்பா னுடம்போடிருந்தேயுடம்பறுப்பான்..*

(இ-ள்) நன்மையுள்ள ஞானம்வரப்பட்ட பிராமணன் நாட்டிலேநாயி றைச்சியைத்தின்று தடுமாறுகின்ற நீசன் ஆனே பசு இப்படியென்றறிந்த விதத்திலேயெல்லாம் ஏற்றக்குறைச்சலினாலே அல்லவென்னுமல் ஆமெ ன்னுமல் ஆத்மாவாய்நின்று அந்தக்கருமங்களெங்கும் ஒன்றாகவே கண் டிருக்கிறவன் அந்தவுடம்போடேயிருந்தசிருஷ்டி தேகத்தை இனிமேல் வாராமலறுப்பான்-எ-று. * (இப்படியெல்லாரிடத்திலும் ஆத்மா வொன் றாகக் கருமங்களுமொன்றாக இதையல்லவென்னுமல் ஆமென்னுமல் சம மாகக்கண்டிருக்கிறவ னிந்தத்தேகத்துடனே இந்தப்பிறவியை யொழிப் பானென்பது.) (௰௩)

இகமேநிகழுபுலன்விளைந்த வின்பமெல்லாமறவிகழ்ந்துள் ... ...*
ளகமேநிறையும்பேரின்ப மடைந்தார்க்கென்றுமழியாதாற் ... ...*
புகமேய்கின்றபுலன்பொறிகள் புணர்ந்தேயின்பமாமென்றுந்......*
துகமேவிடார்களளவுவமை தக்கோரென்றுஞ்சாரரால்... ......*

(இ-ள்) வெளியிலேவிளங்கும் விஷயங்களிலேவிளைந்தசிற்றின் பமெல்லா மறவிட்டு உள்ளேநிறையப்பட்ட பேரின்பத்தையடைந்தவ ர்களுக்கு என்றைக்குமந்தப் பேரின்பமழியாது மனதிலேபுகுதஅனுப விக்கின்றவிஷயங்க ளிந்திரியங்களைப்பொருந்திச் சுகமாமென்றும், அ நுபவத்துக்குத்தக்கதாக மேலிட்டதுக்கமாமென்றும் அவைகளை ஞான த்துக்குத்தக்கவர்களான பிரமஞானிகள் என்றைக்குஞ் சேரார்கள்- என் றவாறு. * (பேரின்பமாவது ஆத்மசித்தி ஆகையால் ஆத்மலாபம்பெற்ற வர்களுக்கு பிரமநிஷ்டை தவிராதென்பது -ஆல்-அசை. சுகமாமென்ற ச ந்தோஷத்தையும் துக்கமாமென்றகிலேசத்தையும் ஆத்மஞானிகளடை யாரெனவே இதிலிளையாத திருத்தியாயிதை யோகியாத அமோகியாயிரு ப்பானென்பது அருத்தாபத்தி. (௰௪)

கலிவிருத்தம்.

உடம்புடனேயுள ளுகியிருந்தே.................. ......*
விடம்புரைகாம வெகுளியின்வேகச்......... ....*
சடம்பொறையான்மை தவிர்ந்தவனேநல்...... ....*
விடம்புகுஞானியு மின்புறுவானும்...... ....*

(இ-ள்) உடம்புடனே யுள்ளவ னுகியிருந்தே விடத்தை யொப் பான காமத்தின்வேகம் கோபத்தின்வேகம் இந்த வேகங்களா லாகிற தேகப் பொறுமையைத் தீர்த்தவனே நல்லிடமான மோக்ஷத்தைக்

கூடுகின்ற ஞானியு மானந்தம்பெறுவானென் றவாறு. * (உடம்புபோனா ற்பி னறிவு வாராததினாலே உடம்பிலே இருக்கும்போது தானே ஞானம்பெறவேண்டி மாகையா லுடம்பிருக்கும்போது தானேகாமக் குரோதாதிகளின்வேகத்தைப்பொறுக்க அறிகிறவனே ஞானியுஞ்சுகியு மென்பது. இதையறியாதவன் மூடனுந் துக்கியுமென்ற கருத்தாயத்து) ()

மெய்யறிவேவினை யின்பமதாகவு ...*
மெய்யறிவேவினை பாடிடமாகவு ...*
மெய்யறிவேசோதி யாகவுமேபா ...*
மெய்யறிவேபெறு மின்பமடைந்தார் ...*

(இ-ள்) ஆத்மாவே வினைபட்டட சுகமாகவும், ஆத்மாவேவினையா ட்டிட மாகவும், ஆத்மாவே சோதியாகவும், இப்படியாகு மிவர்கள் ஆத் மாவே பெறப்பட்ட மோட்ச சுகத்தை யடைந்தவர்கள் எ-று. *(வினையா டு மிடமாவது, ஆத்மாராமமானந்தமாவன - இதை ஆத்மாராமமென்னு வார்கள்) (௰௧)

காவல்செய்தைந்து புலன்களிரண்டு ...*
மேவலரும்பரு வத்திடைவிட்டிட் ...*
டாவலுகின்ற வபானபிராண ...*
னேவலிலான னடக்கையறுத்தே ...*

(இ-ள்.) பஞ்சேந்திரியங்களை விடயங்களிலேலாடாமற் காவல்செய் து கண்களிரண்டும் போகத்தைக் கடவாநிற்கிற புருவத்தி னடுவிலேவிட் டு நிறுத்தி யோகத்துக் காணவிதமாய் நின்ற அபானவாயுவையும் பிராண வாயுவையுந் தன்னுடைய ஏவலினாலோடி மீறுகையில்லாமல் அவைகளி ன் சுபாவமாக ஓடுவதான அசைகின்றதையறுத்து அடக்கினென்றவாறு

அஞ்சுபொறித்திற லாசையடக்கா ...*
னெஞ்சுபயத்தொடு கோபமுநீவா ...*
வெஞ்சுதிறத்தொசி யோகிகளோகா ...*
னுஞ்சுபிறப்பிட ரியாவுமறுத்தார் ...*

(இ-ள்) பஞ்சேந்திரிய விதங்களின் ஆசையையடக்கி மனது பய த்துடனே கோபமும்நீக்கி ஒருநிமிடமாகிலும் நினைத்து விடுவதில்லாம ல் நிரந்தரமு மிப்படியிருக்கிற யோகிகளேகண்டாய் கருமத்துக்குத் தப் ப்ப் பிழைத்துப் பிறவி துக்கமுதலான துக்கமெல்லாம் நீங்கப்பெற்று அடித் தவர்கள் என்றவாறு. * (காவல்செய்தென்றகவியும் அஞ்சுபொறியென்ற கவியும் ஒரு தொடர் - இந்திரியங்களைக் கட்டிக்கண்ணிரண்டை யும் புருவநடுவே நிறுத்திப் பிராணவபானனை விலக்கும் அவைகளிச்

சையாக அசையாமற் றனக்கு வேண்டியபோ தசைய அடக்கி இந்திரிய ஆசையையடக்கி மனப்பயத்தையுங் கோபத்தையுங் கைவிட்டு இளையா மலெப்போது மிப்படி யிருக்கிற யோகிகளேதப்பிப் பிழைத்துப் பிறவித்துக்க முதலான துக்கமெல்லாம் விழுத் தள்ளினவர்க ளல்லாமல் இப்படி யிராதவர்க ளல்லகண்டா யருச்சுனாவென்று இரண்டுகவிக்கு மிது பொழிப்புரை - உதிர்ந்தலாவது இப்படியிருக்கிற யோகிகள் மேலேறினவர்க ளாகையால் அங்கே கூடவிருந்த பிறவித்துக்க முதலான வெல்லாந் தீர்ந்துயுதிர அடித்தவர்களென்பது இவர்களுக்குப் பிறவிமுத லொருதுக்கமு மில்லாதவனென்ற கருத்தாபத்தி.) (௰௮)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

சாதிபுரியுந்தொழில்களுக்குந் தக்கோர்செய்யுந்தவங்களுக்கு...*
நீதிலுலகமேழினுக்குஞ் சேருமிடனுயுள்ளவெனை ... .*
யோதிமுடியும்பரிசேமெய் யுணர்ந்தார்பிறவாவெனவுரைத்தா......*
னாதிமுடிவொன்றின்றியே யனைத்துந்தானேயாய்நின்றான் ....*


(இ-ள்.) அந்தந்தச் சாதிகள் செய்யப்பட்ட கருமங்களுக்கும் பெரியோர்கள் செய்யப்பட்ட தவசுகளுக்குங் குற்றமில்லாத வேழுலோகங்களுக்குஞ் சேரப்பட்ட இடமாயிருக்கிற என்னையோதி முடியப்பட்ட முறைமைபோல மெய்யாக அறிந்தவர்கள் இனிப்பிறவாரென்று சொன்னார் அவர் யாரென்னில் ஆதியந்த மொன்றுமில்லாமலே யெல்லாந்தானேயாகின்ற ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௰௯)

௫-வது-சந்நியாச யோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.



ஆக. அத்தியாயம்-௫-க்கு கூடியசெய்யுள்-௱௯௯.



ஆறாவது.

அப்பியாசயோக அத்தியாயம்.

கலி விருத்தம்.

யோகமுயர்ந்தவர் யோகமதற்கே ....*
யேகமுறும்பொருளாகியிருந்தே ... .*
நாகபடத்திடை யேநடமாக் ....*
யேகமயர்க்கிலனை கொடுப்பாய்........ ....*

(இ-ள்) யோகமனை அடைபவர்களின்யோகத்துக்கு ஒன்றான பொருளாகியிருக்கிற காளிங்கனென்னு மொருபாம்பின்சுவ்வே கூத்தாடப்பட்ட யேகமானதிருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி அருச்சுனனுக்கு இதைத்திரும்பச்சொல்லுவார் என்க. (க)

செய்தவினைப்பயன் விட்டவைதீரா ... .*
செய்தவியற்றி யிருப்பவனேகா ....*
னுய்யவினைத்தநல் யோகியுஞானி ....*
வெய்யதழற்பொலி வேள்விசெய்வானும்...............*

(இ-ள்) செய்த கருமபலத்தை யிச்சியாமல் விட்டு அந்தக்கருமத்தை விடாமற் சேரச்செய்கிறவனேகண்டாயருச்சுனா தப்பிப்பிழைக்கவினைத்த நல்லயோகியும் ஞானியும் வைஷ்ணவருள்ள அக்கினியிலே விளங்க யாகஞ்செய்கிற கருமியும்-என்று. * (இவன்பலத்திதனேயல்லாமல்கருமத்திதனல்லவென்பது இதை ஞானயோகமென்பார்கள் இதுவேசத்துவயோகமென்றறிவது.) (உ)

மேவினையாவையும் விடுதலில்லா ... .*
ரியாவர்களேனுநல் யோகிகளாகா ... .*
ராவர்களாகி லவாவறலாகா..............................*
ஞேவலிலாதமெய் யோகமுமையா.....................*

(இ-ள்) ஐயா தங்களைச் சேர்ந்ததான சங்கற்பமெல்லாம் நாசமில்லாதவர்களெவர்களானாலும் நல்லயோகிகளாகமாட்டார்கள் சங்கற்பமுள்ளவர்கள் யோகிகளாவார்களாகில் ஆசையறுதலே கண்டாயிந்திரிய விஷயமில்லாத மெய்யோகமும் மெய்ஞ்ஞானமும்-என்று. * (இதனாலாசையறுவிடிற் சங்கற்பமறுது சங்கற்பமறுவிடில் யோகிகளாகார்கள் ஆவர்களென்னில் அவர்கள் பொய்யோகியும் பொய்ஞ் ஞானியுமென்பதருத்தாப்த்தி யோகமுங்கருமமாகவிருக்கயோகம்வேறு கருமம்வேறாகச் சொல்

ஞானமேதமென்றில் சரியைகிரியையோகம் ஞானமென்று நாலாம் இந்த நாலுங் கருமமே இதைப்பதவிபேதத்தினாலே ஒன்றைநாலாக்கினது பத்தியாவது சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியமென்று நாலாம் சாலோகம் கடவுளுலகத் திருத்தல் சாமீபம் கடவுள்சமீபத்திருத்தல் சாரூபம் கடவுருப்போலிருத்தல் சாயுச்சியம் கடவுளிற் கலந்திருத்தல்)

உய்வகையோக மொருப்படுவார்க்குக்.. ....*
கைவருமாசெயல் காரணமேகாண் ....*
மெய்வகையோகம் விளைந்தபின்மெய்யே...............*
செய்வனவானவை தீமையவேயாம் ... .*

(இ-ள்) தப்பிப்பிழைக்கிற விதமான யோகத்திலொருமைப்படுகிறவர் கருக்கு அந்தயோகங்கைவருகிறபடி செய்கிறகருமமேகாரணங் கண்டாயருச்சுனா அப்படி மெய்யானவிதமாகிய யோகம் விளைந்தபின்பு செய்கிறதான அந்தக்கருமமானது மெய்யாகவே பொல்லாதாகும்-எ-று. * (ஏகாரம் அசை யோகமே ஞானம் ஞானத்துக்கு மப்படியென்ப கருத்தாபத்தி.) (௪)

புன்மையவாய பொறித்திறனோடும் ....*
வன்மையவாய வினைப்பயனோடும்............ ....*
அன்மையனானவனப்பொழுதையா ... .*
தன்மையில்யோக மதித்தலைநின்றான் ....*

(இ-ள்) புல்லியதாகிய விந்திரிய விதங்களோடும் பலவிதமாகிய கருமபலத்தோடுங்கூடாதவன் அப்பொழுதே ஐயா தன்சுபாவமில்லாதயோகத்திலே தலைமையாக நின்றவன்-எ-று. * (கூடினவன் கீழாகி நாசமானவனென்ப கருத்தாபத்தி அன்மையனாவது அல்லாதவன் அதாவது விஷயங்களோடும் பலத்தோடுங் கூடினவனல்லாதவன் ஆகையாலே கூடாதவனென்பது அப்பொழுதேயென்ற பின்னேவரு மென்னுமல் அப்பொழுதேயென்றது சங்கை நிவர்த்தி) (௫)

தானலதியாவர்தன் மேன்மைசெய்தக்கோர்............*
தானலதியாவர்தன் கீழ்மைசமைப்பார் ... .*
தானலதியாவர்தன் மெய்ப்பகையாவார்...............*
தானலதியாவர் தனக்குறவாவார்.......................*

(இ-ள்) இப்படி ஞானசிரேட்டனாக நின்றவர்தானே தனக்கு மேன்மை செய்யத்தக்கவரல்லாமல் வேறேயார் தனக்கு மேன்மை செய்யத்தக்கவர்களாருமில்லை இப்படி ஞானநிலையில்நில்லாதவன்தானே தனக்குக் கீழ்மைசெய்கிறவ னல்லாமல் வேறேயார் தனக்குக் கீழ்மை செய்கிறவர்க ளாருமில்லை இப்படிக்கொத்த அஞ்ஞானிதானே தனக்குமெய்யா

ன பகைமயல்லாமல் வேறேயாரும் பகையாகிறவர்கள் ஒருவருமில்லை. அவனு க்குத்தானே தனக்கு உறவல்லாமல் வேறேயார் தனக்கு உறவாகிறவர்க ள் யாருமில்லை-எ-று. *(இதனால் ஞானியாயிருந்தால் தானே தனக்குநன் ன்மைசெய்கிறவனும் உறவாகிறவனும் அஞ்ஞானியாயிருந்தால் தானே தனக்குத்தீமைசெய்கிறவனும் பகையாகிறவனும் தன்னையல்லாமல்வே றே யாருமில்லையென்பது ஆனமையினாலே ஒருவன் தேகேந்திரியம் ஆ கிய தன் ஞானந் ஞானங்களால் வந்ததான பயம் கவலையாலே ம ந்ததல்ல தன்னிலேவந்ததேயாம் ஆகையால் தனக்கு நன்மைவேண்டின் ஞானியாயிருவென்பது இது அருத்தாபத்தி) (௩௰)

அஞ்ஞானப் பிரகரணம்.

இறவாவகைதந்துள்ளத்தாக படக்குமவ ரதமங்கெல்லா .... *
மறவாயுள்ளாரல்லாதார் தமக்கேபகையாயொருவார் .... *
துறவாதொழுகும்அவர்துவங்க நெஞ்சோன்றினேயே தொடர்ந்தவர்பால்
மறவாதெழுந்தமெய்யறிவும் மாயைமறைக்கமாட்டாதால் .... *

(இ-ள்) ஆத்மஞானத்தைக் காப்பாக்காதபடிக்கும் தங்களின்மனதை அ டக்கப்பட்டவர்களே என்றைக்குந் தங்களுக்கு உறவாயுள்ளவர்க ளிம் அ டியல்லாதவர்கள் தங்களுக்கேபகையாய் நடப்பவர்கள் விடாமல் நடக்க ப்பட்ட பாவத்தொடர்புகளைவிட்டு ஒன்றான அத்மாவையே தொடர்ந்த வர்களிடத்தில் மறவாத அனுசந்தானத்திலெழுந்த மெய்ஞ்ஞானமான து இந்த மாயை மறைக்க அதனாலேமறையாது-எ-று *(இதனால் நன் மனதைச்செயித்தவனுக்கு ஆத்த மனமே உறவு மெய்க்காமலேயவிட்ட வனுக்கு அம்மனமேசத்துரு அவன்தயவான மமகாசம்பந்தங்களைவிட் டு ஆத்மாவையேதொடர்ந்தவனுக்கு அநுசந்தானத்தி லெழுந்த ஞான த்தை இந்தமாயை மறையாதென்பது இவ்வகையாய் ஆத்மஞானமில்லாமல் மனதைச்செயிக்கமாட்டான் இவன் ஞானத்தை மாயைமறைக்குமென்ப து அருத்தாபத்தி.) (௩)

பாடும்பனுவல்பலவோதி படிற்றுலறியும்பயனுணர்ந்து................*
நீடும்புலன்களைவென்று நிலைபிறகலக்கத்கரியாறு....................*
யோடும்பொன்னுமொருபொருள்போ லொக்கப்பார்க்குமவனேயிங் ...*
காடும்பெரியமாயக்கூத் தாட்டங்கண்டேயமைந்திருப்பான்........... *

(இ-ள்.) பெரியோர்களாலே பாடப்பட்ட பல நூலுமோதி யந்நூலா லே யறியப்பட்ட பலனையறிந்து வளரப்பட்ட விஷயங்களைச் செயித் துத் தான்நின்றநிலைமையில் நில்லாமல் கலக்கச்செய்கிறதற்கு அரிதான வனும் ஓடும்பொன்னு மொருபொருளைப்போலச் சரியாகப் பார்க்கப்பட் டவனே யிங்கேயாடப்பட்ட பெரிய மாயக்கூத்தாட்டத்தைக் கண்டு அ டங்கியிருப்பான்-எ-று [illegible] விக்கித்து மனசு செயமாகாது - ஓடும்
[illegible]

பொன்னுஞ் சரியாகப்பார்க்கிறதாவது, நிருவிகாரம் இப்படிச் சிதேந்திரியனும் நிருவிகாரனுஞ் சித்தசெயவானு மிருக்கிறவனே மாயக்கூத்தாட்டத்தைக் கண்டடைந் திருப்பவ னிப்படியிராதவன் மாயக்கூத்தி லகப்பட் டாடுகிறவனென்ற கருத்தாபத்தி-இங்கே என்றது இகபிதி லங்கேயென்றது-பரம இகத்தி லிந்திரியவியாபாரனும் விகாரனுஞ் சித்தசஞ்சலனும் இருக்கிறவன் மாயக்கூத்தி லகப்பட்டவன் இவைகளில்லாதவன் பரத்தில் மாயக்கூத் தாடாததுகண்டு முன் னயிக்கத்திற் கூடியாடின மாயக்கூத் தொழிந்திருப்பானென்பது.) (அ)

கைம்மாறில்லாதசெய்வான் காதற்றேருபூன்கடும்பகைஞன்...... ......*
விம்மாதெவற்றுமொத்திருப்பான் வேண்டப்படுவோன்வேண்டாதா ... *
எம்மாமறைநூனெறிப்புரிவா னுசாதனவாக்கிடுவானென்...... ... .*
றிம்மாநிடவரனைவர்க்கு மொப்பான்யோகியெனப்படுவான்...... ......*

(இ-ள்) எதிருபகாரமில்லாத வுபகாரஞ்செய்கிறவன் அன்புள்ளசினேகிதன்-கடுமையுள்ள பகைஞன்-சுகதுக்கம்வந்தபோது சந்தோஷமுங் கிலேசமும்படாமல் எல்லாவற்றினு மொத்திருக்கிறவன்- வேண்டப்பட்டவுறவினன்-வேண்டாதபாவி-அழகும்பெருமையுமுடைய வேதசாத்திரத்தில் சொன்ன மார்க்கத்தைச்செய்கிறவன் - ஆகாதகாரியத்தை யாகபபண்ணி எல்லாராலும் உதாசனிக்கப்பெற்றவனென்று சொல்லப்பட்ட இந்தமனிதரெல்லாருக்கும் ஆத்மாசமமென்றறிந்து சமமா யிருக்கிறவன் யோகியென்று பெரியோராலே சொல்லப்படுவன்-எ-று. * (இவர்கள்முதலானவர்களெல்லாரும் தானுய் இவர்கள்செய்வதெல்லாம் தான்செய்வதாய் இவர்களுக்குவருகிற பிரயோசனங்களெல்லாந் தனக்கு வந்ததாய் இவர்கள அனுபவமெல்லாந் தான் அனுபவிக்கிறதாக நிச்சயமாக அறிந்து சமமாயிருக்கிறவனே யோகியென்று பெயருண்டானவ னென்பது.)

தலைபாமிந்தயோகத்தைத் தலைநின்றேமுதுந்தன்மைகே... *
னிலையாவாசையறமாற்றி யொன்றுந்தனக்கென்றேமுகாதே *
மலைபார்முழைஞ்சேமுதலாகயோகங்களுக்குவருத்துரைத்த
நிலையாவையினுமொன்றினில்வந் தியாதுநவியாநிலந்தனிலே.

(இ-ள்) சிரேஷ்டமான இந்தயோகத்தை மோக்ஷத்துக்கு முதன்மையாகநின்றுநடக்கப்பட்ட வியல்பைக்கேள் அருச்சுனா வருத்தஞ் செய்யப்பட்ட ஆசையை நன்றாயறவிலக்கி ஒருவிஷயமானாலும் தனக்குவேணுமென்று அந்தவிஷயத்துடனே கூடிநடவாமல் யோகங்களுக்கு வருந்துச்சொன்ன மலையிலிருக்கிற முழைஞ்சுமுதலாக உள்ளவிடங்களெல்லாவற்றினு மோரிடத்தில் மிருகபட்சிமுதலானவைகளெல்லாம் வந்து வருத்தாதநிலத்தில் என்றவாறு. * இதனால் ரகசியத்தில் ஏகனாய் ஆத்மாவினிடத்தில் நிறுத்தின ஏகாக்கிரசித்தனாய் ஆசையில்லாதவனாய் விஷயபதார்த்தங்களிலே கூடாதவனாய் சுசியானதலத்திலே மிருகபட்சி

[illegible] வருத்தமில்லாமல் [illegible] த்திலே [illegible] ருக்கவேண்டி [illegible] யாது [illegible] டாதாவது [illegible] நன்மையுண்டானவை கிடையாமல் வருந்தாது கிடைக்கு [illegible] ருமென்பதாம்.) ([illegible])

ஒக்கும்வகையாற் [illegible] பதன் [illegible] ... ... *
தக்கபுடைவையதன் [illegible] கொண்டிருந்து ... ... *
மிக்கமனை [illegible] ... ... *
[illegible] குந்தாம். *

(இ-ள்.) உபரமும் [illegible] யாமல் [illegible] பாலே [illegible] பரபபி [illegible] மேலே மானம் [illegible] அத்யாகத்தக்க புடைவையை அக்கடி [illegible] த்தின்மேலே [illegible] புடைவையின்மேலே தானமிருந்து [illegible] செட்டையற [illegible] ரமாக்கி [illegible] வேறுபடுத்தப்பட்ட கருமங்களுடனேகூடின [illegible] அதுவுகத்தமாமிற [illegible] -எ-று. * (அதிவுகத்தமாவது, சித்தத்தி லொக்கும்வகையாவது பேடு பள்ள மில்லாதபடி புடைவையென்ற பாடத்தைத் தகிலையென்றுவாருமுளர்.) (கக)

தலையுங்கழுத்துமுடம்பயிவை செவ்வேவசலாதேயிருத்தி ... ... *
நிலையிலிருந்துகண்களைத்தன் மூக்குநுனிமேலேநிறுத்தி .... *
மலையுங்கடல்போலோடிப் பயமுந்தன்னைவிட்டகல.. ... ... *
உலையுமனமுள்ளடக்கியென்னை யுணர்ந்தேயிருக்குமதுயோகம் ... *

(இ-ள்) தலையுங் கழுத்து முடம்பும் இவைகளைச் செவ்வையாக அசையாமல் நிறுத்திப் பதுமாசனமுதலான ஆசனத்திலிருந்து தன்மூக்குநுனியின்மேலே கண்களை நிறுத்தி அலைபாமலலையப்பட்ட கடலையொப்பான ஆசையுஞ் சரீரபயமும் விட்டுப்போக விஷயங்களிலே திரியப்பட்ட மனதைத்திரியாம லுள்ளடக்கி என்னைமேலானபலனென் றறிந்திருக்கப்பட்டதுவே யோகம்-எ-று. * (தலையாமென்றுகவியும் ஒக்குமென்றுகவியும் தலையுங்கழுத்துமென்று கவியும் ஒருதொடர்.) (கஉ)

கொச்சகக்கலிப்பா.

என்றிகழும்யோகத்தை யிப்படிசாலெப்பொழுதுங்... ... *
கொண்டியபில்பவர்கடைக்கா லென்னையேகூடுவா... ... ...*
குன்றியினின்மிகவாவ குன்றேப்பார்மிக்குநக்கிக்...... ...*
கன்றியிலையறத்துறப்பா ரலர்க்கிதுகைவாராதால்... ... ...*

(இ-ள்.) உலகத்தார் மதித்துவிளங்கப்பட்ட யோகத்தை இந்தவிதத்திலெல்லாகாலும் என்னிடத்திலே மனதைநிறுத்திக்கொண்டு பழகுகிறவர்களே முடிவுகாலத்தி லென்னிடமே சேருவார்க ளல்லாமல் மாயையிலே கூடார்கள் - பொசிப்பில் மிகுந்தவர்கள் அந்தப்பொசிப்பை விட்டு

வர்கள் மிகுந்து நித்திரிக்கிறவர்கள் நித்திரையைச் சுத்தமாக விட்டவர்கள்-அந்த நாலுபேருக்கும் இந்தயோகங் கைவராது-பசித்தபோது அற்பபோசனமும், நித்திரைவந்தபோது அற்பநித்திரையுஞ்செய்து யோகத்தைச்செய்தாற் கைவரும்-எ-று. ❋ (கைவருதலாவது - பலித்தல் என்னைக்கூடுவாரென்று பாடமோதில் இருவருக்குமிடம் வேறுபடும், அதேதென்னில் ஓரிடத்திலிருக்கிறவனை வேறொருயிடத்தி லிருக்கிறவன் வந்து கூடுவதாகு மதனாலே என்னைவந்து கூடுவாரென்ற பாடமாகாது-அற்பபோசனமும் அற்பநித்திரையும் செய்கிறபோது யோகஞ் செய்யக்கூடாததினாலே அவ்விரண்டையும் விட்டு எந்நேரமும் யோகமொழியாமல் யோகஞ்செய்யலாமே அதனை லறவிட்டவர்களுக்குங் கூட யோகம் பலியாததேதென்னில் பிராரத்தம்மூன்றுவிதம் அதாவது சுவேச்சையா பிராரத்தமென்றும், அநிச்சையா பிராரத்தமென்றும், பரவிச்சையாபிராரத்தமென்றுமாம், இவற்றில் சுவேச்சையா பிராரத்தமாவது தானிச்சித்துவருகிறது பரவிச்சையா பிராரத்தமாவது அன்னியருடைய விச்சையினாலே வருவது அனிச்சையாபிராரத்தமாவது சுபாவமாக வந்துகொண்டேயிருக்கிறது, இவற்றில் சுவேச்சையான காமக்குரோதாதிகளைவிட்டுப் பரவிச்சையான மிருகபட்சி வருத்தாதவிடத்தி லிருக்கச்சொன்னதினாலே சுவேச்சை பரவிச்சை இந்த இரண்டுந் தன்னாலாகிறது-இனித் தன்னாலாகாததான அனிச்சியா பிராரத்தமான பசி நித்திரை முதலானவைகள் சுபாவமாகவே வந்துகொண்டிருக்கிற தாகையால் அவைகள் பிறவியற்றாலல்லாமல் விடா அவைகளைச் சத்து பரிசத்தடக்காவிட்டா லவையே யொழியாத்துன்பமா வுபசரித் தடக்கிக் கொண்டே யோகஞ் சாதிககவேணுமென்றது இதனால் ஒருநாள்அறுபதுநாழிகையுங் கழிவதி லவைகளை யுபசரித்தடக்குகிற தொருநாழிகை கழிவது நன்று ஐம்பத்தொன்பது நாழிகை யோகமே போதுமென்று குறிப்பு. இதனாலே கொஞ்சப்பழிப்பைச்செய்து மேருவத்தனை கீர்த்தியடைதல்நன்றெனவறிவது பழிப்பில்லாமற் கீர்த்திவாராது செலவில்லாமல் ஆதாயம் வாராதுபோல வென்றறிவது.) (கஎ)

துயிலுமுணவுஞ்செய்தொழிலு மிகாமேகுறைந்துதோமே
பயிலுமவனேயோகத்தைத் தன்பாற்படுக்கும்பான்மையா. ❋
னயிலும்பொறிவிட்டவ்வறிவு தன்பாலடக்குமப்பொழுது ❋
குயிலுமியோகந்தனினின்று னென்றுங்கவனேக்கூறலாம்... ❋

(இ-ள்.) நித்திரையும் போசனமுஞ் செய்கிறகாரியங்களும் அதிகமாகாமற் குறைந்து காணமற் சமனாக தனக்குத்தக்க நித்திரையும்போசனமுங் காரியமுஞ் செய்யப்பட்டவனே தனனிடத்தில் யோகத்தை யொழியாம லிருத்தப்பட்ட சுபாவத்தையுடையவன் பொசிக்கிற விந்திரியத்துதைவிட்டு நியமமான அந்தச்சித்தத்தைத் தன்னிடமாகிய ஆத்மாவினி

டத்தில் நிறுத்தப்படக்கப்பட்ட அப்பொழுது சகல இந்திரியங்களிலுமிரு
ந்து செய்யப்பட்ட யோகத்தில் ஸ்திரமாயாக நின்று னென்றுகளைச்
சொல்லலாம் (எ-று.) * (அறிவைச் சித்தமென்பது ஆசையில்லாமலிரு
க்கையால் சித்தமென்றது, அதையே நிலவலயாகவோ வென்றும்
அசையாமலிருக்கில் ஆத்மா தோன்றாது ஆகையாலசித்துக்கையுமில
டாமலடக்கியென்று சொன்னது அறுவர்குட்டினும் ஆத்மா விளங்குகை
யால் அறிவென்றும் ஆத்மாவென்று மிரண்டாகநின்ற அறிந்தவிப்பு ஆ
த்மாவொன்றாகவே நினைகையால் அப்பொழுதிருதாமெமம காணுமிருலே
யடைந்து நின்று சொல்லலாகாதே யென்றானி படைத்துமாயல் ஆத்மா
வையோகாவென்காய்க்கட்ட நெகுமெவாரப் ஆகையால் அப்பொழுது
மான ஆத்மாவைச் சைதன்யமென்று சொல்லுகலாமென்கனியென்
று சொல்லக்கூடாது - அதனால் அவ்வப்பத்தனித்தத்தை அடக்கி யென்
னாமெடுத்தது-ஆம் (அ-று.) (௰௮)

கொச்சகக்கலிப்பா.

இப்பரிசயப்பிணி யோகிகாலில்லிடத்து.......... *
மெய்ப்பரிசுமுக்காத விளக்குப்போல்விளங்குமா ...*
வெப்பொழுதுங்கவனாரவப் புன்மையிலெசெப்பினையு
மப்பொழுதுபரமானந் தந்தினையடையுமா......*

(இ-ள்) இப்படி பழகுகிற யோகியினுடைய சரிர சுபாவமானது காற்றில்லாதவிடத்து அசையாத விளக்கைப்போல் விளங்குமாகையா ல் அவ்விடத்து லவனுடைய ஞானம் அந்த ஆத்மாவிலெப்போதுகூடி ப்பொருந்துமோ அப்போது அந்த ஞானமானது பரமானந்தத்தையே அடையாமல்லாமல் விஷயானந்தத்தை யடையாது எ-று. * (யோகி யெப்படிசுகாலில்லிடத்திதெனவும் உண்மையி லெப்பொழுதெனமாறு க, * எப்பொழு தப்பொழுதென்பதிறுமிலயிச்சையுமென் றுகாரம்வரு விக்க எகாரத்தேற்றுகாரம், ஆம் ஆசை, ஆனந்தபாவது சுகம் தேகமின் மையாலே தேகியை யுண்மையென்றது.) (௰௯)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

யாதொன்றிந்தப்புலனறியா வளவில்லின்பமாயிருக்கும்... ....*
யாதொன்றினைச்சென்றடைந்தார்கள் பின்னையதனினிரண்டாகா ,*
ரியாதொன்றினைப்பெற்றவர்தமக்கின் மிக்கதொப்பதுண்டென்று. .*
ரியாதொன்றறிந்தவரிப்பிறகே யசையாநிற்குமதினின்றோர்... ......*

(இ-ள்) யாதொன்று இந்த விஷயங்களறியாத அளவானபுத்தியி லே சுகமாயிருக்குமோ யாதொன்றைச்சென்று கூடினவர்கள் பின்பு அ திலிரண்டாகாமல் ஒன்றுவர்களோ யாதொன்றைப்பெற்றவர்கள் இதில்லை தேகமானது இதிலொப்பானது உண்டென்று சொல்லார்களோ யாதொன் று இந்த அறிவுக்கேஅறிவாய்நிற்குமோ அந்தயோகத்தில் நின்றவர்களே எ-று. * (புலனறியாவளவது விஷயாதீதம்.) (௨௰)

கலிவிருத்தம்.

வஞ்சவேல்கொடு மார்பினெறியினு.............*
மெஞ்சவேதழன் மூடியெரியினு.............. ......*
நஞ்சினாழ லாகஙலியினு................. ....*
மஞ்சிடார ஃதானந்தமாவதே.....................*

(இ-ள்) கொலைத்தொழிலைக்காட்டாம லுள்ளடக்கிக்கொண்டிருக்கிற வஞ்சனையுடைய வேலாயுதத்தைக்கொண்டு மார்பி லெறிந்தாலும்எப்படிப்பிழைப்போமென்று மனதிளைக்க அக்கினிமூடிக்கொண்டெரிந்தாலும் விஷத்தினாலே நிறைந்தஅக்கினிவிசப்பட்ட நாகமானதுவருத்தினாலும் அவர்களுக்கு இது ஆனந்தமாவதே யல்லாமல்துக்கமாவதையடைந்து பயப்படார்கள் - எ-று. * (யாதொன்றெனக்கவியும் வஞ்சவேலென்றகவியும் ஒருதொடர்.)
(௰எ)

போயமாய புலன்களைப்போக்கறுத்.................*
தாகமாமெய் யறிவிடையேயந்த............. ....*
வேகமாயமனத்தினை மெல்லவே....................*
யேகமாக விருத்திகலாதுநீ..........................*

(இ-ள்) போகமாகிய விஷயங்களைஇந்திரியங்களிலே புகுகிறபோக்கைநீக்கிஅந்தவிஷயபோகங்களின் திசகிலேபோகிற இந்திரியங்களைத்தொடருகிறவேகமாகிய மனதைப்பகையாமல் மெள்ளமெள்ள யேகமாக உள்ளாகிய மெய்யான ஆத்மாவிடத்தில் நீயிருத்தென்றவாறு. *(இதனைப் புலன்களைப் போகமாய் போக்கறுத்தந்த வேகமாய் மனத்தினையிகலாது மெல்லவே ஏகமாக வாகமா மெய்யறிவிடையே நீ இருந்ததெனப் பொருளுக்கேற்பமாறுக அறிவிடையேயென்றதனாலிந்திரியவிஷயபோகங்கள் இருத்தாமல் ஆத்மாவிலே நிறுத்தென்பது மெல்லவேயென்றதனால் சீக்கிரமாக நிறுத்தில் தடுமாறிப்போம் அதனால் மெல்லவேநிறுத்தென்பதுபோய் மாயப்போக்காவது விஷயங்களின் பின்னே இந்திரியங்கள் போறபோக்கென்பது அதை விஷயபோகங்களிருக்கிறதிக்கை இந்திரியங்கள் நாடிப்போகிற போக்கையென்றுஞ் சொல்லலாம், ஒன்றையொன்று கொண்டதாகையால் ஆத்மாமெய்யறிவென்றார்-ஆத்மாவை மெய்யாத்மாவென்பதேதென்னில் நித்தியமாயிருக்கையால் ஆனல் பொய்யாத்மாவுமுண்டோவென்னில் அஞ்ஞானிகளுக்குத் தேகமிந்திரியங் கரணமுதலானவைகள் ஆத்மாவாக மயங்குகையாலும் அவைகள் அநாத்மாவாய் அழிகையாலும் பொய்யாத்மாவுமுண்டென்பது இகலொடென்படாடத்தை யிகழாதென்று பாடமோதில் வெறுக்காதென்றுரைசெய்வது பகைத்தாலும் வெறுத்தாலும் மனதுவேறுபடுந் தன்வசப்படாது.)
(௧அ)

மைந்நிலைப்பொறி நிற்குமனத்தினை .. ..*
நீங்கிடாவகை நெஞ்சினிருத்தியே..............*
நிலைபெறாமையுநீங்கநிலைபெறுமாறு ... ...*
பாங்கியாதனுமேயிபயில்வாயரோ ... .*

(இ-ள்) பஞ்சேந்திரியங்களில் நின்றுழலு மனதை யிப்பால்வாங்கி ஆத்மாவை விடாதபடி நின்று ஆத்மாவில் மனதைத்தாக்கி மற்றுமெல்லாவற்றையும் நினையாதது சுபாவமாகையால் வேறுசுபாவப்படாமல் அதுவே பழகுவாயாக-எ-று * (மனத்தினைவாங்கி யெனமாறுக ஆரோ அசை ஆதுவே பென்பதனால் வேறுபாவனை பண்ணாமல் அதுவே பாவிப்பாயென்பதேகாரம் யோகமாய வென்பதும் வாங்கி யைப்பொறி யென்பதும் தொடர்.) (௧௯)

தேறுமெஞ்ஞானநிஷ்டையைச் செயலல்லால் ....*
வேறுகண்டறியாவெய்பறிவினை ....*
ஊறியிந்தவுடம்புடன் வீடுபெற் ... .*
றேறுகின்றவனேயின்பமெய்துவான் ....*

(இ-ள்) இப்படி எந்தெந்த விதத்திலே தெளியவேணுமோ அந்த அந்த விதத்திலே தெளியப்பட்ட மனதுடையவனாய் ஆத்மா வினுடைய செயலல்லாமல் வேறுசெயல்கண்டறியாத சத்திய ஞானத்திலே ஆனந்தவெள்ளமூறி இந்த வுடம்புடனே மோக்ஷத்தைப்பெற்று ஏறுகிறவனே சுகத்தையடையவான்-எ-று. * (ஊறுதலாவது முன்னே ஆற்றாமலாகவூறி வரவரப்பெருகிநிறைந்து தேங்கிவெள்ளமேற் கொண்டுமூழ்குவதாகு ஆரம்பம் ஊறுவது உடம்புடனே மோக்ஷம் பெறுதலாவது சீவன்முத்தி உடம்புவிட்ட மோக்ஷம் பெறுதலாவது சிவன்முத்தி உடம்புவிட்டமோக்ஷமாவது விதேகமுத்தி விதேகமுத்தியென்பதாவது சிரேஷ்டம்பெறுதல்) (௨௦)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

இழியாவிந்தயோகத்தை யென்றுந்தலைநின்றவனென்று ... *
மழியாவின்பத்தினையின்பத் தாலேயடையுமதுநிற்க ... ...*
வொழியாவெல்லாயுயிருந்தன் னுள்ளேகாணுமவற்றுள்ளே *
கழிபாதெங்குந்தானின்ற பரிசுந்தெரியக்காணுமால் ... ...*

(இ-ள்) இழிவில்லாத இந்தயோகத்தை யென்றைக்கு முதன்மையாக நின்றவன் என்றைக்கு மழியாதசுகசொரூபமான பிரமத்தையானந்தத்தாலே யடைவன் அதுநிற்க ஒழிவில்லாதசகல ஆத்மாவையுந்தனக்குள்ளே காண்பான்சகல ஆத்மாக்குள்ளும் நீங்காம லெங்கும் பரிபூரணமாகத் தானின்றபடியுந் தெரியக்காண்பனென்றவாறு * (தலைநிற்

யாவது யோகமேகிரோஷடமாக மற்றெல்லாமிழிவாக நிற்றலென்பது - இழியாதெனவ்வ ...ர்ந்தயோகமென்பது சகல ஆத்மா வினுக்குள்ளே தானும் தனக்குள்ளே சகல ஆத்மாவுங்கண்டு எங்கும் பரிபூரணமாகச் சமமாக விருப்பனென்பது. (உக)

யாவனொருவனென்னையெல்லா வுயிர்களிடையுமென்னிடையே.
மேவவெல்லாவுயிர்களையும் வேறுகாமைமெய்காண்பான் ...*
தேவர்பகைமுன்செகுத்தோனே யவன்யாதேனுஞ்செய்திடினு
மாவவனுஞ்செய்தேனு னதுநீயேதுமையுறேல் ....*

(இ-ள்.) எவனாகிலு மொருவன் என்னை யெல்லாவுயிர் களிடத்திலும் என்னிடத்தி லெல்லாவுயிர்களையுங் கூடாதபடி காணாமல் கூடும்படி மெய்யாககாண்பவன் எவனோ அவ னேதானாலுஞ் செய்தாலு மந்தச்செயலாவதாகச் செய்தவனே தானாகிறவன் - உதைமுன்னேதேவர்களுடைய பகையான அசுர ராட்சதர்களைக்கொன்ற அருச்சுனா நீயொன்றுஞ்சந்தேகப்படாதே - எ-று. * (வேறுகாமை யாவது சகலவுயிர்களும் வெவ்வேறு என்னைவேறாகக்காணாமல் எல்லாவுயிர்களிலும் என்னிடம்என்னைவெல்லா வுயிர்களையுங்கூட மெய்யாகக்காண்கிறவ னெவனோ அவ னென்ன செய்தாலும் நான் செய்ததே அதெப்படியென்னில் அவனாகிறவன் நானாகையால் அவன்செய்ததும் நான்செய்ததே அதைநீ சற்றாகிலுஞ் சந்தேகப்படாதேயென்பது தேவர்பகைமுன் செகுத்தோனே என்றதனை லிப்போது உன்பகையான மனிதர்களைக் கொல்பவனேயென்ற கருத்தாபத்தி வருவிக்க முன்செய்தவனே யென்றதுகுறிப்பு.) (உஉ)

இடரானதுதானின்பந்தா னியாரோனுக்குமாயிடுகப் ... ...*
படராநின்றவதுதானு முறுவான்யோகியெனப்படுவான் ... *
கடராநின்றவடிவேலோய் தெளிநீயென்றுதுழாயலங்க ... *
லடராநின்றநெடுமுடியோ னருளிச்செய்யவவனுரைப்பான் *

(இ-ள்) யாருக்காகிலும் துக்கந்தான் சுகந்தான்வந்ததாகில் வராநின்ற அந்ததுக்கசுகங்களைத்தானு மடைகிறவன் யோகியென்றுலகஞ் சொல்லப்படுவன பிரகாசித்துவிற்கிற நீண்டவேலாயுதத்தை யுடைய அருச்சுனா இந்தப்படிதெளியென்று திருத்துழாய்மாலை யசைந்து நின்ற நீண்டகிரீடந்தரித்த ஸ்ரீகிருஷ்ணசுவாமியருளிச்செய்யக்கேட்டு அருச்சுனன்சொல்லுவான்-எ-று. * (சகலஆத்மாக்களிலுந் தானுந்தன்னிற்சகல ஆத்மாவுமாய்சமமாயெங்கு நிறைந்து நின்றயோகிக்கு எந்த ஆத்மாவுக்குந் துக்கசுகம்வந்தாலும் தானும் அதைச்சமமாக அடைகிறவனே

யோக்கியர்களுக்குச் சொல்லுகையால் இந்தப்படிக்கு யோகாக அறுக் தானம்பண்ணி புண்ணுடையகலக்கத்தைத் தெளிவென்றுசொல்லுகிறது; ()

எல்லாவுயிருமொன்றாகப்பார்ப்பதுயோகமெனவுரைத்தாய் ......*
மல்லார்ந்தாராயிதற்குநிலைகாணேன்மனமாகியபரிது..........*
நில்லாமற்றிகைத்தப்புலன்களுக்குயிமனாநிலைநிறுத்த ....*
ஒல்லாதெனவக்காற்கடக்கப்பொக்குமெனமுனைவர்முன்னின்றேன் ... *

(இ-ள்.) மெய்ப்பொருள்செய்யுஞ்சோதியுடைய சுவாமி எல்லாவுயிர்களையு மொன்றாகப்பார்ப்பது யோகமென்றுசொன்னீர் இதற்கு மனதுசஞ்சல சுபாவமானதனாலே கல்லையொத்த நிலைகாணேன் இப்படிக் கொதிக்கப்பா சாகிற இதுஅசையாதநிலையில் நில்லாத சஞ்சலசுபாவத்தை யுடையசா ய் விஷயத்தைக்கலக்கும் இதையடையாத நிலைநிறுத்தப்படாதென் றும் இதைநிறுத்துகிறேன் என்கிறகாற்றைப்பிடித்த தடக்கிறதற்கொப்பா குமென்றும் அறிகிறேன் எ-று. * (காற்றுவடிவாம் காற்றின்வடிவு சுபாவ மாகையால் அதைப்பிடிக்கு அலையாமலடக்கிறதற்குக்கூடாதுபோல அ லைகிறமனதை அலையாமலடக்குவது கூடாதென்பது.) (உ௭)

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

இவ்வகைவினையென்சுற மாபவசரி பம்பல்செய்வா .. .. *
னிவ்வகைப்புலனுநெஞ்சுமடக்குகையரிதானாலும் ... .*
மூவ்வகையுமாத்தாயோகமுறும்பயிற்சாலுமோகா ... . *
வைவகைப்புலன்செயின்பமனைத்தையும்வெறுப்பதாலும்.. *

(இ-ள்) என்றிப்படி யருச்சுனன் சொல்ல ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொல் லுவார் சஞ்சலிதமானவிஷயங்களையும் மனதையடக்குவதரிதானாலு ம் பிழைக்கும்படிசொன்ன யோகாப்பியாசத்தினாலும் விடாத பஞ்சவி ஷயங்கள் செய்கிறவெல்லாசுகத்தையும் வெறுக்கிற வயிராக்கியத்தி னாலும்-எ-று. (உ௯)

கலி விருத்தம்.

வெய்யநெஞ்ச மடங்கிடுமேவறிதற்... ....*
கையமில்லையென் றேயறியாதவராம்......... ... ..*
பையவேகர ணம்பதினன்கையும்... ....*
கைகடந்தவர் யோகமுங்கைக்கண்டார்... ....*

(இ-ள்) இந்த அப்பியாசத்தினாலும் வயிராக்கியத்தினாலும் கொடுமை யுள்ளமனது அலையாமலடங்கும் இதற்கு அடங்காதென்ற சந்தேகமில் லை இதுநிச்சயமென்றேயறி அருச்சுனா ஆகையால் சீக்கிரப்படாமையா ல் மெள்ளமெள்ள பதினாலுகரணத்தையும் கைகடந்தவர்களே யோக

மும் ஞானமும் நகைகண்டவர்கள்-எ-று. * (அடங்குதலுக்கு வேருவது அடங்காதது பதினாறுகரணமாவது ஞானேந்திரியமைந்துங் கன்மேந்திரியமைந்தும் அந்தக்கரணம்நாலுங்கூடியது பதினாலுகாணம்) (உசு)

என்றுகூற விசையனியம்புவா ....*
னின்றியோகத்தி லேமெய்நோனெலாம் ....*
பொன்றுங்காலத் தயர்ந்துயிர்போயினும்........*
சென்றுநற்கதி யேயன்றிச்சேருமோ ....*

(இ-ள்) இப்படியென்று ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்ல அருச்சுனனானவன் சொல்லுவான் யோகத்திலே அனேகநாளெல்லாம நின்றுசாகிறகாலத்தில் மறந்து சிவன்போனல் நல்லமோட்சத்திலே போயச்சேருமோ அல்லாமல் பொல்லாத நரகத்திலே போய்ச் சேருமோ எ-று. (உஎ)

யோகமேவ வினைகளொருவினுன்... ....*
மோகமேவமின் யோகமுடிந்தில ... .*
னேகமோவிரு பாலும்விட்டானிற்ற ....*
மேகமேயென வீழுந்துகழியுமோ ... .*

(இ-ள்) யோகத்தை யடையவேண்டிக்கருமங்களை விட்டவன் மோகத்தினமேலவலான இச்சையினலே மனதுசஞ்சலப்பட்டுயோகமுடிய விலாதவனுக்குக் கெதிமோட்சமோ நரகமோ மூடனும் ஞானியு மல்லாமல் இந்த இரண்டும்விட உபைய பிரஷ்டனு பொன்றிலுங்கூடாதவன் ஆகாச கமனமற்ற மேகத்தைப்போலக் கீழேவிழுந்தழிவானே மேலெழும்பியிருப்பான்-எ-று. (உஅ)

கலிவிருத்தம்.

மையலிதுவென் மனத்தினின்மற்றிந்த... ... ...*
வையமதுக்கவல் லாரில்லைநீயன்றி......... ......*
பொய்பவித்தையுமாயென்னயோகத்தின்...... ......*
மெய்யவரிதமா விரியவுமாக்கின்றேன்... ... .*

(இ-ள்) என்மனதிலிதுசந்தேகம் இந்தச்சந்தேகத்தைத் தீர்க்கச்சர்வக்கியனை நீயல்லாமல் வேறுவல்லவர்களில்லை நான்பிழைக்க இந்தச் சந்தேகத்தை விளங்கச்சொல்லுமென்று சொல்ல இந்த யோகத்தினில் சத்தியமான ஸ்ரீகிருஷ்ணசுவாமி விளங்கச்சொல்லுவார்-எ-று. * (மற்று அசை.) (உகூ)

பொய்மையடையாய் புலனுடைமாந்தர்த.........*
னிம்மையினிடயு மறுமையுலகத்தும்... ... .*
வெம்மையடைகிலர் மெய்மைவிடாரொன்னுஞ்...*
செம்மைதெளியவினஞ்செப்பிடுவேன்கேள்......*

(இ-ள்) யாவடையுடையாத அறிவுடைய யோகசம்பன்னரான மனிதர்கள் பிறக்கிசென்மத்திலெடுத்தி பிச்சையானதை யடைவார் - மறுசென்மமாக மகாத்மாக்களிலே கொடுமையான நரகத்தையடையார் - சத்தியமாவ யோகத்தைவிடாதென்று சொல்லப்பட்ட செல்வமயமானது தெளிவு இன்னதென்றுசொல்லுகிறேன் உணர்ந்து - எ-று. * (வெம்மையாவது இமையைக்குறிக்கும் பறையாடி) பிறவியாக விரண்டுபொருள் கொண்டது) (௯௰)

யோகமுடியா திடையேபோந்தவர்.................*
பாகவினையைச் செய்தார்சேர் பதியில்............*
சோகமொன்றுமெய்திச் சுகமாய்த் துய்த்தே............*
போகமுடர்த்துறும் காலமப்பொழுதின் ....*

(இ-ள்.) யோகமுடியாத நடுவிலே யோகத்தில் சிதைந்து பாககர் மங்கள் பயனாகச் செய்து வைத்தவன் அடைப்போகம் பொருந்தியிருக்கப்பட்ட வெல்லையில்லாத போகந்தனையடைந்து துக்கந்தொடாத போகத்தை யனுபவித்து வெகுகாலங்கள் போவதற்கு-எ-று. * (யோகமுடியா திடையே யோக விரோதனைசெய்திடுதல் பொருளாகுக.) (௯௧)

சிறந்தவாசர் திருக்குலத்தாகுதல்.................*
சிறந்தருள்யோகிகள் குலத்தாகுதல் ... .*
பிறந்துபெறுவதிக லாம்பெற்றுப்பின்னையும் ... *
மறந்தவியோகம கிழ்வுடனெய்துவான் ... .*

(இ-ள்) சிறந்தராசாக்களுடைய அழகியகுலத்திலாகுதல் தருமத்தைத்தரப்பட்ட யோகிகளின் குலத்திலாகுதல் பிறந்துபெற வேண்டியபோகமெல்லாம்பெற்றுப் பின்னையும்முன்செனமத்திலேமறந்தயோகத்தைப் பின்சென்மத்திலே மகிழ்ச்சியுடனே யடைவன் - எ-று. * (யோகமுடியாதென்ற கவியுஞ் சிறந்தவாசனென்றகவியு மொருதொடர்) (௯௨)

கொண்டபயிலுங் குணமிலரெயினு ....*
முன்தெளிவென் றுணர்ந்தவியோகந்தான் ...*
பண்டுபயின்ற பயிற்சியன்றோர்களைத் ....*
தன்கிலின்றிமுன் றனேதலைப்படும் ... .*

(இ-ள்) யத்தினம் பண்ணிக்கொண்டு அப்பியாசம் பண்ணப்பட்ட குணமில்லாதவர்களானும் தெளிவுண்டென்றறிந்த யோகமானது பூர்வம் அப்பியாசம்பண்ணின அப்பியாசிகளை நீங்குதலில்லாமல் அவர்கள் முன்னேதானேவந்து தலைப்படும்-எ-று. * (வேறுருபத்தினத்திலும் வேறுருவாதும் வரவேறுமென்கிற பிரயோசனமில்லாமல் எளிதாகத்தானேவந்து முன்னிற்குமென்றது.) (௯௩)

ஆனபவ்யோகத்தை யாற்றுவமென்று ... .*
நினைபுமவறு செறம்மூடமேலே ....*

வினைகள்பலசெய்து வேழ்விமுடித்தாற் ....*
கனையுங்கதிர்மேற் கதியையவன்பெறும் ....*

(இ-ள்) அப்படிக்கொத்த யோகத்தைச் செய்வனென்று நினைக்கப்பட்டவனுஞ் சாஸ்திரமார்க்கந்தப்பாமற் கருமங்களைப் பலவாகச்செய்து யாகத்தைமுடித்தாற் சத்திக்கப்பட்ட சூரியனுக்குமேலான கதியையவன்பெறுவன்-எ-று. * (நினையுமவனுமென்ற வும்மை சிறப்பும்மை, அதாவது நினைக்கிறவனுக்கு மேற்கதிபெற்றார் செய்கிறவனுக்குஞ்செய்து நடுவிலேவிட்டவனுக்கும் பெறுவது சந்தேகமில்லையென்ற சிறப்பும் மைகளையுங் கதிராவது நித்திரையாயடங்கின சீவன்களை யெழுப்பிப் பேசுவிக்கிற சத்தத்தைக்கொடுக்கையாலே சத்திக்கப்பட்ட சூரியனென்றது) ()

நீடுமதினிலே நின்றிலனாயினு... ....*
மோடும்வகையின் விடாதேயுழன்றவன் ....*
பாடும்பவங்கள் பலகடந்தாயினும் ....*
வீடும்பேரின்னமும் வேறுஞ்சிலகேளாய் ......*

(இ-ள்) பெரிய அந்தயோகத்திலசையாத நிலையாக நிற்க வில்லாதவனானாலு மிச்சைகளினாலே சஞ்சலப்பட்டோடப்பட்ட விதத்தினாலும் விடாமலந்த யோகத்திலேயுழன்றவன் சொல்லப்பட்டபிறவிக ளனேகங் கடந்தாலு மந்தப்பிறவி முடிவிலேமேலுலகங்களைப்பெற்று முடிவுபிறப்பிலே மோட்சத்தையும்பெறுவன் இன்னம்வேறுவிதஞ்சிலசொல்லுகிறேன் கேட்பாய்-எ-று. * (ஆயினுமென்ற வும்மையும் சிறப்பும்மை) (கூ௫)

எல்லாத்தவமு மியற்றிநின்றோனினு ... .*
மெல்லாக்கலைகளுங் கற்றுணர்ந்தோனினுஞ் ...*
செல்லாக்கருமமெல் லாஞ்செய்தவனினு ... ...*
நல்லானியோகியே நீயுமைவநண்ணுவாய்.........*

(இ-ள்) எல்லாத்தவங்களுஞ்செய்து நின்றவனிலும் வேத முதலான நூல்களுங்கற்றுத் தெளிந்தவனிலும் நல்லவன் யோகியே யல்லாமல் வேறொருவனல்ல - ஆகையால் நீயு மந்த யோகத்தைச் செய்வாய் என்றவாறு. (௬௬)

கொச்சகக்கலிப்பா.

இருவகையவினையறுக்கும் யோகியரொல்லார்களினு ....*
மருவரியமனத்தையுமன் னையுமென்பாலேவைக்கு......... *
மொருவனுமேயானுவக்கப் படுகின்றனெனவுரைத்தா ......*
னருவெனவுருவெனமுள் பாராலுமறிவரியோன் ... .*

(இ-ள்) நல்வினை தீவினையென் றிரண்டுவிதமான கருமங்களை யறுக்


சப்பட்ட யோகிகளெல்லாரிலும் ... அதிசயமானவனையும் என்னை ...ட்டத்தில் வைக்கப்பட்ட ... போதுமே நான் சந்தோஷப்பட த்தக்கவனல்லாமல் மனதையடக்கினவனும் என்னுடைய நினைவுக்காத மற்ற யோகிகள் நான் சந்தோஷப்படுத்தற்குரிய ரம்யமெல்லாஞ்சொல்லுவர் அருவ மென்றும் அல்லவுருவமென்றும் புன்புள்ளதென்று ஆராதுமறிய அரிதா ன ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி-எ-று. (௪௭)

௬-வது-அப்பியாசயோக அத்தியாயம் முற்றிற்று.



ஏழாவது.

மாயாரூப அத்தியாயம்.



ஆசிரியவிருத்தம்

உய்யவென்றென்னையடைய யோகமேபயிலும்யோகிதா.....*
னையின்றியென்னையடைந்திடு மதையுமீயப்போவெய்து...............*
வையமுன்னமோநீ மயலறுந்தடையர் மாதருள்சுடரைலாந்தித் .. *
செய்யதன்பவளவாய்திறந்தருமாதுகேள்வனிவைசெப்புவான்.....*

(இ-ள்) ஸ்ரீமகாலட்சுமிக்கு நாயகனான ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி முன்பூமி யையுண்டு வேதகுணத்தையுண்டு இப்போது இடையருடைய பெண் களுடன்னைத்தக்கதாக மலரப்பட்ட சிவந்த முளிர்ந்த பவளத்தையொப் பான திருவாயைத்திறந்து ஐயா பிறைக்கவேண்டிய பத்தியோடும் பெய் த ஞானத்தோடும் என்னையேசேரத்தக்கதாக யோகத்தைச்செய்யப்பட் ட யோகிதான் சந்தேகமில்லாமல் வேறொருவனை படையாமல் என்னைய டைவான் அதை நான் உனக்குச்சொல்ல நீ கேட்பாயென்றவாறு (*மே லறியவேண்டியவை தில்லையென்பது குறிப்பு) (௧)

மாயுமாயமறையாதநெஞ்சினிடை மற்றெனுண்மையிதுவாய்மையா*
லேயுமாமறிவறிந்துளோர்களறியாததொன்றுமிலையென்னினும்... ......*
மாயுமானிடரனேகர்பாலொருவ னென்னையாயமனம்வைத்துளா... ...*
ரூயுமாதுடரனேகர்பாலொருவ னேயறிந்துமுடிவானையா...............*

(இ-ள்) அழிவப்பட்ட மாயையால் மறையாத மனதினிடத்தில் மற் ற என்னுடைய உண்மையை ஞானத்தினாலே விளையும்படி ஞானத்தி

லறிந்திருக்கிறபேர்க ளறியாததொன்றுமில்லை யென்றாலும் நாசமாகப்பட்ட மனிதரனேகரிடத்தி லொருவனென்னை ஆராயமனம்வைத்திருக்கிறவன் இப்படி ஆராயப்பட்ட மனித ரனேகரிடத்திலொருவனேயென்னையறிந்து கவலையொழிவானல்லாமல் எல்லாரும் ஆராயவு மறிய மாட்டார்களென்றவாறு. * (ஆராய்தலாவது ஞானத்தால் விசாரித்தல்) (உ)

மண்ணுநீருமெரிதீயும்வாய்வுமவ வானிரேடுமனம்புத்தியு ....*
மெண்ணுநீர்மைகளின்யானெனும்பதமுமென்றவெட்டிவையன்றியே
பண்ணுநீர்மைகளின்மேலதாயுலகில் யாவையுங்கொடுபரித்துடற்......*
கண்ணுநீடியிருமாகியென்னுடைய மாயைநிற்பதுகைவேலினாய் ... *

(இ-ள்) பிருதிவியும், அப்பும், எரிகிறதேய்வும், வாய்வும், அந்த ஆகாசமும், அதனுடனேமனதும், புத்தியுமதிக்கப்பட்ட குணங்களிலே நானென்றுசொல்லப்பட்ட ஆங்காரமும் இந்தவெட்டும் உண்டாகிறகாரணமான பிரகிருதி இது அபரப்பிரகிருதி இல்லாமல் பண்ணப்பட்ட குணங்களிலே மேலாயதாய்ச் சகலசெகத்தையுந் தாங்கிக்கொண்டு சுமந்து அபரப்பிரகிருதியான உடலிடமுந் தானதி லிருக்கிற உயிரும் போலவாகி என்னுடைய பரமபிரகிருதியான மாயை திவ்ய சபையில் வேலையுடைய அருச்சுனா-எ-று. (௩)

கண்ணினிற்றெரியலுற்றுணர்ந்தவிவ் விரண்டினாலும்வருகாரியம்......*
பண்ணினிற்பனநடப்பவென்றபொருள் யாவுமற்றிவ்விருபான்மையே*
நண்ணிநிற்பதுலகாதலாலுலகி னசவும்பவமுநானலா... ....*
தெண்ணரின்மற்றறிவதில்லையெப்பொருளுமென்னிலன்னியமதல்லவால்

(இ-ள்) கண்ணிலேதெரியப்பட்டறிந்த இந்தப்பராபரப் பிரகிருதி இரண்டினாலும் பிறக்கப்பட்டகாரியத்தைப் பண்ணிநிற்பன நடப்பனவென்ற பொருள்கள் சகலமு முன்சொன்னஇந்த இரண்டு பிரகிருதிகளினுடைய சுபாவமே பெற்றுநிற்கிறது உலகம ஆதலால் உலகத்திலே செனனமரணமும் இவைகளைச்செய்கிறகாரணமும் நானேயென்னையல்லாமல் வேறுண்டோவென்று விசாரிக்கில் வேறில்லாததினாலேயுண்டென்றறிவதில்லை ஆகையாற்பிரகிருதியு மதனாலுண்டாகிற செகத்து முதலானதும் எந்தப்பொருளு மென்னிலன்னியமல்லாமல் எல்லாம் நானே எ-று. * (அபரபிரகிருதி யாவது சடமானவுடம்பும் பரபிரகிருதியாவது அசேடமானசீவன் இல்லையென்றதனாலே பிரமமேநான்இதற்குமேலானது நிச்சயமாகவில்லையென்பது.) (௪)

வேதமாகிநிற்பானலாதுலகிலென்னில்வேறெனவிளங்கிடும்... ... ...*
பூதமானவைபொறுக்கவேறுபொறை யாளரில்லையெதுபோலெனி ...*
லோதுமாமணியனேகமுமொருவு கோவைநாலினுருபான்மைபோற்... ...*
பேதமயபொருடோறுநான்மருவி நின்றவாறுநனிபேசுவாம்... ... ...*

(இ-ள்) [illegible] பொருள் [illegible]
நிஷ்களசால் வேறுபொருள் [illegible] இப்படி நிர
ன்மாகப் பிரகாசியாது [illegible] இப்படி இருக்கிற [illegible]
ப்பாகி உலகமென்றும் நாமென்று [illegible]
றுய் விளங்கப்பட்ட மாயையாமல் [illegible] செல்லத்தக்க
தாக உலகத்தில் விளக்கப்பட்ட பதார்த்தங்களையும் [illegible] தாயி
குவாரிஸ்லே நானே [illegible] ஆதேயபடி [illegible]
[illegible]ப்பட்ட [illegible]
ட்ட தானிருக்கும்படி போலாகவே செகத்துக்கு ஆதாரமிருந்து [illegible]
வைற்றபேதமான பதார்த்தங்கள் [illegible]
மிகுதியாகச் செய்குவேன்-எ-று. (௯)

கொச்சகக்கலிப்பா.

திரிபுமிகுதன்னிடைதிகழ்[illegible] .....*
வரிபுருதலெழுந்து [illegible] ..*
விரிபுனல் [illegible] ....*
வெளியில்வருவெண்மையரா [illegible] மெல்லாம்*

(இ-ள்) ஆகாசத்திலே சஞ்சரிக்கப்பட்ட [illegible] விளக்கப்பட்ட பிரகாசமான ஒத்த அரிய [illegible] தான பிரணவமானது புருஷர்களிடத்தில் [illegible] லத்தி ஒளிசையுமான பிருதிவியிற்கெந்தமுமான [illegible] வரப்பட்ட [illegible] ஆகாசத்திலே [illegible] சத்தமும் [illegible]-எ-று. ()

ஆன்றவறிவுடையோர்பால் [illegible] .....*
வான்றவனா [illegible] பூண்டவர்பால் [illegible]
தோன்றுமிகுதிமேலோர்பால் காமமுறு [illegible]..*
ஞான்றுபொருளினைத்திறக்கு [illegible]..*

(இ-ள்) அமைந்த அறிவுடையோரிடத்தில் அறிவுதான் [illegible] டத்திற் பெருமைபொருந்தியதவசுதான் [illegible] த்தவர்களிடத்தில் வளமையுள்ள கீர்த்திதான் மிகுந்துகாணப்பட்டவே லமுள்ளவர்களிடத்தி லசையப்படா புஜபெலம்தான், இப்படிப்பிரபஞ்ச த்தில் இருத்தப்பட்ட சகலபதார்த்தங்களுக்கும் [illegible] நான்-எ-று. (௭)

மூன்றுகுணவகையாகிமுடிகின்றபொருள் [illegible] ....*
தோன்றுவதுமென்னிடையே யெனத்தொடர் [illegible]
மான்றவற்றவற்றினிடை யான் [illegible] ..*
சான்றனெனிற் குணமெல்லா [illegible] ......*

(இ-ள்) மூன்றுகுணபேதமாகி யறியப்பட்ட பதார்த்தங்களெல்லாம் உண்டாவதும் என்னிடத்திலேயிருப்பதுவும் என்னைத்தொடர்ந்தே அல்லாமல்வேறிடத்துண்டாகவும்வேறொன்றினைத்தொடரவும் என்னையல்லாமல் வேறொருபற்றுமில்லாததினாலே கூடாது இப்படி என்னிடத்திலுண்டாயிருக்கிற அந்தந்தப் பதார்த்தங்களிடத்தில்நான் பிறவேன் அவைகளுக்குச் சாட்சியென்று நிற்பேனல்லாமல் அவைகள் என்னைத் தொடர்ந்துவாழ்வதுபோல நான் அவைகளைக் கூடிநில்லேன்-எ-று, * (சகலமும் என்னிடத்தி லுண்டாகி என்னைக்கூடியிருக்கும்நான் அவைகளிற்பிறவேன் அவைகளிற்கூடேன் எல்லாவற்றிற்கும் நானேசாட்சியாய் நிற்பேனென்றது)

மைக்குணங்களெனுமவற்றின்மயமாகிமமத்துவமா ...*
யக்குணங்கண்மூன்றாலு மயக்கப்பட்டறிவிழந்து....*
தாக்குணங்குகின்றவுயிரிவை யெல்லாஞ்சுடர்வேலோ
யக்குணங்கள்கடந்தவென்னை யறியுமோவறியாவாம். ...*

(இ-ள்.) முக்குணங்க ளென்று சொல்லப்பட்ட அந்த அஞ்ஞானகுண மயமாகி அஞ்ஞானமனதுடையதுமாகி இந்ததாமத ராசத சாத்வீக மென்ற குணங்கள் மூன்றினாலு மயக்கப்பட்டு அறிவுகெட்டுக் கூடி சரீர மறந்து கிடக்கிற சீவன் இந்தச் சீவனெல்லாம் அந்தக்குணங்களைக்கடந்த என்னையறியுமோ பிரகாசமுள்ள வேலையுடைய அருச்சுனா அறியாய்-எ-று. * (குணங்கடந்தவனுவது குணாதீதன்,) (௯)

இவ்வகையகுணமூன்றினியற்கைத்தாமாராலுஞ் .....*
செய்வகையதல்லாவென் மாயையினிற்றிகைப்பொழிந்திங்.
குய்வகையதறிதெவர்க்குமென்னையேயெப்பொழுது. .*
மெய்வகையோடடைகின்றமனமிலரேல்வேல்வேந்தே *

(இ-ள்.) வேலையுடைய ராசாவேஎன்னைத்தானே எந்நாளும் மெய்யன்போடு சரணமடைகிற மனதில்லாதவர்களாகில் இந்தவிதமானமுக்குணத்தினுடைய சுபாவமானதால் ஆராலுஞ்செய்யத்தக்கதல்லாதவென்மாயையினுடைய மயக்கமொழிந்து இப்படித்தப்பிப் பிழைக்கின்றவிதம் எவர்களுக்கு மரிது-எ-று. * (என்னையடைந்தவர்கள் மாயையைக் கடப்பரென்ப கருத்தாபத்தி யெப்பொழுதுமென்றதனல் ஒருநாள்வேறுசெய்யினும் யோகப்பிரஷ்டனவன். (௰)

ஊழாலேவருமந்தமாயையினலேயுள்ளம்... ... .*
பாழாகவறிவங்கேபறியுண்டுநெறிநின்றோர்...... ......*
வீழாததீவினையேவினையாகவிளைகின்ற...... ... .*
கீழானவினையுடையாரடைவாருஞ்சிலருளர்கேள்...*

(இ-ள்) [illegible] லே மனதுருடையதாக [illegible] ஞானமார்க்கத்தில் [illegible] போகம் [illegible] பட்ட [illegible] என்னையுடையார் என்னையாட்கொண் பெருஞ் [illegible] குன்றி [illegible] கேன்-எ-று. (௪[illegible])

கலிவிருத்தம்.

[illegible] ... ... *
[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *

(இ-ள்) [illegible] துரியத்தவர்கள் [illegible] சொரூப [illegible] வேறு [illegible] ஆரம்பத்தவர்கள் [illegible] த்து என்னை [illegible] செய்கிற [illegible] த்தர்கள் [illegible] ஞானி [illegible] பெருந் தங்களாலே [illegible] [illegible]-எ-று. (௪[illegible])

இவ்வாயர்களை [illegible] ... *
[illegible] ஞான [illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *

(இ-ள்) இந்த [illegible] த்தாப்[illegible] நினைப்பதில்லாத [illegible] ஞானியதிகளை அந்தஞானி [illegible] நாளும் [illegible] தல்லாமல் [illegible] ள்ளவர்களுக்கு [illegible] [illegible]-எ-று. (௫[illegible])

ஓதருஞ் ஞானியெம் [illegible] ... *
ஏதல் [illegible] யானெனவேயா ... *
மாதவ [illegible] ... *
காதல் [illegible] ... *

(இ-ள்) சொல்ல அரிதான ஞானியானவன் என்னுடைய [illegible] [illegible] சொல்லலாம், [illegible] நான்வேறு அவன்வேறல்ல ஆகையாலே [illegible] [illegible] டாகிய [illegible]-எ-று. (௫[illegible])

[illegible] விருப்பொருளெல்லா ... *
[illegible] ... *

தெரியவறிந்திடுகின் றேபெறுமிம்பா...............*
னரியனவன்பெறு தற்கயில்வேலோய்..........*

(இ-ள்) விஸ்தாரமாக அறிந்த சிறப்புள்ள பொருள்களெல்லா மு னிமையுள்ள வென்னையல்லாம லில்லாதசெய்தியைத் தெரிய அறிந்த எல் லாம்நானேயென்று என்னையேகூடுகிறவன் ஆகையாற் கூர்மையுள்ள வே லையுடைய அருச்சுனா, அப்படிக்கொத்த ஞானிகிடைக்கிறதற்கு அரிதா னவன்-எ-று. * (ஓகருஞானிமென்றகவியும் விரியவுணர்ந்தவென்ற கவி யு மொருதொடர் ஆரியனென்றதனால் இப்படிக்கொத்த ஞானமெல்லாரு க்கும்வராது எனைவகினு மொருவனுக்கு வருகிறதினாலே பலனைக் காண் கிறது அரிதென்றறிவது.) (கரு)

மற்றவருந்தம் மனங்களில்வைத்த..............*
பற்றதிலேபரி யுண்டறிவெல்லா..................*
முற்றவைதந்திடு தெய்வதொழுகா...............*
னற்றவனின்றவை நல்குவர்நல்லோய்............*

(இ-ள்) இந்த ஞானியையல்லாத மற்றவர்களும் தங்களுடைய ம னதுகளில்வைத்த இச்சையினாலே ஞானமெல்லாம்பறிகொடுத்துத் தங்க ளுடைய மனதுகளிலிச்சித்த போகங்களைக் கொடுக்கிற அந்தந்த தேவ தைகளுடைய ஒழுக்கத்தாலே நல்ல தவசுகளில் நின்றுசெய்து அந்தயிச் சைகளை அந்தந்தத் தேவதைகளாலே அடைவார்கள் நல்லவனான அரு ச்சுனா-எ-று. * (தெய்வவொழுக்கமாவது-எந்தெந்த விச்சைகளையெந்தெ ந்தத் தெய்வங்கொடுக்குமோ அந்தந்தத் தெய்வங்களுக்குப் பூசைவிதி எந்தெந்தப்படியோ அந்தந்தப் பூசாவிதியென்றறிவது.) (கசு)

யாவனொருத்த னியாதொருதெய்வ......................*
மேவவருச்சனை யன்பின்விளைப்பா...................*
னவ்வதவிப்பற மன்னவனுக்கே......................*
நாவலமுற்ற நளித்திடுவேனே..........................*

(இ-ள்) எவனாகிலுமொருத்தன் ஏதாகிலு மோர்தெய்வத்தையிச்சி த்ததைக்கூடி வேண்டியபத்தியினாலே யாராதனைபண்ணுவானோ அவனு க்கு ஆவதான சலிப்பற்று இச்சித்தது பெறுவன்-அவனுக்கு நாக்கினு டையபெலமும் அதிகமாகத்தோத்திரம்பண்ணப்பட்ட பத்தியை நிறை வேற நான்கொடுப்பேன்-எ-று. * (பத்தியை நான்கொடுப்பே னென்றத னால் அந்தந்தத் தேவதைகள் தங்களாலேகொடுக்கத்தக்க பலனைக்கொடு ப்பதல்லாமல் தங்கள்மேலே பத்தியுங்கொடுக்கமாட்டாது- அந்தத்தெய் வங்கள்மேலே பத்தியுங்கொடுத்து அந்தத்தெய்வரூபமாகப் பலனையுங் கொடுக்கிறவன் நானேயென்றது.) (கஎ)

அளித்தவனன்பொடு மத்தெய்வநாளுந்..............*
களித்துவணங்கினர் காதலவெல்லாம்...............*

வெளிப்படமும் வினைத்திடமே ... .*
ஜெகப்பர்தாமுரு மற்றுசபட்டமுரும் ... .*

(இ-ள்) ஜனிக்கக் காரணமான இப்படியான ரூப பஞ்சபூதச் சவ்வைடயே ய்த அநுச்சனங்கள் இப்படி நான் கொடுத்ததான அந்தப் பற்றியுடனும் இச்சையுடனுங்கூட அந்தந்தத்தெய்வத்தைத் தொழுதிருந்தும் மனதுஞ் சோதித்து வைத்தவர்களி லிச்சைசயையெல்லாம் அந்தந்தத் தெய்வ ங்களுக்குள்ளேயிருந்து பெறும்படி குறையாமல் தெளிவாக வுண்டாக் குவேன்நான்-எ-று. * இச்சைகளை வேறாக வுண்டாக்குவ னென்றதி னாலே அந்தந்தத்தெய்வங்களுக்குளேயிருந்துண்டாக்குவனென்றத ருத்தாபத்தி) (௰௮)

சிந்தைதனக்கேற்ப தெய்வதெய்வமென்றே ... .*
முக்தவுரைத்தோ மன்னன்புகழ்ந்து ....*
பக்தமனத்தர் பெறும்பயன்பாரு ....*
வந்தமுடைத்தது நிர்மூலமையா ... ...*

(இ-ள்) ஜயாகேள் மனதிலே யிச்சைகளைக்கொடுக்கிறதெய்வத்தை யழியாத மெய்த்தெய்வமென்று நிச்சயித்து முதன்மையான பூசையைப் பத்தியினாலே முடிக்கப்பட்ட அந்தமானுடையவர்கள் பெறப்பட்ட பல னும்ஆயகாசத்தை யடைகிறது அந்தத்தெய்வமும்நாசமுடையது-எ-று * (இதனாலே யென்னைப் பூசிக்கிறவர்கள் பெறும்பலனும் ஆயசும் நாசமு ம் நாசமில்லாததென் றருத்தாபத்தி) (௰௯)

கலித்துறை.

ஞானந்தமிலிரவவை நின்றிருதரவிய ....*
வானந்தவுருவுமென மேனிமேலாமுதிலா ... ...*
கோனந்தமகனரசர் குலமைந்தனியலரியலா ....*
வானந்தமிலில்லொருவ னிவனென்பரறிவிலிகேள்......*

(இ-ள்) என்னை ஆதிதான் அந்தந்தான் உவமைதான் இல்லாதவனிவன் அழியாமல்நின்று ஆராலுங்கொடுக்க அரிதான ஆனந்தசொரூப மென்று ஒன்றுமறிவதில்லாதவர்கள் இவர் இடையருக்கு ராசாவான நந்தகோப ன்மகன் ராசவம்சத்திற்பிறந்த ராசகுமாரன் இந்தப் பூமியிலிருக்கிற மனிதவியற்கையானவன் கம்பியொரு நவனென்பார் அறிவில்லாதமூடர்கள் எ-று. * (தாவரியவரவது தன்னைத்தானே யாருக்காகிலுங் கொடுப்பதல் லாமல் வேறொருவராலே தன்னையாருக்குங் கொடுக்க அரிதானவனென்ற து ஆனந்தமாவது பரமசுகம் அறிவுள்ளவர்கள் என்னை ஆதியும் அந்த மும் உவமையுமில்லாதசுகசொரூபமென்றறிவார்களென்பதருத்தாபத்தி)

மருவும்பிரகிருதி யதினும்மறைபவன்மிக ....❋
வொருவருக்குமறியும்வகை வெளிநிற்பதிலையுலகில் ... ❋
வெருவும்பெருமயரின் மனமுற்றவிழிமறைய ......❋
வருவும்வெனையுலக மறிகிற்றதிலையடைய ....❋

(இ-ள்) நான் என்னுடனேகூடின பிரகிருதியிலே கூடிக் காணப்படாமல் மிகவுமறைவேன் ஒருவருக்காகிலுமறியும்படிவெளியாக நிற்பதில்லையுலகத்திலே பயமுள்ள பெரியமாயையினது மயக்கத்தில் மனதுகூடி அதினாலேகண்மறைய அதினாலே அருவமான வென்னையுலகமெல்லாம் அறியமாட்டாதில்லை-எ-று.❋(பிரகிருதியாவது-யோகமாயை.) (உக)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

போனவைபினிமேற்புகுதநின்றனவிப் பொழுதுபோகின்றனவனைத்தும்
யானறிந்திருப்பன்யாவையுமுலகி லென்னைமற்றியாவருமறியார் ... ...❋
மானவெஞ்சிலையாய்வேண்டல்வேண்டாமை தன்னிலேவருங்குணமயக்
காற், ருனயர்ந்துருவாய்ச் சனித்திடும்பொழுதே தங்மெய் யறிவுசார்ந்
திடலால் ....❋

(இ-ள்) சொல்லுந்தொழிலாலே கொடுமையுஞ் செய்தனுதிலே பெருமையுள்ள வில்லையுடைய அருச்சுன போனகாரியத்தையும் இனிமேல்வருகிறதாக நின்றகாரியத்தையும் இப்பொழுதுநடக்கிற காரியத்தையும் எல்லாவற்றையும் நானறிந்து நாசமில்லாமலிருப்பேன் உலகத்திலுள்ள யாவருமென்ற சரீரஜீவன்களும் விருப்பு வெறுப்பான ராகத்துவேஷங்களினாலே வரப்பட்ட திரிகுணமயக்கத்தினாலேதானே மறந்து ரூபமாய் கெற்பிக்கிறபோதே தங்கள்தங்களுடைய சரீர அறிவான அஞ்ஞானம் அடைந்ததினாலே திரிகாலங்களிலும் என்னையறியார்கள்-எ-று. ❋ (இதனைப் பொருளுக்கேற்பமாறுக. மற்றவென்றது - என்னைநான் அறிவதல்லாமல் மற்றயாவரும் யாவையும் அறியமாட்டாரென்பது மெய்யறிவாவது சரீரத்தையே தானென்றறிகிற அஞ்ஞானம்.) (உஉ)

வியக்கமேமுயன்றநல்வினைமாந்தர் விரும்பலராகிமுன்செய்து ....❋
மயக்கமேவியதீவினையெலாமறவேபற்றறப்பரிந்துமுன்போனற் ......❋
றுயக்கமேபுரியுஞ்சோகமேமுதலாந்துவந்துவக்குணங்களிற்றொடர்ந்த❋
மயக்கமேவலராவொழுக்கமேநிலைநின்றென்னையேமனத்திடைவைப்பார்.

(இ-ள்) எல்லாருமதிசயிக்க மேலாகச்செய்தபுண்ணியத்தை மனிதர்கள் இச்சியாதவர்களாகிப் பூருவத்திலேசெய்த அந்தப் புண்ணியம் பலனைக்கொடுக்க அவைகளாலேபூருவமே தொடர்ந்துவந்த பாவமெல்லாம் நாசமாகவே கருமபந்தமறப் பரிபக்குவமாகிப்போனற் றன்பத்தையேசெய்யப்பட்ட சோகமுதலான தொந்தக்குணங்களினாலே தொடர்ந்து மோகத்தைக்கூடாதவர்களாகின்ற திடபத்தியான வொழுக்கமே

[illegible] நின்று [illegible] பார்கள் என்பது. * [illegible] ஒன்றுக்கொன்று [illegible] சோகப்படுவார்கள் [illegible] காரணமாக [illegible] பார்களென்பது)

[illegible] பொருட்டா
[illegible] *
[illegible] ....*
[illegible] கேளாய் *

(இ-ள்) [illegible] கேட்பாய்
அருச்சுனா-எ-று. (உஎ)

அபரோக்ஷானுபவிருத்தம்.

[illegible] ......*
[illegible] ... ...*
[illegible] *
[illegible] ....*

(இ-ள்) எல்லாரும் விசாரிக்கப்பட்ட [illegible] தத்துவத்துடனும், அத்தெய்வத்துடனும், [illegible] அவர்களுடைய இதயப்புண்டரீகத்திற்குள்ளே [illegible] சொன்னார் [illegible] எ-று. * [illegible] சகல [illegible] சகல தெய்வங்களிலும், சகல [illegible] இப்படிப்பட்டவர்கள் [illegible] போதும் [illegible] போதும் [illegible] (உ௮)

ஏவது-மாயாரூப அத்தியாயம் - முற்றுப்பெற்றது.

*



எட்டாவது.

அட்சரயோக - அத்தியாயம்.

(*) * (*)

கலிவிருத்தம்.

அடைபஞாலத்தை யார்த்ததிலார்பபுழு ... .*
யிடையர்தாம்பிடை யார்பபவிருபபதற் ... .*
குடையனுகமுன் னேதினவேகொடங் ... .*
கிடையனைவன் மீளவியம்புவான் ... .*

(இ-ள்) ஜெகத்தையெல்லாம் தனக்குள்ளே கட்டி அந்த ஜெகத்திலே தான் கட்டுண்ணுமல் (இந்த அவதாரத்தில்) இடையருடைய கயிறுனது தன்னிடையைக்கட்ட அதனாலே கட்டுண்டிருக்கிற ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்குத் தன்னைச் சேஷத்துவமுடையவனாகமுன்பு சொன்னதையேசங்கையாகக்கொண்டு அப்போது (பாண்டவர்களுடைய) மத்தியனை அருச்சுனன் திரும்பச்சொல்லுவான்-எ-று. (க)

ஆயபிரமத்தோ டாதியாகவமைகரும ....*
மேயவதிபூதமதி தெய்வமதியெச்சங் ....*
சாயமதிலுள்ளபரி சுங்கெழுமுகாயம் ... .*
வீயலுறுபோதிலுனை மெய்தெளியமாறும் ... ...*

(இ-ள்) நீர்சொன்னதாகிய பிரமத்துடனே ஆதியாக அமைந்த கருமம் இவைகளுடனே கூடின அதிபூதம் அதிதெய்வம் அதியெஞ்ஞமென்று சொல்லப்பட்ட இந்த ஆறும் தேகத்தி லிருக்கின்றவிதமும் இந்தஆறுடனுஞ் சினேகமானதேகம் நாசமடைகிறபோதில் உம்மை யுண்மையாகத் தெளியபபட்ட வழியும் இந்தவேழும்-எ-று. * (இந்தவேழையுங் கிரமமாகச்சொல்வது பிரமம் அதியாகம் கருமம் அதிபூதம் அதிதெய்வம் அதியெஞ்ஞம் உம்மைதெளிவித்தல் ஆகவேழு இவைகட்குளழுவகைவினுவென்றுபெயர் மெய்யென்றும் உண்மையென்றும் சத்தியமென்றும் நித்தியமென்றும் பிரமத்தைச் சொல்லுவார்கள் இதனாலேபொய்யென்றும் இன்மையென்றும் அசத்தியமென்றும்அநித்தியமென்றும் மாயையைச்சொல்லுவார்கள் உனை மெய்தெளியு மாறுவதுஉன்னையுண்மையாகத் தெளியும்படி யென்றது இதனாலே இபபொழுது உன்னை மாயாதேகியாய்மயங்கியதினாலே அநித்தியகாலத்தில் உன்னைப பிரமமாகத் தெளியும்படி யென்றது.) (உ)

விரிவாகத்தெரிசித்தருளவேண்டுமெனவிண்ணே... *
வரியாகவேதமிது மாயவனுரைப்பா...... ... ..*
னரியதழியாமையதனைத்திறமுரைக்கிற்.........*
பெரியதுமொழிந்தபிரமம்பிறவையுங்கேள்... ...*

(இ-ள்.) தெரியும்படி விரிவாகத் திருவாய்மலர்ந்தருளிச்செய்யவேண்டுமென்று அருச்சுனன் சொல்லப் பொழுது எழுந்தசேஷன்மேலேயோ கநித்திரைசெய்தருளுகிற ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி திருவுளம் சொல்லுவார் சொல்லுமிடத்தில் வாக்குமனங்களுக்கெட்டாதது அழியாதது நித்தியமானது பெரியதுக்கும் பெரியதாய் எதிலே சொல்லப்பட்டதோ அதுவைகளுக்கெல்லாம் பெரிது அதுமுன்னாகச் சொன்ன பிரமம் இனி பின்னாகச்சொன்ன மற்ற ஆறையுங்கேள் அருச்சுனா எ-று. * (அழியாமையதனைத் திறமுரைக்கின்றகவியும் வரியவனா மென்றகவியும் ஒருதொடர் வசனமாகியே கொன்மாறுக மொழிந்த பிரமம்பிறவையுமென்பதனால் முன்னாக இவைபின்னாகவெனவந்தது இன்னமு மொழிந்த பிரமமென்றதனால் பரமமான அட்சரமாகச் சொன்ன பிரமமென்றுஞ் சொல்லலாம்.) (௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அந்தக்கரணங்களினின்ற வறிவத்தியாத்மமாகின்ற............*
திந்தப்பிறவிதனையாக்கு மியாகங்கருமமென்பதாகா........ *
னந்தங்கமைந்தவுடம்புதனை நாமென்கின்றவதிபூதம் ... .. *
பந்தப்படுமிவ்வுடற்கமைந்த புருடன்றெய்வமெனப்படுவான்

(இ-ள்) அத்தியாத்மமாகின்றது அந்தக்கரணங்களிலே நிற்கிற அறிவு கருமமென்பது இந்தப்பிறவியையுண்டாக்குகின்ற யாகமானசிருட்டி அதிபூதமாகின்ற அழிகிறதற்கு அமைந்த உடம்பை நாமென்கிற அகங்காரமும் அதிதெய்வமாகின்றகட்டுப்பட்ட இந்தவுடம்புக்கமைந்த புருடன் எ-று. * (அத்தியாத்மமாகிறது அத்தியாத்மமென்னப்படும்.) (௨)

எஞ்சுதலில்லதியச்சமாகின்றது நானிறக்குங்கா... ......*
னெஞ்சுசுவருநெறிகளெல்லா மடைத்துநினையப்படுவதுநா*
னஞ்சுபுலனும்பொறியைந்து மடக்கியறிவென்பாலதாய்த்...*
துஞ்சுமவர்களெனையடைவ தெவ்வாறென்னிற்சொல்லக்கேள்

(இ-ள்) குறைவில்லாத அதியஞ்ஞமாகின்றது மனதைக்கிரகிக்கிற இந்திரிய விஷயாதிவழிகளையெல்லாம் அடைத்துச் சாகின்றபோது என்னுண்மையை நினைக்கப்படுவது பஞ்சேந்திரியத்தையும் பஞ்சவிஷயத்தையும் அடக்கி அறிவை என்னிடத்தில் வைத்துச் சாகின்றவர்கள் என்னையடைவதெப்படியென்றால் சொல்லக்கேள் அருச்சுனா எ-று.

எந்தவுடலைவிடும்பொழுது மியாவனியாதொன்றினை நினைந்தா.........*
னந்தவதனை யந்தப்பா வனையாலடையுமாவதினால்...... ....*
எந்தனியல்பையெப்பொழுது மிதயத்திடைகொண்டென்பாலாஞ் ...*
சிந்தைதூய்மையோரமர்தொடங்கி லதனாலென்னையேசேருதியால் .. ..*

(இ-ள்.) எவனாகிலுமொருத்தனிந்தத்தேகம் விடுகிறபோது எதையாகிலும் ஒன்றை எந்தப்பாவனையாகநினைத்தானோ அவன் அதை அந்தப்பாவனையாலடைவான் ஆகையாலே என்னுண்மையான சுபாவத்தை யெந்நாளு முன்னிருதயத்தினிடத்தில் வைத்துக்கொண்டு என்னிடமாக வைக்கப்பட்ட மனதுடனே கீர்த்திப்பிரகாசமுள்ள சண்டையைத்தொடங்கிச் செய்தல் நானுனக்குள்ளும் நீயெனக்குள்ளுமானதினாலே என்னையே நிச்சயமாகச் சேருவாய்-எ-று. * (என்னையேயென்றதனால் சந்தேகமில்லையென்றது.) (௬)

நல்லகருமயோகத்து ஞானயோகமதுதனினுஞ்...... ....*
செல்லுமனமை மிகச்செலுத்திப் பிறிதொன்றினையுஞ்சேராதான். *
சொல்லவரியகதிரவன்மண் டலம்போற்றோன்றுந்தொல்லோனை...*
யல்லதடையானவனியற்கை யடையும்பரிசையுரையக்கேள்......*

(இ-ள்.) நல்ல கருமயோகத்திலும் ஞானயோகத்திலும் என்னைச்சேரத்தக்கதாக மனதை மிகவுஞ் சேர்த்து வேறொன்றையுஞ் சேராதவன் இவ்வளவென்றுசொல்ல அரிதான அளவற்றசூரியமண்டலம்போல விளங்கப்பட்ட பழையவனானஎன்னையடைவானல்லாமல் வேறொன்றையுஞ் சேரான் அவன் சுபாவத்தை யடையும்படியைச்சொல்லக்கேள்அருச்சுனா எ-று. (எ)

எல்லாப்பொருளுமறிவானை யெல்லாப்பொருட்கும்பழையானை *
எல்லாரையுந்தன்னிலைநிறுத்து வானையிறப்பச்செறிவானை.........*
எல்லாப்பயனுமீவானை யார்க்குநினைத்தற்கரியானை... ... .*
எல்லாவிடத்தும்பொய்யிருணீத் திலங்குகதிர்போலெழுவானை...*

(இ-ள்) எல்லாப்பொருளையுமறிந்த சருவக்ஞனை யெல்லாப்பொருளையுமுண்டாக்குகிறசிருஷ்டியினாலே யெல்லாப் பொருளுக்கும்பழையவனை யெல்லாரையுந் தன்னிலையில் நிறுத்துவதான திதிசெய்கிறவனை யெல்லாரையுஞ் சாசச்செய்து தான்சாகாமற்சங்காரஞ்செய்தகனவானை எல்லாப்பிரயோசனத்தையுங்கொடுக்கிற திரோபாவஞ்செய்கிறவனை யாருக்குநினைக்கமுடியாதகெட்டாதவனை எல்லாவிடத்திலுமிருக்கிற பொய்யான யிருளைப்போக்கிப் பிரகாசிக்கிற ஞானசொருபமாகவெழுந்து அனுக்கிரகஞ் செய்கிறவனை எ-று. * (இதனாற் பிரமந்தவிர மற்றப்பொருள்களெல்லாம் அறிவில்லாத தென்றும்புதிதென்றும் ஆதாரமொன்று

[illegible] ஆங்காரம் [illegible] யாமயென் [illegible] இருதய [illegible] கதா [illegible]
அநுக்கிரகம் [illegible] பஞ்சகிருத்திய [illegible] (௩)

மருவற் துரியவன் புடையான் [illegible] போகமாந் [illegible] ... ...*
புருவத்திடையே [illegible] ...*
புருவத்தினை [illegible] போகந்தா [illegible] ...*
பொருவப்படும் [illegible] பொருள் [illegible] *

(இ-ள்) [illegible] தேகத்தைவிட்டால் இந்த போகத்திலே அந்த [illegible] ன்றேறுக் கூடப்படுமோ இந்தப்பொருள் [illegible] யேன் கேள் [illegible] ஆற்றுளு எ-று. *
(எல்லாப்பொருளும் [illegible] கவியும் மருவற்துரிய [illegible]
தொடர்.) (௪)

கொச்சகக் கலிப்பா.

பாதொன்னமை [illegible] தெரிந்த [illegible] ... ...*
ரியாதொன்றை [illegible] யோகிடா [illegible] திடலோ ... ...*
ரியாதொன்றை [illegible] தோர் காமமுக [illegible] விழுப்பா ...*
ரியாதொன்றைப் [illegible] ருளைச் சுருக்கமாய் [illegible] ... ... *

(இ-ள்) [illegible] ர்களோ ஆசையைக்கெடுத்தபோகிகள் எதை அடைவார்களோ காம [illegible] ரோத லோப மோக மத மாச்சரியங்களை [illegible] எதை [illegible] வேண்டுமென்று தெரிந்தார்களோ அத்தவொன்றை [illegible] ருக்கமாய்ச் சொல்லுகிறேன்கேள் அருச்சுனா எ-று. * (எதை [illegible] எந்தச்சொரூபத்தை) (௫)

கலிவிருத்தம்.

அஞ்ச [illegible] ...*
நெஞ்சுதனை [illegible] ...*
எஞ்சுதலி [illegible] ...*
புஞ்சப்புருவ [illegible] ...*

(இ-ள்) பஞ்சவிஷயங்களையும் அந்நியமானவை [illegible]
ல் அந்தந்தவிஷயங்களை அந்தந்தவிடமான இந்திரியங்களிலே [illegible]
டைத்து [illegible] இருதயபத்மத்தில் [illegible] இல்லாத [illegible]
[illegible]

பிரமத்திலே புகுதப்பட்ட மார்க்கமிதுவென்று யோகத்துட னிறுத்து. எ-று. * (மயலென்றதனாலே யொருவிஷயத்தை மற்றோ ரிந்திரியத்தி லடைத்தாலும் வியாபாரபபடுமாதலால் விஷயங்களாகட்டும் மற்றோரி ந்திரியங்க ளாகட்டு மிவைக ளன்னியமாகையால் அன்னியத்தி லடைத் து வியாபாரப்படுத்திக்கொள்ளாமல் அந்தவிஷயங்களை அந்தந்த தான த்திலேதானே அடைத்தென்றார்-இப்படி யடைக்க வியாபாரமான கரும ங்கெட்டு மனோசலனமடங்கி யோகங் கைவருமென்பது.) (கசு)

ஓதலியியற்கையினொ டோமெனுமெழுத்தை...... ...*
வாய்தலிலுரைக்கமன மானதுதலிதமே.............*
யாவருமெனைத்தெரிய வாவியினைவிட்டா..............*
னேதலினியற்கையினை யேயடைவன்மிக்கோய் ... ...*

(இ-ள்) ஓதலில்லாத சுபாவமான மௌனத்துடனே ஓமென்கிறபே காக்ஷரத்தை வாயிலேயுச்சரிக்க மனதானது வேறொரு வியாபாரக் கூட் டமில்லாமல் ஏத்திட மனதாகி அந்த மந்திராத்மாவாகப் பெரிய வர்கள் விசாரிக்கப்பட்ட வென்னைத் தெளியத்தக்கதாகச் சீவனைவிட்டவன் தா ழ்வில்லாத மேலான சுபாவதேகியையே யடைவன் எல்லாரிலும் அதிக மான அருச்சுனா எ-று. * (இயற்கையென்பது-பிரமம், செயற்கையாவ து-மூர்த்தியாகிய சகலமும் அஞ்சுபுலன்களென்ற கவியும ஓதலினென்ற கவியு மொருதுடர்.) (கஎ)

இப்பரிசிலெப்பொழுது மென்னைநினைகிற்பார்க்... ...*
கப்படியொராண்டொராறு திங்களளவுள்ளே ... ...*
கைப்படுவன்யானெனியல் கைப்படவிருந்தோர்... ...*
பொய்ப்பிறவியானவை மறுத்தடைதல்பூணார்.........*

(இ-ள்) இபபடியோகத்தி லெந்நாளுமென்னை நினைக்கிறவர்களுக்கு அபபடியே ஒருவருஷத்துக் குள்ளேயாகிலும் ஆறுமாதத்துக் குள்ளே யாகிலும் நான் அவர்கையில் அகபபடுவன்-இப்படி என் சுபாவமானது கையிலகபபட விருந்தவர்கள் பொய்யபிறவியான சென்மத்தைஇனிமே லடைகிற கருமத்தைத்தரியார்கள்-எ-று. * (மறுத்தென்றதனால் இப போதுள்ள தேகமேயல்லாம லிதுமறுத்து வேறுதேக மில்லையென்பது இபபொழுதுள்ளதேகமும் பிராரத்தந் தொலையுமட்டுமே யிருக்கு மல் லாமல் மேலிராது ஆகாமிய மேறுதபடியினாலே இனிமேல் பிறவியில்லை யென்பது- பொய்யாவது அஸ்தம், பூணுமொன்றதனால் என்னியல்பு கை பபடவிராதவர்கள் பொய்பபிறவி பூணுவார்க ளென்றும் கைபபடுவனெ ன்றதனால் இபபடிநிலையாதவர்களுக்கு நான்கைபபட்டேனென்ற தருக் காபத்திவரும், இதனால நான் அகபபட்டால் பிறவிவிடும், நான் அகபப டாவிட்டால் பிறவிவிடாதென்று நிச்சயமறிவது.) (கஅ)

(அறுசீர்நெடிலாசிரியவிருத்தம்.)

செப்பரும் சாக்கிரனைத் தேர்கமேலிக் கிளைசுரர் [illegible] டைமீதன
ருந் திருப்பியின்வார், செப்பாகமேனோடைய யமேகல்பாய் [illegible]
மெழிமடைந்தார் சேருதகுமவ், ஐயமேகேசதுர்யகமி [illegible]
பலவமோர்சென்மோருதுமா யர்க்குளார், தெய்யாதவகுக்கோர் [illegible]
ரோருநி மீராவிறக்குமக்கடைத்தா ல்மோனிமெல்லாம்... ....*

(இ-ள்.) சகலலோகங்களுக்கு மேலான பிரமலோகத்தி லடைந்த வர்களும் [illegible] ஆதிருமேசுர [illegible] தீர்ந்த போகே [illegible] திருப்பவருவார்கள் - செப்பாக [illegible] யடைந்தவர்களே [illegible] திரும்பி இந்த லோகத்துக்குவராத தேசியை யடைந்தவர்கள் ஆறும்பிரமலோகமுதலான லோகங் களிலே சேர்ந்தவர்களுந் திருப்பாகளென்று செல்லுமொல் லுபா அதையுஞ் சொல்லுகிறேன் கேளிங்கே சதுர்யுக மாயிரமானல் ஆங்கேயொருபகலா ம், இந்தப்படியிங்கே நாலுவருஷமாய் சுப்பிரமாணம்போல அந்தப்பிர மாவுக்கும் அந்தக்கணக்குப்படிக்கு நூறுவயதுண்டாது-யாராலு மறியாத அந்தப்பிரமாவுக்கு ஒருபகலிலே சகலயோனிகளும்பிறந்து அந்தவிராத் திரியிலே யிறக்கிறசுபாவத்தையுடையது-எ-று. * (சதுர்யுக மீனாயிரமா னெருபகலென்றதனால் இரவுமீனாயிரஞ் சதுர்யுகமென்றும், இந்த இ ரண்டுங்கூடினது ஒருநாள், இந்தநாள் முப்பதுகூடினது மாதம், இந்த மாதம் பன்னிரண்டுகூடினது வருஷம், இந்தவருஷம் நூறுகூடினது பி ர்மாவுடைய ஆயசு, இந்தப்பிர்மாவினுடைய ஒருபகலிற் சகலஜீவனும் பி றந்து அந்தராத்திரியி லடங்குதலிலே இந்தப்படி பிர்மாவுக்குநூறுவ ருடமென்றகாலஞ் சரியானும் பிர்மாதிலோகங்களெல்லாம் நாச மடையு ம் அதனாலே பிரமலோகத்தைச்சேர்ந்தபேருந் திரும்புவாரென்றது(கசு)

செறிபில்வரு வியத்தமோ டவ்வியத்தங்கூடாத நிலைமையென்று ... ...*
பொறியறிவும்பாக்கையினி லழிபாதபுரனென்றும்புனிதனென்று... ...*
மறிவரியவருமென்று மழியாதபொருளென்றுமடைந்தோர்பின்னைப்..*
பிறிவரியகெதியென்று பெரியோர்கள்பேசுவதைப் பெற்றுகண்டாய் ...*

(இ-ள்) பிரம்மாதிலோகங்கள் அநித்தியமென்று அதற்குள்ள சுபா வத்தைச்சொல்லியிரா யம்முடைய நித்தியமான சொரூபம் எப்படியென்றால், சொல்லுகிறேன் கேள் அருச்சுனா பிரகிருதியினால் வரப்பட்ட வியத்த த்துடனே அவ்வியத்தம் இரண்டுங்கூடாத நிலைமையென்றும் இச்

திரியங்கள் நாசமாகப்பட்ட தேகத்திலிருக்கிற கெடாத ஞானமென்றும் சுத்தமென்றும் யாருமறியவரிதான சொரூபமென்றும், கெடாத வஸ்துவென்றும் அதனையடைந்தவர்கள் பிறகு பிரியவரிதான கெதியென்றும், பெரியோர்கள் சொல்லுவது என்னுடைய சுபாவமேகண்டாய் அருச்சுனு-என்றவாறு. * (இதனாலே யென்னை யடைந்தவர்கள் திரும்பார்களென்றது.) (கரு)

எப்பொருளும்யாதொருவ னுள்ளடங்கிற்றெங்கு மாய்நிற்கின்றான்யா...*
ரப்பரமப்பொருளாகி யுள்ளவெனையன்பினா லடைவதையா...... ......*
விப்பரிசுவருங்காலத் திறந்தார்கள்பிறவாதார் பிறப்பரொன்னி... ... ...*
லப்பரிசுவருங்காலத் தினையறியவுரைக்கின்றே னதனைக்கேளாய் ... ...*

(இ-ள்) எவனொருவ னுள்ளே எந்தப்பூதங்க ளடங்கினவோ எங்குந்தானாக நிற்கிறவனாரோ அந்தப்பரம்பொருளாக விருக்கிறவென்னைப் பத்தியினாலே யடையத்தக்கது ஐயா இந்தசுபாவம் வருங்காலத்தில் மரணமானவர்கள் திரும்பிப்பிறவார்கள்-பிறப்பாரொன்னில் அந்தச் சுபாவம் வருகிறகாலத்தை யுனக்கு அறியச்சொல்லுகிறேன் அதைக் கேட்பாய் அருச்சுனு-எ-று. (கசு)

அங்கியொளிபகல்வெண்மை யாங்காலத்தேவதையா மவைகளோடு ...*
தங்கியறுதிங்களுடை யுத்தராயனஞ்சார்வார் மறித்துஞ்சாரார்.........*
கங்குல்புகைகறுப்பென்னுங் காலத்தேவதையடைந்து பிறக்குங்கண்டா
யெங்கமறுதிங்களுண்டத் தெட்சணாயனத்திறந்தயோகியென்பாம் ... *

(இ-ள்) அக்கினிப்பிரகாசம் பகல் சுக்கிலபக்ஷம் இவைகள் அதிதேவதையாகப்பட்ட அவைகளுடனேகூடித் தைமாதமுதல் ஆனிமாதமட்டும் ஆறுமாதத்தையுடைய உத்தராயனத்தையடைந்த யோகிகள் பிரமத்தையடைவார்-திரும்பவு மிந்தச்சகத்திலேவாரார்கள்-இராத்திரி புகை அமரபட்ச மிந்த அதிதேவதையையடைந்து எங்கும் ஆடிமாத முதல் மார்கழிமாதமட்டும் ஆறுமாதத்தையுடைய தெக்ஷணாயனத்திலே மரணமான யோகியென்றும் பேருடையவன் திரும்பவுமிந்தச் சகத்திலே பிறப்பான்கண்டாய் அருச்சுனு-எ-று. (கஎ)

ஏதமானதின்றியிவ் விரண்டுமாயும்யோகிதான்.........*
வேதமோதிவேழ்விதான மெய்தவங்கள்செய்தரு ... *
னேதுவாயநற்பதங்க ளெய்திவீடுமெய்துவா... ... ...*
ஞதலாலீயோகமேசெய் யென்றுமாயனோதினன் ... *

(இ-ள்) சுக்லமானதில்லாமல் இந்த உத்தராயணம் தெக்ஷிணாயன மென்கிற இரண்டிலும் விசாரிக்கப்பட்ட யோகியானவன் வேதங்களையோ கியாகங்களைப் பண்ணித் தானங்களைக்கொடுத்தும் சத்தியமான தவங்களைச்செய்திருக்கிறவன் அடைகிறபடிக்கு நல்ல பதவிகளை யடைந்தாலும் யோகத்தையுடையவரான ஆகையால் அருச்சுனா நீ யோகத்தை பெய்தியென்று ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொன்னார்-எ-று. (உஅ)

அ-உ ஆ-அக்ஷரயோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-அ-க்கு-கூடிய செய்யுள்-உ௪௫.

இந்த அத்தியாயத்துக்கும் கிரந்தத்திலே அக்ஷரப்பிரமயோகமென்றும்

சந்தப்பிரம் அக்ஷர யோகமென்றும் பெயர்.

தமிழில் மூலமாகவிருமென்றுபெயர்

உ

ஒன்பதாவது.

மாயாவிகார அத்தியாயம்.

கலி விருத்தம்.

சர்வஜனுயர்களையும்பது மீதன்றுகொலெனவே ... .*
பார்வந்துசெய்தவிசையன்கொளுமாசங்கையையறியக் ... *
கார்வந்தெனவவன்முன்புறு களிகொண்டெழுவெளியே ...*
தேர்வம்பரிகுசைகொண்டெழு பாகன்திருமொழிவான் ... *

(இ-ள்) இப்படிசொன்னதைக்கேட்டு அருச்சுனன் அன்புசெய்து மனதை அரம்போல அறுக்கப்பட்ட வலுமையான துக்கத்தை வேரோடே நீக்கப்பட்ட பதவியிதல்லவோ, ஆமோவென்று சந்தேகமாகக்கொள்ளப்பட்ட பெரியசங்கையை அந்த அருச்சுனனுடைய மனது மகிழ்ச்சிகொண்டெழும்ப வெளியிலே அவனுடைய தேரிலேகட்டிய கொடிய

வேகமுள்ள குதிரைச்சவுக்கைத் திருக்கையிலே பிடித்துக்கொண்டெழு ம்பி நீருண்ட மேகம்வந்ததுபோல அவன்முன்னே வந்திருக்கின்ற சார தியான ஸ்ரீகிருஷ்ணசுவாமி யறிந்து திருவாய் மலர்ந்தருளிச் செய்வார் எ-று. ※ (வெளியேயென்றதனால் சகலபதார்த்தங்களுக்கு முன்னேயிரு க்கிறவர் வெளியிலேவந்து கண்காணவிருந்துசொல்வார்.) (க)

அறையும்பொருள்களின்முன்பனு பவமொன்றியவதனை ...※
மறையும்பொருள்களின்முந்தற மறையும்பொருளினையே ※
விறையுந்துயராதுவின்றிமுன் னியைகின்றதையசைவோ ...※
டுறையுந்துகளறநின்றதை மொழிகின்றனனுணர்நீ ....※

(இ-ள்.) சொல்லப்பட்ட காட்சிப்பொருள்களிலே எல்லாவற்றிற்குமு ந்தின அநுபவமாகக கலந்ததைக்காணுமல் மறையப்பட்டபொருள்களி லெல்லாவற்றிற்கு முன்னுகமறையப்பட்ட பொருள் இந்தப்பொருளைய றிந் ததற்குமேற்கொஞ்சமாகிலுந் துக்கமில்லாமல் சந்தேக மில்லாமல் வெறுப்பில்லாமல் முன்னுகப்பொருந்தினதைச் சரத்தோடே யசரமாக விருக்கப்பட்ட சராசரமான குற்றங்க ளறநின்றதை இப்படிக் கொத்த ஞானத்தைச் சொல்லுகிறேன்நீயறி - எ-று. ※ அசைவோடுறையுந்து க ளென்றதைஅசைவோடேகூடியிருக்கப்பட்ட அணுவாமென் பாருமுளர் அதுகூடாது சனனத்தோடேயிருக்கப்பட்ட குற்றமறச்சலியாமல்நின்ற ஞானமென்னலாம், சலித்தலாவதுநிலைவிட்டசைதல். (உ)

அழிவொன்றலதறனென்றிய தரிதன்றியததன்மேல்.........※
வழிவந்தவெய்யறிவின்பில னெனையெங்களுமருவா ....※
ரழிதந்திடுசனனங்கொடு மரணங்கொடுமிகனே ....※
யுழிதந்திகபரமொன்றிய வுருவங்களிலுழல்வார் ....※

(இ-ள்) கெடாததுதருமங்கலந்ததுஎன்னையறிய வரிதல்லாதது இப்ப டிக்கொத்த ஞானமானதின்மேல் நல்லகதியாகவந்த மெய்ஞ்ஞான விசு வாசமில்லாதவர்கள் எந்தலோகத்திலு மென்னைக் கூடாமல் இழிவுதரப் பட்ட பிறவிகொண்டும் மரணங்கொண்டும் இங்கேதானே சுழன்றுசுழன் று இந்தலோகத்திலும் மேலோகத்திலும் கூடிவரப்பட்ட தேகங்களிலே யுழல்வார்கள்-எ-று. ※ (விசுவாசமுள்ளவர்க ளிப்படி யுழலாமல் என்னை க் கூடுவார்களென்ற கருத்தாபத்தி.) (ங

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

யாருமறியப்படாமையே யெனக்குவடிவாயுடையவியா ... ※
ளுருமுலகங்களையடையப் பரப்பிநிற்பனுதலினுற் ....※
சாருமுலகிற்சராசரங்க ளெனையேயவற்றில்நான்சாரேன் ...※
சேரும்பரிசுமின்றுற்போம் றெரியாதார்க்குத்திகழுமால் ...※

(இ-ள்) பாரதா [illegible] ப்படாததுமே யெனக்குச் சொரூபமாகவுடை யவர்களெல்லாரும் உலகங்களையுடைய நிலையைப்பரப்பி நிற்பேன் ஆகை யாலே உலகங்களிலுள்ள சராசரங்களெல்லாம் என்னையே ஆதாரமாக விருக்கும் அந்தச் சராசரங்களினாலே ஆதினமாக நான்கூடேன் தெளியாதவரு டருக்கு நான் அந்தச்சராசரங்களிலே கூடும்படி நின்றதுபோல விளங் கும்-எ-று. * (தெளிந்தஞானிக்கு நான்கூடேனென்று விளங்குமென்பது கருத்தாபத்தி) (௪)

முன்னேமையென்றுங்கலவாதிடா [illegible] முழுதுமாய்நின்ற ... ...*
வன்னோர்மையினு லுலகமென்றோ டாக்கலவாதாரகமிறு...... ...*
லென்னைமெய்ம் [illegible] பார்க்கை [illegible] பாராயிந்தச்சகமெல்லா ...*
மன்னையென்மன் மாயையுடு மாங்காரமுநான், முவன்காலன் ...*

(இ-ள்) எல்லாவற்றிற்கு முன்னே நான் ஒன்றுங்கலவாமல் நிற்பேன் நான் சகலமுமாய்நின்ற அந்த [illegible] என்னோடே யுலகமெல் லாஞ் சொரூபங்களாவது ஆகையால் மங்கபாவத்தைப் பாராய் ஆருச்சு னா எப்போது என்மாயையுண்டோ அப்போதே யிந்த உலகத்தையெல் லாம் மாயையுண்டாக்கும் இப்படி என்னிலுண்டானது மாயையாகையா ல் ஆங்காரமும் நானுண்டாக்கினது கண்டாய் எ-று. (௫)

கலி விருத்தம்.

என்னுருவிற்புணராதே யென்னை விடத்தோன்றுந்த........*
மன்னுயிர்களென்னையெங்குஞ் சார்ந்துவரும்வகைகேட்டி ...*
முன்னுமிடமெங்குநிறைந் தொளிர்கின்றவானெங்கும்... ...*
துன்னுமியற்செறிகாற்றின் றோற்றம்போல்சுடர்வேலோய்...*

(இ-ள்) என்னுடைய சொரூபத்திலே பொருந்தாமலும் என்னைவி டவுண்டாகாமலும் நின்மையானசகலசீவன்களும் எங்குமென்னையேசா ர்ந்துவரும் அதுவரப்பட்ட வகையைக்கேட்கிற்பிரகாசிக்கின்ற வேலாயு தத்தையுடைய அருச்சுனா சொல்லுகிறேன்கேள் நினைக்கப்பட்ட விட மெங்கும் நிறைந்து பிரகாசிக்கின்ற ஆகாயமெங்கும் நெருங்கின சுபாவ முங் கனமுமுள்ள காற்றினுடைய தோற்றம்போல்-எ-று. * (வாயுவான து ஆகாசத்திலுண்டாய் அதிலே கூடாமல் அதுள்ளமட்டுந் தானுள்ள தாய் அதினுடைய விஸ்தாரமட்டும் நிறைந்ததாய் அதைவிட வேறிட மில்லாததாயிருக்கிறதுபோலச் சகலசீவனும் என்னிலுண்டாய் என்னி லே கூடாமல்நானுள்ளமட்டும் தானுமுள்ளதாய் என்னுடைய விஸ்தார மட்டும் நிறைந்ததாய் அதைவிடவேறிடமில்லாததா யிருக்குமென்பது விரிவு. (௬)

ஈண்டுபொருளிலையனைத்து மிறக்குநாளொன்றிடையே...*
மாண்டுபுகும்பிறக்குநான் மற்றவைதன்வரன்முறையே ... *
மீண்டுபுறப்படுமெல்லா மாதலினென் மெய்ப்பார்க்கில்... ...*
யாண்டுமுயிர்படைத்துக்காத் தழிக்கின்றே [illegible] யானேகாண் *

(இ-ள்) இவ்விடத்திற் சொல்லப்பட்ட பூதங்க ளிவைசகலமும் நாச மாகிறநாளில் நாசமாகி என்னிடத்திலே புகுந்தடங்கும் இப்படிவதவிரப் பிறக்கிற நாளில் அவைகளொடுங்கின வரன்முறைப்படியே எல்லாந் திரும்பிப் புறப்படும் ...கையாலே சத்தியமாகவிசாரிக்கில் எந்தவிடங்களி லும் சகலசீவனையும் சிருஷடித்து ரட்சித்துச் சங்கரிக்கிறவன்நானேயல் லாமல் வேறில்லைகாணென்றவாறு. * (வரன்முறையாவது பிருதிவுஅப்பு விலடங்கி அப்பு தேயுவிலடங்கி தேயு வாயுவிலடங்கி வாயு ஆகாயத்திலடங்கி ஆகாயமாயையிலடங்கி மாயையென்னிலடங்கின வரன்முறையே என்னில் மாயையுண்டாய மாயையிலாகாசாதிப்பஞ்ச பூதமொன்றிலொன் றுண்டாவது.) (எ)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

மலைங்கலனையாய்பலங்களுடன் வேண்டல்வேண்டாமையைவிட்டுச் ...*
சலங்கொளவினைகளைவைசெய்வே னதனுலென்னையவைசாரா... ... ...*
ஞலங்கண்டுதாமெனூறந்த நூலாம்கண்டுண்டிலந்தாற்போல்............ ...*
பலங்கணிவினைவாரவற்றலே கட்டுண்டாங்கேபடருழப்பார்... ... .*

(இ-ள்) மலையையொப்பான அருச்சுன, பிரயோசனங்க ளுடனே விருப்பு வெறு மைவிட்டு அழிக்கப்படாத வைரங்கொண்ட சிருஷ்டி யாதி கருமங்களைச்செய்யவேண்டிப் பிரயோசனத்தில் விருப்பு வெருப் பில்லாததினாலே அந்தச்சிருஷ்டியாதி கருமங்கள் என்னைச்சேராவாம்உ லண்டு என்று பெயரையுடைய கொம்புப்பூழுவானது தானே நூலையுண் டாக்கி யந்தநூலாலே எந்தக்காலத்திலும் எந்தவுபாதிக்கும் அழியாத கூடுகட்ட வேண்டுமென்று தன்னையுள்ளாக்கிக் கட்டித்தான் அந்தக்கூட் டுக்குள்ளே கட்டுண்டு வெளியிலேவர வழியில்லாமல் அந்தக்கூட்டுக்கு ள்ளே செத்தாற்போலப் பிரயோனத்தை யிச்சையாகவினைத்துக்கரும ங்களைச்செய்தவர்கள், அந்தக்கருமபலத்தாலே கட்டுண்டு அந்தக் கரு மத்திலே தானே துக்கப்பட்டுழலுவார்கள்-எ-று. (அ)

கலி விருத்தம்.

ஊர்வனநிற்பனவாகவுலகையுண்டாக்குமென்னை......... ......*
யோர்வுறவறியாதேயோர்மகனெனவிகழாநிற்பா... ... ...*
வேவானவெஞ்சத்தாசைவினைகளைமிடையச்செய்வா ... ...*
ராரெனிலவர்கடாமுமரக்கரோடசுரராணர்......... ....*

(இ-ள்) ஊர்வதாகிய-சரமும், நிற்பனவாகியஅசரமும், இந்தச்சராசர ரூபமாகச்சகத்தையுண்டாக்கப்பட்டவென்னை மனதிற் கிசையும்படியாக சகலத்துக்குங் கர்த்தனென்றறியாமலே ஒருமனிதனென்று அவமா னம் பண்ணுவார்கள் மனதிலே வேர்விழுந்ததுபோல எழும்பின ஆசை யினலேகருமங்களை மிகுந்துசெய்வார்கள அவர்களாரென்னில் ராக்ஷச ருடனே அசுரரும் ஒப்பானவர்கள்-எ-று. (கூ)

அ[illegible] ..... *
பொய்கை[illegible]போதுமென்னையேபோ[illegible] *
[illegible]ஸ்வரூத்திவாடாலென்னை[illegible]நினைந்[illegible] ...*
செ[illegible]குணங்கொண்டாய்தேவரீர்[illegible]டப்பட்டார் .... *

(இ-ள்) அதி[illegible]லே யென்னையேசத்தனை ஆ[illegible]துகொண்[illegible] ஆடம்கின சுபாவத்தினாலே பிந்திரியங்கள்போ[illegible]வினையை [illegible] எப்போதும் என்னையே ஆசைபண்ணிப் பத்திமார்க்கத்[illegible] வாய்மையலே கீர்த்தனம் பண்ணிவேறொருவரையும் [illegible] நினையாத மனதினாலே யென்னையே நினைந்து கொண்[illegible] ருக்கிறவரையாரோ அவர்களைப்போலே [illegible]டப்பட்டவர்கள்-எ-று. * (மு[illegible] தொன்மை நினைந்து வாக்கு வேறொன்றைச் சொல்லுத் தேகம் [illegible] ணிரண்டு மல்லா ததைச் செய்கின்றது தேக சுபாவ மானையால் என்னையே யறிந்து என்னையே போற்ற [illegible]வாழ்த்தி என்னையே நினைந்து என்றும் திடப்படுவதற்காக என்னையே [illegible] னைத்துக்கும் புத்திதிடப்படச்சொன்னார் தேவரீர் தெ[illegible]ப்பட்டார் [illegible] மதனால் தேவர்களைப்போலத் தெரியப்பட்டார்களென்பது இதனால் [illegible] பாட்டிலே அரக்கரோடசுரரானொன்றகர் ரும் அவர்களைப்போலவே [illegible] ளென்பது தேவாசுரர்களைச்சொன்ன தேதுக்கெனில் தன்னை அ[illegible] ற்கும் அபிமானதற்கும் திஷ்டாந்திரஞ் சொன்னது இந்த திஷ்டாந்திரஞ் சகலசிவனுக்குஞ் சரியாகக் காட்டினது செ[illegible]யவர்களாவது கனமானவர்கள் கனமானவர்களாவது மகாத்மாக்கள் செ[illegible] செறிதருமவர்களை மகாத்மாக்களென்றது [illegible]காத்மாக்க[illegible]ன்பதுடை செ[illegible] - [illegible]களென்பது [illegible]) (௰)

காலத்தாலும்பொருளிடங்களாலுங்கணித்தற்கரியவெனை...*
ஞாலத்தார்கள்புகலரியஞானபோகங்களினாலே... ... .*
கோலத்தால்வேறாகவுமெய்க் குறியாலொன்றாகவுங்கொண்டு*
சாலத்தாழ்வாரவருடைய தன்மையினையான்சாற்றுவன்கேள்

(இ-ள்) காலத்தினாலும் பஞ்சபூதவிஷயங்களினாலும் அளவிடுதற்கரிதான என்னை யுலகத்தி லுள்ளவர்களினாலே மயாபதார்த்த பேதரூப அடையாளங்களினாலே வேறுவேறான அனேகமாகவுஞ் சத்தியமான அடையாளத்தினாலே யொன்றாகவும் தி[illegible]ம்பண்ணிக்கொண்[illegible] மெத்தவும் பூசைபண்ணி வணங்குவார்கள் அவர்கள் சுபாவத்தை [illegible] லுகிறேன்கேள் அருச்சனா-எ-று. * (என்னை அனேகமாக[illegible] மொன்றாகவுந் திடம்பண்ணிக்கொண்டு ஞானபோகத்தாலே பூசைபண்ணுகிற வர்களுடைய சுபாவத்தைச் சொல்லுகிறேனென்று பொ[illegible] ல்வது) (௰௧)

கலிவிருத்தம்.

[illegible]

வேதமொழி[illegible]விதிவேள்வியந்திரங்கே..... *
[illegible]வேள்வி[illegible]குவிவ[illegible]... ..... *

காதல்புரிவோர்கள்புரி காரியமதெல்லா ... .*
நாதமுதலாயபொரு ளாயவைய்நானே ... .*

(இ-ள்) வேதவாக்கியப்படி செய்கிற யாகந்தினந்தினஞ்செய்ய விதித்த ஓமம் பிதுர்களுக்குக்கொடுக்கிற பிண்டதருப்பணயாகம் அக்கினிநெய்பிண்டம் இவைகளாலே ஆசையுடையவர்கள் செய்கிற காரியங்களெல்லாம் நானே சத்தமுதலாகிய விஷையப்பொருளாகியதும் நானே-எ-று.
* (சத்தமுதலாவது, சத்த பரிச ரூபரச கெந்தம்.) (௧௨)

ஆயிவுலகங்களை யளித்தொளிவளர்க்கு ... .*
தாயினொடுதந்தையவர் தந்தைதலைகண்ணோன் ....*
போயினவினைபபய னளித்தல்புரிவோனே...........*
னோயுமறைநான்கினுட னோமெனுமெழுத்தியான் ... *

இ-ள்.) விசாரிக்கில் உலகங்களைப்பெற்றும பிரகாசிக்க வளர்க்கபபட்டதாயும், அவளுடனே தகபபனும் அவர்க ளிருவருடைய தகப்பனுபிப பாட்டன்மாரும் அந்த இரண்டுபாட்டன் பாட்டன்மாருடைய தகபபன்மா ராகிய முபபாட்டன்மாரும் இபபடிபபரம்பரையாகப போகபபட்ட முதல்களும் நானே முன்செய்து மறந்துபோனகருமபலனைமறவாமற்கொடுக்கிறதைச்செய்கிறவனும் நானே இசையபபட்ட நாலுவேதங்களுமநானே அந்த வேதங்களுடனேஓமெனமபிரணவெழுத்தும்நானே,

கலிவிருத்தம்.

எல்லார்க்குங்கதியுநா னிருவினைப்பாகனுநா......... ......*
னெல்லார்க்குந்தலைவனு னெப்பொருட்குஞ்சான்றுநா......*
னெல்லார்க்குமுறைமபிடநா னியார்க்குமிடர்தீர்ப்போனு ...*
னெல்லார்க்குநல்லோனு னெப்பொருட்கும்வித்துநான் ... *

(இ-ள்) எல்லாருக்கு மடைகிற கதியும்நானே புண்ணியபாவத்தைநடத்துகிறவனும்நானே எல்லாருக்கும்கர்த்தனும்நானேஎல்லார்க்குந்துக்கந்தீர்க்கிறவனும்நானே யெல்லாருக்கும்நல்லவனும்நானே எல்லாப்பொருளுக்கும் விதையும்நானே-எ-று. (௧௪)

அறுசீரடிப்பாசிரியவிருத்தம்.

தாங்கியநீரையெல்லா மிரவியின்றலத்தினின்று... .. ..*
வாங்குகின்றேனுமீண்டு மழைகளாய்க்கொடுக்கின்றேனு ...*
மீங்குமெய்புணரினுமே யாதலாலியதொன்றேனு... ... ...*
மாங்கருச்சனைசெய்கின்ற ரென்னையேயரிச்சிக்கின்றார்......*

(இ-ள்) பூமிதாங்கிய நீரையெல்லாஞ் சூரியனிடத்தில் நின்று வாங்குகிறவனும் திரும்பிமழைகளாய்க்கொடுக்கிறவனு மிப்போது மெய்யா

கவிசாரிக்கில் யாவனையெப்படியாகையால் என்னையாகிலும் ஒப்பற அங்கே
பூசைபண்ணுகிறவர்கள் என்னையே அருச்சிப்பவர்களுமாகிறார்கள்-எ-று.()

ஞானமாபோகமுற்றின்ப வெல்லையே யாறுவாரய்... ... ...*
போனதியின்மாந்தர் வேள்வியாற் பூசித்தாய்... ... *
வானமாமுலகமேழ்வாழ்ந்துமண்ணிடையே வீழ்ந்திட்......*
மனமாமனைசயாலே பிறப்பதுமிறப்பதாவார்... ....*

(இ-ள்) ஞானமாகி போகமுற்றிச் சுயம்பாய்நின்ற வென்னைத் தானே ணமான ஆசையின்றிலே அந்த ஞானசொரூபமாய்ப் பலவாகச்சலனமுள்ள தேவர்களாகப்பாவித்து அந்தத்தேவயோகத்துக்கு இச்சைபட்டு அந்தந்தத்தேவதாப்பிரீதியாகச்செய்த யாகங்களினாலும் பூசைகளினாலும் பாவங்களைப்போக்கினமனிதர் தேவலோகத்திலேயும் ப்ரமலோகத்திலேயும் பெருமட்டும் திவ்வியபோகத்தை யநுபவித்துப் பிறகு மண்ணிலேயாகவிருந்துசாகிறதும் பிறக்கிறதுமாகித் தேவலோகத்துக்கும் பூலோகத்துக்கும் போக்குவருத்தாய்த் திரிவார்கள் -எ-று. * (ஞானமாயெயாமுறப் பெறுவென்னையே ஞானமா பிச்சையாலே காறுவாகவேழ்படாப் பூசித்தாம் போனதிவினையின்மாந்தர் வானமா முலகமேழ்வாழ்ந்து மண்ணிடையே வீழ்ந்திட பிறப்பதுமிறப்பதாவா ரெனமாறுக ஈறுவாயென்ற விடத்திற்செய்தவன் வருவிக்க.)
(உக)

மின்னையேயனையவேலா மேவுவார்வேண்டிற்றெல்லாம்.....*
பின்னையேயென்றுதன்றே யளித்தவர்க்காப்பன்வானோர் ...*
மன்னையேமுதலாத்தெய்வம் வணங்குகின்றுருமற்றென் ...*
றன்னையேவணங்குகின்றார் தாமறியாததேகாண்... ....*

(இ-ள்) மின்னையொப்பாகப்பிரகாசிக்கும் வேலையுடைய அருச்சுனா அன்னியசிந்தையில்லாமல் என்னைக் கூடுகின்றவர்களுக்கு வேண்டியதெல்லாம் பிறகுகொடுக்கிறேனென்னாமல் அப்போதேகொடுத்து அவர்களைக்காத்துக்கொள்ளுவேன் தேவர்களுக்கிராசாவான இந்திரனை முதலான தெய்வங்களை வணங்குகின்றவர்களுக்கும் நான் அந்தந்தத் தேவரூபமானதினாலே என்னையேவணங்குகின்றார்கள் அது அவர்கள் என்னை அறியாமற்செய்ததல்லால் அந்நதுசெய்த தல்லகண்டாய்-எ-று. (உஉ)

தேவரையடைந்தார்தேவ ராவர்கள்பிதிரர்தம்மை..........*
மேவரவடைந்தாரந்தப் பிதிரராய்விளங்காநிற்ப... ... .*
ரியாவர்களியாவர்பால ரவர்களேயாவரென்று......... ......*
லாவியென்னடைந்தாரியானே யாவதற்கையமுண்டோ......*

(இ-ள்.) தேவர்களையடைந்தவர்கள் தேவர்களாவார்கள்-பிதிர்களை மனதுபொருந்தி வருப்படியடைந்தவர்கள் அந்தப்பிதிர்களாய்விளங்கிநிற்பார்கள் யாராலும் யாரிடமாக அடைந்தார்களோ அவர்களேயாவரென்றால்

என்னையடைந்தவர்கள் நானேயாகிறதற்கு ஆஆ சந்தேகமுண்டோ இல்லை-எ-று. * (ஆஆவென்றது இழிவானவாளை யடைந்தவர்களுமவர்களே யாவரால் மேலானவென்னையடைந்தவர்கள் நானாகிறதற்குச்சந்தேகமுண்டோ ஆஆ இதுவென்ன ஆச்சரியம் நான் தேவர்களினு முன்னோனென்று காட்டின் ஆச்சரியக்குறிப்பு.) (மஅ)

போதிலைகனிகாய்நீரோ பெற்றவைகொண்டுபோற்றிக். .*
காதலாற்றாயவன்பாற் றந்ததேளிகத்துக்கொள்வே ...*
றாதலாலீவனேற்ப வுண்பமற்றவைகளேகொண் ... ...*
டீதலாமெனக்காய்தந்தா லென்னையேயெய்தலாமால். .*

(இ-ள்) பத்தியினாலே சுத்தமான அன்புடையவர்கள் பூ இலை பழம் காய் சலம் இவைகளிலே கிடைத்தவைகொண்டுஎன்னைப் பூசைபண்ணிக்கொடுத்தவையே மிகுந்தசந்தோஷமாகஅங்கி கரிப்பேன் ஆகையால்கொடுக்கின்றது விரதம்நோக்கிறது பொசிக்கிறது மற்றுமுள்ளவைகளைக்கொண்டு இவையெல்லாம் எனக்காகக்கொடுத்தால் என்னையே யடையலாம் அன்னியகெதிவாராது-எ-று. (மகூ)

எப்பொருடனக்குமியானேத் திருத்தலாலெனக்கியாரு
மொப்பவரினியரின்று தாமெனவொருவரில்லை........ *
இப்படியறியுமன்பர் பக்கலேயானுநிற்ப......... ......*
னப்படியவருமென்பா லங்ஙனேயமர்ந்துநிற்பார்... ...*

(இ-ள்) எந்தப்பொருள்களுக்கும் நான் சமமாயிருக்கிறதினாலேஎனக்கு ஒப்பானவர்களும் பிரியமானவர்களும் விரோதமானவர்களும் யாரொருவருமில்லை இப்படியறியப்பட்ட அன்பரிடத்திலே நானும் நிற்பேன்அந்தஅன்பர்களும் அப்படியே என்னிடத்தில் அமர்ந்து அங்கே நிற்பார்கள் வேறுபடாரகள்-எ-று. (உ0)

ஊனையேமுதலாவென்பா லூக்கியவுணர்வோர்நாளு ... ...*
நானையேவிட்டுத்தீமை புரியினுமவர்கணல்லோ...... ......*
ரேனையேபுயத்தாயென்றுங் கேடிலாவின்பமல்லா... ... ...*
தானையேயொருகேடில்லை யவர்களுக்கெங்குமென்றும்......*

(இ-ள்) உண்பதுவேமுதலாக உள்ளவெல்லா மென்னிடமாக செலுத்தின அறிவுடையவர்கள் தினந்தினமும் லச்சையைவிட்டுப் பொல்லாங்கு செய்தாலும் அவர்கள்நல்லவர்களே எக்காலமுங்கெடாதநிலையுடைய மகிமையும் அழகுமுள்ள தோளையுடைய அருச்சுன அவர்களுக்குஎன்றைக்கும் கேடில்லாத சுகமேயல்லாமல் ஆணைப்படிக்கு எங்கேயாகிலும் என்றைக்காகிலும் ஒருகேடுமில்லை எ-று. * (எனக்குச் செலுத்தாத மூடருக்கு என்றைக்கும் எங்கும் ஆணைப்படிக்குக் கேடுண்டென்பது அருத்தாபத்தி.) (உக)

வணிகருமடந்தையோரும் மாந்தருமகளிர்தாமு ....*
டனிவொடுமென்னைப்பேணிப் பற்றுமிக்கேவலன்று .....*
வனிமுடியரசர்மேன்மை மந்தணரடைவராகிற் ....*
றணிவரும்பிறவித்தீரச் சாற்றவேண்டுவதுமுண்டோ........*

(இ-ள்) மற்ற வைசியருஞ் சூத்திரரும் பெண்டுகளும் இவர்களனைவர்களும் பக்தியுடனும் அன்புடனும் என்னை உபாசித்தால் கருமபந்தத்தை யறுத்து மேலான கதியை யடைவார்களென்றால் அழகிய கிரீடந்தரித்த ராசாக்கள் எல்லாருக்குமேலான சாதியுடைய பிராமணர்கள் இவர்கள் என்னையடைவாராகில் அவர்களுக்கு யாகாதி மகாதானதிவிரதாதி முதலான டவ்வை பக்கா ருடைய ஜீவாவதாரத் திருக்கின்றதற்குச் சொல்லவேண்டுவதுமுண்டோ இல்லை நிச்சயமாகப்பெற்றிருப்பர் எ-று. (௨௨)

மின்னையேபணியவாழ்வி னிற்றனியிருப்பினேனு...........*
மென்னையேவணங்கியென்று மென்னையேயிசைவாயாயி ...*
லென்னையேயடைதியிதென் றியம்பினானிலக்குவாட்கட் ...*
பின்னையேமுறுவலோடும் பெய்முலையுண்டபெம்மான்......*

(இ-ள்) ஆகையா லருச்சுன மின்னைப்போப்பான அநித்திய வாழ்விலே யதுநிலையென்றுகின்ற நீ இதைமறந்து என்னிடத்தில் ஆசையுடனும் பக்தியுடனும் என்னைக்குறித்து என்னையே பூசைபண்ணி வணங்கி என்னையே பரமகதியென்று உன்மனதுக்கு இசைந்திருந்தாயாகில் என்னையே யடைவாய் அதுநிச்சயமென்றுசொன்னார் பிரகாசிக்கின்றவாளைப்போன்ற கண்களையுடைய மகாலட்சுமிதேவியின் நாயகனை அழகிய புன்சிரிப்புடனுஞ் சடைப்பூதகியென்றும் பெயரையுடைய பேயினுடைய முலையையுண்ட கருத்தனை ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. (௨௩)


-----*-----

௯-வது-மாயாவிகார-அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-௯-க்கு-கூடியசெய்யுள்-௨௧௮.


----- (*) * (*) -----



௰

பத்தாவது.

விபூதிவித்தாரயோக அத்தியாயம்.



அறுசீரடி யாசிரியவிருத்தம்

அரியவெனதுநிலைமையைமுன் பளவேசொன்னேனதுகேட்டே *
யுரியமனனிற்களிகூர வொவ்வாநின்றவுனக்கதனை ....*
விரியமொழிவன்கேளென்று வேதத்தலையின்வீற்றிருக்குங் ......*
கரியமுகிறன்செவ்வாயாற் காதல்கூறக்கட்டுரைப்பான் ....*

(இ-ள்) யாராகிலும் அறிய அரிதான என்னுடைய சத்தியமான உண்மையை முன்பு பிரமாணமாய்ச்சொன்னேன் அந்தப் பிரமாணத்தைக்கேட்டே யுனக்குரித்தான மனதிலே களிப்புச்சிறப்பாகச் சந்தோஷப்படாநின்ற உனக்கு அந்தப்பிரமாணத்தைப் பிரத்தியட்சமாக விஸ்தாரமாகச்சொல்லுகிறேன்கேள் அருச்சுனனென்று வேதச்சிரசிலே யிறுமாந்திருக்கபட்ட கரியமேகத்தையொப்பான திருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி தம்முடைய சிவந்ததிருவாயினாலே அருச்சுனனுக்கு அன்புமிகுதியாகச்சொல்லுவார்-எ-று. (க)

தேவரொடுமுனிவரர்கள் சித்தர்வித்தியாதரர்கள்............*
யாவர்களுமறியாரென் பெருமையைமுன்பழமையினாற் ... *
சாவதும்பிறப்புமில்லா வெனையறியத்தகுவாரேற் ....*
பாவவினையறவிட்டுப் பரகதியதடைகிற்பார் ... .*

(இ-ள்.) தேவர்கள் அவர்களுடனே மகாமுனிகள் சித்தர் வித்தியாதரர் இவர்கள்முதல் எல்லாரும் என்னுடையபெருமையை யறியார்கள் அது அவர்களுக்கெல்லாம் நான் ஆதியாய் அநாதியானதினாலே யாருமறியார்கள் செனனமரணமுமில்லாத வென்னையின்னானென் றறியத்தக்கவர்களாகிலவர்கள்பாவகருமங்களை யறத்தக்கதாகவிட்டுப் பரகதியை யடையமாட்டுவார்கள்-எ-று. (உ)

புத்திபொறைதவஞானம் புகழ்ப்பழிதீர்கொலைதெளிவு... ...*
சத்தியநற்சமைதைவரி தவிந்தானஞ்சாவுபிறப்... ....*
பத்திகொடுநிறைவின்ப மிடரஞ்சலஞ்சாமை......... ......*
யித்தனையுந்தோன்றுவ தென்னிடைநின்றேயெனத்தெளிவாய்

(இ-ள்) [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible].) (௪)

கலி விருத்தம்.

[illegible] ....*
[illegible] ... . *
[illegible] ... ...*
[illegible].. ....*

(இ-ள்) [illegible] சரா
சரங்களை [illegible] யுடைய
சத்தர்களும் [illegible] என்னுடைய
நினைப்பிலே பிறந்தார்களென்று உள்மனதிலே திடமாகச் சம்மதிப்பா ய
ருசு-எ-று. (௫)

இப்பரிசெவ்வினை யறிந்தவர்தன்பால் .. ..*
வைப்பர்கள்சிந்தையை மன்னுயிரோடு ... .*
மப்பரிசேயறி வாரையுமங்கே...... ....*
யுப்பருமைப்பர்க ளிப்பருவப்பார் ... . *

(இ-ள்) இந்தப்படி சகலதுக்குங் காரணமாகச் சகலமு மென்னிடத்தில் நானேவர்த்திக்கிறதாக என்னை யறிந்தவர்கள் தங்களுடைய சிவனோடுங்கூட மனதை என்னிடத்தில்வைப்பார்கள் என்னையேபேசுவார்கள் ஆனந்தமடைவார்கள் சந்தோஷிப்பார்கள்-எ-று. (௬)

நிரந்தரமிப்பரி சென்னைநினைப்பார்ம் ....*
கரந்தகைகெடுத்தென்னை யாயுமனத்தைப்........ *
புரந்துகொடுத்தவர் தேவர்பொருளாயே ....*
வரங்களுமுற்ற வளித்தவரத்தால் ....*

(இ-ள்) இந்தப்படி நிரந்தரம் என்னை நினைக்கிறவர் களுக்குத்துன்பத்தைப்போக்கிக் காத்து என்னை விசாரிக்கிற மனதைக்கொடுத்து அந்த மனதாலே விசாரிக்கிற வஸ்துவாகியேபிரசன்னமாகவந்து முன்கொடுத்தது மல்லாமற் பின்பு வரங்களுங்குறையாமற் கொடுத்து அந்த வரத்தினாலே-எ-று. (௭)

மற்றவர்நெஞ்சின்மயக்கிருளெல்லா ... .*
முற்றறிஞர்னவிளக்கொளியாலே ... .*
பற்றறவிடபனெனப்பழையோன்முன் ... .*
கொற்றவன்பற்றினைவகூறவலித்தான் ... .*

(இ-ள்) அந்தவரத்தினாலே யுற்றறியப்பட்ட ஞானமாகியவிளக்கொளியாலே அவர்களுடைய மனதிலிருந்து மயக்கப்பட்ட அஞ்ஞானமாகிய விருளெல்லாம் பற்றறச் செய்வேனென்றுசொல்ல அந்த அநாதியானஸ்ரீ கிருஷ்ணசுவாமிமுன்னே அருச்சுனனென்கியராஜன் இந்தவசனஞ்சொல்ல உத்தியோகப்பட்டான்-எ-று. * (மற்றவர்களென்றது என்னைத்தவிரஅவர்களென்பது மற்றிவையென்றது முன்சொன்னதைத் தவிரவென்றேயிது வென்பது.) (எ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பேதமுடையபிறப்பிறப்புப் பிறழாநின்றபெருஞ்செல்வ.
மாதிதேவன்பரப்பிரமமழிவிலாதானாரணங்க...... ...*
வோதவரியவுத்தமனிங்கெல்லாமுயிர்ப்பானெனவுன்னை
நீதிமுனிவருரைத்ததெலா நீயேயருளிச்செய்தனையால்.

(இ-ள்) எண்பத்துநாலு நூறாயிரம் அச்சுப்பேதமுடைய பிறப்புச்சாவு இவைகளாலே தவறாப்பூரணமா பெரியசெல்வம் ஆதிதேவன்பரப்பிரமம் அநித்தியமில்லாத நித்தியன் வேதங்களோதவரிதான உத்தமன் இந்தப்பிரபஞ்சமெல்லாமபெற்றவன் என்று உன்னைநீதியுள்ள மஹாரிஷிகள் முன்னனைத்துச் சொன்னதெல்லாம் அப்படிக்கொத்த நீதியேயிப்போது எனக்கு அருளிச்செய்தாய்-எ-று. (அ)

எல்லாப்பொருட்குந்தனிவித்தேயெல்லாப்பொருட்குமீசனே.........*
நல்லோர்புகழுந்தேவருக்குமுலகங்களுக்குநாயகனே ....*
யல்லாவரிவாரியாரென்னையானேயறிவனெனவருளாம் ....*
சொல்லாடினவப்பொருளெல்லா மெய்யேயயானுந்துணிந்தொறுத்தேன்

(இ-ள்) அளவற்றபேதங்களுள்ள சகலவஸ்துக்களும் அந்தந்தப்பேதங்களாக டூளைக்கிறதான ஒருவிதையே சகலவஸ்துக்களுக்கும் சுவாமியே பெரியோர்கள் புகழப்பட்டவனே தேவர்களுக்கும் லோகங்களுக்கும் கர்த்தனே உன்னை யல்லாமலுன்னை யறிகிறவர்களார் யாருமில்லை என்னை நானே யறிவனென்றுகிருபையினாலே சொல்லிக்கொண்டு வந்த அந்த அருத்தமெல்லாஞ் சத்தியமே அல்லாமற்சந்தேகமில்லை ஒன்றுமறியாத நானும் நீயே யெல்லாமென்று நிச்சயமாகத் தெளிந்து உன்னையல்லாத மற்ற விகற்பமெல்லாம் விட்டேன் - எ - று. * (தனிவித்தாவது

எந்தவஸ்து விதையாலும் எந்த விதமாக உற்பத்தியாகிறதோ அது அந்தவஸ்துவாக முளைக்கிறதல்லாமல் ஒரு வஸ்துவினுடைய விதைவேறொரு வஸ்துவாக முளையாதது ஒருவஸ்துவிதை அநேகம் வஸ்துவாக முளைக்காது அப்படியிருக்கையில் எந்த வஸ்துவாக வருகிறதாயிருந்தாலும் நீ அனேகமாயவஸ்துவாக முளைக்கிற விதையென்றது; எல்லாப்பொருளுக்கும் காரணவுருவமாயிருக்கிறவனுக்குஞ்சுவாமியென்றது.) (௮)

கொச்சகக்கலிப்பா.

மெய்வகையிவ்வுலகிடைநீவேறுவேறுற்பத்ய... ....*
தெய்வகையெவ்வருக்சார்ந்திருஎக்ணுயற்கிலே... ... ...*
னவ்வகையேயொருபொருளுமொழியாமலடியேனுய ... ...*
குய்வகையாநெறியாகவுரைத்தருளென்றேயுரைப்பான்... ...*

(இ-ள்.) இந்தப் பிரபஞ்சத்தினிடத்தில் மெய்யாக வேறுவேறானவேதமாக நீ நிற்கிறதெந்த விதம் எந்தரூபமுடைத்து என்று யானறியுமடியேன் நீ பெந்தரூபமானேயோ எவ்வெந்தப்பெதவஸ்துவாக நின்றயோ அந்தப்படியே ஒருவஸ்துவும் விடாமல் அடியேனுக்குப் பிழைக்கிறவிதமான மார்க்கமாகத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று சொல்லுவான்-எ-று. (௯)

கலிவிருத்தம்.

பருகாநின்றோர்க்குணாதிருவாக்காமின்பாலமுதம்... ... ...*
மொருகாலமுமார்க்கின்றதிலேயின்னமடியேற்குரையென்ன.*
வருகாலஞ்செல்காலநிகழ்காலமென்னுமூன்றவற்றிற்........*
பெருகாகுறையாதவனாகும்பெருமாயன்றான்பேசுவான் ... *

(இ-ள்) இந்தப் பாட்டைப் பருகாநின்றோர்க் குணாதுவாக்காமபாலமுதமொருகாலுமார்க்கின்றதில்லையா உரையென்ன வருகாலஞ்செல்காலங்களிகாலமென்னுமிவற்றிற்பெருகாத, சிறுகாதபெருமாயன்பேசுவனென்பது பாடமோதுவாருளர் என்றது உம்முடையதிருவாக்கினலருளிச்செய்கின்றதிருவார்த்தையாகியபாலமிர்தத்தைக்காதிரண்டாகிய வாயினலேகுடிக்கிற எனக்கு ஒருகாலமுமிறைக்குந்திருத்தியாகிய தில்லையாகையால் இன்னமு மடியேனுக்கு அருளிச்செய்யுமென்றுசொல்ல இனிமேல் வருங்கால மிப்போதுநடக்கிறகாலம் முன்போன காலமென்று சொல்லப்பட்ட இந்தமூன்றுகாலத்திலும் பெருகா சிறுகாத சமனாகவிருக்கின்றபெருமையுள்ள ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்லுவார்-எ-று. * (பாட்டிரண்டுபேதமானாலும் உரையொன்றேயல்லாமற்பேதயில்லை) (௧௦)

கலிவிருத்தம்.

இறந்தவென்விபூதிக்கோரெல்லையின்மையில் ... *
சிறந்தனமுடிவுறப்பேசவொன்றமே... ... .*

வறந்தருமனத்தினுபவற்றியேசில...... ... .*
சிறந்தனகூறுவனென்றுசெப்புவான்...... ... ...*

(இ-ள்) சொல்லும்பொருளுமிறந்த என்னுடைய ஐசுவரியத்துக்கும், ஒருபிரமாணமில்லாத படியினாலே என்னிடத்திலுண்டான ஐசுவரியத்தை முடிவுமட்டுஞ் சொல்லக்கூடுமோ, கூடாது ஆகையாலே கருமத்தாலுண்டான மனதையுடைய அருச்சுன. அந்த ஐசுவரியத்தினாலே சில ஐசுவரியஞ் சிறப்பாயிருக்கின்றதைச் சொல்லுவேன் கேளென்றுசொல்லுவார்-எ-று. * (கூடாதாவது கேட்கின்றவனுக்கு காலங்கொஞ்சமானதினாலே இந்தக்காலத்துக்குள்ளே சொல்லிமுடியாதென்பது.) ()

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

ஓதிற்பெருகும்பூதங்கட்கெல்லாமிதயத்துள்ளவனுன்... ...*
பேதித்திடும்பப்பொருட்கெல்லாம்பிறப்புநிலைகேடாவேனு...*
ஞாதித்தியரில்விஷ்ணுநான்மருத்தேவர்களில்மரீசுநான். ...*
சோதிக்கதிரிலிரவியஞ்சுவென்றுசொல்லப்படுவேனுன் ... *

(இ-ள்.) என்னுடையஐசுவரியத்தைச்சொல்லில் அளவற்ற அச்சுப்பேதங்களாகப் பெருகப்பட்ட சகலபூதசீவராசிகளுக்கெல்லா மிருதயத்திலிருக்கின்றவன்நான் அனேகபேதமாகப்பட்ட இந்தச்சீவன்களுக்கெல்லாம் பிறப்பும் நிலைமையும் நாசமுமாகின்றவனுன் ஆதித்தரில் விஷ்ணுநான் வாயுதேவரில்மரீசுநான் பிரகாசமுள்ள சோதிகளிற சூரியனென்றுசொல்லப்பட்டவனுன்-எ-று. (யகூ)

கலிநிலைத்துறை.

சந்திரனுனுண்மீனிற்சாமநானுன்மறையி ... ...*
னிந்திரனுன்தேவர்களிந்திரியங்களின்மனநா ...*
னெந்திரமாமுருவுகளிற்சேதனநானுருத்திரரின் *
மந்திரமாஞ்சங்கரனுனியக்கரில்வைச்சிரவனுன் *

(இ-ள்) நக்ஷத்திரங்களிற் சந்திரனுன் நாலுவேதங்களிற் சாமவேதம் நான்தேவர்களிலிந்திரனுன்இந்திரியங்களில் மனதுநான்பிறந்திருந்துசுழலப்பட்டரூபங்களில் அறிவுநான் ருத்திரரில் மந்திரமானசங்கரனுன் இயக்கரிற்குபேரனுன்-எ-று. (உச)

மலைகளின்மாமேருநான்வசுக்களிற்பாவகனுன்போர்த் *
தலைவர்களில்றுமுகனுன்சலநிலையிற்சாகரனு... ... ...*
னிலையமிலாயாகத்திற்செய்யாகமாவேனு.............*
னிலையுடையவெனுமவற்றிலிமவானுய்நிற்பேனுன் ... *

(இ-ள்.) மலைகளில் மகாமேருநான் - வசுக்களிலே பாவகன்நான்- சேனாதிபதிகளிற் சுப்பிரமணியனும்- தண்ணீர்நிறைந்த இடங்களிற் சமுத்திரம்நான்-அழிவில்லாத மந்திரத்திற் செபமாகவாகின்றவனும் - நிலையாயிருக்கிற தாபரங்களிலும் பர்வதமாகவிருக்கின்றவனும்-எ-று. (கரு)

பெருமுனிவர்ப்பிருகுநான் புரோகிதரிற்பிரகஸ்பதிநான்... ... ...*
மருவியவாக்கரத்தோம்நான் மரங்களிலச்சுவத்தநான்... ...*
பொருவரியநாரதனுந் தேவர்முனிவரிற்.............*
திருவியகந்தருவர்களிற் சித்திரரதனுநான்... ... ...*

(இ-ள்) மகாரிஷிகளிற் பிருகுமுனிநான் - புரோகிதரிற் பிரகஸ்பதிநான்-சகலத்திலுங்கலந்த வசனங்களில் ஓங்காரம் - மரங்களில் அரசுநான்-தேவரிஷிகளில் ஒப்பில்லாத நாரதமுனிநான்-அழகினைந்த கந்தருவர்களிற் சித்திரரதனுநான்-எ-று. (கசு)

சித்தர்களிற்கபிலமுனி திரைகடலிலேசெனித்த........ ...*
வுத்தமமாங்குதிரையினை யானென்றேயுணர்கண்டா.........*
யத்தமுடைவிலங்குகளின் யானையிராவதமாவேன் ... ...*
வித்தகமானிடப்பிறப்பில் வேல்வேந்தராவேனான்... ... ...*

(இ-ள்) சித்தர்களில் கபிலமுனிநான் - குதிரைகளில் அலையையுடைய திருப்பாற்கடலிலேபிறந்த உத்தமமான உச்சைசிரவமென்று பெயரையுடைய குதிரை நானென்றே யறிகண்டாயருச்சுனா, கையையுடைய மிருகமான யானைகளில் அயிராவதமாகின்றவனும், திறமையுள்ள மனிதப்பிறப்பிலே வேலையுடைய ராசாவாகிறவனும்-எ-று. (கஎ)

வேறு விருத்தம்.

படைகளில்வச்சிரம் பாம்பில்வாசுகி........... ... ...*
நடைதருமனந்த னாகர்தங்களிற்...................... *
கொடைபயில்சுரபிகோ குலத்திற்கூறிய...............*
வடைவொடுமிவையெலாம் யானென்றேயறி... ... ...*

(இ-ள்.) ஆயுதங்களில் வச்சிரம்நான், பாம்பில் வாசுகிநான், நாகங்களிலேநடக்கப்பட்ட ஆதிசேஷன் நான், பசுக்களிற் கொடுக்கின்ற கொடைபொருந்திய காமதேனு நான் என்றேயறியருச்சுனா எ-று. * (கூறிய வடைவோடும் இவையெல்லாம் யானென்றறிவதற்கு உபாயமே யுள்ளே காண்க.) (கஅ)

வருணனுமியமனும் பலவிலாளியும்.....................*
பெருமைசெய்யசுரரிற் பிரகலாதனும்............ ... ...*
மிருகையிலலங்கனும் வாவென்றும்யானெனச் ... ...*
செருமலேதாவுறாய் தெரியக்கேளுவாய்... ...,, ...*

(இ-ள்) ஜலவாசிகளில் வருணனும், தெண்டிக்கிற வர்களி லியம னும், கொல்லுகின்றவர்களில் மகாமேருவை வில்லாகவுடைய சிவனும், உலகத்தார் பெருமைசெய்யப்பட்ட அசுரர்களில் பிரகலாதனும், இம் மை மறுமை இரண்டிலும் என்னுகின்றவர்களுடைய இலக்கமும் நா னென்று தெளியத்தக்கதாக நன்றாகத்தேறுவாய் சண்டைமிகுந்துசெய் யப்பட்ட தோளையுடைய அருச்சுன-எ-று. (௰௯)

பொரரவருகருடன்யான் புள்ளினமாக்களில்... ... ...*
விராவருமடங்கலுன் வாயுவேகநா.................. ...*
ளிராமயனெறிபடை வீரர்தங்களிற்............ ...*
கராவுநான்மீன்களி லாற்றிற்கங்கைநான்...... ....*

(இ-ள்) பட்சிகளில் ஒப்பில்லாத கருடன் நான், மிருகங்களிற் கிட் டப்போகக்கூடாத சிங்கம்நான், வேகத்தில் வாயுவேகம்நான், வீசப்ப ட்ட ஆயுதவீரர்களில் ரகுராமன்நான், மீன்களில் முதலைநான், நதிகளி லே கங்காநதிநான்-எ-று. (௨௰)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

மிக்கசொற்றொகையனைத்துநானரிய விச்சையிற்பிரமவிச்சைநா ... ...*
னக்கரங்களிலகாரநானழிவில் காலநானதுவுமன்றியே............ ......*
தக்கதொத்துவசபாசநானிருவி னைப்பயன்கடருவோனுநா...... ......*
னுக்கமன்னுயிர்களைக்கொல்வோனுமவை யுற்பவஞ்செய்திடுவோனுநான்

(இ-ள்) மிகுந்தசொல்லுடைய தொகையெல்லாம் நான், வித்தையிற் பிரமவித்தைநான், அட்சரங்களில் அகரம்நான், காலங்களில் அழிவில் லாத காலமான அட்சயகாலம்நான், அதுவுமல்லாமல் மயக்கங்களிலேத குமான தொந்தமுள்ள வசப்பட்ட பாசம்நான், புண்ணிய பாபத்தினு டைய பலன்களைத் தருகின்றவனும்நான், நிலைமையான ஜீவன்களை நிலை மைகெடக் கொல்லுகிறவனும் அந்தச்சீவர்களைப் பிறப்பிக்கச் செய்கிறவ னும் நான்-எ-று. (௨௧)

பெண்களிற்புகழ் திருச்சொன்மேதைபொறை திண்மையேசு மற மென்னவே, யெண்பகுத்தவெழு வோருநாளிதுவாறில்வந்தவிளவேனி லியா, னண்பனற்பெரிய சாமமோனுரிய சாமமேழினு நலத்தின்,மண் களிற்பெரிய திங்களிற்புகழ நின்றமார்கழியுமற்றுநான்.................*

(இ-ள்) பெண்களிலே கீர்த்தி லட்சுமி, வாக்கு தெளிவு பொறு மை திடசித்தம் எல்லாருஞ்சொல்லப்பட்ட தருமம் இப்படியென்று எ ண்ணப்பட்ட வகுப்புள்ள ஏழுபேரும் நான், ஆறுரிதுவில்வந்த வசந்த ரிதுநான், சாமவேதத்திலுள்ள ஏழு உபநிஷத்திலே சாந்தொக்கிய உப நிஷத்துநான், பூமியில்பெருமையுள்ள மாதங்களிலே நன்மையினாலே மார்கழிமாதமும மற்றமாதங்களும்நான்-எ-று. (௨௨)

கலிவிருத்தம்.

கல்லாருந்தோளினாய் கவிகளிற்காயத்திரிநான்..............*
ஜெல்லாயங்களிற்சூது துணிவோர்பாற்றுணிவுநான் ... ...*
வெல்வார்பால்வென்றிநான் மிகுதிறலோர்பாற்றிறம் ... ...*
நல்லார்பானன்மைநான் ஞானிகள்பால் ஞானமுநான்......*

(இ-ள்.) கல்லையொப்பான தோளையுடைய அருச்சுனா, கவிகளிலே காயத்திரிநான், பகையுடைய ஆதாயங்களிற் சூதுநான், துணிவுடையவர்களிடத்திலே துணிவுநான், ஜெயிக்கின்றவர்களிடத்திலே ஜெயம்நான், மிகுந்த திறமையுடையவர்களிடத்திற் றிறமைநான், நல்லவர்களிடத்தில் நன்மைநான், ஞானிகளிடத்தில் ஞானம்நான்-எ-று. (௨௩)

கண்ணனுநானியாதவரிற் கவிகளில்வைத்துவசனும் *
நன்னனிசேர்பாண்டவரிற் றனஞ்சயனாகின்றேனும் *
விண்ணவர்கோமுனிவரில் வேதவியாசனாமே ...*
பண்ணரியமறைகளி லியம்பமௌனமாவேனும் ... *

(இ-ள்) யாதவர்களில் ஸ்ரீகிருஷ்ணனும்நான், கவிகளிலே சுக்கிரனும் குளிர்ந்த தயவுசேர்ந்த (பாண்டவர்களில்) அருச்சுனனாகின்றவனும், தேவரிஷிகளில் வேதவியாசனும்நான், எல்லா அரிதான அளவற்ற ரகசியங்களிலே மௌனமாகின்றவனும்நான் எ-று. (௨௪)

(அறுசீரடி யாசிரிய விருத்தம்.)

இரும்புவனத்திற்கும் வித்துநானெனைப்போக்கி யியாதுமில்லை வருந்தினுமென்பெருமைக்கும் வரம்புரைக்கமுடியாமை சுருக்கிச்சொன்னேன், பெருந்திருவையுடையனமெய்ப்பெருமுயற்சி யனவென்றுமே சமைந்த,வரும்பொருள்களனைத்துமென தொளியிலுலவருவனவென்றறிகநீயும்.....................*

(இ-ன்) பெரிய பிரபஞ்சத்துக்கெல்லாவற்றுக்கும் பீஜம்நான், என்னைத்தவிர ஒன்றுமில்லை என்னுடைய பெருமைக்கு எல்லைசொல்ல வருந்தித் தவசு யோகஞ்சாதித்தாலும் முடியாததைத் தொகையாகச் சுட்டிச் சொன்னேன் (பெரியசிறப்பையுடைய நிச்சயமான பெரிய முயற்சியையுடையது) என்றுசொல்லப்பட்ட இந்த அரியபொருள்களெல்லாம் என்னுடைய பிரகாசத்திலே பிறந்தனவென்று நீயறிக்கடவை என்றவாறு(நீயுமென்றது என்னைப்போலே நீயுமறியென்பது,) (௨௫)

பலவினியுரைத்தெனிக்குப் பல்லுயிரனைத்துமெல்லா ... ...*
வுலகமுமொடுங்கிநிற்ப தென்னொளியோரிடத்திலுள்ளே ......*
கலைவலாயிவரோடென்றன் கஞ்சனாருயிர்போக்குஞ்ச ...*
வலைகடல்வளராதேபோர் தாபர்பால்வளர்க்கபெம்மான் ... *

(இ-ள்) இப்படிப்பலதரஞ்சொல்லி என்னபிரயோசன மிந்தப் பலஜீவன்களுஞ் சகலபிரபஞ்சமு மிந்தசண்டைக்குவந்து நிற்கிறவர்களுடனே என்னினுள்ளே யொருமிடத்திலொடுங்கிநிற்பது சாஸ்திரவல்லபமுள்ள அருச்சுனு வென்றுசொன்னார் கஞ்சனுடையசீவன்போய் அவன் சாகவேண்டி அலையையுடைய திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளாமற் பூமியிலேபோ விடையரிடத்தில் வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ண சுவாமி என்றவாறு*(இவரோடிந்தப்பல்லுயிரொன மாறுக) (உகூ)

க0-வது-விபூதிவித்தாரயோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-ல-க்கு-கூடியசெய்யுள்-உகூச.





உ

பதினோராவது

விசுவரூப அத்தியாயம்.



அறுசீரடி யாசிரிய விருத்தம்,

சுருளார்கின்றதுழாய்முடியாய் சொல்லுமனமுந்தொடர்வரியா ...*
யுருளார்சகடமிறவுதைத்தா யுயிர்கட்கெல்லாமுள்ளுயிரே.........*
யிருளார்பதத்தேகிடந்துழைக்கு மென்பாலிரங்கிநீயிசைத்த ...*
வருளாரமுதென்சேவிகளா லாரப்பருகியறவொழிந்தேன் ... ...*

(இ-ள்) அருச்சுனன் சொல்லுவது சுழியாகக்கொண்டையிலமர்ந்திருந்த திருத்துழாய்மாலை முடியையுடையவரே சொல்லுமனதுந்தொடரவெட்டாதவரேஉருளையுந்தசகடாசுரனைச் சாகஉதைத்தவரேசகலசீவன்களுக் கெல்லா முள்ளாகவிருக்கிற சீவனே அஞ்ஞானமென்னுமிருளையுடைய பிறவியிலே கிடந்து உழைத்துக்கொள்ளப்பட்ட என்னிடத்திற்கிருபைசெய்தருளி நீர் உபதேசித்த கிருபைநிறைந்த அமுர்தத்தைஎன்னுடைய காதுகளாகிய வாய்நிறையக்குடித்துக் கிலேசந்தீர்ந்தேன்-எ-று

தெரியாவனைத்தேயெய்ந்து மா[illegible] திருப்பவே ....*
ஙரியமெய்யேயமைப்பத்துக் காணவேண்டுமெனவேண்டாய் ...*
பரியாகிலுக்[illegible] பார்த்தன் வினவப்புராதனையே
கரியானவனுக்கப்பரிசே காட்டவேண்டிக்கட்டுரைப்பான்...*

(இ-ள்) இவைத்தம் கரிதான சுவாமி யாருக்குந் தெரியாதபடி எங்கும் பரிபூரணமாகி [illegible] திருக்கோலம் [illegible] அடியேன் பார்க்கலாமாவென்று அனபிறுவே [illegible]கப்பட்ட மனதுடையே அருச்சுனன் கேட்க அவனுக்கு அந்தப்படியே காட்டவேண்டி பழைய வேதங்களாலே தேடப்பட்ட பரமாத்மா[illegible] என்றவாறு, (௨)

க[illegible]

என்[illegible]ரியத்தைய [illegible] ......*
ப[illegible]யொருத்தர் [illegible] ...... *
[illegible] ....*
கண்[illegible]பாரி தாயனுகாணாய் ....*

(இ-ள்) இலக்கத்திலுடைய சுபாவத்திலேயே எண்ணிலெங்களையிறந்து அப்பாற்பட்டது ஒருத்தர்பார்க்க[illegible]படைத்தபோது ப்ருதுவி அப்பு தேயு வாயு வென்று [illegible]பூதங்களையுமடக்கின ஆகாயத்துடைய சுபாவமானவிஸ்தாரமானது கொஞ்சமாய்ச் சுருங்கத் தங்காத விஸ்தாரமானது கண்ணுலேபார்த்து அளவிட அரிதானது இப்படிக்கொத்த திவ்வியசொருபத்தைப்பார்ப்பாய்-எ-று. (௩)

மருத்துவர்சூரிய ரட்டவசுக்க... ... .*
ருருத்திரரென்னிடை யேயுளரியாரு.. ....*
மருத்திசெய்யற்புத மாயவரோகங் ....*
கருத்துறவென்னிடை யேயுளகாணாய். ... .*

(இ-ள்) அசுவனிதேவர்கள் சூரிய ரஷ்டவசுக்கருருத்திரரிவர்கள் முதலானசாசிவங்கள் என்னிடத்தி லிருக்கிறார்கள் எல்லாரும் மனதுபொருந்த அன்புசெய்யப்பட்ட ஆச்சரியமான அனேகமாகிய அசாசிவங்கள் என்னிடத்திலே யிருக்கின்றன கண்டாயருச்சுனா-எ-று. (௪)

என்றருளிச்செய்தவன் கணிரசுரி ... ...*
நன்றறிகிற்கென ஞானமளித்திட் ... .*
டன்றவனுக் கருள்செய்வகையாயே ... .*
நின்றவருக் கறியாவகைநின்றான் ....*

(இ-ள்) இப்படிச்சராசரங்களும் என்னிடத்திலே யிருக்கின்றன யான் அருளிச்செய்த அந்த அருச்சுனனுடையகண்களாலே காணப்பார்த்தறியமாட்டாதென்றும் ஞானக்கண்களைக்கொடுத்து அப்போது அந்த அ

ருச்சுனனுக்கு அருளிச்செய்தபடியே சொரூபமாகி அருச்சுனனல்லாம ல் நின்ற (பாண்டவர்) கௌரவரா யிருக்கிறவர்களுக்கு மறியாதபடிக்கு நின்றார்-எ-று ❋ (அன்றருளிச் செய்வகை என்றதனுலேசாஸ்திர புராணங்களினுல் முன்சொன்ன திவ்விய ரூபங்க வருபமல்லாமல் அப்போது சொன்ன பிரம சொரூபமாகி நின்றுரென்பது இன்னமும் அனேக விதங்களில் அன்றருளிச்செய்த விதப்படி என்றுமாம்) (௫)

கலிவிருத்தம்.

பரிந்தினிதுரைப்பதெனவப்படிவமேலாய் ......❋
விரிந்துலகமெங்கணும் விளங்கொளியினுலே...❋
யெரிந்தனதிசைப்புறமதின்னவெனவேதுந்......❋
தெரிந்திலர்கள்வானவர்கடானவர்திகைத்தார் ...❋

(இ-ள்) கேளுந் திருதராட்டிர மஹாராசாவே அந்த விசுவரூபத்தைப்பரிந்து நன்றாகச்சொல்லுவதென்ன உலகமெங்கு மவருடையசொரூபமேயாய்ப்பரந்தது அந்தச்சொரூபம்விளங்கப்பட்டசோதியினுலேபத்துத்திக்குமிருந்துபிரகாசித்தது அந்தப்பிரகாசத்தைப்பார்க்கமாட்டாமற் தேவர்களானவர்கள்திகைத்து அந்தச்சோதியானது இன்னதென்று ஒன்றுந் தெரியாமல் வெளிச்சப்பட்டு நின்றார்கள்-எ-று. ❋ (தேவர்கள் திகைத்துந்திக்குவிளச்சோதி கம்மிக்கொண்டதுஞ்சஞ்சயனுக்குத் தெரிந்தது வியாசமகாமுனிவரத்தினுலேயும் அருச்சுனனுக்குத் தெரிந்தது ஸ்ரீகிருஷ்ணசுவாமிகொடுத்த திவ்யதிருஷடியினுலுமென்றது அருத்தாபத்தி.) (௬)

கலி விருத்தம்.

அங்குமால்கொள்கோலமிங்களந்துகூறலாகுமோ ... .❋
கொங்குண்மாலையாடைசாந்துகொண்டகோலமேவியே ... ❋
யெங்குமாகியெல்லையின்றியெண்ணில்கோடிபல்கதிர் ... ...❋
மங்குல்வானில்வந்துதித்ததொக்குமற்றதன்கணே... ......❋

(இ-ள்) கேளுந் திருதராட்டிரமகாராசாவே அந்தக் குருபூமியிலேஸ்ரீகிருஷ்ணசுவாமிகொண்ட விசுவரூபத்தையிங்கேயளவிட்டுச் சொல்லலாகுமோ ஆகாது பூந்தாதுக்கள்நிறைந்த திவ்வியமாலே பீதாம்பரம் திவ்வியசந்தனமிவைகள்தரித்துக்கொண்ட சொரூபத்தைக்கூடி எங்குந்தானுகி இம்மட்டென்று மட்டில்லாமல் அளவில்லாத கோடி அனேகசூரியர்கள் மேகங்கள் சஞ்சரிக்கப்பட்ட ஆகாயத்தில்வந்து உதையமானதையொப்பான சோதியுள்ளதாகும் அந்தச்சொரூபத்தினிடத்தில்-எ-று. ()

கலிவிருத்தம்

ஏய்வகையதாள்களொடுதோள்களுமனேகஞ் ...❋
சாய்பெறவணிந்தவணிதானுமுனனேகம் ... ...❋
வாய்களுமனேகமொளிர்வாண்முகமனேக ......❋
மா . . னேகமெழுமற்பசுமனேதம் ... .❋

(இ-ள்) அந்த விஸ்வரூபத்திலிருந்து மிகச்சிறப்பு அநேகந் திருவடிகள் அதனுடனே தோள்களு மனேகம் சாயைபெற முன்னே வரிந்த திவ்வியாபரணங்களுமனேகம் திருவாய்களுமனேகம் பிரகாசிக்கப்பட்ட திருமுகமனேகம் ஆயுதமனேகம் எழும்புகிற ஆச்சரியமனேகம் -எ-று.

அவ்வகையாமாடமாமர்கோலமதனுள்ளே ....*
செவ்வகைகயவாயபொருள்யாவுமெதிர்காண......*
வெவ்வகையுமேறினவுமெவ்வகையுமேய்ச்...... ......*
செய்வதறியாவிசையனிவ்வகைசெய்தானால்......*

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணசுவாமியமர்ந்தசொரூபமப்படிக்கொத்ததுகேளுக் திருதராட்டிரமகாராஜாவே அந்தச் சொரூபத்துக்குள்ளே எந்த விதங்களாகிய சகலபொருள்களும் எதிராகக்கண்டு தப்பிப்பிழைக்கின்ற விதத்தையுடையவனாகி மனன்றுசந்தோஷமிகுதியாக அதனுலே செய்வதொன்றறியாத அருச்சுனனிந்தப்படிசெய்தான்.எ-று (௯)

தொழும்புகழுமெய்யடிர்தனைக்குழுமியிர்சோரு... ......*
மெழும்புவானேமெழுவனென்றியெதிர்காணன்...... ...*
விழுங்கயலுவாவோனைவிருப்பமெய்மயங்கா...... ......*
அழும்பரியுமென்செய்தனனென்றுமிடலாமால்... ... ...*

(இ-ள்) தெண்டனிடுவான் தோத்திரம்பண்ணுவான் சரீரத்துமயிர்ப்புளகிதமாகி நடுங்குவான் சிலவேளை சோருவான் எழும்புவான் சகலப்பிரபஞ்சமும் அந்தக்கிருஷ்ணசுவாமியிடை யல்லாமல் வேறொன்றையுமெதிராகக்காணான் அந்தச்சொரூபத்தை விழுங்கப்படுகின்றவனென்னத்தக்கதாகவாசைப்படுவான் சரீரந்தெரியாமல் மயங்கி அழுவான் இரங்குவான் இவைகளிலென்னசெய்தானென்றறியாமல் எல்லாஞ்செய்தான்-எ-று. (௰)

அஞ்சிமெய்நடுங்கமிகவன்பனுமனைத்தே...... ....*
நெஞ்சமறிவுக்குறைபநின்றுதொழுதேமோ... ... ...*
புஞ்சுகனைகண்டனனெனவுவகைகூறும்......... ......*
வெஞ்சுடர்கொலென்றனன்வெயர்க்கும்வெயரெய்தான் *

(இ-ள்) பயந்து வெயர்வை யடைந்த அருச்சுனன் இந்தச்சொரூபத்துக்குப் பயந்து சரீரநடுங்கி மிகுந்த அன்பை மனதிலே யடைவான் இருதயமும் அறிவுங்குறைந்துருக எதிரே நின்றுகைகூப்புவான் பிறவிக்கடலுக்குத்தப்பிப்பிழைத்துக் கரைகண்டேனென்று சந்தோஷமிகுதியாவான் உஷ்ணமுள்ள சோதியோவென்றான் சரீரம் வியர்வையுண்டாகும்-எ-று. (௰௧)

மன்னுறவணங்குமயிர்க்குச்செனநிரைக்கும்... ... ...*
கண்ணுமனமுங்களையநின்றுகைகுழுமத்தே...... ......*

யென்னுறு முலகங்களையுமியாவனையுமேனுட் ... ...*
பன்னுமவன்முன்புசிலசின்றுபகர்வுற்ருன்... ....*

(இ-ள்.) தன்னுடையசரீரம் பூமியிலே படத் தெண்ட னிடுவான்மயி ர்க்குச்செறிந்து நிறைபாகநிற்கப் புளகிப்பான் கரையாத கன்னுங்கரை ந்து ஆனந்தக்கண்ணீரோடக்கரையாதமனதுங்கரைந் துருகநின்றுகைகூ ப்பியென்னைப்பட்ட சகலபிரபஞ்சத்தையுஞ் சகலசீவராசிகளையும் பூர் வகாலத்திலே சிருஷ்டிக்கப்பட்ட அந்த ஸ்ரீகிருஷ்ணசுவாமி முன்னேநி ன்றுசிலவசனஞ்சொல்லுவான்-எ-று. (௰௨)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தேவருமவனங்குந்தேவ னின்றிருக்கோலத்துள்ளே ... ...*
யாவருமெல்லைகாணுப் பொருளெல்லாமிசையக்கண்டேன்..*
மூவரின்முதற்புத்தேளை முனிவரரோடுங்கண்டேன்.........*
மேவருநாகங்கண்டேன் விண்ணவர்குழாமுங்கண்டேன் ...*

(இ-ள்) மனிதர்வணங்கப்பட்ட தேவர்களும் உம்முடைய அழகிய சொருபத்துக்குள்ளே எல்லாரும் எல்லைகாணுத பொருள்களெல்லாம் இசையக்கண்டேன் திரிமூர்த்திகளில் முதலான தெய்வத்தை மகாமுனி களுடனுங்கண்டேன் சேர அரிதான பாதாளத்துப்பாம்புகளைக்கண்டே ன் தேவலோகத்துத் தேவர்களுடைய கூட்டங்களையுங்கண்டேன் என்ற வாறு. (௰௩)

கண்களும்வயிறுந்தோளு முகங்களுங்கருதிநோக்கி........*
லென்பலவுடையவாயு வுருவுகளனேகங்கண்டேன்... ......*
றன்கதிர்முடியுந்தண்டுஞ் சக்கரப்படையுமேந்தி..........*
யொன்கதிரனலோடொன்று யிளையநின்னுருவினுள்ளே ... *

(இ-ள்.) குளிர்ந்த பிரகாசமுடைய கிரீடமுந் தெண்டாயுதமுஞ் சக்க ராயுதமுந்தாங்கி அழகிய சூரியர் அக்கினிகளுடனே யொன்றாய்க்கலந் ததை யொப்பான உம்முடைய சொருபத்தினுள்ளே கண்களும்வயிறு களும் தோள்களும் முகங்களும் விசாரித்துப்பார்க்கிலிலக்கம் அனேக முண்டானதாகிய ரூபங்க ளனேகங்கண்டேன்-எ-று. (௰௪)

கலி விருத்தம்.

இந்தவுருவெந்தவுருவென்றறிகிலேனு...... ......*
னந்தமறியேனடுவுமாதியுமனைத்து.......... ......*
நந்தலறியாததனைநான்மறையுநாடித்...... ... ...*
தந்தபொருளாயதனைமாயைதருசார்வை... ..... *

(இ-ள்) இந்தச்சொருபத்தை யெந்தச்சொருப மென்றறியமாட்டேன் ஆதியும் நடுவு மந்தமு மெல்லாமறியேன் நாசத்தை யறியாததை நாலு வேதமுந்தேடித் தரப்பட்டவேதாந்தப்பொருளாகியதை மாயையைத்தர ப்பட்ட சார்பானதை-எ-று. (௰௫)

என்றுமுளதாகியதனை யியற்றுகருமமெல்லா............*
நின்றுநிறுத்தவதை நிறுத்துநிறைவாத்தை ....*
சென்றுகுறையாதநிறை யென்னுடையசேர்வை.........*
கன்றுதொடராபசு நின்றனைநிர்கண்டேன்... ... ...*

(இ-ள்) என்றைக்கு மிருக்கிற தாகியதை இயல்பான கருமமெல்லாம் தப்பாதபடிக்கு நின்று நிறுத்தப்பட்ட தருமமார்க்கமான செல்வத்தைக் காவற்சென்று குறையாத நிறைவை இப்படிக்கொத்த சொரூபத்தை நான் சேவிக்கப்பட்ட வென்னுடைய பழமையசேர்வையைக் கன்றைத் தொடர்ந்தபசுவைப்போல நின்னைத்தொடருகின்றதை யும்முடைய முன்னேகண்டேன் எ-று. * (இத்திருமென்றபாட்டு மென்றுமுதாதி தென்பாட்டிற் றொடர்பு) (கசு)

வலந்தருதிடத்தொடுவருங்கதிரவர்தே...... ....*
மலர்ந்தெழுவிழிப்பதை மடுங்கனநெருப்பை... ... ...*
மலர்ந்தெழுமுகத்ததை மயக்கவுலகெங்கும்... ... ...*
கலந்துசடருந்ததைகவியந்தனைதிர்கண்டேன்... ......*

(இ-ள்.) பராக்கிரமத்தையுடைய திருமார்புடன்உலகத்தில் வரப்பட்ட சூரியர் - சந்திரர் பரந்தெழும்ப விழிக்கின்ற கண்களைச்சுடப்பட்டஉஷ்ணத்தையுடைய அக்கினியைப் பரந்தெழும்புகிற திருமுகத்தையுடையதை வெளிச்சப்பட்டுப் பிரபஞ்சமெங்குந்தெரியாமல்மயக்கந்தந்துசோதியெரிகிறதை இப்படிக்கொத்தசொரூபத்தைஎதிரேகண்டேன்அதிசயித்தேன்-எ-று. * (திருமார்புடனேதிருக்கண்ணைத் திருமுகத்துச் சோதியைககண்டேனென்பது.) (கஎ)

நிலத்தினொடுவானுறநிமிர்ந்துதிசைசேர்போய்... ...*
விலக்கமறநீயுனது மேனியைவிரித்தா.................*
லலக்கணடையாதவர்க ளாரடையவையா... ... .*
கலக்கமுறுகின்றவுல கங்களிவைகாணாய்..........*

(இ-ள்) பூமியினுடனே ஆகாயமெங்கும் நிறைந்து திக்குகளிலேசெவ்வையாய்ப்போய் விலக்கப்பட்ட இடமில்லாமல்உம்முடையதிருமேனியை நீ விரித்தால் துன்பமடையாதவர்களார் ஐயா, எல்லாருந் துன்பமடைந்தவர்களே, அதினாலே திரிலோகங்களுங் கலக்கப்படுகின்றது இதைப்பாரும்-எ-று. (கஅ)

வணங்கியிமையோர்களொடு மாதவர்வழுத்திக்.........*
கணங்கொளவியந்துபுகழ் சித்தரதுகண்டே...........*
நுணங்கவுயிர்தானவர்கள் கந்திருவருள்ளோ... ... ...*
ரிணங்கியினைதென்றறிகி லாரையெதிர்கண்டேன் ......*

(இ-ள்) தேவர்களுடனே பெரிய தவமுனிகள் உம்மை வணங்கவேண்டித் தோத்திரம்பண்ணிக்கொண்டு கூட்டங்கூடி அதிசயித்துத் தோ

த்திரம்பண்ணுகிற சித்தர்கள் ஒன்றுந்தெரியாமல் மயங்கிப்பெருமூச்சு விடுகிற அசுரர்கள் கந்தருவர்கள் முதலாயுள்ளவர்கள்கூடி இன்னமென்தென் றறியமாட்டாதவர்களை எதிரேகண்டேன்-எ-று. (௨௨)

வானடையவிம்மிவரு ணம்பலவுரித்தாய்ப்...... ....*
பேயினடையாயபிறை போலெயிறுபேழ்வாய்... ....*
தானுடையவாய்பன முகம்பலதழைக்கும்... ....*
யானடையலாம்வகைய தன்றியுருவெந்தாய்............*

(இ-ள்) ஆகாயமெல்லாம் நெருங்கி நிறைந்து அனேகம் வானங்களை யுடையதாய்ப் பேயினுடைய சுபாவம்போலவாகிய பிறையிரண்டொத்த கோரைப்பல்லுகளும் பெரிய ஆழமுள்ளவாய்களும் தனக்குடையதான அனேகவாய்களு மனேகமனதுகளும் அனேகமுகங்களும்அகோரமாக வளருகின்ற அந்தச்சொரூபம் நான் சேரலாம்படி யானதல்ல சுவாமி எ-று. (௨௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தஞ்சமிவ்வுலகுக்கெல்லா மாயனின்றன்மைகண்டே *
னஞ்சனனென்றுமாய வுருவுறக்காணக்காண... ......*
நெஞ்சமுநடுங்கிநிற்க நிலையிலேன்றிசையுங்காணே ...*
னஞ்சலென்றருளவேண்டுமகிலமுமாயவெந்தாய்......*

(இ-ள்) சகலமு நீயாகிய சுவாமி, இந்தப் பிரபஞ்சத்துக்கெல்லா மா தாரமாய் நின்ற சுபாவத்தைக்கண்டேன் - பிழைத்தேனென்று மாயாதே கத்திலுள்ள மனதிலே தங்கத்தக்கதாகப் பார்க்கப்பார்க்க மனது நடுங் குகின்றது நிற்கநிலையில்லை ஓட ஒருதிக்கையுங்காணேன் ஆகையாலேப யப்படாதேயென் றருளிச்செய்யவேண்டும்-எ-று. (௨௧)

நூற்றுவர்தாமுந்தங்கள் சேனையுமவர்கட்காகி.........*
யேற்றெதிராசர்தாமு மென்படைதானமுந்தன் ... ...*
கூற்றுறழெயிற்றிற்பட்டுக் குறையுடலாகநின்றன்... ...*
காற்றுடன்றீயினன்ன முகங்களில்வீழக்கண்டேன் ...*

(இ-ள்) கௌரவர்கள் நூறுபேரும் அவர்கள்சேனையும் அவர்கள்நட த்தி யெதிராகநின்று எதிர்த்த ராசாக்களும் எங்கள்சேனையு மும்முடை ய யமனையொப்பான தந்தங்களிலேபட்டு நறுக்குண்டு குறையுட லாகி றதற்குக் காற்றிலிருக்கிற அக்கினியையொப்பான உம்முடைய முகங் களிலே விழக்கண்டேன்-எ-று. * (அவர்கட்காவேற் றுவதிராசரொன்று பாடமோதில் அவர்களுக்காக வெதிராக வெதிராகவெதிர்த்த அரசரொன் பதும் என்படை யென்பதனு லெங்களைத்தவிர வென்ற கருத்தாபத்தி()

ஒருநதிகளெல்லாமொன்கடற் றலைந்தாற்போலப் ......*
போகும்பொருள்களெல்லா முன்றன்வாய்புகுதக்கண்டேன் *
தீதனிற்விட்டிற்பாய்ந்தாற் போற்றிருமுகங்களுள்ளே ... *
மாதவவுயிர்களெல்லாம் விழுந்துமாய்தலுங்கண்டேன் ...*

(இ-ள்.) இத்தனையென்றுசொல்ல அரிதான நதிகளெல்லாம் அழகிய கடலைக்குறித்தாற்போலப் போகப்பட்ட பொருள்களெல்லாம் உமக்குள் ளே புகுதக்கண்டேன் நெருப்பில் விட்டிற்பூச்சி பாய்ந்தாற்போல உம் முடைய திருமுகங்களுக்குள்ளே சகல சீவன்களும்விழுந்து சாகிறதுங் கண்டேன் மாதவா சுவாமி-எ-று. (உஅ)

ஒளியினிலுலகமெல்லா மெரித்தலையுன்போதாமல் ... *
வெளியிலேநீட்டிநீட்டி வெறுஞ்சுவையெடுக்கின்றாய் ...*
தெளியிலேனுன்னையுந்தன் செய்கையுந்தெரிக்கமாட்டேன் ...*
வாரியிறைவாநீயெந்தன் னுள்ளவாறருளிச்செய்வாய் ......*

(இ-ள்) சோதியிலே சகல பிரபஞ்சத்தையும் விழுங்கியெரித்துப்பொசிப் புப்போதாமல் வெளியிலே நாக்குகளைநீட்டிநீட்டி வெறுஞ்சுவையை நக் கிக்கொண்டிருக்கிற வுன்னை யின்னானென்று தெளியமாட்டேன் உன் செய்கையையு மின்னதென்று தெரிந்து கொள்ளமாட்டேன் இப்படிக் கொத்த அடியேனுக்குக் கிருபையினாலே யுன்னையுள்ளபடி யருளிச்செ ய்வாய்-எ-று. (உசு)

என்றடிவணங்கிக்கேட்க யாவுமாயெல்லையின்றி ... .*
நின்றவனுரைப்பானும்மை யொழியமற்றவரையெல்லாங் ...*
கொன்றுயிர்பருகலுற்றேன் கடையுகந்தனக்குமுற ....*
வன்றுலகடையமாய்க்கு மவனியானறிநீயையா ....*

(இ-ள்) என்று திருவடிகளில் வணங்கிக்கேட்க எல்லாமாகி எல்லையி ல்லாமல்நின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொல்லுவார் ஐயா உங்களைத்தவிர மி ன்றவர்களையெல்லாங் கொன்று சீவனைக்குடிக்கிற காரியத்தைய்ப்போ துசெய்கிறேன் இது நான்பண்ணுகிறகாரியம் உகாந்தமுடிகிற அன்றை க்குச் சகல பிரபஞ்சத்தையுங் கொல்லுகிற காலசொரூபன் நான் என்னை யின்னானென்றும் நான்செய்கிறகாரிய மின்னதென்றுஞ்சொல்ல வேண் டுமென்று கேட்டையே அத்தவிரவிதைச் சொன்னேன் அதை நீயறி அ ருச்சுனா-எ-று. * (அன்று என்றதனாலின்மேன்றகருத்தாபத்தி இப்போ து செய்கிற காரியத்திலும்மைத்த விரவென்றதனால் உங்களைத்துபேரை யுந் தவிர மற்றைப்பேரையென்றும் அருத்தாபத்தி வரும்) (உ௫)

கொச்சகக்கலிப்பா.

இறந்தாரேயெனக்கருதிக் கிவர்களெலாமென்றலே........*
யுறந்தானுயதுநீயே யாங்கவரைக்கொன்றுபார்...... ....*

சிறந்தாரவ்வரசினையுஞ் செகத்தினில்வாழ்திருவினையும் ...✻
பிறந்தார்கள்பெறாதபெரும் புகழினையும்பேணென்றான்......✻

(இ-ள்) இங்கேநின்ற விவர்களெல்லாரும் நீகொல்லாவிட்டாலும் என்னாலே செத்தவர்களென்றே நினை. தருமமுமதுதான், நீயே அவர்களைக் கொன்றாயாகில் சிறந்தராஜாக்களுடைய அந்த அரசையும்பிரபஞ்சத்தில்வாழப்பட்ட செல்வத்தையும் பிறந்தவர்கள் பேறாகிய பெரிய கீர்த்தியையும் ஆதரியென்றான்-எ-று. ✻ (இறந்தாரெனவென்று ஏகாரத்தினாலே நீகொல்லாவிட்டால் சாகாமலிருந்தவர்களென்று நினையாதே என்னாலே செத்தவர்களென்றே நினையென்றல் தேற்றேகாரம், நான்கொன்றதனாற்பிரயோசன மென்னவென்றுகேட்கில் நீகொன்றாற் சகல அரசும்சகலசெல்வமும் கீர்த்தியுமுனக்கேவருமென்பது.) (உசு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இவ்வகைமொழியக்கேட்ட விசையனென்செய்தானென்னில்.
கைதலமிசையலாகக் கட்டுரைகுளரக்கண்ணீர் ... .✻
பையவேமார்பிற்சோரப் பயத்தொடும்பரிவினோடும்.........✻
மைவரையெடுத்தவள்ளல் பெருமையைவழுத்தலுற்றான் ...✻

(இ-ள்) இந்தப்படி ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொல்லக்கேட்டஅருச்சுனன் எனன்செய்தானென்றுகேட்கிற்கேளுந்திருதராட்டிரமகாராஜாவேயென்று சஞ்சயன்சொல்லுகிறான் அருச்சுனன் கைகளைத் தலைமேலே கூப்பிக்கொண்டவனாகவார்த்தைகுளரக் கண்ணீர்கள் மெள்ளமார்பிலே யுதிரப் பயத்துடனும் பத்தியுடனும் மேகஞ்சூழ்ந்த கோவர்த்தன மலையைக்குடையாகவெடுத்த ஸ்ரீகிருஷ்ணசுவாமியினுடைய பெருமையைத் தோத்திரம்பண்ணவுத்தியோகப்பட்டான்-எ-று. (உஎ)

கலிவிருத்தம்.

சாயாவிமையோர் சனகாதிகடாபதரானோர் ....✻
சேயாயணியா யுனைவேரறியார்தெளியாதா ....✻
மாயாமனனே மதுசூதனனேதிருமாலே ....✻
யாயாவரசே யுனைவேரறியேனடியேனே ....✻

(இ-ள்) சாயாமலிருக்கிற தேவர்களுக்குஞ் சனகாதிபர்களுக்கும் முனிவர்களுக்கும் தூரமானவனென்றும், சமீபமானவனென்றும் உம்மை வேறொருவர்களறியார்களென்றும், மாயாமனமுடையவனே யென்றும் மதுசூதனனேயென்றும், திருமாலேயென்றும், ஆயனேயென்றும், அரசனேயென்றும், உம்மையல்லாமல் வேறொருதெய்வத்தையறியேன் அடியேனென்று தோத்திரஞ்செய்தா னருச்சுனன்-எ-று. (உஅ)

ஏகாவுருகோபிகநாதவுமையே யெனதாழிப்......... ... ...*
பாகாவிமையோர்பருகாவமுதே பரைபரனே ... ...*
நிகாவிலகீருளகேமிடவையும் தெரிகஸ்வா......... ... ...*
வாகாயமுமேயுனைவேறறியே னடியேனே...... ... ...*

(இ-ள்) ஏகமானவனே யருகனே இரூப்படாவுருவே ஏகேகுருத்து னையானவனே பாகனே தேவர்பருகாத அமிர்தமேபரமையானவனே ஐம்பூதனே உன்னையறியாமல் வேறொன்றையுமடியேனறிந்து சொன்னான் அருச்சுனன்-எ-று. (உ௯)

சாதிவினையாழிக்லேவிழுந்தா டமியேனைப்..... ... ...*
போதிதழிபாசெறியெழ்ருளைப் புனையா [illegible] ....*
சோதியுருவேயுருவேகருதிமகிமதாகைக்கூறு......... ...*
மாதிமுடிவேயுனைவேறறியே னடியேனே...... ... ...*

(இ-ள்) தீவினையென்கிற சமுத்திரத்திலேவிழுந்து இருக்கின்றஅடியேனை அழியாதமார்க்கமாய் இப்பொழுதுநின்று இரட்சித்தவென்னை யாளாயென்றும் சோதியே அருவே யுருவேசுருதியினுடையதொகைசொல்லுகிறவனே ஆதிமுடிவே உம்மையல்லாமலடியேனுக்கு வேறே யொன்றுமில்லையென்று சொன்னான் அருச்சுனன்-எ-று. (௩௰)

விருவேறுயிரோயெனவேறுலகா மெவையாவும்... ... *
தருவேமுதலேயவைபோயழிநா டமியேனே...... ...*
யருவேயுருவேயுயிரோயெனமற் றவைசேரா............*
வுருவேயுறவேயுனைவேறறியே னடியேனே...........*

(இ-ள்) இருவகையுயிரான உலகையெல்லாமுண்டாக்கின கற்பகத்தருவிற்கு வேர்முதலானவனே யென்றும் உலகத்தையழிக்கிற நாளைக்கு உச்சாகமானவனே யென்றும் அருவையுருவை யுயிரைச்சேராதஉருவே யென்றும் உறவேயென்றும் உன்னையல்லாமல் வேறொருவரையறியே னடியேனென்றுஞ் சொன்னான் அருச்சுனன்-எ-று. (௩௧)

மயலேவடிவாய்தருமாயையினான் மறையாவு... ... ...*
மியலேயிசையேயெழின்மாசுவைபோ லினியானே ...*
செயலேவுரையேமனமேமெனமற் றவைசேரா ... ...*
வயலேயறிவேயுனைவேறறியே னடியேனே......... ...*

(இ-ள்) மயக்கமேவடிவாகத்தரு மாயையினாலே மறையாவுமானவனே, இலக்கணமானவனே, இசையானவனே, அழகானவனே, மகத்தாகிய சட்சுவைபோலும் இனிமையானவனே, செயலானவனே, உரையான

வனே, மூர்மானவனே, அயலானவனே, அறிவானவனே, உன்னையல்லா மல் வேறொன்றும் அறியேனென்றான் அருச்சுனன்-எ-று. (௫௨)

ஒருநாகநடாவொருநாகமளா வுபரோதங்...... ... ...❋
கரநான்மலராலமுதாயெழவே கடைவோனே.........❋
வரனான்முகனேமறைதேடரியேமழுமான்சே...... ...❋
ரானுமவனேயுனேயோறியே னடியேனே...... ... ...❋

(இ-ள்) திருப்பாற்கடலிலே மேருவை நாட்டி ஒருநாகமேலாகவும் ஒருநாகங் கீழாகவும் நாணைப்பூட்டி உயர்ந்தபேரைக்கூட்டிக் கமலம்போன்ற கையினாலே அமிர்தமுண்டாகவேண்டுமென்று இழுத்துக்கடைந்தவனேயென்றும் வரந்தருகிற பிரமாவேயென்றும்வேதந்தேடுகிறவிஷ்ணுவேயென்றும் மழுவையும்மானையுந்தரித்த அரனானவனேயென்றும் உன்னையல்லாமல் வேறொன்றையு மறியேனென்றுசொன்னா னருச்சுனன் என்றவாறு. (௫௩)

ஆறுசீரடி யாசிரியவிருத்தம்.

ஞானமுதலிந்திரிய மனைத்தினுக்குநாயகனே.........❋
யூனவினைதனையறுப்பா யுன்னுடையபுகழ்கேட்கில் ...❋
வானவருமுனிவரு மனங்களித்துமகிழ்வெய்தத் ... ❋
தானவருமரக்கர்களுஞ் சாதுயரப்படுவர்களால ... ...❋

(இ-ள்) ஞானமுதலான விந்திரியமெல்லாவற்றிற்குங் கர்த்தனே குற்றமுள்ள தீவினையான பலத்தையறுக்கிறவனே,உன்னுடையகீர்த்தியைக்கேட்கிற தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும்மனக்களிப்புண்டாய்ச்சந்தோஷத்தையடைய அசுரரும் ராக்ஷதரும் மாளத்துக்கப்படுவார்கள் எ-று.

கையும்பதமுந்திருவாயுங் கண்ணுஞ்செய்யகருமுகிலே... ❋
மையைம்பொருளுமறிவரியாயயனார்தாயேயந்தமிலாய் ... ❋
மெய்யும்பொய்யுமில்லாதாயெல்லாமாகிவிரிந்தாயே.........❋
பொய்யுட்பரிசுநினைந்தவர்களுன்னைவணங்காதவருளரோ......❋

(இ-ள்) திருக்கைகளுந் திருவடிகளுந்திருவாயுந்திருக்கண்களும் சிவந்த நிறத்தையுடையநீலமேகம்போலுந் திருமேனியை யுடையவனே, ஆத்மதத்துவ மிருபத்து நாலுஞ் சீவாத்துமாவொன்றுமாக விருபத்தைந்து பொருளும் அறியவரியவனே பிரமாவின் தாயே முடிவில்லாத அனந்தனே மெய்யும் பொய்யு மில்லாதவனே மெய்யும் பொய்யுமான வெல்லாந் தானாகிப்பரந்தவனே பிழைக்கிறவிதத்தை நினைந்தவர்கள் உன்னை வணங்காதவர்களுண்டோ எல்லாரும் வணங்குகிறவர்களே-எ-று. (௫௫)

ஆதிதேவனு மாய்க் [illegible] மைந்தனாகி ... .*
யாதுமறிப்பப்படாமையுமெல்லாக்காட்டுகல்லனீ ......*
போதியுணர்வாநுணர்வுநீயுணர்வாலுணரப்படும்பொருளீ *
நீதியமறுயழிப்பாய்நீநீருங்காற்றுமாவாய் நீ..... ....*

(இ-ள்) சகலதேவர்களுக்கு முந்தின்சேவருமா ஆதிதேவனுமவ னீ தேவர்களுக்கு அமைந்த அரியசிவனீ நீறாமுமுமப் படாமையும் எல்லாவற்றையும் அறிப்பப்பட்டவனும் நீ முழுகாலத்தில் [illegible] இடம் நீ வேதங்களைக் காண வேதாந்தத்தை [illegible] களிடமுந் தெளிவும் நீ அந்தத்தெளிவாலே தெரப்பபட்ட பொருள் நீ நீதியையு டையயமறுப்பக்கொல்லுகின்றவனும் நீ தண்ணீரும் காற்றுமாகின்றவன் நீ-எ-று. (௩௬)

எயுட்பரிசிவ்வுலமெல்லாமென்றும் பிறப்பித்திடுகின்ற ......*
தாயும்பிதாவுமாவாய்நீதாய்தாய்தந்தைதந்தையுநீ............*
யாவும்படியையல்லாதவையாதுன்னையடியேனென் ... .*
மாயும்பிறவித்துயர்தீரநாறுயிரங்கால்வணங்கினேன் ... ...*

(இ-ள்) இசையுடைபடிக்கு இந்தப் பிரபஞ்சத்தை யெல்லாமெல்லாரைக் கும் பிறக்கிற தாயுந் தகப்பனுமாகின்றவன் நீ தாயினுடையதாயானபாட்டியுந் தகப்பனுடைய தகப்பனான பாட்டனுமநீ விசாரித்துத்தேடியறியப்பட்ட சுபாவத்தையல்லாத [illegible] யுமறியப்படாத சுபாவத்தையுடைய சுவாமியென்பிறவித்துயர் [illegible] வேண்டி அடியேன் உன்னைநாறுயிரந்தரம் வணங்கினேன்-எ-று. (௩௭)

என்பேரிடும்பைகெட்டுன்னை யின்றாங்தொழுதேனெந்தாயு... . *
முன்பேதொழுதேனுன்னுடைய பின்பேமுறையால்வணங்கினே . *
னன்பேயடியேனுருமுமவலாவிந்தப்பெரும்பிறவி.............. *
வன்பேகெடவுன்னையெங்குமதித்துமதித்துவணங்கினேன்......*

(இ-ள்.) என்பெரியதுக்கங்கெடுகின்றநிமித்தியமாக இன்னம்வணங்கினேன்சுவாமிஉன்னுடைய முன்னே வணங்கினேன்உன்னுடையபின்னே முறைமையாலேவணங்கினேன் என் அன்பே அடியேன்குடிக்கிற அமிர்தமேயென்னைவிட்டு நீங்காத இந்தப்பெரிய பிறவியினுடையவலுமையறியவேண்டியுன்னையெங்கெங்குந்திரும்பியுந் திரும்பியும் வணங்கினேன்-எ-று. (௩௮)

வேறு

தேவதேவனின்னில்வேறுதேவரோதுதெய்வமேது... ......*
பாவமேதநங்களேதுபற்றிபாதுவீடியாது......... ....*
சாவதேதுவாழ்வதேதனைத்துமாயதன்மைநீ...... ....*
யாவதேதுமொன்றுதானறிந்திலேனென்மாயனே,..... ......*

(இ-ள்) தேவதேவர் உனக்குள்ளேஉன்னைத்தவிரவேறுதேவர்களேது தெய்வமேது பாவமேது புண்ணியமேது பாசபந்தமேது மோட்சமே

து சாவதேது வாழ்வதேது இவைமுதான சகலமுமாகியசுபர்வம் நீயாவது இதையேதாகிலும் ஒன்றாகிலும் முன்னேநான் அறிந்ததில்லை அதென்னசுவாமியென்றான்-எ-று. (௩௯)

நீதிவேதம்வானுளோர்நிலத்துளோர்நினைந்துநைந் ... . *
தோதியோதியுட்கசிந்துணர்ந்தவுன்னைமுன்னெலாஞ் ......*
சாதிபேதமாகிவாழ்சராசரங்களுக்கெலா.....................*
மாதிமூலமென்று நானறிந்திலேனென்மாயனே ... .*

(இ-ள்.) மேலுலகத்திலுள்ள தேவர்கள் பூமியிலுள்ளமனிதர்கள்தெய்வமாரோவென்று நினைத்துமனதுநைந்து நீதியுள்ள வேதத்தை யோதியோதி மனது கனிந்து உருகி நீயென்று நிச்சயமாகத் தேறித்தெளிந்தவுன்னையிந்த விசுவரூபங்காணுதமுன்னெல்லாமளவற்றசாதி பேதமாகி வாழப்பட்ட சராசரங்களுக்கெல்லாம் முந்தின பீசமென்று நானறிந்தேனில்லை அதென்னசுவாமி-எ.று. * (ஆதிமூல மாவது முதற்பீசம்) ()

சாயைபோலும்வாழ்வுநாடுவீடுதந்தைதாயெனும்...... ......*
பேயையேறிமாறியேபிறந்திறக்கமீதெலாம்.............. ......*
தூயையாகியாதுமோர்தொடக்கிலாதுநின்றநின்... ... .*
மாயையாவதென்றுநானறிந்திலேனென்மாயனே... ....*

(இ-ள்) நிழலையொப்பான் வாழ்வு நாடு வீடு தகப்பன்தாயென்றுசொல்லப்பட்ட பேயை நிச்சயமென்று மேன்மேலும் அதுவேமுயற்சியாகயேறி மாறிமாறிப்பிறந்துபிறந்துசெத்துச்செத்துவருகின்ற விதங்களெல்லாம் பரிசுத்தமாகி ஒன்றாகிலும் ஒருபற்றில்லாமல் நின்றவுன்னுடையமாயையாகின்றதென்று முன்னேநான் அறிந்தேனில்லை அதென்னசுவாமி-எ-று. (௪௧)

யாதவாவென்மைத்துனாவசோதையின்னுயிர்க் ...*
காதலாயகாலியாய் கண்ணகண்ணவென்றுநா... ......*
ஞேதலாவதன்றியே யுரைத்ததீமையார்வையு... ... ...*
மாதகாதவென்றுநா னறிந்திலேனென்மாயனே.........*

(இ-ள்) அடா யாதவா அடாவென்மைத்துனா. அடா அசோதையினுடைய இனியசீவனையொப்பான குமாரா அடா பசுமேய்க்கிறவிடையா அடா கிருஷ்ணாவென்று சொல்லலாகாதசொல்லைநான்சொன்ன பொல்லாங்கு சகலத்தையும் தகாதசொல்லென்று முன்னே நான்அறிந்தேனில்லை அதுவென்ன ஆச்சரியம்-எ-று. (௪௨

ஏறுமல்லுவென்றுகுன் றெடுத்தவண்ணமெண்ணியே... ...*
கூறுமல்லநீரவும்பர் கூறுகின்றகொண்டலே.................*
வேறுமல்லையொன்றுமல்லை மெய்மைகூறுமப்பொருள் ... ...*
ளாறுமல்லையென்றுநா னறிந்திலேனென்மாயனே..............*

(இ-ள்) கோசலராஜாவினுடைய பெண்ணைக் கல்யாணம்பண்ணுகிற தற்காக எழுரிஷபங்களைக் கொன்றிட்ட பலமாயுஞ்செய்து இந்தி ரன்வருஷிப்பித்த மழையால் பசுக்களும் இடையர்களும் அழியாமல் வேண்டிக் கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்துத் தடுத்ததை நினைத்துச்சொல்லப்பட்ட துன்பந்தீர்க்கவேண்டிகள் கொண்டாடப்பட்ட லீலைகளைத் தியானித்தால் சுவாமி நீ வேறுவேறாய் அனேகமுமல்லை, ஒன் றுமல்ல, சத்தியத்தைச் சொல்லப்பட்ட பொருளாய் பார்க்கும்வல்லவென் று நான் முன்னறிந்தேனில்லை என்று சொன்னான் பார்த்தன்.

கலிவிருத்தம்.

என்னுடையதோழனென் றேகுரைத்தது......... ....*
முன்னுடைமையறிவின் மையாலன்றோ......*
வன்மையாகவே பொழிமறக்கச்சொன்னதை ... ...*
புன்மொழிகளானவை பொறுத்தருளவேண்டும் ... ...*

(இ-ள்.) நானும் என்னுடைய தோழனென்றே உன்னை நினைத்து உன் னுடைய சத்தியத்தையொன்றுமறியாமல் என்னுடையவறுமையினாலே உன்வசனத்தைத்தடுத்து எதிர்வசனஞ்சொன்ன அபவசனங்க ளான வைகளைப்பொறுத்தருளவேண்டும் (எ-று) (௪௪)

உன்னைவிளையாடித் தூங்குதல்சிரித்தல்............*
பன்னவுறுபோதுகளி லிருப்பதையாது... ....*
மென்னவழியாமைவிளங்க மதிப்பற்றதோயல்லாய்......*
கன்னகருணா பொறுத்தருளுகண்டாய்...........*

(இ-ள்.) ஸ்ரீகிருஷ்ணா, கிருபாசொரூபா, போசிக்கிறபோதும் விளை யாடுகிறபோதும் நித்திரைபண்ணுகிறபோதும் சிரிக்கிறபோதும் இருவ க்குமுள்ள பாரம்பரிய உறவு பழமையினாலும், மைத்துனன் முறைமையி னாலும் உன்னை சுவாமியென்றறியாமையினாலே வந்தபிழை யெல்லாம் பொறுத்தருளவேண்டிக்கொண்டாய்-எ-று. (௪௫)

எண்சீரடி யாசிரியவிருத்தம்.

உண்டானவுலகனைத்துமீன்றாய்நீயே...... ....*
யெவராலும்முன்றனுண்மையுணர்ந்துகூறிய............*
கொண்டாடப்பரிவாய்நீமேன்மைகலக்க..............*
குருவாகிக்குற்றங்கண்டிருக்கின்றாய்நீ......... ......*
எல்லாருமறையனைத்துமின்னின்மிக்கா... ... .*
நீயென்பெருங்கொடுத்துமெடுத்துக்காட்டக் ... ...*

கண்டாருநின்பெருமைகாணமாட்டா………… ……*
கண்ணிலாதவர்வேறுகாண்பதுண்டோ… … …*

(இ-ள்) உண்டாகிய சகலபிரபஞ்சத்தையும் நீயேபெற்றுய்யளவாகிலும் உன்னுடைய வுண்மையையறிந்துசொன்ஞல் அவர்களை நீகொண்டாடி யன்புசெய்வாய், அவர்களுக்கு மேன்மையைக் கொடுத்துக்குருவாகி யுபதேசித்துக் கீழ்மையானோர் குற்றங்களை நீ தீர்க்கிறாய், அளவைப் பிரமாணமுஞ் சகலவேதமும் உன்னிலும் அதிக மானவர்கள் இல்லை இல்லையென்று துணிந்து நின்றுசொல்லி எதுவு மெடுத்துக்காட்ட அதனாலே கண்டவர்களும் உன்னுடைய பெருமையைக்காணமாட்டார்களாகையாலே ஞானமென்கிற கண்ணில்லாதவர்கள் காண்பது வேறேயுண்டோ அஞ்ஞானியான குருடன் ஒன்றுங் காண்பதில்லை என்றவாறு.

அறியாதபருவத்துமகன்செய்குற்ற……………………*
மருந்தாதைபொறுத்தனவுமாவிபோலப்…………*
பிரியாததோழனசெய்குற்றநட்பிற்…………… ……*
பெரியோர்கள்பொறுத்தனவும்பேதையேநான்……*
குறியாதுசெய்துவருங்குற்றமெல்லாங்…… … ……*
குணமாகக்கொண்டருளவேண்டுமென்றே…… …*
வெறியாருமலர்ப்பதங்களிடையேவீழ்ந்து… ………*
வேண்டிக்கொடிவையின்னம்விளம்பலுற்றான்… …*

(இ-ள்) அறியாத குழந்தைப்பருவத்து மகன்செய்த குற்றத்தைஅருமையான தகப்பன் பொறுத்தாற்போலவும் தேக சீவனைப்போலப் பிரியாததோழன்செய்த குற்றத்தைச் சிநேகத்தினாலே பெரியோர்கள்பொறுத்தாற்போல மூடனான நான் உம்மை மதியாமல் நாள்தோறுஞ்செய்து வந்தகுற்றத்தையெல்லாங் குணமாகக்கொண்டருளவேண்டுமென்றுதேனிறைந்த செந்தாமரைப்பூவையொப்பான திருவடிகளினிடத்திலே தெண்டனாகவீழ்ந்து வேண்டிக்கொண்டு இன்ன மிதைச்சொல்ல உத்தியோகப்பட்டான்-எ-று. (சஎ)

கலி விருத்தம்.

பண்டுகண்டறியாப்பழங்கோலத்தைக்… … …*
கண்டுநெஞ்சங்கலங்குங்களிக்குமாற்…… ……*
றண்டுநீண்முடிசங்கொடுசக்கரம்…………………*
கொண்டகோலத்தையேகொண்டருளுவாய்……*

(இ-ள்) முன்னே யொருவராலுங் கண்டறியாத பழைய சொரூபத்தை-யிப்போது கண்டு மனது கலங்கிறது, ஆனந்தங் கொள்ளுகிறது ஆகையாலே தண்டாயுதமும் நீண்டகிரீடமும் சங்கும் அதனுடனே ச

காரமுந் தரித்துக்கொண்ட முதிய ஸ்ரீகிருஷ்ணரூபத்தையே கொண்ட ருள்வாய் எ-று. (௪௮)

என்றவனுரைத்திட மெல்லருண்மொழிபுரி ....*
நின்றவனுரைக்கருணை வாரிதியெனித்தாய் ....*
முன்றருமுகத்தொருவ னாய்முருகனாட ....*
வென்றனுருவத்தினை முன் னியாவரறிகிற்பார் ....*

(இ-ள்) என்று அருச்சுனன் சொல்லவும் எந்தருமமு மொன்றுகி நின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி திருவாய்மலர்ந்தருளுவார், நிறைந்தசோதியை யுடையதாக, முன்னெல்லைவுந்தையுந்தோப்பட்ட முந்தினபொருளுமான ஆதிமூலமுமாக, எல்லாமானதுமான என்சொரூபத்தை இப்போது நீயறி ந்தாற்போலமுன யாரறியமாட்டுவார்கள் யாருமறியார்-எ-று. (௪௯)

வேதமொ டோதுறு வேள்விகளினாலும் ....*
மாதவமதாலுமிகு தானவகைகளாலும் ... .*
காதலர்கள்காணமுடி யாவடிவுகண்டாய் ....*
யேதமறியாதவெனி யோகவலியாலே....... ....*

(இ-ள்) வேதமார்க்கமான வைதிகக்கிரமங்களினாலும் மிகுந்தவிசே ஷித யாகங்களினாலு மஹா தபசுகளினாலும் செய்தவர்கள் மனதுசந்தோ ஷப்பட கொடுத்ததானவிதங்களினாலும் இவைகளின் பிரயோசனத்தை யிச்சித்த ஆசையுடையவர்களாலே காணமுடியாத சொரூபத்தைப் பிர யோசனத்தை இச்சிக்காதாகிய ஞானத்தையுடைய வென்மேலே வைத் த மனதுள்ள யோகமாய ஆத்மயோகவலிமையினாலே நீகண்டாய் அருச் சுன-எ-று. (௫௰)

இப்பரிசனாத்திருவின் ரூபமதுகண்டே ....*
பப்பனையமோலமது வாபுருளி [illegible] ....
மெய்ப்பயமகற்று [illegible] பார்த்திவனைக்கேளாய் ....*
யொப்பவரின் [illegible] யாதவனாய்ப்பாரீர் ... .*

(இ-ள்) [illegible] ஸ்ரீகிருஷ்ணசுவாமி [illegible] ப்பழைய மனிதசொரூபமா [illegible] ஆகிய போது, அருச்சுனனுக் குச் சரீரபயத்தைத்தீர்த்து [illegible] ஆதிமூலமாகிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி திருவுளம்பற்றிச்சொல் லுவார்-எ-று. (௫௧)

அருச்சுனன் [illegible]

கண்டவரி [illegible] ......*
ஆண்டருள் [illegible]

தொண்டருமாகியென்னை யன்றியோர்தொடக்கில்லாமை ...❋
கொண்டவாடைவரென்றான் கோக்குலமேய்த்தகோமான்...❋

(இ-ள்) நீமுன்கண்ட விசுவரூபத்தை யுன்னைத்தவிரக் கண்டவர்களி ல்லை, தேவர்களுங்காண அறியாமல் நின்றார்க ளாகையா லென்மேல்அன் பு மிகுதியாகப்பட்ட அடியானுமாகி என்னையல்லாமல் வேறொரு நினை வுதொடங்குவதில்லாமல் என்னைத் தன்சித்தமாகக்கொண்டவர்க ளிந்த சுருபத்தை யடைவார்களென்று பசுக்கூட்டங்களை மேய்த்த ஸ்ரீகிருஷ் ணசுவாமிசொன்னார்-எ-று. (௫௨)

௰க - வது-விசுவரூப அத்தியாயம்

முற்றுப் பெற்றது.

ஆ அத்தியாயம்-௰க-க்குகூடிய செய்யுள்-௩௪௬

(❋) ❋ (❋)

௨

பன்னிரண்டாவது.

பத்தியோக - அத்தியாயம்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்

ஏயநாவெனதிரோகண்ட வுருவமேயிசைகிற்பாரோ ... .❋
தூயநான்மறைக்குமெட்டாப்பொருளையேதொடர்கிற்பாரோ ... .❋
தாயனைய்பெரியோரென்றுதனஞ்சயன்வினவத்தானே...................❋
ராயனைய்நிறைகண்மேய்க்குமாயன்வேறருளிச்செய்வான். ....❋

(இ-ள்.) தாயையொப்பான அன்புள்ளவரே பெரியோர்கள் எல்லாம் உன்னிலேபொருந்தநான்கண்முன்னேகண்ட இந்த விசுவரூத்தையே ம னதிலேபொருந்திச் சேவிப்பார்களோ அல்லதுசுத்தமான நாலு வேதங் களுக்குமெட்டாத பொருளாகிய பிரமத்தையே தொடர்ந்துசேவிப்பார் களோ இந்தவிரண்டில் எதைநிச்சயங் கொள்ளுவார்களென்று அருச் சுனன்கேட்கத் தாயொருயிடையனைகப் பசுக்களை முன்மேய்க்கப் பட்ட ஸ்ரீகிருஷ்ணசுவாமி வேறேயருளிச் செய்வார் - எ -று. ❋ வேறேயென்

[illegible] கருத்து [illegible]
[illegible]) (க)

மயிலை [illegible] .... *
[illegible] செய்பவர் [illegible] *
மெய்ம்மை [illegible] ..... *
சொன்னவர் [illegible] .... *

(இ-ள்) இராசராசேசுவரி [illegible] பத்தைத் தனதியே [illegible] வார் [illegible] லனுறுதல் [illegible] செய்பவர் [illegible] கெல்லாம் வேறு [illegible] சோர்கள் [illegible] போது சொன்ன [illegible] ருடைய தனையுங் கெட்பாய்-எ-று. * (வேறென்றது [illegible] டைய பதவி இந்திரபதவி முதலானவை இவைகளுக்கு மேலான [illegible] னைச் சேருவதற்கு தாழ்ந்த பதவிகளை இந்த விசுவரூப [illegible]கள் தங் களைச்சேர்ந்தவர்களுக்குங் கொடுப்பாரென்பது குறிப்பு.) (உ)

உரைசெயற்கரிதாய்நெஞ்சி னுணர்விடப்படாதேயெக்கும் *
புணர்வறக்கலந்துபோக்கு வரவின்றிப்பொலிந்தவொன்றைக்
கணைசெயற்கரியவாய புலன்களைக்கடந்துகாண்பா... ... ...*
னரசமற்றியானேயென்னி லன்னியமென்னலாமோ... ... ...*

(இ-ள்) இப்படி யப்படியென்று சொல்லப்படாததாய் மனதினுண் டாகிய அறிவினிடத்தகப்படாமல் எங்கு [illegible] வில்லாத பொலிவினை யுடைத்தாகிய ஒன்றான [illegible] யாகப் புலன்போடுக்கணைகட்டக் கூடாதாகிய [illegible] மட்டுப்படாததாய் பலவழியாச் சிதறியோடுகின்ற [illegible] யங்களைக்கடந்து காண்கின்றவன் நானேயென்றால் இராசாவே [illegible] த்தவிர அன்னியமென்று அவனைச் சொல்லலாகுமோ ஆகாது-எ-று. * (புணர்தல்என்பது [illegible] எங்கெங்குங்கல த்தலுக்கு அனுவத்தினை [illegible] எங்கெங்கும் கலந்தலல்லா மல் எங்குங்கலந்திருக்கிற சொல்லுக்கு [illegible] இடை [illegible] ந்தென்றதுபோக்குவரவாதசமனம்.) (ஙு)

காரணமிறந்தொன்றிற்குங்காட்சிப்படாததொன்றைச் .. *
சேர்பவர்வருத்தம்வெல்லுமென்செப்பிடலாவதென்று ... .. *
லோர்வரிதினதான்வாழுமுயிர்களாவதென்று...... ......*
லாரவர்பெருமைதன்னை யளவுடுப்பவர்களாபா..............*

(இ-ள்.) காரணங்கேட்டு [illegible] க்குக்காண்பதற்கு [illegible] ஒன்று னா பிரமத்தைச்சேருவர்களுடைய [illegible] என்னசொல்

ல்லாவது என்றாலே அறியப்படாது இந்தப்பிரயாசமான பிரம நிஷ்டை யானது உலகத்தில்வாழப்பட்ட உயிர்களால் ஆவதானால்அந்தவுயிர்களு டைய பெருமையைப் பிரமாணமாக அளவறுக்கின்றவர்கள்யார் யாருமி ல்லை நூயா-எ-று. (பிரயாச மாவது காணப்பட்ட தேகிக்குக் காணாத ஆத் மாவைத் தியானிக்கின்றது பிரயாசமென்க.) (௫)

யாவர்கள்சிலர்களெல்லாவினையுமென்கண்ணேவிட்டிட் ... ❋
டாவர்தமதறிவென்பாலேயாக்குவாரவர்கட்கமைச்... ......❋
சாவதுமுதலாயுள்ளதுயர்களினின்றுந்தாங்கி...... ....❋
எவர்களென்னுங்காலஞ்சிறிதிலேயெடுக்கின்றேனன் ......❋

(இ-ள்) எவர்களோ சிலபேர்களெல்லாவற்றையு மென்னிடத்திலே வி ட்டுவிட்டு அவர்கள் தங்களுடைய அறிவையென்னிடத்திலேயாகப் ப ண்ணுவார்களோ அவர்களை எவர்களானாலும் சாகின்றது முதலாயுள்ள துக்கசமுத்திரத்திலே நின்றுந்தாங்கிச்சீக்கிரத்திலேயெடுக்கமாட்டு வே ன் எ-று. (௬)

எழுசீரடி யாசிரியவிருத்தம்,

மெய்யுறவுன்னைப்பென்னிலேவைத்தா......... ....❋
லென்னில்வேறன்றியொன்றுதற்...................❋
கையுறவில்லையதுமுடியாதே................ ......❋
லாயினுமதனையேபயில்வாய்..... ....❋
பொய்யுறவதுவும்புரிகிலாதெனிலுன்........ ....❋
வினைகளென்பொருட்டிறைச்செய்வாய்................❋
செய்யுமவ்வினைகளப்படிச்செயாயேல்... ... ...❋
வினைப்பயன்றவிரவேசெய்வாய்................ ....❋

(இ-ள்) மெய்யாகவென்னிடத்திலே யுன்னைவைத்தால் நீ நானென்று வேறுபடாமல் என்னிலொன்றுவதற்குச் சந்தேகமில்லை யென்னிலுன் னை மெய்யாகவைக்கமுடியாயாகில் ஆனாலும்அப்படி வைக்கின்றதையே அப்பியாசம்பண்ணுவாய் அந்த அப்பியாசமும்பொய்யறச்செய்ய மாட் டாயென்று உன்கருமங்களை எனக்காகச்செய்வாய் அப்படியெனக்காகச் செய்யப்பட்ட கருமங்களை அப்படிச்செய்யமாட்டாயாகின்ற கருமபல னையிச்சியாமற்செய்வாய்-எ-று ❋(இதனால்ஆத்மஞானஞ்சித்திக்குமென் பதுகுறிப்பு) (௭)

கலி விருத்தம்.

அத்திருவபியாசமினைகளினு.......................❋
மெத்தியானமிகுமதன்மேலதாம்..... ....❋
வித்திலுமவினைப்பயன்விடுதல்.............. ......❋
சித்தசாந்தியதினின்றுஞ்சீர்தரல்............. ....❋

(இ-ள்) [illegible]

[illegible]

இருவகை [illegible]
தான்ட [illegible]
[illegible]
[illegible]
பொருவரு [illegible]
[illegible]
மருவ [illegible]
மன்னவ [illegible]

(இ-ள்) [illegible] ஆரம் எனவே இவை [illegible]
லவனுஞ் சகதுக்கங்கள் [illegible]
களை யறியாமல் [illegible]
த் தங்களாலுங் [illegible]
பலவழிப்படுகிற மனதும் அந்த [illegible]
ப்பில்லாத ஞானிகள் [illegible]
ப்பட்ட அந்த [illegible]
ம் நடக்கின்றபோதிலேயின் [illegible]
எ-று. * (சுகதுக்கங்களையும் அகங்கார [illegible]
பது அறியப்படுவ தெல்லாம் என்னையே [illegible] சுகது
க்கங்களென்றும் அகங்கார [illegible]
பகுப்பு அறியவாராது என்பது [illegible] மல் என்பது [illegible]
லாமல் அநிச்சையாக வந்ததை [illegible] ஒரு [illegible]
யும் அந்தக் குறைவில்லாமலென்பது [illegible]
கிற மனதும் ஒருவழிபாக [illegible]
மினியனுஞ் சுகதுக்கங்கள் அகங்கார [illegible]
யில்லாதவரும் இப்படியிருக்கானும் மனது ஒருவ [illegible]
ன்றுமாம் ஞானவானது எத்தனை [illegible]
ட்டாமென்று ஆத்மசொரூபம் அறிந்த [illegible]
தெய்வமொன்றுண்டு அது செய்கிற தின்னதென்று [illegible]
காலஞ் செய்வதென்று கணிக்கவுங்கூடாது, அவனுடைய [illegible]
லுங் கடக்கக்கூடாது என்றறிந்து இதில் அகப்பட்ட எல்லாரும் [illegible]
நானே யெல்லாருமென்று தன்மேல்வைத்த [illegible]
தன்மைசெல்வார்கள் மேலுஞ் செய்கை [illegible]

ருவிதம் தெய்வத்தின் விதிக்கு ஒழிவில்லை தடையில்லை ஆகையலே தேகமெத்தனை வந்தாலும் அந்தத் தேகங்களுக்குள்ளசுகதுக்கங்க ளெத்தனைவந்தாலும் விதிபடிக் கல்லாமல் விசாரத்தினுலொழிவில்லையே அதனுலே நடந்ததெல்லாம்நடக்கிற தெல்லாம் தேகத்துக்கே யல்லாமல் நமக்கொன்று மில்லையே யென்கிற துணிவுமாம் அறிவாவது விஷயவறிவு.)

உலகமுந்தானும்வேறிலாமையிறு ....*
றொருபொருட்குமஞ்சாதே ... ...*
யலகிலாவுயிர்கட்கினியனுதலிறு ... .*
லவைகளுந்தன்னையஞ்சாதே.........................*
புலவரானவர்கள்புகழ்வேதிகழ்வான் ... .*
பொருமையுமயக்குமகளிபபு... ....*
மிலகிடாநெஞ்சத் தியோகியென்பவன்கா ... .*
ணியாரினுமெனக்குவேறினியாய் ....*

(இ-ள்) உலகமுந் தானும் வேறல்லாததினுலே ஒருபதார்த்த நத்துக்கும் இச்சியாமல் உலகமெல்லாந்தானுகவும்தானே உலகமாகவுமிருக்கிறதினுலே உலகத்துக்குப பயப்படாமல் அளவில்லாதசீவன்களுக்கும்நல்லவனுனதினுலே எந்தச்சீவன்களுந்தனக்குபபயபபடாமல் தேவர்களானமேலுலகத்தார்களுந் தோத்திரம்பண்ணத்தக்கதாக நடக்கிறவன் பொருமையும் மயக்கமுஞ் செருக்குமுண்டாகாத மனதையுடைய யோகியென்கிறவன்கண்டா யருச்சுனு எவர்களிலு மெனக்குபபிரியம்-எ-று. (௬)

ஒன்றினுமாசை யின்றியிந்திரியங்க ... .*
டன்வழியொழுகிடாதொறுக்கி ....*
நன்றியினேடுதீங்கெலாமொத்து......................*
நல்வினைதீவினை துறந்து..........................*
பொன்றினுநோயும் மழித்ல்செய்யாமற் ... .*
பூரித்தல்வாடுதலின்றி... ... .*
யென்றுமுன்பிழைத்தபொருட்கிரங்காமல்.........*
வரும்பொருட்கிச்சைசெய்யாதே ... .*

(இ-ள்) ஆத்மஞானமாகிய பிரமத்தைத்தவிர வேறென்றினு மாசையில்லாமல் பஞ்சேந்திரியங்களினுடை வழியே போகாமல் அதைபபோக்கி நன்மையினுடனே பொல்லாங் கெல்லாஞ்சமமாகியபுண்ணியபாவங்களைவிட்டுச் செத்தாலும் வருத்தபபட்டுத் தாழ்வுசெய்யாமல் நிறைதல் குறைதலில்லாமல்முன்புபோனபொருளுக்குஎன்றைக்குந் தூக்கபபடாமல் இனிமேல்வருகிறபொருளுக்கு இபபோதே ஆசைபபடாமல்-எ-று.()

ஆருடாதிகாரிய ஸ்தோத்ரம்.

இகழ்பாராட்டாமெய்ய இன்பதுன்பமெய்ப்பதும்பம் ... ...*
இகழ்மானமானத்தும் சீதவோட்டிணங்களிலுமட.........*
மகற்பழிக்கும்நன்றேவேபோற்றிவார்க்குமேயான்பன்றி.
மிகற்கருமிபோகிவர்காய் மகிமையாக்குமிடமோகம் ...*

(இ-ள்) சத்ருமித்ரரு வென்பவர்களிடமும் சுகதுக்கம் சீதோஷ்ணாதி களும் அவமானம் மானம் முதலியவையும் ஸ்துதிநிந்தனை வசவுகளைக் கீர்த்தி பழி இவைகளிலே சமமாகவாருடைய மனதும் இன்பமாகவிருக்கிற இடமோ அவ்விடமும் இப்படி நடக்கப்போகிறவர்களாயிருக்கிறது, எனக்கு உரித்தான சுபாவமு மௌனமாய் - ஆ. * மௌனமென்பது மௌனமாயிருப பென் றகவிடும் இகழ்பவர்கட்டா லென்றகவிடு மௌனம்பாடர், அதெப்படியெ னின் அந்தமானக்கைத்தவிர மற்றென்றிலும் மனசில்லாமல் பஞ் சேந்திரியங்களின்வழியே போகாமல் யுக்தமுடைய ஆடைத்து நல்லது பொல்லாதென்னாது சமமாய் புஸ்பமிய மாலைக்களையிட்டு வருத்தம்வந் தபோது தாங்காரியத்தைச் செய்யாவிட்டால்நிராமற்கொல்லுகின்றதா லெ சாவுவந்தாலும் தாழ்வுசெய்யாமற் சுகம்வந்தபோது சந்தோஷிக்கி றதுந் துக்கம்வந்தபோது கிலேசிக்கிறதுமில்லாமல் முன்போனபொரு ளைக் கெய்தைக்குந்துக்கியாமல் இனிமேல் வரப்பட்டபொருளுக்கு இப்போது வரவேண்டுமென்றாசைப்படாமற் பகைக்காரர் சிநேகித ரென்கிறபேதமான ராகத்துவேஷமில்லாமல் சுகம் துக்கம் அவமானம் மானம் - சீதளஉஷ்ணங் கீர்த்தி - பழி இவைகளிலே சமமாகிறன்றுட னும் கூடிவாழ்கின்றதான சங்கமில்லாமல் இப்படி நடக்கிறயோ கிதான் கண்டாயருச்சுனா - எனக்குப் பிரியகுணன், * மற்றவென்ப து சகலசீவனும் என்றாலும் அவர்களைத் தவிர இப்படிக் கொத்தவன் பிரியனென்றது, இதனாலே மற்ற சீவன்களெல்லாம் பிரியாப்பிரியமல்லா தவர்களென்பதாயிற்று, ராகமாவது - ஆசை, துவேஷமாவது கோபம்- கூடிவாழ்கிறதாவது மனதிலே யென்னைத்தவிர வேறொன்றைக்கூடவெதெ ல்லாற் சங்கமென்பது ஒகையால் சங்கவாழ்ச்சிதம் பண்ணி நிச்சங்களு யிருக்கவேண்டுமென்றது, இனிவிரிக்கில் பெருகுவாம் (௰௧)

செயத்தகுவதுவுமாகிச் சேர்ந்தவர்க்கல்லாரா... ....*
புபத்தொடுபோவதான பொருளையாரறாத்தவன்னை .....*
மிபப்படவுணர்கிப்பாருக் கியான்மிகவினியனென்றான் ... *
மயக்கறவொருவாறு மறுவரிதாயமாயோன் ... .*

(இ-ள்) அப்பிபாசஞ்செய்டத் தக்கதுமாகிச் சேர்ந்தவர்க ளுடைய துக்கந்திரத்தக்கதாகத்தப்பப் பிறைப்பக்கொண்டு போகிறதான ஆத்ம லிா

ஞானமான பத்தியை நான்சொன்னபடி இந்தப்பத்தியே சுபாவமாகவுண்டாக அறியாமாட்டுகிறவர்களுக்கு நான் மிகவும் பிரியனென்றுசொன்னார் ஒருவராலும் மயக்கந்தீர அறியப்படாதஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று.

௰௨-வது-பத்தியோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆ அத்தியாயம்-௰௨-க்கு-கூடியசெய்யுள்-௩௱௮.





௳

பதிமூன்றாவது.

பிரகிருதிபுருடயோக அத்தியாயம்.



கலிவிருத்தம்.

விடம்படுபணுமுடி யரங்கின்மிசையேறி.........*
நடம்பயிலுநாயகன் மறித்துமிகுஞானமு... ...*
சடம்படுபிணிப்பிறவி யென்றிவைதறித்த ... ...*
முடம்பொடுயிரானவை யுணர்த்தருளலுற்றான் *

(இ-ள்.) விஷமுண்டாகிய படமுள்ளசிரசாகிய நாடகசாலையிலேறி யாடுகின்ற கூத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி திரும்பவும் மிகுந்தஞானமும், மிகுந்த அஞ்ஞானமுமுண்டாகிய நோயையுடைய பிறவியென்றுசொல்லப்பட்ட இவைகளைத்தறிக்கப்பட்ட வுடம்புடனே ஆத்மாவானதை உபதேசித்தருளுவதானார்-எ-று. (க)

உடம்பெனவுரைப்பது யிருண்டவைகளெல்லா ......*
மிடம்படவிளைப்பதெதிர் காணலுறுமீதார்...... ......*
திடம்படவுமற்றிவை தெரிந்துணருமெய்யைக் ......*
கடம்படுமுயிர்ப்பொரு ளெனப்பகவர்கற்றோர் ... ...*

(இ-ள்) உடம்பென்றுசொல்வது ஆத்மா போசிக்கிற வைகளுக் கெல்லாம் விசாலமுண்டாகயிலைப்பதானது கன்றுபின்னே காணப் படும் இந்தச் சரீரம் ஆதலால் நிச்சயமாகவும் சந்தோஷமாகவும் இவை களைத்தெரிந்து அறியப்பட்ட சத்தியத்தை ஆதரிக்கப்பட்ட ஆத்மா வாகிய பொருளென்று ஆத்மசொரூபமுணர்ந்த பெரியோர்கள் சொல் லுவார்கள்-எ-று. (உ)

மன்னவுடலிதனை மன்னியபரிவாகி...............*
புன்றுபுலப்பாயிலை விரகம்புனை யோர்காற்.........*
உன்னவுடலிற்பெயர்த லிவை மடங்கனை ஞானம் ....*
மென்னவுணர்வாயிந் தெனக்குமிசையாமால் ....*

(இ-ள்.) இராஜாவே சகலசரீரங்களும் நிலையாயாகயிற்றறிவாகி நினைக்கப்பட்ட ஆத்மாவானது நான், இந்தச்சரீரம் ஆத்மாவென்று இரண்டையு மடங்காமற் தெரிந்த சுபாத்திரனாலே பரிவதுயாதொன்றுண் டோஅதை ஞானமென்றறிவாய் இந்தஞானம் எனக்குஞ் சம்மதமாம் எல் லாருக்கும் சம்மதமாம்-எ-று. (ங)

மற்றிவுடனன்னின் வரவுக்குணனும்வந்தாங் ... .*
குற்றமைவிகாரமு முயிர்க்குறுந்தானு... ....*
கற்றவர்கள்வேறுபட வோதினர்களானுஞ் ....*
சொற்றொகையினாலிவை சுருக்கமொழிவன்கேள்......*

(இ-ள்) ஆத்மாவைத்தவிர மற்ற இந்தச் சரீரத்துடன் வரவுங்கு ணமுஞ் சரீரம்வந்த அவ்விடத்திலுண்டா யமைந்தவிகாரமு மிந்தச்சரீ ரத்தினாலே ஆத்மாவுக்குள்ள பிரயோசனமும் இவைகளெல்லாம் நல்ல தவம்பண்ணின ரிஷிகள் வேறுவேறாக முன் விரித்துச்சொன்னார்கள் இ ப்போது நானும் இதைச்சொல்லினுடைய தொகையினாலே சுருக்கச் சொல்லுவேன்கேள் அருச்சுனா-எ-று. (ச)

எப்பொருளினும்பரவி யெங்குமுளவாகும்............*
அப்பெரியபூதமவை யைந்துமவையிற்...............*
மொப்பரியவானுமவை வந்துமுனுதிக்கும் ....*
பொய்ப்பறைபுத்திமகா னென்றபொருடானும் ...*

(இ-ள்) எந்தப்பொருள்களிலும் அதிகமாகப்பரவி எங்குமுண்டா யிருக்கப்பட்ட அந்தப்பூதமானவைகளைந்தும் அந்தப் பஞ்சபூதத்தை யுண்டாக்கப்பட்ட ஒப்பல்லாத அகங்காரமும் அந்த அகங்காரம்வந்து முன்னே உண்டாக்கப்பட்ட பொய்ப்பகையில்லாமல் மெய்ப்பகையாயு ள்ளபுத்தியும் அந்தப் புத்தியுண்டாக்கப்பட்ட மகானென்றதத்துவமும் எ-று. * (இவ்விடத்தில் நானென்ற தகங்காரம் அகங்காரத்தில் ஆகாச திபூதமொப்பி லொன்றுண்டாகின்றது எப்பொருளிலும் பெருகு மெய்

குமுளவாகுமென்று பாடமோதில் பெருகினபொருளெந்தப் பொருளி னும் அதிகமாகப்பெருகப்படாது என்கு முண்டாகப்பட்டதென்பது)()

காதலிலிவ்வெட்டும்வினை காரணமுமொன்று... ......*
யோதவரிதாயபுல னைந்துமவையுன்று ... .*
மாதவரியாதபொறி யைந்துமவையாலே...............*
யேதவினைசெய்காரண மூன்றிரெடிரண்டாம் ....*

(இ-ள்) ஆசையில்லாத எட்டுக்காரியமுமுண்டாக்கப்பட்ட காரண முமொன்றுகச் சொல்லப்படாத பஞ்சேந்திரியங்களும் அவைகள் நினை க்கப்பட்டதாவகை அஞ்சுபொறிகளும் அவைகளாலே குற்றமுள்ள கரு மத்தைச்செய்யப்பட்ட அந்தக்கரணமஞ்சும்-எ-று. (௬)

இற்றிவையனைத்துமிட ரின்பமுதல்யாவும் ....*
துற்றமைவிகாரமதை தொடர்ந்ததொகைகண்டாய்...*
நற்றவவுடம்பென வியம்புவதுநல்லோ ... .*
ருற்றவுடலுக்குரிய ஞானமுமுரைப்பாம் ... .*

(இ-ள்) இவைகளெல்லாம் துக்கசுகமுதலான வெல்லாம் நெருங்கிய மைந்தவிகாரந்தொடர்ந்த தொகையைத்தான்கண்டாய் நல்லதவம் பண் ணின அருச்சுனு தேகமென்றுபெரியோர்கள் சொல்வது இத்தனையுமு ள்ளவிகாரக் கூட்டமாக விருந்த இந்தச்சரீரத்துக்கு உரித்தான ஞான மும் சொல்லுவோம்-எ-று. * (எப்பொருளென்ற கவியும் காதலிலென்ற கவியும் இற்றிவையென்றகவியும் ஒருதொடர் நற்றவகண்டாயெனவும் ந ல்லோரியம்புவ தெனவுமாறுக துக்கசுகமுதலானவென்றவையுந் தேகவி ரிவையும் விரிக்கில்வெகுவிரிவாம் ஆகையாற்சுருக்கினது) (௭)

கலிவிருத்தம்.

மானமும்பிறர்தனைமதிக்கப்பண்ணலு..................*
மூனமும்பிறவுயிர்க்குறுகண்செய்கையு ... .*
மியானெனுஞ்செருக்குமிவ்விகபரங்களி ....*
லானபேராசையோடறுக்குமாற்றலும்...... ....*

(இ-ள்) மானமும் அன்னியர்தன்னைத் துதிசெய்யவேண்டி மதிக்கப் பண்ணுகின்றதும் பிறரையூனமாக நிந்திக்கின்றதும் அன்னியசீவனுக்கு த்துன்பஞ்செய்கிறதும் நானென்கிற அகங்காரமும் இந்த இகலோக அ ந்தப்பரலோகங்களில் வைக்கின்றதான ஆசையுடனே இவைகளையெல் லாம் ஒறுக்கப்பட்ட பலமும்-எ-று. * (மானமாவது எனதென்கிறசுதந் தரம் வெகுமானம் அவமானமென்பாருமுளர் அதாவது தனக்குபகார ரைவெகுமானத்தினும் அபகாரரைஅவமானத்தாலுமாம் இவ்விகபர

மென்பது இந்தவுபதேசமிருந்து சொல்லுமுலகமிதிலே அந்தப்பர லோகமென்றுவந்தது. (அ)

பெற்றனயனைபொடு பெண்டீர்மக்கள் பா... ....*
ஆற்றிடு முவரவுடனுடம்பின்பாலமைய .. ..*
மற்றவைம்பொறிகட்கின்பமின்பாதாக்கையுந்... ......*
செற்றமுஞ்சிதைவர் நூழுமிக்கிரிதமும்...... ... .*

(இ-ள்) தானசஞ்சிதத்தினாலே பெற்ற விட்டைமனையாள் பிள்ளை இவர்களிடத்தில் வைத்திருக்கப்பட்ட ஆசையுடனே சரீரத்திலுமிதம் அஞ்சுபொறிகளினாலும் பஞ்சேந்திரியங்களாலும் வருகின்றவிஷயங்களை யனுபவிக்கிறதுங் கோபமுடைய கட்டும் மயலுகளெல்லாம் விடுதலும்-எ-று. * (இதனும் மனத்துறும் மேட்டவாகிறுடையவும் வேண்டுமென்ற கருத்தாயத்து.) (௯)

ஒருபெரும்பொருளையே யகத்துவைத்தலும்... ......*
திருவினை கெட்டவரிடங்களைப்தலும்.................*
குருவினைவழிபடுகுணமுஞ்சுற்றமென்...... ... .*
றருவினையுளவாறுணருமுண்மையும்...... ....*

(இ-ள்) ஒப்பில்லாதபெரிய ஆத்மாவையே மனதில் வைக்கிறதும் புண்ணியபாவங்களைக்கடக்கின்ற பெரியவர்களிடத்திலே சேருகின்றதும குருவைபூசைபண்ணுகின்றகுணமுந் தேகத்தைக்குற்றமென்று உள்ளபடி யறிகின்ற வுண்மையும்வேண்டும்-எ-று. *(பொருளையே யுளத்துவைத்தலென்ற வேகாரத்தாலேவேறொன்றையும் நினையாதேயென்றது, பெரியவர்களைச்சேருதலாலே ஞானம்வளரும்குருவே தெய்வமாகையால் பூசிக்கவேண்டுமென்றது தேகத்துக்குக்குற்றமாவது சனனமரணம் பாலயௌவனகௌமாரவியார்த்திபம் வியாதி துக்கமிவை முதலானவைகள்

முன்றிகழ்பிறப்பொடுமூப்பதப்பிறை......... ....*
சென்றடையிடும்பையைச்சிந்தைசெய்கையு... ... ...*
மென்றிவையனைத்துமற்றிவற்றிறைவிளிச்...... ... ...*
சென்றடைபொருளினைதெரிந்துகேளென...... ......*

(இ-ள்) முன்னேவிளங்கப்பட்ட பிறப்புடனே மூட்டச்சாவினாலே வந்தடைகின்றதுக்கத்தை நினைக்கிறதுமென்றுசொல்லப்பட்ட இவைசகலமும் நீங்கினவிதுஞானம் இந்தஞானத்திலே இனிமேற் போய்ச்சேருகின்ற ஆத்மாவைச்சொல்லுகின்றோம் தெரிந்துகேள்-எ-று.* (ஞானமுமென்றகவியும் பெற்றனவென்றகவியும் ஒருபெருமென்றகவியும் முன்றிகழென்றகவியும் ஒருதொடர்.) (௰௧)

ஆதியந்தமிலதழியாதுநின்றபெருமையை... ....*
சோதிலுண்டதிலெனுமூனமின்றிமொழிவது ... ...*

நீதியின்கணகிலமுமாகியெங்குநிறைதலி...............*
ேனதருங்கைதலைசெவிகால்களெங்குமுடையது......*

(இ-ள்) முதலு முடிவுமில்லாதது அழியாமல்நித்தியமாகச் சலியாமல் நின்றபெருமையையுடையதுசொல்லு மிடத்தில்என்றுமுள்ளது இல்லை யென்கிற குற்றமில்லாமற்றீர்வது நியமிக்குமிடத்தில் எல்லாமாகியெங் கும் நிறைதலினாலேசொல்ல அரிதாகிய கைகள்தலைகள் காதுகள் கால் களிவைகளை எங்குமுடையது எ-று. (௧௨)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

காணும்புலன்களனைத்திற்குங்கண்ணால்நின்றுகாட்டுவது ...*
பேணும்புலன்கடனைக்கொன்றுமில்லாதியன்றபெற்றியது ...*
பூணும்பற்றுந்தனக்கின்றியெல்லாந்தானேபொறுக்கின்ற...*
தாணும்பெண்ணுமலிகுணமுமன்றியேநின்றாகியது ... ...*

(இ-ள்.) காணப்பட்ட கண்களெல்லாவற்றிற்குங் கண்ணாகநின்றுகாட் டுவது மதிக்கப்பட்ட விந்திரியங்களொன்றுந் தனக்கில்லாதது எல்லாம் வல்லசுபாவமுடையது சுமக்கிற பிடிப்புத் தனக்கில்லாமல் எல்லாவற் றையுந்தானே சுமக்கிறதுதான் ஆணும்பெண்ணும் அலியுமில்லாமலே நின்று அந்தமூன்றுமான-எ-று. * (காணப்பட்ட விந்திரியங்களென்று மாம் அதெப்படியென்னில் அந்தந்தவிஷயத்தைஅந்தந்தவிந்திரியங்களா ல் அறிவதேகாட்சியாதலால்.) (௧௩)

கலி விருத்தம்.

பூதமைந்தினகத்தினோடுபுறத்தினும்பொலிகின்றதிங் .. ...*
கேதமின்றிநடப்பநிற்பனவாயிருப்பதினின்னதென் ... ...*
றோதரும்படிநுண்ணிதாகிய தொன்றதாகியிருந்துமெய்ப் *
பேதம்வந்ததுபோலநின்றுபிணங்கவும்படுகின்றதே.........*

(இ-ள்) பஞ்சபூதங்களினுடையவுள்ளிலும்புறத்திலும்பொலியப்பட் டது இவ்விடத்திலே குறறமில்லாமல் நடக்கிறது நிற்கிறதா யிருபபதா ன சராசரங்களில் இன்னதென்று சொல்லக்கூடாதபடி நுண்ணியதாகி யது இப்படி அளவற்றபேதங்களில் நுண்மையாகவிருந்தாலும் அனே கமாகாமல் ஒன்றாயிருந்து சரீரபேதங்கள்வந்து அந்தச்சரீரங்களைப்போ லத்தானும் அனேகபேதங்களாகநின்று ஒன்றுக்கொன்றுசமாதான மில் லாமற் பிணங்கவு மிதை நிச்சயமாகவறிந்தபோது எல்லாம்நானேயென் று சமாதானமாகவும் உண்டாகின்றது-எ-று. * (பிணங்கவுமென்றவும் மையால் இணங்கவுமென்றெதிர்தழுவும் இதைவிரிக்கில்வெருவாம். ()

அருவமாயதிதூரமாயதணித்துமாயதனைத்துமா......... ...*
யுருவம்யாவுமளித்துமீளவொழிகருநாளிலொழிப்பது... ...*

பொருளிலாவொளி [illegible] யாகி [illegible]
கிருபைகீதயருளானேயோட்டுமேபடிமைச்சித்த ... . *

(இ-ள்) உருவமில்லாததாய் அன்றோளி [illegible] க்கு வேறு ஞானமாய் ஞானிகளுக்கு வெருதிட்டமாகாது சகலமுந்தாளுப் உருவங்களெல்லாம் உண்டாக்கித் திரும்பப்போகிற காலத்திலேயே [illegible] ஞானதேசிகளுக்கு உள்ளே [illegible] சோதியாகிய [illegible] இம்மை மறுமையிலே பெறுகிற ஞானமும் அதிலுடைய [illegible] பொருந்தினே-எ-று. * ([illegible] யும் பூசுமைம்மென்றகவியும் அருவமாய தென்றகவியும் ஆக்கசொற்பத்தைச் சொன்னதிறுலே பொருதொடர்) (கஙு)

ஆனவிப்பொருண்முன்புனாத்தவற்றிலுலகியும்பொருந்...*
ஞானமற்றமனத்தறுபகல்லுடம்புமற்றவுடம்புசேர் ... ...*
ஞானமுற்றமவற்றுலநியப்படும்பொருளைன்னையு ... ...*
மீனமற்றதி [illegible] செருக்கமாசவியம்பலேன் ... .*

(இ-ள்) இப்படியான இந்த ஆத்மாவானது முன்சொன்ன சரீரங்களை அகளுலநியப்பட்ட பொருள்குறந்திருந்த மனதுடைய அருச்சுனு [illegible] லவுடம்பு மற்றஅந்தவுடம்பை சேர்ந்தஞான முதிர்ச்சி [illegible] முனென்றவிரண்டு ஞலநியப்பட்ட [illegible] டனைசுருக்கமாகச்சொன்னேன்-எ-று. (கசு)

என்னலானதிகழ்ந்தியாம்முன்னுனைத்தவிப்பொருளிதெலா *
முள்ளவாறுதெரிந்தென்பர்மக்குளைர்ந்திடவோதினேர்...*
கள்ளமாதருமாயவெடப்டகுநாதல்செய்யின்பமாம்... ...*
வெள்ளமாமெயையெய்துவாமெனவெடுகூறவிரும்பினேன் ...*

(இ-ள்) இழிவானதைநீக்கி நான்முன்சொன்னஇந்தஆர்த்தங்களையெல்லாம் உள்ளபடிதெரிந்து என்னுடையபத்தர் தங்களுக்குத்தெளிவிக்க ஓதினபேர்கள் வஞ்சனையான மயக்கத்தைகொடுக்கப்பட்ட மாயாசமுத்திரத்தைக்கடந்து ஆசையுண்டாக்கப்பட்டசுகமான வெள்ளத்தையொப்பாகியவென்னையடைவார்களென்றுசொல்லிமேல்வேறுசொல்ல விச்சையானர்-எ-று * (இப்பொருளிதெலா மென்னலானதிகழ்ந்துள்ளவாறுதெரிந்தெனப் பொருளுக்கேற்ப மாறுக) (கஎ)

கலிவிருத்தம்

ஓதியவுடம்புக்குமுயிர்க்குமுன்மையா... .. ...*
யாதிகண்டறிபவாருமில்லையாம்... ....*
நீதிவிரண்டுமுன்செய்வதேதெனி... ... ...*
னீதியினவற்றினைநிகழக்கூறுவாம்......... ......*

(இ-ள்) நாம்முன்சொன்னவுடம்புக்கும ஆத்மாவுக்கும் சத்தியமாக ஆதியைக்கண்டு அறிகிறவர்களாருமில்லையாகையால் இவையிரண்டும்அ

நாதிகும்றமும்மயிங்தவிரண்டும்முன்செய்கிறதேதென்பாயாகில் நியமத்தி
ஞலே அவைகளை விளங்கச் சொல்லுவோம்-எ-று. * தேகத்தைப்பிரகி
ருதியென்றும் உயிரைப்புருஷனென்றுஞ் சொல்லுவா ருமுளர் ஆதியை
யறியப்படாததினலே அநாதியென்றது) (௧௯)

நண்ணியகுணத்தின்வேறின்மைகாட்டலாற்... ... ...*
கண்ணியவினைகளுக்குடம்புகாரணம்...............*
எண்ணியதுன்பமோடின்பமென்றிவை... ... .*
யுண்ணியகாரணமுயிரென்கின்றதே......... ....*

(இ-ள்) சொந்தகுணத்தினுடையசெயலேயல்லாமல் வேறில்லாததை
நிறுத்துகிறதினலே நினைத்தகருமங்களாகியபுண்ணியபாவங்களுக்கு உ
டம்புகாரணம் இந்தப்பிரகிருதிகுணத்தால்வந்த புண்ணியபாவங்களைக்
கொடுக்கப்பட்ட தாகநிச்சயித்தசுகதுக்கமென்ற இவைகளையனுபவிக்கி
றகாரணமானது உயிரென்றுசொல்லப்பட்ட புருஷன்-எ-று. * (இதனு
லுடம்புசெய்து உயிரனுபவிக்குமென்றது) (௨௰)

இவ்வுயிரிவ்வுட றன்னிலேயிருந்.................*
தவ்வுடல்பயிற்றிடுங் குணங்களானவை.........*
துவ்விடுமிறந்திடுங் தோன்றுமிக்குண... ... ...*
மெவ்வநானுடையன வென்றிருத்தலால்... ......*

(இ-ள்) இந்தப்பிரகிருதியைக் குற்றமுடைய நானென்றும், என்னு
டையதென்றும், அகங்கரித் திருக்கிறதினலே இந்த புருஷனகிற சீவ
ன்இந்தவுடம்பிலிருந்து அந்தவுடம்பை நடத்தப்பட்டபிரகிருதிகுணங்
களானபுண்ணியபாவங்களால்வந்தசுகதுக்கங்களை யனுபவிக்குமரணமா
ஞ் சனனமாம்-எ-று. * (அகங்கரியாமலனுபவிக்கிற ஆத்மானுபவத்தை
விட்டு அகங்கரித்ததினலே சுகதுக்கங்களையனுபவித்துச்சனன மரண
ப்படுமென்றது) (௨௧)

உன்பனயான்வயுமுண்கின்றானுமெய்க்... ....*
கண்கொடப்பொருளையுங் காண்கின்றனுமா ... *
ண்பவெப்பொருட்குமொத்திருக்குநாதனு ...*
மெண்செய்திவ்வுடம்பிலே நின்றவீசனே ... ...*

(இ-ள்) தோமூர அனுபவிக்கபபட்ட சகலத்தையு மனுபவிக்கிறவனு
ம் உடம்பி லிருக்கின்ற கண்ணைக்கொண்டு எந்தப் பதார்த்தங்களையும்
காண்கின்றவனும் எந்தபபதார்த்தங்களுக்கும் சமமாயிருக்கின்ற கர்த்
தனும் இந்தவுடம்பிலே கர்த்தனென்றுசங்காரஞ்செய்து நின்றசீவனு
ன்-எ-று. * (ஈசனே-சீவன்) (௨௨)

இப்படியுயிரையு மியாக்கைதன்னையு......... ......*
மெய்பபடவறிந்தவன் வேட்டனவதுசர்ங் ....*

தொப்பனவன்றிபெ யொழுகியாழிறும்... ......*
பொய்ப்படுபிறவியின் மறுத்தும்போகிலான் ...*

(இ-ள்) இப்படி சிவனையும், உடம்பையும், நிச்சயமாக அறிந்தவன் வேண்டியவைகளைத் தனக்கென்றெட்டுடி, தன்லாமல்அனுபவித்து நித்தியமாய்க்கூடிச் சுகித்தாலும் பொய்யாகா நடையாற்றவியிலேதிரும்பவும் போய்ப்பிறவான், மோக்ஷத்தையடைவான்-எ-று. * (அறிந்தவன்சுகியா னென்பது சரீரத்தை, உதவான் ஆட்டச் சூட்டியால் அனுபவங்களை அனுப விக்கிறதும்சுகமென்றுஆக்கினியால் உசரூபலமோட்சமுண்டென்பது

செறிடமிப்பொருளைச் சிலர்தியானமாய்... ...*
குழியிற்றம்முள்ளே கண்டுகொள்வர்க ... ...*
அறிவருஞ்சாங்கிய யோகமாகிய........... ......*
நெறியினிலேத்தமாய் நிற்பக்காண்பரால் ... ...*

(இ-ள்) ஞானமான இந்த ஆத்மசொரூபத்தைச் சிலர்தியான மானகுறி யின்மேலே தங்களுடைய மனதிலேகண்டுகொள்வார்கள்சிலர் அறியப்படாத சாங்கியயோகமாகிய மார்க்கத்தினாலே உள்ளும் புறம்புமெங்கும் பூரணமாய் நிற்பக்காண்பார்கள்-எ-று. (௨௯)

இருமையுமறிவதற் கிடமிலாதவர்........ ....*
ஒருமகன்சொல்லுமென் றுரைத்தவொன்றையே ... ...*
யருமையிலருச்சனை செய்வராதலான்..................*
பெருமையினவர்களும் பிறவிமேவிடார்........ ......*

(இ-ள்) இப்படித் தியானமென்றும், சாங்கிய யோகமென்றும் சொல்லப்பட்ட இரண்டையும் அறிகின்றதற் கிடமில்லாதவர்கள் ஒரு குருவானவர் தெய்வமென்றுசொன்ன ஒன்றைத்தானே யருமையினாலே பூசைசெய்வார்கள் - அந்தப்பூசையினுடைய பெருமையினாலே அவர்களும் பிறவியைச்சேரார்கள் - ஆத்மாவைக்காண்பார்கள்-எ-று. * பூசிக்கவரும்தெய்வம் காட்டுவதினாலே ஆத்மாவைக்காண்பார்கள் என்பதாம்

போவனநிற்பன யாக்கைபூண்டுகொண்... ... ...*
டியாவருந்துயர்படு கின்றவிதெலாம்... ....*
மேவருமுயிருடல் வேறுபாட்டினை...............*
யாவர்கண்டறிவதோ ரறிவிலாமையே...........*

(இ-ள்.) நடக்கின்றது நிற்கிறதுமான சராசரமாகிய தேகத்தைத்தரித்துக்கொண்டே யாருந்துக்கப்படுகின்ற இவையெல்லாம் மனம் பொருந்துதலாக வரப்பட்ட சிவனும் உடம்புமான பிரகிருதி புருஷக்

கூட்டம் இந்தப்பிரகிருதி புருஷர்களுடைய வேறுபாட்டை ஒப்பில்லா ஞானமில்லாத அஞ்ஞானத்தை யுடையவர்கள் யார் கண்டறிகின்றவர் கள் காணமாட்டார்கள்-எ-று. (௨௫)

கெடுகின்றபூதங்க டோறுங்கெடாத...... ......*
வடுவின்றிநின்ற மறைப்பொருடன்னை... ... ...*
நடுவென்றுகண்டவ னல்லனவெல்லாங்...... ...*
கடுகின்றனையொழி யாவகைகண்டான்........,.....*

(இ-ள்) கெடுகின்ற பஞ்ச பூதாத்துமாக்கள்தோறும் பிறந்து கெடாமல் குற்றமில்லாமல் நிறைந்திருக்கின்ற வேதப்பொருளான வஸ்துவானதைப் பொதுவென்று கண்டபேரெல்லாம் நல்லவர்களென்று அப்படிக்கொத்தபே ரணுவுக் கணுவா யெங்கும் நீங்காமல் இருக்கின்ற வகையைக் கண்டவர்க ளென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் என்றவாறு. (௨௬)

ஒத்தெங்குமாய வொருமைப்பொருளினை... ....*
யத்தன்மையினு லறியுமவனே........... ....*
செத்தும்பிறந்துந் திரியாவகைதனை...... ....*
மெத்தன்மையிலே புகவிடுகின்றான்... ....*

(இ-ள்) சமமாகி யெங்குமாகிய ஒப்பில்லாமையையுடைய ஆத்மாவையெல்லாந் தானுகச் சமமாக்கி எங்குந்தானுகிய ஒருமையான சுபாவத்தினு லறியப்பட்டவனே செத்தும் பிறந்துந் திரியாதபடிக்குத் தன்னைச் சத்தியசுபாவத்தினுலே புகுதவிடுகின்றவன்-எ-று. * (சமமாவது அணுவுக்கு அணுவாய் மகத்துக்கு மகத்தாயிருப்பது, சத்தியசுபாவமாவது பிரமசுபாவம், பிரமமொன்றுதவிர மற்றவெல்லாமசத்தியமாதலால் பிரமத்தை சத்தியமென்றது, சுபாவமாவது எல்லாந் தானுய் ஒன்றிலுங்கூடாததாய் அசையாததாய் சைதன்னியமாய் நின்மலமாயிருப்பது, இன்னஞ் சொல்லில் விரிவாம் பிரமத்தையே ஆத்மாவென்பது)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

உணரவிகாரியென்றும்வினையெலாமுடம்பினேடே...*
புணர்வனவென்றுங்கண்டான்பொய்யிலாமெய்யைக்கண்டா
னிணர்மலர்முடியாயெல்லாவினைகளுஞ்செய்துமீசன் *
குணமிலியாதலாலே யவற்றொடுங்கூடிநில்லான்... ...*

(இ-ள்) சைதன்னியமான ஆத்மாவை விகாரங்களில்லாத அவிகாரியென்றும், கருமங்களெல்லா முடம்போடே பொருந்துவதென்றும் கண்டவனே பொய்யில்லாத மெய்யைக்கண்டவன் பூங்கொத்துக்களைத் தரித்த கிரீடத்தையுடைய அருச்சுனு இப்படி அவிகாரியான ஆத்மா

வுடம்போடேகூடி யந்தவுடம்பாலே கருமங்களைச் செய்தாலுங் குணமி ல்லாத நிர்க்குணனானபடியினாலே அந்தவுடம்போடுங் கருமத்தோடுங்கூ டியில்லாது-எ-று. ❋ உணர்வு இவ்விடத்தில் ஆத்மா இதனாலே ஆத்மாவு டம்போடுங் கருமத்தோடுங்கூடாமல் நிற்பனென்றும் அந்தவுடம்புங்கரு மமும் ஆத்மாவைக்கூடிநிற்குமென்றும் அறிவது. (உஅ)

உன்னியவானமெங்கு மொழிவறநிறைந்தவேனுந்..........❋
தன்னுடைநுண்மையாலே பிறவொடுஞ்சார்வதுண்டோ ... ❋
பன்னியவதுபோலெங்கும் பரந்துளனேனுமங்கு ....❋
மன்னியவிசனந்த வுடம்பொடுமருவமாட்டான்...... ... ...❋

(இ-ள்) எல்லாருநினைத்த ஆகாயமானது அணுவத்தனை யிடமானு ழுமில்லையென்பதுதிர வெங்குநிறைந்ததானாலும் தன்னுடைய சூட்சு மத்தினாலே மற்ற வாய்வு அக்கினி அப்பு பிருதிவு என்ற நாலுபூதங்க ளோடுங் கூடுவதுண்டோ அந்தனாலும் இந்த ஆகாசத்தைக் கூடாமையு ண்டோ இரண்டுமில்லையே, இப்படி வேதங்கள் முறையிட்டனபோலஆ த்மா வெங்கும்பரந்திருக்கின்றவனானாலும் உடம்பான அந்தவிடத்தி லிருக்கின்ற ஆத்மா அந்தவுடம்போடுங் கூடமாட்டான் - எ-று. ❋ (ஒழி வாயெங்கும் நிறைந்தவெனமாறுக, ஆகாசம் வந்தவிடத்திற் பிறவென்ற தனாலே மற்றநாலுபூதமுமாயின- ஆகாசத்தைத நாலுபூதமு மாதாரமாக வுடையதுபோல ஆத்மாவை யாதாரமாகவுடையது உடம்பென்ப தருத் தாபத்தி ஈசனிவ்விடத்தில் ஆத்மாவென்பது.) (உகூ)

இரவிதானொருவனேயாய் நின்றிந்தவுலகத்தோங்கும்... ...❋
விரவியவிருளைநீக்கி விளக்குறுமாறுபோலத்.........!... ...❋
தரவியாவருமுன்னில்லா சராசரருடம்புதோறும்...........❋
பரவியானுரைத்தமாய னொருவனேபரந்துநிற்பான்...... ...❋

(இ-ள்) சூரியனானவன் தனக்கிரண்டாவதில்லாமற் றானொருவனே யா கிநின்று இந்தவுலகத்தி லெங்குங்கலந்த விருளைப்போக்கிப் பிரகாசிக் கிறபடிபோல முன்னேதன்னையுண்டாக்க யாருமில்லாதவனாய் இப்போ து நான்விரித்துச்சொன்ன மாயனான், ஆத்மாவானவன் தனக் கிரண்டா வதில்லாமல் தானொருவனுமே சராசரங்களுடைய வுடம்புகள்தோறும் பரந்துநிற்பான்-எ-று. ❋ (தரவியாவருமில்லா மாயனெனமாறுக. இன் னமும் முன்றரவியாவரு மில்லாமற்றானே தந்தசராசர ருடம்புதோறுந் தானொருவனே பரந்துநிற்பானென்றுஞ் சொல்லலாம்.) (௩௰)

ஓரின்மேலாகிநின்ற வுயிரினோடுடம்புக்குள்ள......... ......❋
பேரினோடிறப்புமூப்புப் பிறப்பெனுமிவற்றைநேராய்ப் ... ❋
பாரின்மேலறிவார்வீடு பற்றினனென்றுன்பார்த்தன்.........❋
தேரின்மேனின்றுவேதச்சிரத்தின்மேலிருக்குஞ்சீரோன்,...❋

(இ-ள்) விசாரித்தறியில் எல்லாவற்றிற்கு மேலாகின்ற ஆத்மாவை அதுவுடனே உடம்புக்குள்ள பேறுடனே பிறப்பு சாவு மூப்பு யவ்வன மென்று சொல்லப்பட்ட விந்தநாலுஞ் சாவு கிழப்பிறப்பாகிய விவைக ளை வேறாகப்பகுத்துப் பூமியினிடத்திலறிகின்றவர்களே மோட்சத்தை யடைந்தவர்களென்றார் அருச்சுனனுடைய தேரின்மேலேநின்று வேதச் சிரசின்மே லிருக்கப்பட்ட சிறப்பையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி-என்ற வாறு. (௩௪)

யக-வது-பிரகிருதிபுருடயோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆ அத்தியாயம்-யக-க்குக்கூடியசெய்யுள்-௩அசு.





உ

ஸ்ரீமதேராமாநுஜாயநம.

பதினான்காவது

குணத்திரயயோக அத்தியாயம்.



கலிவிருத்தம்.

செய்யமாமலர் மேலுறைசெல்வியும்.................... ❋
வையமாட்ட வாளுமகிழ்ந்ததோ..................... ❋
ளையன்மெய்யையன் பாலடியோமெலா............... ❋
முய்யமீள வுரைக்கத்தொடங்கினேன்.................. ❋

(இ-ள்) சிவந்த பெரிய தாமரைப்பூவின்மே லிருக்கின்ற லட்சுமியும் அறியாமையையுடைய பெரியபூமிதேவியுங் கூடிமகிழ்ந்த திருத்தோள் களையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி கிருபையினாலே அடியையான நாமெல் லாம் பிழைக்கும்பொருட்டாகத் திரும்பவும் அந்தச்சத்தியமான ஆத் மாவை சொல்லத்தொடங்கினேன்-எ-று. ❋ இலட்சுமியையும் பூமிதேவி யையும் ருக்குமணியென்றுஞ் சத்தியபாமையென்றுஞ்சொல்லலாம்.(க)

நல்லதாமறிவிதி யாதினுநல்லது........................ ❋
மல்லமீர்தவத் தோர்க்கறிவாயது........................ ❋

மல்லவாகிய தோன்றும் பயன்றியார்..... ... ..*
சொல்லமேடைவ தன்றுணியடாதே..... ....*

(இ-ள்.) முன்சொன்ன ஞானத்திறும், நல்லதான ஞானமெல்லாவற்றிலும் நிலுநல்லதாய் முற்றந்திர்த்த கலம்பன்றுகிடப்பிகேருந்து மூடிவாகியது மற்போனாயச்சித்த தோனேபுவ கீடத்தையுமுடைய ராசாவே, அந்த ஞானத்திறுடைய உறுதியானதை இப்போது உனக்குச்சொல்லப்பட்டது எ-று. (உ)

இன்னதன்மையிந்த ஞானமடைந்தகைய ....*
லென்னைவந்தடைந்தாரிம்புவியிலும் .. ..*
பின்னைவந்தடைச்சாரிற்பாகன்................ *
றன்மையாதெளிவாக்குமாற்றுவோம் .... *

(இ-ள்) இந்தஸ்வபாவமான இந்தஞானஸ்வபாவத்திலேயேதானென்னை யடைந்தபேர்கள் பிறகு சிருஷ்டிகாலத்தில் இந்தப்பிரபஞ்சத்திலேவந்து பிறவார்கள் பிரளயகாலத்திலே சங்காரத்துக்குங்கூடாரகள் அந்தஞான த்திறுடையசுபாவ மென்னவென்றுமறுசொல்லுவோம்-எ-று. *(அங்கு அசை பின்னிவ்வுலகெனமாறுக காலம் தோன்றுமெழுவாய்வந்தடைதலாவது அஞ்ஞானத்தைநீங்கி ஞானத்தில் வந்தென்னையடைதல்) (௩)

மூதவாவென்குணமவைமூன்றினும் ....*
பேதமாகப்பிரகிருதிதன்னிலே ....*
காதலாச்வைப்பனியான்கருவைக்கருப் ....*
பூதமியாவும்புலப்படுகின்றதே ... .*

(இ-ள்) பழைய தவசையுடைய அருச்சுன என்னுடைய குணமூன்று அந்த மூன்றிலும் பேதமாகப் பிரகிருதியிலேநான்விசுவாசமாகக் கருவைப்பேன் அந்தக்கருவைச்சகலபூதங்களுங் கெடுக்கிறது-எ-று. (௪)

இந்தவண்ணத்திறைலிவ்வுலகிடை ....*
வந்துயோனியெல்லாம்வருவித்திடே...... ......*
தந்தையாயிவையீன்றளிக்கின்றதா .... *
யந்தமாமலர்மேலயனுமென்றே ....*

(இ-ள்) இந்தவிதத்தினாலே இந்தப் பிரபஞ்சத்திலிடத்திற் பிரகிருதி வந்துசகலயோனிகளையும் வரப்பண்ணுகிறதகப்பனாகிஅந்தயோனிகளை ப்பெற்றுரட்சிக்கிறதாகிய அந்தப்பெரியதாமரைப் பூவின்மேலிருக்கிற பிரமதேவனாகும்-எ-று. (௫)

என்றுமுன்னங்குணமென்றியம்பிய ... .*
மூன்றுமூலப்பிரகிருதிதன்னிலே ... . *

க்கு நடுவான ராசதகுணமே மிகுந்து வளர்ந்ததென்றறிவாய்நீ - எ-று. (லோபமும் சஞ்சலகருமமும் காமிய கருமமும் விஷய விச்சையும் வந்தபோது ராசதகுணமென்றறிவது) (௰௩)

தக்கதுதகாதென்றொன்றைத்தானறியாதபோது......... ...*
எக்கருமங்கண்மாட்டுமிகழ்ச்சியோடிருக்கும்போது ... ...*
மொக்குமெய்ம்மயக்கத்தோடுமுறக்கம்வந்துற்றபோது ... *
மிக்கதுதமமேயென்றுவிசையநீயறியவேண்டும்... ....*

(இ-ள்) அருச்சுனா ஒருபதார்த்தத்தை இதுதகுமானது இதுதகாதது என்று தான்பகுத்தறியாதபோதும் எந்தக்கருமங்களிடத்திலும் வெறுப்புடனே யிருக்கும்போதும் உடம்பிலொத்திருக்கப்பட்ட மயக்கத்துடனும் நித்திரைவந்தடுத்தபோதுந்தமோகுணமேஅதிகமானதென்றுநீயறியவேண்டியது-எ-று. (௰௪)

எழுசீரடி யாசிரியவிருத்தம்

தக்கசத்துவமே நிகழ்ந்தபோதிறந்தோர்............*
தெய்வயோனிகளிலே சார்வார்.................*
மக்களிற்பிறப்பாரிராச தம்வந்து ... .*
விளைந்தபோதுடம்பினைத்துறந்தோர..........*
மிக்கெழுதமமே விளைந்தபோதிறந்தோர்... ... ...*
விலங்குசாதிகளிலே வீழ்வார்...... ....*
ஒக்கமற்றிவற்றின் பலன்களுந்தெரிய...............*
வுரைக்கின்றே னிவற்றையுமுணர்வாய்... ... ...*

(இ-ள்) தக்கதான சத்துவகுணமே நடக்கிறபோது செத்தவர்கள் மேலான தெய்வயோனிகளிலே யடைவார்கள் இராசதகுணமேவந்துண்டானபோது தேகத்தைவிட்டவர்கள் மனிதயோனிகளிலே பிறப்பார்கள் மிகுந்து எழும்புகிற தமோகுணமே யுண்டானபோது செத்தவர்கள் மிருகசாதிகளில் வீழ்வார்கள் இதனுடனே கூடி இந்தத்திரிகுணத்தினுடையபலன்களுந்தெரியச்சொல்லுகிறேன் இதையுமறிவாய் அருச்சுனா-எ-று. * (சத்துவமே தம்மேயென்றதனால் இராசதமேயென்று வருவித்தது ஏகாரமேதுக்கென்னில் ஒவ்வொன்றில் மூன்றுகுணமுங் கலந்தொன்பதுகுண மாதலாலெங்கே தனிக்குணத்தைச்சொன்னது கலந்துநீர்ந்தது திரும்பத் தனியாகவு மிருக்குமோவென்னில் தக்கசத்துவ மென்றதனாலும் மிகெழுதம மென்றதனாலும் கலந்தகுணத்திலும் மூன்றிலொன்று எதுமிகுந்ததோ அதுவேமுதலாக மற்றஇரண்டுந்தாழுகையால் மிகுந்ததைக்கொண்டு ஏகாரம்வந்தது வீழ்வாரென்றதனால்மேலோகத்திலேறித் தெய்வயோனியிற் பாரம்பரையாகவே பிறவாரென்றும் மத்தியலோகமான பூமியில்மனிதயோனியிலே தானேபாரம்பரையாகப்பிறந்து சுழலுவாரென்றும் கீழான மிருக யோனிகளில்

வீழ்ந்து யேலாமனிதயோனிக்கும் வாராயம் பாரப்பலாயாகத் தாழ்ந் துவிழ்வாரென்றது இன்னைய்விரிக்கில்வெருகுவாம். (௧௫)

அருங்குணமாயசத்துவபலமாயழுக்கதலிராசதபலமாம்...... ... ...*
பெருந்துயருதற்பலதமோபலமாகும்பேதைமைபேசியமுறையே ... *
பொருந்தியவிந்தக்குணங்கள்மூன்றுமுப்புதகாலங்களுக்கெல்லாம் ...*
வருந்தியவாயஞானமேர்லோபமயக்கமென்றிவ்வணம்வருமால் ......*

(இ-ள்) அரிதானகுணமாகிய சத்துவத்தினுடைய பலமாகும் அழுக் கலான தின்மையாயிருப்பது ராசத குணத்தினுடைய பலமாகும் மெய் யதுக்கத்தையனுபவித்தல் தமோகுணத்தினுடைய பலமாகும் மூட த்துவம் இப்படிசொன்ன வரிசைப்படியே இந்த மூன்று குணங்களினு ளும் பொருந்தின சிவசரீர கூட்டங்களுக்கெல்லாம வரப்பட்ட தென் னவெனில் சாத்துவிக குணத்தினாலே சிறப்பாகிய ஞானம்வரும், இரா சதகுணத்தினாலே லோபம்வரும், தாமதகுணத்தினாலே அஞ்ஞானம் வரும்-எ-று. (௧௬)

சத்துவமாந்தர்பரகதியடைவார்தமத்துளோரதோகதிசார்வார்... ......*
மத்திமகுணத்தோராயினோர்கவின்மானிடப்பிறவியாய்வாழ்வா... ...*
ரித்திறமாயவுருவமேவிகாரியானவிகாரியென்றவற்றை........... ......*
மெய்த்திறனுகவறிந்தவனறிந்தபொழுதிலேவீட்டினைபடைந்தான் ...*

(இ-ள்) சத்துவகுணமுடைய மனிதரான சாத்துவிகர்கள் மேலான மோக்ஷத்தையடைவார்கள், ராசத குணத்தோரானவர்கள் மத்தியலோ கத்திலே மனிதப்பிறவியாயிருப்பார்கள், தமோகுண முடையவர்களோ மேல்நடுவென்ற இரண்டுகதியும் அடையார்கள்-இத்தவிதமான தேகமே விகாரி நான் அவிகாரியென்று தன்னையுந் தன்னுடம்பையுமான இந்தவி ரண்டையும் நிச்சயப்படியாக அறிந்தவன் அறிந்தபொழுதே மோக்ஷசுக த்தையடைந்தான்-எ-று.* (சாத்துவிகர்கள் மோக்ஷத்தை யடைந்தார்க ளெனவே இனித்திரும்பார்களென்றும் ராசதகுணத்தராய் மனிதரா யி ருப்பாரெனவே சொற்காதி பலன்களுக்குப் போகின்றதும் பூமிக்கு ம னிதராகவந்து சுகிப்பதுமாகத் திரிவரல்லது தெய்வயோனியு மோட்ச முடம் பெறார்களென்றும் மிருகயோனியும் அதோகதியும் அடைவார்களெ ன்று மற்றோரும் கதிசாராரெனவே மிருகயோனியும் அதோகதியும் அடையுமென்பது அருத்தாபத்தி.) (௧௭)

உடம்புடனிருந்தே யுரைத்தவிக்குணங்கள்............*
மூன்றையுமுள்ளவாறறிந்து.................... ... ...*
கடந்தவன்பிறப்பு மூப்பிறப்பாதி................ ... ...*
யாகவேகட்டுரைக்கின்ற.............................. ...*
விடம்பனாயிடும்பை யானவையுங்கடந்து............ ...*
வீட்டின்பம்விளைபவனென்றுன்.......................*

றடங்கடலிடையே வளர்ந்தவர்தயக்கு.......... ... ...*
வேறிதுதனஞ்சயனுரைத்தான்............... ... ...*

(இ-ள்.) ஆத்மா தேகத்தோடிருந்தே நான்சொன்ன இந்த மூன்று குணங்களையு முள்ளபடி யறிந்து கடந்தவன் பிறப்பு மூப்புச் சாவுமுதலாகசசொல்லுகின்ற நஞ்சையொப்பான எல்லாத்துக்கத்தையுங் கடந்து மோட்சசுகம் விளைக்கின்றவனென்று பெரிய திருப்பாற் கடலின்மேலே திருக்கண்வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொன்னார் அவருக்குவேறே இந்தச்சொல்லை அருச்சுனன்சொன்னான்-எ-று. (கஅ)

கண்ணியலுலகிற்கிடப்பரிதாய குணங்கண்மூன்றையுங்கடந்துயர்ந்த .*
புண்ணியரியல்புமவர்களையறியுங்குறியையும்புகன்றருளென்ன.........*
வெண்ணியவுலகுமுலகில்வாழுயிருமிருவினையாகமையுமாகப் ... .*
பண்ணியுமழித்துமேவிளையாடுமெபாமன்வேறிவ்வகைபணித்தான் ... ...*

(இ-ள்) இடமேஷ்பாவமான வுலகத்திலே யாராலுங்கடக்கப்படாத மூன்றுகுணங்களையுங்கடந்து மேலான நல்லவர்களுடைய சுபாவமும் அவர்களை யறியப்பட்ட குறியையுந் திருவாய்மலர்ந் தருளவேண்டுமென்று அருச்சுனன்சொல்ல அதற்குப்பெரியவர்களாலே யெண்ணமிட்ட வுலகமும் உலகத்தில்வாழப்பட்ட சீவனும் நல்வினைதீவினையான கருமமுமுடைய தேகமும் இப்படியாகவுண்டாக்கியும், அழித்து மிதுவே பொழுதுபோக்குதலாக விளையாடப்பட்ட மேலான ஸ்ரீகிருஷ்ண சுவாமியானவர் வேறேயிந்தப்படிசொன்னார்-எ-று. (கக)

வாய்மையவல்லாற்குணமவைமூன்றின்......... ... ...*
வருகின்றகாரியமாய............................ ...*
தூய்மையுந்தொழிலு மயக்கமுமென்று............ ...*
சொல்லிய துறையிவைமூன்றுஞ்........... ... ...*
செய்மையவென்று பெறுதபோதிரங்கல்..............*
பெற்றயோர்நிகழ்தல்செய்யாதான்......... ... ...*
தாமயலாகாக் குணங்களோடிருந்தே........... ......*
யவற்றினுல்சவிப்பிககப்படாதான்............... ...*

(இ-ள்) குணமான அந்தக்கரணமூன்றினுல் வருகின்ற காரியமாகிய பரிசுத்தமுங் கருமமு மறியாமையுமென்று சொல்லப்பட்ட இந்தமூன்றுவிதமும் பெறக்கிடையாதபோது தூரத்திலிருக்கின்றது கிட்ட வில்லையென்று விசாரப்படுதல் பெறக்கிட்டக் கிடைத்தபோது விட்டுப்போகாததைப்போல அவமானஞ்செய்தல் இந்த இரண்டும்வாயினுலே செய்யாம லிருக்கிறது மல்லாமல் மனதினுலுஞ் செய்யாதவன் தாங்கள

ன்னியமாகாமல் ஆத்மாவோடு நீயொன்றிருந்த குணங்களோடு கூடியிருந்த பந்தக்குணங்களாலே சலிப்பிக்கப்படாதவன்-எ-று. (உ௰)

கலி விருத்தம்.

மானமவமானம்வரு மின்பமிடர்மண்பொன் ……*
ஞானமிருளப்பிரிய மன்பர்பகையானே ……*
ரு புனமோடுபோக மூடமொழுகொப்பா… ……*
…றுருகிய குண மாவையிருந்தோன் ……*

(இ-ள்) வரப்பட்டதாகிய ருசமான மானமானமுஞ் சுகதுக்கம் மண்பொன் சந்தோஷம் கோபம் தோஷ பகையர் நிக்கை சித்தி இவைகளடைந்த பொழுது சமமானவன் குர்மமடைகிற குணமானதை வெறுத்தவன் எ-று. * சந்தோஷம் கோபத்தை பிரிய மப்பிரியமென்றுந்தோஷ படகைருரைச் சத்துரு மித்துருவென்றும் நிக்கையை அபகீர்த்தி யென்றுஞ் சொல்லுவார்கள் என்ன மன்றோடென்றுசொல்லலாம்) (உக)

இப்பரிசினல்வரு குணங்களையிகந்தே ……*
மெப்பருவமாயபெருவீடுபெறுகிற்பா ……*
ரெப்பரிசினுமிடையின்றியெழுமன்பா ……*
லொப்பவரிலாதவெனையுன்னுமவர்கண்டாய் ……*

(இ-ள்.) இந்தவிதத்தினலே வரப்பட்ட குணங்களைக்கடந்தே குறைநிதனைச் சத்தியமான பருவமாகிய பெரியமோட்சத்தைப் பெறமாட்டுவார் எந்தவிதத்தினும் இடைவிடாமலெழும்பின அன்பினலே ஒப்பானவர்களில்லாத என்னைநினைக்கிறவர்கள் கண்டா யருச்சுன - எ-று. * (உரைக்குப் பின்னிரண்டு பாதத்தையு முன்னகவு முன்னிரண்டு பாதத்தையும் பின்னகவுமாறுக,) (உஉ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஒழியாதென்றுமியாவர்க்கு மியானேயுணர்த்திவருகுதலா ……*
லழியாவறிவுங்கெடாவின்பக் கேடிலின்பமானதுவ ……*
மழியாவரும்மென்றுள்ளே யளவாகாநின்றனவென்றான் ……*
சுழியாநின்றபெருவெள்ளத் திடையேபண்டுதுயில்கொண்டான் ……*

(இ-ள்.) எல்லாருக்கும் நானேவிடாம லென்றைக்கு முபதேசம்பண்ணிவருகிறதினலே கெடாதஞானமுங் கெடாதமோட்சமுங் கேடில்லாத சுகமானதுங் கெடாததருமமும் என்னுள்ளே யுண்டாகிற தென்றுசொ

ன்றார் "முற்காலத்திலே சுழித்துநின்ற பிரளயாந்தப்பெரிய வெள்ளத்தினிடத்திலே ஆலிலைமேலே பள்ளிகொண் டருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி எ.று. * (எல்லாமுண்டாகிற தென்னுள்ளேயாகையா லெல்லாவற்றிற்கு நானே ஆதாரமுங் காரணமுமென்றது) (உஎ)

யச-வது-குணத்திரயயோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆ அத்தியாயம்-யச-க்குக்கூடியசெய்யுள்-சாயஉ.

———*———

உ

பதினைந்தாவது

புருஷோத்தமயோக அத்தியாயம்.

—— (*) * (*) ——

கலி நிலைத்துறை.

சாயையன்னவெவ்வினைத்தளையறுக்கவோதகவில் ... *
பேயையின்னுயிர்செகுக்க வோபிள்ளையாய்வளர்ந்தான்.
வேயையொன்றியவரிசிலைவிசையற்குமீள ....*
மாயைதன்னையோர்மரமொக்கவருணிக்கலுற்றான் ... *

(இ-ள்) நிழல்போலத்தொடர்ந்த கொடுமையுள்ள கருமத்தையறுக்கவோ கொல்லத்தக்க பூதகியென்ற பேயின்இனியசீவனைக் கொல்லவோ குழந்தையாய் இடையர் சேரியிலேவளர்ந்த ஸ்ரீகிருஷ்ணசுவாமி மூங்கிலைப்பொருந்திய கட்டுதலையுடைய காண்டிவமென்றவில்லையுடைய அருச்சுனனுக்கு மாயையை ஒருமரத்தையொப்பாக வருணிக்கத் துவக்கினார்-எ-று. (க)

கலி விருத்தம்.

வேர்மேலதுதலைகீழது வீவில்லதுவேதத் ....*
தேர்மேவியவிலைமேவிய தியாருமுவுகறலினை ....*
லார்மேவியவசுவத்தம தெனவேயாசதனின் ....*
பேர்மேவியபெருமாயைசெய் பிறவிப்பெருமரமே ...*

(இ-ள்) மேலேவேருள்ளது கீழேகிளையுள்ளது, அழிவில்லாதது, வேதமாகிய அழகுபொருந்திய இலைகூடியுள்ளது, யாருஞ்சொல்லுகிற நிலைநிலைபொருந்திய அசுவத்தமென்றே சொல்லப்பட்ட அரசமரத்தின் பெயரையடைந்தது பெரியதாகச்செய்யப்பட்ட பெரிய சனனவிருட்சமாகிய பிறவிமரம்-எ-று. * பெருமையையுடைய பெருமரமானதுவே, மேல்தலைகீழாய்வில்லாது வேதத்தோமேய விலை மேவியதியாரும் புகழ்கின்ற பார்மேவியவசுவத்தமெனவே மரசதனின் போயெழுமுடிக்க (௨)

இஃவாறிதனிபல்பாகிய வகைசபாதெரியாதும் ... *
ஒவ்வாவகைபெரிதாம் பிரமத்தொருவிடையே ....*
வைவாள்வலியுமூலாவதன் முமைமேபவரன் புடையே ..*
மெய்வான் முதல்வருமாதலமேடிலானதுமேவி ......*

(இ-ள்) இந்தப்படி இதினுடைய சுபாவமாகியவிதத்தையென்னவென் றுகேட்கிற கூர்மையுடைய அறிவுடையவனே பகைவரைச் செயிக்கி ற அருச்சுனா, கேள் ஒன்றுமொவ்வாதபடிபெரியதாகியபிரமத்தி லொரு விடத்திலே அந்தப்பிரமத்தினுடைய விதிப்படியே வரத்தக்க கிரமப்ப டியே சிதாகாசமுதலாக வெல்லாம்வரும் அதலாப்பிரமத்தினிடத்தி லு ண்டான சித்திலேவேர்க்கொண்ட மாயையாலையால் வேர் மேலானது எ-று. * (மெய்வான் சிதாகாசம்) (௩)

உலமால்வருமுலகாகியுமுயிராகியுமேமூலாம்...........*
கீழான துதலையாய்வருமுதலிடைகிழாய்ச்... ... ...*
சூழாகியபிறவித்தொடரொருகாலமுமடையப்........*
பாழாம்வகைபழியாமையிலமைதோர்படியே... ...*

(இ-ள்) இனி மாயையில் நின்றும் வியாதியால் உலகங்களாகியும் உயி ராகியும் வரப்பட்ட அழுகினாலே தலைகீழானதாய் வரப்பட்ட முதல்நடு கடை மூன்றுமாயைக்கு மேலில்லாமல் அதோமுகமாய்ச்சூழ்வதாகிய பிறவித்தொடர்ச்சியெல்லாம் பாழாம்படி பொருகாலமுமழியாமையினா லே இந்தச்சனனவிருட்சம் அழியாதது ஒப்பில்லாத சுபாவமுடையது எ-று. (௪)

கருநாண் முதல்வினையாவதுவளர்காதல்செய்தலினு ...*
வருநான்மறையிலேயேயிவையனையாமெனவறிநீ ... *
வருநாள்களிலொருநாள்பெறுவகையின்மையினாலே..*
பெருநாடறியசுவத்தமதெனலாயதுமேயே...... ......*

(இ-ள்) கருப்பற்றுநாள்முதலாகக் கருமமாவது வளரப்பட்ட ஆசை யைச்செய்தலினாலே அறியநான்கு வேதங்களுமேயிலைகள் இவைதயங்கப பிறவிமரமாகுமென்று நீயறியவருகிறநாள்களி லொருநாள் பெறப்படி

யில்லாததினாலே பெரியயுகம் அறியபபட்ட அந்தப் பிறவிமரமான யீ ரேப யானது அசுவத்தமென்று பெயருடைய தாகியது -எ று. * (கருகா ண்முதல் விளைவானதென்று பாடமோதிற் கருபபற்றுநாண்முதல்விளை வானது வரபபட்டதென்றும் பெருநாடியவென்று பாடமோதிற் மெரு மையுடைந்தவென்றும்.) (ரு)

மற்றிபபடிநிகழ்கின்றவிம்மாயாமரமதனின்........... *
பெற்றித்திறமிதுவல்லதுபிறிதின்மையினாலே......... *
யுற்றிபபடியறிவாய்பொருளெல்லாவுமுணர்ந்தார்... ...*
ரிற்றிபபெருமானிந்திறமின்னுஞ்சிலவுரைகேள் ... ...*

(இ-ள்) இந்தபபடிவிளங்குகின்ற இந்தமாயாமரத்தினுடைய சுபாவ விசேம் இதல்லாமல் வேறில்லாததினாலே அபபடியுறுதியாக அறிவால் எ லா:பபொருள்களையுமறிந்தபேர்களில்லை இந்தபபெரியபிறவிமரத்தினு டைய வகை யின்னுஞ் சிலவுங்கேள் அருச்சுனா-எ-று. (௬)

கண்ணேயெனவணயாய்பல பிறவிக்கதிவழியே... ...*
மண்ணேமுதல்கீழாமுல கிடையேவளர்வனவும்......*
விண்ணேமுதன்மேலாமுல கிடையேயிடை வனவு ...*
மெண்ணேறியபுவமாகிய பனையாலிசைதருமே... ...*

(இ-ள்) இவன் என்கண்ணேயென்றுசொல்ல ஒபபான அருச்சுனாபல பிறவிகளினுடைய கெதிவழியே பூலோகமுதலாகக் கீழான வுலகங்களி னிடத்தில் வளருகிறதும் ஆகாசமுதல் மேலான வுலகங்களினிடத்தில் நெருங்கினதுமாக லக்கம் எண்ணின எண்பத்துநாலுலட்சம் அச்சுபே தபபட்ட பிறவியாகிய பனைமரத்தாலே பொருந்துது-எ-று. * (பனைம ரமாவது பெருங்கால்வாய்) (எ)

நெறியால்வரும்வினையோபல நிலமாமுலகிடையே ...*
யறியாமையோடுறவீழ்தலின் வேர்கீழினுமுளதாம்...*
பிறியாதெழுகுணமாகிய பெருநீர்மையின்வளரும் ...*
பொறியாகியவிவையேதளிர் போன்மேயதுபொலிவே*

(இ-ள்) செய்கின்றமார்க்கத்தினாலே வரபபட்ட கருமமே வேர்- பலநி லங்களா லோகங்களினிடத்தில் அறியாமையாகிய அஞ்ஞானத்துடனே தங்க விழுதலினாலே கீழிலும் வேருளளதாம் ஒருகாலமும் பிறியாமலெ ழும்பபபட்ட குணங்களாகிப நீரிருந்ததினாலேவளரும் பொறியாகிய ச ந்த பரிச ரூப ரச கந்தமான இந்தவிஷயங்களே தளிர்போலப பூரிப யையடைந்தது-எ-று. (அ)

கனவுந்நிகழ்கழுநாழியின் மிகுகந்திருககரு... ... ...*
மெனவந்தழிதலினாலுரு வதுவின்றிமுன்யாது ... ...*
முனவந்திடுமுதனாளொடு முடிவின்மையினாலே... ...*
தனதந்தமுமுதலுந்தெரி தாவில்லதுதானே...... ...*

(இ-ள்.) [illegible] வை
ட்கேவதுபோலவே [illegible] முன்னே [illegible]
ன்னையுண்டான [illegible] அதற்[illegible]
லே தன்னுடைய [illegible] தெரிவதற்[illegible] *
மையைத் தெரிந்துகொண்டவர் [illegible] டைத் தேர்
னவ.) (௯)

அது [illegible]

மந்திரமா[illegible] ....*
தந்திரவாளால்வெட்டித் தந்திரமாக்கின்றே........... *
இந்திரசாலமென்ன மாயமென்னிலையேகட்டும்.....*
அந்தரமிலாதவென்னை யடைகையேயபிப்பமாமே ...*

(இ-ள்) மாயையாகிய இந்தப்பிரபஞ்சத்தை அசங்கமென்கின்ற [illegible] யவாளினாலேவெட்டி அந்தப்பிரபஞ்சத்தைப் பொய்யாக்கி [illegible] நின்று இந்திரசாலம்போல வெல்லாம் என்னிடத்திலே காட்டுகின்ற [illegible] ந்தரமான வென்னைச்சேருதலே அபேக்ஷிதமென்றவாறு. * என்னைச்சே[illegible] தது அடுக்காதென்பதருத்தாபத்தி [illegible] கூட்டத்தை விட்டது கூட்டமாவது அந்தக்கரணவியாபாரம் உபாயவானால் [illegible] சனைப்பிடித்தவாள் அந்தரமில்லாதது நிரந்தரம் [illegible] னினும் பொருந்தும்.) (௰)

துன்னியவாசைகாமங் கடந்தவர்காணத்தோன்று ... ...*
மென்னுருவியற்கைமேட்கிலெல்லாவையுங்காட்டுகின்ற.........*
மன்னியவொளிகள்காறு [illegible] வந்துசேர்ந்தார்......*
பின்னிப்பேரொன்றாய [illegible]யாய்நின்றுபோகும்... .. *

(இ-ள்.)கலந்தஆசைகாமம் இவைகளைக் கடந்தவர்கள்காணத்தோன்றப் பட்டஎன்னுடைய சொரூபசுபாவத்தைக்கேட்கில் எல்லாவற்றையுங் காட்டுகின்றநிலைமையான பிரகாசங்களாகிய சந்திரசூரியாக்கினிகளுக்கு ஆதாரபடியாய் என்னைவந்து சேர்ந்தவர்கள் பிறகு அவர்களை [illegible] டம் வேறொன்றாகாமல் என்னுடைய சுபாவமேயாவதாய் முன் [illegible] போகும் அருவமாகவும்போகுமென்றவாறு. (௧௧)

குடந்தொறுந்தோன்றுகின்ற வாகாசங்கொண்டகொடடம். *
தடம்புனறோறுந்தோன்றுஞ் சந்திரன்றானுமென்ன ... ...*
வுடம்புகடோறும்வேறு [illegible]யத்த........ .... *
விடம்படுபுலன்கடோறுமியம்புறியம்புவேனும்... ... .. *

(இ-ள்) குடங்கள்தோறுங் காணுகின்ற ஆகாசம்போலவும் குளத்தண்ணீர்கள்தோறும்வெவ்வேறாய்ச்சிவனொன்றுநின்றேனும் [illegible] லுண்டாகிய இந்திரியங்கள்தோறும் [illegible] நிற்பவனென்றவாறு, * (இயம்புறிகுடந்தோறுமெனமாறுக) (௧௨)

பூக்கமழ்நாற்றங்கொண்டு பொருமளிபோகுமாபோல் ......*
நீக்கனல்கின்றவேலோய் சிவனென்கின்றசீரோன்...........*
யாக்கையையெய்தும்போது மதனைவிட்டேகும்போதும் *
போக்கரிதாயவாறு புலன்களைக்கொண்டேபோமால்.........*

(இ-ள்.) நெருப்புச்சுடுகின்ற வேலையுடைய அருச்சுனா வண்டானது வரும்போதும் பூவில்மணக்கின்ற பரிமளத்துக் காகவந்து பொருந்தும் போகின்றபோது பரிமளத்தைக்கொண்டுபோகும் அப்படிப்போலச் சீவனென்றுசொல்லப்பட்ட சிறப்புடையவன்சரீரத்தைச்சேரும்போதும் இந்திரியங்களைக் கொண்டேசேரும் அந்தச் சரீரத்தைவிட்டுப் போகின்றபோதும் இந்திரியங்களைப் போக்கப் படாதபடியினாலே இந்திரியங்களைக்கொண்டேபோமென்றவாறு. * (பொறியளியென்பாருமுளர்.) ()

இதுவும்-அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னையனையவுடம்பதனை விலக்கடைவதாய்விடையம் ...*
தன்னேரில்லாதான்பலவுந் தானாகின்றதன்மையினை.........*
யென்னேகாணாரறியாதா ரறிவார்யோகத்தாலேதம் ....*
முன்னேகாண்பாரிதனியல்பையாதோவின்னமொழிவன்கேள்

(இ-ள்) தனக்கு ஒப்பில்லாத சீவனானவன் மின்னையொப்பான சரீரத்தை விடுகின்றது சேருகின்றதாக விஷயங்களனேகமுந் தானாக அநுபவிக்கின்ற சுபாவத்தையறியாத மூடர்களென்னவே காணார்கள் அறிவுடையவர்கள் யோகதிருஷ்டியினாலே தங்களுடைய கண்முன்னே காண்பார்கள் இதனுடையசுபாவமென்னவோ அதையின்னுஞ்சொல்லுகிறேன் கேள்-அருச்சுனா-எ-று. * (தன்னேரில்லாதான் மின்னையனையவென்றும் விஷயம், பலவுமென்றுமாறுக - தம்முன்னே யென்பது. சரீரத்திலாத்மாவிருக்கச்சேதானே ஆத்மாவேறு சரீரம் வேறெனக்காணுதல் அறிவில்லாதவர்கள் செத்துங்காணார்களென்ப திருத்தாபத்தி. (௰௪)

இந்திரியங்களுக்குங்கண்ணா யிரவிதீயிந்துவின்பால்.........*
வந்தெழுங்கதிருநானே மாநிலமாகின்று...................*
தந்தியேறனையதோழா சாமமேமுதலாந்தன்மை..............*
தந்திரந்தவிர்ந்துமெல்லாந் தாங்குகின்றோனுநானே ... ...*

(இ-ள்) களிற்றினையொப்பான தோழா பஞ்சேந்திரியங்களுக்கும், விஷயங்களைக்காட்டுகின்றகண்ணான்-சூரியன்-சந்திரன் அக்கினி இவர்களிடத்திலுண்டாகியெழும்புகின்றபிரகாசமுநானே சாமமுதலானசுபாவதந்திரங்களை விட்டுபெரியபூமியாகி நின்றுஎல்லாந் தாங்குகின்றவனும் நானே-எ-று. (௰௫)

கலிநிலைத்துறை

மூந்துவானசுவை முற்றுமாகியே...... ... ...*
இந்துவாகிநின் றூண்டனயானவையும்... ....*

தந்துசேர்சுவை படைத்திடுக ... . *
உந்திடாவகைவார்க்கின்றேனே நான் ... . *

(இ-ள்) முதன்மையான பெருமையுள்ள அறுசுவை முழுதாயிருக்க நிற்கின்ற பொசிக்கின்ற தெல்லாம் சொரிந்து அறுமென்றதொகை சேர்ந்த சுவையாமிடத்திலேயிருந்து அந்த சுவைகளுக்குத் தக்கதாகக் கெடாதபடி வளர்க்கின்றவனும் நான்-எ-று. * (வான்சுவையென்றதனால் ஒருசுவையினு மனேக பேதமுண்டு ... ஆகோசுவிசேஷங்களுடைய தொருசுவையாகப் ... சுவையெல்லா ... பேல் வாய்ச்சுவையென்றார்.) (௰௬)

நின்பசித்துயர் ... சுவையுண்டபொ .... *
... . *
மின்பமார் ... பாக்கைகக்கேடொழிந்தே .... *
... . *

(இ-ள்) தோற்ற ... மதாரமுண்டாகச் சுவைக்கின்றதும், உண்கின்றதும் ருசிக நல்லபலமெனச் செய்யப்பட்டன வுமிதப் பொசிப்பும் இன்பமாகின்றபடிக்குச் சரீரங்கள்தோறும் அக்கினியாய் நின்று பாகமாக்கிச் சீரணஞ்செய்கின்றவனும் நான்-எ-று. (௰௭)

கல்லமார் ... அறிவற்றிலாப் ... . *
பன்மார்க்கங்களும் மறிவும்பொருளிற் .... *
சில்லறைத்தொன் விரசரசியா .... *
வல்லதிலேயே ... . *

(இ-ள்) போர்செய்து வீரர் ... யிருந்த தேவருடைய வீரர்களுக்கு வீரனா அருச்சுனா, கல்லமாரானவருடைய ஞானமும் கலவியில்லாச் சிறியவர்களுடைய புல்லறிவாகிய அஞ்ஞானமும் நானேயல்லாமல் வேறில்லையென்றறியக்கடவாய்-எ-று. (௰௮)

ஆசையில்லாமறைக் கதியானதன் .... *
மாசையிலாதவெப் பொருளாம் வாய்மையே ... *
ஈசைபிறவிலித் தேதுவெருமியாம் .... *
வீசையக்கேள் ... வேறுமொன்றையே ... ... *

(இ-ள்) சலனமில்லாத வேதத்துக்கு அதிபனான், அந்தவேதத்தினுடைய குற்றமில்லாத சத்தியமானபொருளும் என்னுடைய வாக்கிலே சொந்தமிச்சமாறு ... யெடுத்துச்சொல்லுகின்றவன் நான் இதுவல்லாமல் வேறுமொன்றை இன்னுஞ்சொல்லக்கேள் அருச்சுனா எ-று. (௰௯)

மருட்கின்றதம் ... . *
... . *

யருவமொன்றிலா தழிவதின்கையே ... . *
குருவநின்றதோர் குறியிலின்பமே .... *

(இ-ள்) குருகுலத்தவனே, இந்தவுலகத்தில் முன்பே உருவம் அருவமென்றிரண்டுள்ளன, அவற்றில் உருவமொன்றே நாசத்தையடைகின்றது, அருவமான தொன்றுமில்லாமல் அழிவதில்லை, இதுவென்றுமுள்ளதாக நின்ற ஒப்புங்குறிப்புமில்லாததாய் ஆனந்தம்-எ-று. *(குருவென்றது குருகுலத்தவனேயென்பது, அருவமாய் ஒப்புங்குறியு மில்லாததாய் ஆனந்தசொரூபமாய் அழிவில்லாததா யென்றுமுள்ளதாய் நின்றது எனமுடிக) (௨௰)

மொழிசெய்கின்றவிவ் விரண்டுமுற்றவே .... *
விழியினாலுற நோக்கின்மெய்ம்மையே .... *
யழிவதியாக்கையிங் கழிவுபாடிலா .... *
தொழிவதென்னெனி லுயிரொன்கின்றதே ... ... *

(இ-ள்) சொல்லுகின்ற இந்தவிரண்டுமுடியக் கண்ணாலே யுற்றுப்பார்க்கில் இந்தவுலகத்தில் உருவான சரீரமே அழிகின்றது நிச்சயம் அழிவுபாடில்லாமல் ஒழிந்திருப்ப தென்னவென்றுகேட்கில் அருவமான ஆத்மாவென்கின்றதே நாசமில்லாதது-எ-று. (௨௧)

இவையிரண்டையுங் கடந்துயாதுமோர் .... *
நவையுமின்றியே நாசமின்றியே................. *
யெவையுமின்றியே யாவுமின்றியே .... *
குவையினின்றதோர் குறியிலின்பமே............ *

(இ-ள்) இந்தவிரண்டையுங்கடந்து யாதுமொருகுற்ற மில்லாமல் நாசமில்லாமல் எந்தக்கூட்டமு மில்லாமல் ஒருகருமமுமில்லாமல் திரண்டுநின்றது ஒப்புங் குறிப்புமில்லாத ஆனந்தம்-எ-று. (௨௨)

இந்தவின்பமியா னென்னேயுள்ளவா ... . *
சிந்தையின்கணே தெளிதன்மேயினார்............ *
பந்தமொன்றிலார் பழையவிப்பொருட்...... ... *
கந்தமாதிவே றறியவெண்ணுமோ .... *

(இ-ள்) இந்த உருவம் அருவம் இரண்டையுங்கடந்த ஆனந்தமாவது நான் என்னையுள்ளபடி மனதினிடத்திலே தெளிவை யடைந்தவர்கள பாசபந்த மொன்றுமில்லாதவர்கள் பழையதான இந்தப்பொருளுக்கு ஆதியந்தம் வேறேயறியப்படாதது-எ-று. (௨௩)

வேதநாலுநின் னுரைசெய்தாலுமோர்... ... ...*
றொருதலாவதென் றுரைக்கிற்றோ..... ....*
காதலாலெனக் கினியதோழ..... ....*
யாதலாலுனக் கறியவோதினேன்... ....*

(இ-ள்) நாலுவேதத்தையும் ஓதியபயன் நின்றுசொன்னாலும் ஒன்றென்று சொல்லுகையினால் அறிதென்று உலகமறிந்ததுவோ அல்லவாகையினாலே எனக்கு நீ இனிதான தோழனாகையாலுனக்கு அறியச்சொன்னேன்-எ-று. (உச)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

கல்லையோ இடத்துமின்றி யுதனிலேவைக்கிற்காதல்... ...*
பல்லையே யாக்கிநின்ற வினையெலாம்பயக்குமென்றார் ...*
வெண்ணையோ விதுரனிட்ட விருந்தையோ வேலைசூழ்ந்த...*
மண்ணையோ யுண்டுநின்றான் வருபசி தீர்ந்தமாயோன் ... *

(இ-ள்) வேறோரிடத்திலுமில்லாமல் ஆத்த ஆனந்தத்திலே மனக்கண்ணை வைக்கில் ஆசைக்கூட்டங்களோடு கூடிநின்ற கருமமெல்லாம் பலிக்குமென்றுசொன்னார்-இடையர்வீட்டு வெண்ணையையோ விதுரனிட்ட விருந்தையோ கடல்சூழ்ந்தபூமியையோ பொசித்துமுற்காலத்திலேயுண்டாகப்பட்ட பசிதீர்ந்த ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. (உரு)

௰௫-வது புருஷோத்தமயோகஅத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம் ௰௫-க்கு-கூடியசெய்யுள்-சஉஎ.

உ

பதினாறாவது.

தெய்வசம்பத்துவிபாகயோக அத்தியாயம்

கலிவிருத்தம்.

மறந்திருக்க மனத்திருணீக்கிநின் ... .*
இறந்திடப்படச் செப்புதன்மெயின் ....*

அறந்திறந்தெரிந் தாக்குதற்காகவே... ....*
பிறந்திறந்துழல் கின்றபேராளனே...............*

(இ-ள்) ("இதனைப் பின்னிரண்டடியும் முன்னுக வைத்துரைகொள்ளுவது,,) தருமத்தினுடைய வகையைத்தெரிந்து தருமத்தைத யாகப் பண்ணுகிறதற்காகப் பிறந்திறந்து உழலுகிறபேராளனாகியஸ்ரீகிருஷ்ண சுவாமியானவர் ஞானத்தைமறந்து கெட்டமனதிலுள்ள அஞ்ஞானத்தைப்போக்கப்பட்ட விதத்தை நன்றாகத்தெரியச்சொல்லத்துவக்கினர் என்றவாறு. *(கருமத்தையாகவே பாபமழியுமென்பதருத்தாபத்தி அஞ்ஞானத்தை நீக்குகிறவிதமாவது ஞானம்) (க)

தெய்வவசுரரென் றித்திறத்தோராதாய்............*
வையகமாந்தரெல் லார்களும்வாழ்வதின்... ....*
கையகேளவற் றின்றிறமென்றுதன்...... ... ...*
செய்யவாய்திறந் திவ்வண்ணஞ்செப்பினன் ...*

(இ-ள்) ஐயா, இந்தயபூமியிலுள்ளமனிதரெல்லாரும் தேவர்அசுரரென்றுசொல்லப்பட்ட இந்த யிரண்டுவித முடையவராயிருப்பது அந்த இரண்டினுடைய விதத்தைக்கேளென்று தம்முடைய சிவந்ததிருவாயைத்திறந்து இந்தப்படிசொன்னர் எ-று. (உ)

இதுவுங்கலிவிருத்தம்.

அஞ்சுதலின்மையு மறிவையாக்கலும்..................*
நெஞ்சினையடக்கலு நிலைகெடாமையும் ....*
வெஞ்சினமின்மையுமெய்ம்மைகூறலுந் ....*
தஞ்செனவேழ்வியுந் தவமுமாக்கலும்... ... .*

(இ-ள்) பயப்படுதலில்லாத தைரியமும், அறிவை யுண்டாக்குகிறதும், மனதையடக்குகிறதும், நிலைமையழியாததும், கொடுமையுள்ளகோபமில்லாமையும், சத்தியமான மெய்சொல்லுகிறதும், அடைக்கல மென்று யாகமுந்தவமுஞ்செய்கிறதும்-எ-று (ங)

மறைபயிலறந்தனை மறந்திராமையுங் ....*
குறளைகடவிர்தலுங் கொள்கைமாற்றலும் ... ...*
பிறர்பிழைபொறுத்தலும் பேரொழுக்கமே ......*
லறன்வலிதானமோ டருளையாக்கலும்...........*

(இ-ள்.) வேதங்களிலேவிடாமலோதப்பட்ட தருமத்தை மறந்திராமலும், கோட்சொல்லுகிறதைவிடுதலும், விஷயங் கொள்ளுகிறதை விலக்கலும், அன்னியர்செய்தகுற்றத்தைப்பொறுத்தலும், பெரிய ஒழுக்கதருமத்தை இச்சித்ததானமும், அவற்றுடனே தயவுண் டாக்கலும்

என்றவாறு. * (மறைபயிற்றுநனை மந்திரமடைய ... பாடமோ திஸ்வேதமோதலும் தன்னைப்பெரியவனாகமதித்திரமனுமெ... கொன்ற இதுபொருந்தாது.) (௪)

இருவகைத்தூய்மையு மிந்திரியங்களை...... ...... *
யொருவகை ... முன்னிட்டென்னவே... .. *
செருவருஞ்சிலைஞற் தெய்வத்தன்மையோர் ... ...*
மருவியதொழிலென மதிக்கப்படும்மே............ *

(இ-ள்.) சுகம்வந்தபோது சந்தோஷப்படாமலும் துக்கம்வந்தபோது விசனப்படாமலும் இந்தச்சுகதுக்கமிரண்டிலுஞ் சமமாயிருந்து இந்திரியங்களை ... ஆறுவழியிலேபோகாமல் ஒரு ... குப்படுத்தி ... ன்னிட்ட ... த்தன்மைகளானவை ... சொல்லுவதுக்கு ... யாகிய வில்லையுடைய அருச்சுன தெய்வத்தன்மையையுடையவர்கள் பொருந்தின தொழிலென்று மதிக்கவேண்டும்-எ-று. * (அஞ்சுதலின்மையென்ற பாட்டு முதல் ... பாட்டு இருவகைத் ... மட்டும் பாட்டுகளிந்தனன்று ஒருதொடர்) (௫)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

தீமைசெய்யசுரரானோர் செய்நியமந்தெரிக்கிலொன்றை ...*
யாம்வகையெனமற்றுக வனவெனவுந்தெல்லார்............*
தூய்மையுந்தூயவாய வொழுக்கமுந்துடக்குவிட்டார்... ...*
வாய்மையொன்றுமில்லார் மயக்கமேமருவிநின்றார் ......*

(இ-ள்) பொல்லாங்குசெய்யப்பட்ட அசுரரானவர்களுடைய செய்தியைத்தெரியப்பண்ணில் புண்ணியபாவமென்ற இரண்டில் புண்ணியமாகியவொன்றை ஆகிமவிதமென்றுசொல்ல மற்ற பாவமாகிய ஒன்றையாகாததென்றுசொல்ல அறியத்தக்கதில்லாதவர்கள் சத்தமுஞ் சுத்தமான ஆசாரமுந்துடங்குவதைவிட்டவர்கள் ஒருவிதத்திலுஞ் சத்தியமில்லாதவர்கள் அஞ்ஞானமே சுபாவமாகப் பொருந்தினவர்கள்-எ-று. * (துடங்குவதையேவிட்டவர்களெனவே செய்தறியாமையால் அங்கங்களுமறியாதவர்களென்றது கருத்து) (௬)

கலி விருத்தம்.

எண்ணியவுலகமு முலகுக்கீசனும்...... ... ...*
புண்ணியபாவமும் பொய்யென்றேகொள்வார்...*
பெண்ணிஞேடாண் புணர்கின்றபெற்றியார் ... *
துண்ணியயாவையு மெடுத்துகாட்டுவார்.........*

(இ-ள்) எல்லாரும் நினைக்கப்பட்ட பிரபஞ்சமும்பிரபஞ்சத்துக்குக் கர்த்தனானதெய்வமும் பிரபஞ்ச கருமமான புண்ணியமும் பாவமும்

பொய்யென்றே கொள்வார்களல்லாமல்மெய்யென்று கொள்ளார்கள்மெ ன்னேடே ஆஸ்திக்கிறதே சுபாவமாகவுடையவர்கள் தங்களுக்கு க்கிடைத்த சகலத்தையும் எல்லாருமறியவெடுத்து நாட்டுவார்கள்-எ-று.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

விரும்பலவாகியொழுக்கங்கடுறந்தார் மெய்மையுஞ்செம்மையும் விட்டா
ர்இரும்பயனுபவறிவுமாய்ந்துள்ள ரிடம்படாமனத்திஞேடிசைந்தார் ... ※
பெரும்பழிபாயதொழில்களே பயில்வார்பிழைப்புவாய்ப்பொன்றறியாதா
ரரும்பகையாயிவ்வுலகினையெல்லாமழிப்பதன்பொருட்டவதரித்தார். .※

(இ-ள்) அசாரங்களை யிச்சியாத துராசாரர்களாகி யாசாரங்களை விட்டவர்கள் மெய்மையும் ஒப்புறவையும் விட்டவர்கள் மெய்மையும் விட்டவர்கள் பெரிய பிரயோசனமாகிய அறிவுகெட்டு மூடராயுள்ளவர் கள் விசாலமாகப் பரந்த மனதோடே பொருந்தினவர்கள் பெரியபழி யாகிய தொழில்களே பழக்கமானவர்கள் தவறுதல்கிடைத்தல் என்றவி ரண்டிலொன்று மறியாதவர் இந்தவுலகத்தை யெல்லாம் அழிக்கிற நிமி த்தியமாக விலக்க அறியபகையாய்ப் பிறந்தவர்கள்-எ-று. (அ)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

நிறைவிலாக்காமபோகந்தன்னையேநிறைக்கவேண்டி.........※
மறைவிலாமானத்தோடுமதங்களே மருவிநின்று... ....※
குறைவிலாமயக்கத்தாலே கோபத்தையுடைந்துநின்று ... ※
பொறையிலாவிரதம்பூண்டுபொய்த்தவம்புரியாநிற்பார்......※

(இ-ள்) அளவில்லாத காலம் அனுபவித்தாலும்நிறைவில்லாத விஷை ய போகத்தையே நிறையப் பெர்சிக்கவேண்டி மறைவான மானத்தைக் கெடுத்தும் மறைவில்லாத மானத்துடனேகெர்வங்களேயடைந்து நின்று குறைவில்லாத மயக்கத்தினலே கோபத்தையடைந்துநின்றுபொறுமை யில்லாத விரதத்தைத்தரிசித்துப்பொய்யாகத்தவசுசெய்வார்கள் -எ-று.

இறந்துபோமளவுமெய்தாப்பொருளேயேயெய்தநிற்பார் ... ※
மறந்துமோர்பொருள்வேறில்லைவரும்பயனன்றியென்பார் ※
பிறந்துபேராசையாயபாசத்தாற்பிணிக்கப்பட்டார்... ......※
சிறந்தபோகக்கட்காகத்தீமையாம்பொருளேசெய்வார்......※

(இ-ள்) செத்துப்போகின்ற பரியந்தமும் எட்டாதபொருளேயே எட் டவேணுமென்று வருந்திநிற்பார் வருகின்றவிஷையப்பிரயோசனத்தை யல்லாமல் மறந்து மொருபொருள் வேறேயில்லையென்பார்கள் தங்களி டத்திலுண்டான பேராசையாகிய பாசத்தினலே கட்டப்பட்டார்கள் சி றப்பானவிஷைய போகங்களுக்காகப் பொல்லாங்கான காரியமே செய் வார்கள்-எ-று. (௯)

இப்பொருளடைந்தோ மிங்கினிப் பொருளினை யடைவோ [illegible] *
யிப்பகைசெகுத்தோம்வேறுப் பகையினைச் செய்ப்போமென் றும *
துய்ப்பவெம்மிற்றக்க வல்லவரில்லையென்று... .... *
மொப்பவெம்மின்மிக்கா ருளர்கொலோவென்று நிற்பார் ..... *

(இ-ள்) இந்தப்பொருளையடைந்தோமென்றும் இந்தப் பொருளையடைவோமென்றும், இந்தப்பகையாளியைக் கொன்றோம் மேலே யிருக்கின்ற விந்தப்பகையாளியைச் செய்ப்போமென்றும் போகங்களை யனுபவிக்கின்றவர்களி லெங்களைப்போல அனுபவிக்க வல்லவர்களில்லையென்றும் எங்களுக்குச்சமானம் ஏவர்களுமில்லை எங்களினும் அதிகமானவர்களுண்டோ இல்லையென்று இறுமாந்து நிற்பார்கள்-எ-று.

இனம்வலியின்பம்பெற்றே மெம்மின்மிக்கார்களில்லை... ...*
தனமிகவுடையோமென்றுந் தம்மையேவியவாநிற்பார்... ...*
மனதினில்யாகஞ்செய்வோ மறைமொழிக்கொடுப்போமென்று
நினைவதோருசிந்திப்பது [illegible] ... .. *

(இ-ள்.) உறவு பலம் சுக மிவைகளையடைந்தோமென்றும் எங்களிலும் அதிகமானவர்களில்லையென்றும் மிகுந்ததிரவிய முடையோமென்றும் தங்களைத்தாங்களே அதிசயப்பட்டு நிற்பார்கள் யாகஞ்செய்வோம் [illegible]த்தைப்போலத் தானங்கொடுப்போமென்று நினைத்தாலும் மனதிலே நினைக்கின்றதல்லாமல் செய்வதில்லாதவர்கள்-எ-று. (௧௫)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

துடக்கறவில்லநினைவெனப்பட்ட [illegible]லைப்பற்றியேசுழல்வ...... ......*
ரடங்கரியமயக்கமென்கின்றவலையிலேயகப்பட்டுநின்று..... .. ..*
ருடற்குடில்வாழ்வாம்புன்றலைப்பனிநீ ருலர்ந்திடவுயிர்நடுக்கெய்திக் *
கிடப்பரிதாயநரகமென்கின்றகடல்களில்வீழ்வேகடவார்........... ...*

(இ-ள்.) துடங்கியறவில்லாத நினைவென்று சொல்லப்பட்ட சுழலிடத்தைப்பிடித்துச் சுழலுவார்கள்-அறுக்கப்படாத மயக்கமென்று சொல்லப்பட்ட வலையிலேயகப்பட்டுக் கடக்கமாட்டாமல் நிற்பார்கள்- உடம்பாகிய சிறுவீட்டுவாழ்வானது புல்நுனியிலிருக்கின்ற பனிநீரை அப்படிக்கொத்த தேகம்போனால் உயிரானது நடுங்கிக் கடக்கப்படாத நரகமென்றுசொல்லப்பட்ட கடல்களில் வீழ்க்கடவர்களேயல்லாமல் கடக்கக்கடவர்களல்ல-எ-று. (௧௬)

கலிநிலைத்துறை.

வியந்துதங்களையேமேலாப்பார்த்துமென்மார்த்தம்மை *
நயந்துகொண்டாடவில்லார்நயந்தவைசெய்தாமென்று...... *

பயன்றொடர்ந்துரைத்தற்காகப்பாடியபழையநூல்க........❋
ளியம்பியபடிசெய்யாதேயாகங்களியற்றுசிற்பார்... .. ..❋

(இ-ள்) தங்களைப்பெரியவர்கள் நயஞ்சொல்லிக் கொண்டாடத் தக்க ஒழுக்கமில்லாதவர்கள் தங்களைத்தாங்களே மேலாகப்பார்த்து அதிசயித்து யாசகரானவர்கள் பிரயோசனத்தையிச்சித்து இந்தச்சோமாசி நல்லவற்றைச் செய்தானென்று சொல்லுகின்ற தற்காக எல்லாரும் ஓதிய பழையவேதங்கள் சொன்னபடி செய்யாமல் யாகங்களைத் தாறுமாறகச் செய்வார்கள்-எ-று. ❋ (பயன்றொடர்தலாவது பிரயோசனத்தை மனது தொடருதல் அது இச்சித்தல்.) (கரு)

வன்னியகளிப்பொடு வலியுங்காமமூழ்ந்...................❋
துன்னியானெனும்பெரு மயக்கஞ் சூழ்ந்துளோ ......❋
ரென்னியல்பதனிலும் யாவர்மாட்டினு...... ... .❋
மன்னியமெனக்கொடு பொறாமையாக்குவார்... ... ...❋

(இ-ள்) நிலைமையானமனச்செருக்குடனே வலுமையும் ஆசையு மிகுந்துகூடிநானென்று சொல்லப்பட்ட பெரியமயக்கஞ் சுற்றிக்கொண்டிருக்கின்றவர்கள் என்னுடையசுபாவத்திலும் யாரிடத்திலும் அன்னிய மென் றெண்ணிக்கொண்டு பொறாமையையுண்டாக்குவார்கள்-எ-று. (கசு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மற்றவர்தம்மையிந்த மானிடராரேனுரியார்க்கும்...... ❋
கொற்றவகீழானோரைக்கொடுமையாலரவொப்பாரை... ❋
யற்றமில்டும்பைசேரு மசுரர்கள்யோனியாய...... ...❋
புற்றவைதோறும்யானே புகப்புகவீழ்த்துகின்றேன். ❋

(இ-ள்) இந்த மனிதரானவர்கள் எல்லாருக்கு மர்சுனனே அருச்சுனா இப்படிக் கீழானவர்களைக் கொடுமையாலே பாம்பை யொப்பானவர்களைச் சேருதலில்லாத பூரித்த துக்கஞ்சேரப்பட்ட அசுர யோனிகளாகிய புற்றுகள்தோறும் புகுதப்புகுத அவர்களை நானேவிழுத்தள்ளுகிறேன் என்றவாறு. (கஎ)

கலி விருத்தம்.

இவ்வகையாசுர யோனியடைந்தோர்................ ...❋
மெய்வகையாமறி வின்மையினாலே.......................❋
கைவர்சமைநர கக்கதிதோறு...............................❋
மெய்வகையின்றி யுழன்றுதிரிந்தே.................. ...❋

(இ-ள்) இப்படி அசுரயோனியடைந்தவர்கள் மெய்வகையான அறிவில்லாமையினாலே தப்பிப்பிழைக்கின்ற வகையில்லாமற் பொல்லாதநர

சுவழிதோறும் உழன்று திரிந்துவருவார்கள்-எ-று. * பேய்களைக பிசாசு நரகக்கதிதோறு முழன்றுதிரிந்து வைகார்களொவடாறுக.) (௧௭)

ஒருவனைசிக்க விபற்றுவதெனு............ ... ...*
மருநரகத்தி லடைப்பதுதானும்............ ... ...*
வருவனைமூன்றுள மற்றவைதவிர்............ ... ...*
யொருமுறைகூறி யுணர்த்திடுவன்கேள்............ ...*

(இ-ள்) ஒருவன்கெடச்செய்வதாலுங் கடுமையான நரகத்தி லடைப்பதாலும் யப்படுகின்றது-தானும் வருகின்றவிதமூன்றுண்டு-அந்த மூன்றையு மொருதரஞ்சொல்லித் தெரிவிக்கிறேன்கேள் அருச்சுனா-எ-று (௧௮)

காதலினாகிய காமமுலோபங்........................*
கோதமிக்கு திகிர்கோப............ ... ...*
மாதலினாலவை மூன்றையகன்றோர்............*
வேதனைதீர்பெரு வீடடைந்தார்............ ... ...*

(இ-ள்.) ஆசையினாலுண்டாகிய காம லோபங்களாகமூழ்க் கடப்பட்ட நெருப்பையொப்பான கோப மாகையினாலே அந்த காமக் குரோத லோப மூன்றையும் நீக்கினவர்கள் பிறவி வேதனையில்லாமற் போகப்பட்ட பெரியமோட்சத்தை யடைந்தவர்கள்-எ-று. (௧௯)

கூறினநூல்வழி சேர்குறிபோனு............ ...*
தேறினவாறுசெய் வாரிகலோகம்............*
வேறியலாபர லோகம்விளக்கும்............ ... ...*
பேறினவானவை பேறுபெறுரால்............ ...*

(இ-ள்) வேதஞ்சொன்னவழியே சேரப்பட்ட குறியை மதியாமல் விட்டுக் காமகருமங்களில் மனதேறினபடி செய்கின்றவர்களில் இகலோகமும் வேறுசுபாவமுள்ள பரலோகமுமுண்டாக்குகின்ற பேறான விந்த விதமான பேறுபெறார்கள்-எ-று. (௨௰)

இதுவுங் கலிவிருத்தம்.

ஆதலிலடாதவற்றை கைக்குவழியான............*
வேதமுதனூலவை விதித்தசெறியாலே...... ...*
யேதமினியாதன்வினை யெனிசைசவென்றுய... *
பூதமுதலானவை பொறுத்தருளுகின்றான்... ...*

(இ-ள்) ஆகையால் அடாதகாரியத்தை யறிகைக்குவழியான வேத முதலான சாஸ்திரங்கள் அவைகள்விதித்த மார்க்கத்திலே குற்றமா

ன காரியத்தையுங் குணமானகாரியத்தையும் அறிந்து குற்றமான காரியத்தை வினையாமல் குணமான வுன்னுடைய கருமத்தையேபொருந்துவாயென்றுசொன்னார் பூதமுதலான தத்துவங்களையெல்லாஞ் சுமந்தருளிச்செய்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. (௨௧)

௧௬-வது-தெய்வசம்பத்துவிபாகயோகஅத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-௧௬-க்குகூடியசெய்யுள்-௬௩௮.





உ

பதினேழாவது

சிரத்தாததிரவியவிபாகயோகஅத்தியாயம்.



கலிவிருத்தம்.

உண்டுமீள வொளித்துலகியாவையுங்............❋
கண்டுகாப்பவன் கட்டுரைத்திட்டதே........ ...❋
கொண்டுபார்த்தனக் கொண்டல்வண்ணன்றனைத்❋
தொண்டுகூறப் பணிந்திவைசொல்லுவான்.... ....❋

(இ-ள்) சகலலோகத்தையும் உண்டாக்கித் திரும்ப ஒளித்துக்கொண்டு காக்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி யுபதேசித்ததையே சங்கையாகக்கொண்டு அருச்சுனனானவன் அந்த மேகநிறமான ஸ்ரீகிருஷ்ணசுவாமியை அடிமைசிறக்கவணங்கி இதுசொல்லுவார்-எ-று. (௧)

வேதமேமுத னூல்விதியின்றியே........ ... .❋
காதலாலுல கோர்செயுங்காரிய............ ... .❋
மேதமாங்குண மூன்றினுமியாதென்.......... ....❋
வோதமாகடல் வண்ணனுமோதுவான்... ... .❋

(இ-ள்) வேதமேமுதலான சாஸ்திரவிதியல்லாமல் ஆசையாலே உலகத்தார்செய்யப்பட்ட கருமமானது குற்றமாகும், மூன்று குணத்தி

னும் எந்தகுணமென்றுகேட்க, அதிலுள்ள கருத்தைக்கடல்போலும் பெரு டைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியுஞ்சொல்லுவார்-எ-று. (௨)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

யாவர்களாசைப்பாகி லியம்பிடவியம்பப்பட்ட ... ...*
மூவகைக்குணமுமாகி யல்லதுமுடிந்ததில்லா.........*
மேவருமவற்றினுடைய வேறுபாடுகளையெல்லாம் ....*
காவலதெரியக்கூறக் கேளெனக்கழறுகின்றான் ....*

(இ-ள்.) எல்லாருடைய ஆசைப்பாகிற்றிசொல்லில் எல்லாத்திசொல்லப்பட்ட மூன்றுவிதகுணமாவது, அந்தமுக்குணத்தைமல்லாமல்வே றேமுடிந்ததில்லாது மனதுபொருந்தவரப்பட்ட அந்தமூன்றுகுணத்தி னுண்டாகிய வேறுபாடுகளையெல்லாந் தெரியச்சொல்லக்கேள், ராசாவே யென்று சொல்லத்தொடங்கினார்-எ-று. (௩)

கொச்சகக்கலிப்பா.

சாத்துவிகர்தேவரையே சரண்புகுவர்தாமதர்கள் ......*
காத்தல்புரிவன்பேயும் பூதமுமாய்கடைப்பிடிப்ப ... *
ஏத்தரியகுணமிவற்றி னிராசதமாங்குணமுடையோர்.
காத்தனெனவரக்கரையு மியக்கரையுமடைவர்களால்...*

(இ-ள்.) சாத்துவிகம் ராசதம் தாமதமென்றுசொல்லப்பட்ட குண மூன்று, இந்தகுணமூன்றில் சாத்துவிகமான குணத்தை யுடையவர்கள் தேவர்களைச்சரணமடைவார்கள் தாமதமான குணத்தை யுடையவர்கள் தங்களைக்காத்துரட்சிப்பது பேயும்பூதமுமென்று நிச்சயமாகிய வைக ளை மறவாமற்பூசிப்பார்கள், புகழ அரிதாகிய ராசதகுணத்தை யுடைய வர்க ளாபத்தரென்று ராட்சதரையும் யட்சரையுஞ் சரணமடைவார்கள் என்பவாறு. (௪)

கலி விருத்தம்.

அடக்கியபொறியினு லறிவுமின்றியே ....*
இடம்படுநூல்களி னியல்புமன்றியே ....*
உடம்பையுமுயிரையு மொறுக்குமாதவத் ... ...*
தொடங்குவரசுரயோ னிகளிற்றோன்றினோர் ......*

(இ-ள்) ஐந்துபொறிகளு மடங்கினவிடத்தி லுண்டாகிய அறிவுமல் லாமலே விரிவுண்டான சாஸ்திரங்களினுடைய விதியுமல்லாமலே உடம் பையு முயிரையும் வருத்தப்பட்ட பெரியதவசைத் தொடக்கிச் செய் வார்கள் அசுரயோனிகளிலே பிறந்தவர்கள்-எ-று (௫)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

உன்பனயோகம்யாரு முறுதவந்தானமென்ன ... .*
வென்படவுரைத்தநான்கு மோரொன்றமூன்றாய்நின்ற......*
பண்படுகுணங்களாலே கேளெனப்பற்றும்வீடு ... .*
நண்பொடுபகையுமில்லான் முறைமையினவிலலுற்றான் ...*

(இ-ள்.) எல்லாரும் அடையப்பட்ட ஆகார யாகந் தானமென் றெண்ணப்படச்சொன்ன நாலும்பண்ணப்பட்ட குணங்களாலே ஒவ்வொன்று மூன்றாய்நின்றது, அவைகேளென்று சங்காரமு மோட்சமு முறவும் பகையுமில்லாத ஸ்ரீகிருஷ்ணசுவாமி ஆகாரமுதலாகச் சொன்ன முறையினாலே சொல்லத்தொடங்கினார்-எ-று. (௬)

சுத்தவகுணத்தாருண துரைத்திடிலழகுசார்ந்த ... .*
தித்தித்தசுவையவாகித் தேகஞ்சிக்கெனவுஞ்சேர்ந்த ... ...*
வத்தித்தவலிரோயின்மை யறிவுநல்லாவுவின்பம் ....*
மத்திக்கச்செய்தவிந்த வுணவுகண்மடங்கலன்னாய் ... .*

(இ-ள்.) சிங்கத்தையொப்பான அருச்சுனா, சாத்துவிககுண முடையவர்களுடைய ஆகாரத்தைச்சொல்லில் அழகுடையதாகித் தித்தித்தருசியுடையதாகி யுடம்புசிக்கெனவுஞ் சேர்ந்ததாகிச் செம்மையானதாகிவயிற்றுநோயில்லாத ஆரோக்கியம் அறிவு நல்ல ஆயிசு சுகம் இவைகள் அதிகமாகச்செய்த இந்த ஆகாரங்கள்தான் சாத்துவிகபோசனமென்றவாறு,
* (தேகஞ்சிக்கெனவாவது பெலம்) (எ)

இப்படியன்றிவேறு மிராசதருணவுகேட்கிற் ... .*
கைப்பனபுளிப்புவர்ப்புக் கூர்ப்பனகடியவெய்து ....*
நெய்ப்பயினெருப்புப்போலச சுடுவனவிவற்றினாலே ... ...*
மெய்ப்பயினோயினெஞ்சத் திடும்பையும்விளைவவேலோய் *

(இ-ள்) வேலாயுதத்தைத் தரித்த அருச்சுனா இந்தப்படி யல்லாமல் வேறான ராசதகுணத்தாருடைய ஆகாரத்தைக்கேட்கிற் கசக்கிறது-புளிக்கிறது உப்புகரிக்கிறது உரைக்கிறது நெய்வார்த்த கடுமையுடைய நெருப்புப்போலச்சுடுவது இவைதான் ராசதகுணத்தாருடைய ஆகாரமிந்த ஆகாரத்தினாலே உடம்பிலே பழகப்பட்ட வியாதியும் மனதிலேதுக்கமுமுண்டாவது-எ-று. (அ)

ஆசினையடைந்தநெஞ்சிற் றாமதருணவுகேட்கி ....*
லூசினபழஞ்சோறெச்சி லும்பர்பூசனைக்காகாத ....*
வேசினவெந்திலாத விளையனவிவற்றினாலே..................*
காசினமுதலாயுள்ள துயரொலாம்விளைவுகண்டாய் ... .*

(இ-ள்,) குற்றத்தையடைந்த மனதையுடைய தாமத குணத்தோருடைய ஆகாரத்தைக்கேட்கில் ஊசிய பழஞ்சோறு எச்சில் தேவர்களுடைய பூசைக்காகாதது, நிந்தித்தது, வெந்ததில்லாதது, இவைகள் தா

மசருடைய போசனமிதிலே சொல்லப்பட்ட சோகமுதலியவையாதுக்க மெல்லா முண்டானவைகளடா யருச்சுன (எ-று) (௯)

செயத்தகுவனவென்றலாற்செய்பவன்றிக்கிரியாதே...*
தயக்காண்முறைசெய்யாகஞ் சாத்துவிகன் செய்யாகம்
பயத்தையேவேண்டியாதல் பலப்புகழ்வேண்டியாதல்...*
வியற்றுறுகின்யாக மிராசதரியாகமாமே...... ......*

(இ-ள்) செய்யத்தக்க கடனென்று செய்வதல்லாமல் அதனால் வருகிற பிரயோசனத்தை இச்சிக்கிறது இல்லாமலே மந்திரத்திரிய க்கிரியைகள் குறையாமல் விதாங்கச்சாஸ்திரத்தில் விதித்தபடி செய்யப்பட்ட யாகமானது சாத்துவிககுணமுடையவன் செய்கிற யாகமென்று சொல்லப்படும். பிரயோசனத்தையே வேண்டியாதல் புகழ்வேண்டியாதல் செய்யப்பட்டயாகம் ராசதகுணமுடையவன் செய்கிற யாகமென்னப்படும் (எ-று). (௰)

நூற்படிநெறியுமன்றி நூலின்கர்முதலாயோர... ...*
தாற்பரியமுமேவற்றுத் தக்கமந்திரமுமன்றி... .....*
யேற்பவர்க்கீதலின்றி யியற்றுகின்றயாகம்............*
தார்ப்பொலிகின்றமார்ப தாமதரியாகமாமே............*

(இ-ள்) சாஸ்திரத்திலுண்டாகிய வழியுமல்லாமல் கூர்மையானதவமுடையவர் முதலாகவுள்ள பெரியோர்களுடைய தாற்பரியமு மல்லாமற் செய்கிறதற்குத்தக்க மந்திரமுமல்லாமல் யாசகருக்குக்கொடுக்கிறது மல்லாமற் செய்கியாகமானது பூமாலை விளங்குகின்ற மார்பையுடையஅருச்சுன தாமதர்கள்யாகம்-எ-று. (௧௧)

கலிவிருத்தம்.

தீக்குலாவேலினாய் தவத்தின்செய்கைதான்......*
வாக்கினாற்பேசுதல் மனத்தினுக்குத...... ......*
லாக்கையாலியற்றுத லாயிருப்பது............*
னோக்கினனிவற்றினை நுணித்துக்கூறவே ... ...*

(இ-ள்) நெருப்பு குலாவப்பட்ட வேலையுடைய அருச்சுனா தவத்தினுடைய செய்கையானது வாக்கினாலே பேசுதல் மனதிலேயுண்டாக்குதல் சரீரத்தினாலேசெய்தல் என்று மூன்றுவிதமாயிருப்பது இந்தத் தபத்தை தான்வினைத்துக் கூர்மையாக்கிச்சொல்ல நீகேள்-எ-று. (௧௨)

இதுவுங் கலிவிருத்தம்.

தீர்த்தயார்க்குஞ் செவிக்கினிதாயின...... ......*
வார்த்தைமாமருந் தேயெனலாயென......... ...*
வோர்த்துமென்மொழி கூறுதலோதுதல்...... ...*
வார்த்தையார்பண்ணு மாதவமென்பதே.........*

இ-ள்) சந்தேகந்தீர்ந்ததுஎல்லாருக்குங்காதுக்கு இன்பமானதுவார்த்தையே பெருமையுள்ள அமிர்தசஞ்சீவி நீயென்று சொல்லலாவதுவேதசாஸ்திரம் அப்பியாசிக்கிற மேலானசொல்லைச்சொல்லுகிறது வேதசாஸ்திரங்களை யோதுகிறது இப்படியிருக்கிறது வார்த்தையாற்பண்ணப்பட்ட பெரிய தவமென்றது-எ-று. (௧௩)

தெளியநெஞ்சைச் செறியப்பிணித்தலுங்... ...*
களிசெயைம்புல னைக்களிமாற்றலுங்...... ......*
குளிர்வுநெஞ்சி னுணர்வுகோணுமையு ... ...*
மெளிதின்மானத மாதவமென்பதே... ... .*

(இ-ள்) மனதை விஷயங்களாகிய மயக்கமடையாமல் ஞானமாகிய தெளிவு நெருங்கக்கட்டுதலுங்களிப்புசெய்யப்பட்ட பஞ்சேந்திரியங்களைக் களிப்புப்போகலும் பகைஞுமொன்றும் உறவினமொன்றும் பாராமல் எல்லாரிடத்திலுஞ் சமமாகவைத்தகுளிர்ச்சியும் மனதிலும் வார்த்தைகள்கொடாதமவுனமுமிவைகள் எளிதிலேவந்தபெரிய மானசதபமென்றது-எ-று * (மனதிலேதெளிவைநெருங்கக்கட்டினால் மயக்கத்துக்குநுழையவுமிடமில்லை யாதலால் நிர்மலமென்பது களிப்பைப்போக்கவேயிந்திரியஞ்செடமானதென்பது எளிதிலென்றது காயக்கிலேசப்படுத்தாமல் எளிதில்வந்ததென்பது.) (௧௪)

தலைமையந்தணர்தேவர்குரவர்பால்... ... .*
மலைதலின்றிவழிபடுவாழ்க்கையுங்......... ......*
கொலைதுறத்தலுங்காமங்குறைத்தலுங் ... .*
தலைவகாயத்தவமென்றிசைப்பதே..............*

(இ-ள்) இராஜாவே முதன்மையையுடைய பிராமணர்கள் தேவர்கள் பெரியவர்கள் இவர்களிடத்தில் மாறுபட்டு எதிர்ப்பதில்லாமற் பூசிக்கின்ற வாழ்வுங் கொல்லுகின்றதை விடுகின்றதும் ஆசையைக்கொடுகின்றதும் இவைகளைச்சரீரதவமென்றுஞ்சொல்லுவது-எ-று. (௧௫)

கொச்சகக்கலிப்பா,

தீத்துவளும்வடிவேலோய்செப்பியவிம்மூன்றுலுங்... ......*
தீர்த்துலகமகிழ்தெய்வச்செய்கின்றநெடுந்தவத்தி... ... ..*
வார்த்துவருபயன்வேண்டாதரற்றுகின்றவருந்தவந்தான் ...*
சாத்துவிகத்தவமென்றுசாற்றுவதுதக்கோரே...............*

(இ-ள்) நெருப்பைப்போலத் துவளப்பட்ட நீண்டவேலையுடைய அருச்சுனா இப்போது சொன்ன இந்த மனவாக்குக் காயமென்ற மூன்றுலுங் குற்றந்தீர்ந்து உலகத்தார் மகிழ்ச்சியையடையச் செய்யப்பட்ட பெரியதவத்திலேகட்டுப்பட்டுவரப்பட்ட பிரயோசனத்தைஇச்சியாமற்செய்கின்ற அரியதவத்தைத்தான் சாத்துவிகத்தவமென்றுபெரியோர்கள்சொல்லுவது-எ-று. (௧௬)

வசையிரவுறுடையனையாளிடர்கொண்டாக்கைக்கு... ...*
நசையினெடுபொருள்பெறவுஞ்செய்கின்றதற்றவத்தை ... *
விசையவுனக்குரைசெய்தேன்மிகப்பெரியோர்செய்திடினு...*
மிசையவுறிடிப்பதனையிராசதமாந்தவம்பார்த்தே... ... .*

(இ-ள்) அருச்சுனா குற்றமில்லாத தவனையுடையவனே மகிழ்ச்சிகொண்டாடுகின்றதற்கும் ஆசையுடனே திரவியம்பெறவுஞ் செய்கின்ற தவத்தையுனக்கு விரித்துச்சொல்லினேன் மிகப்பெரியோரானவர்கள்செய்தாலும் இந்தத்தவத்தைஇராசதகுணமுடையதென்று உன்மனதுபொருந்த அறிவாய்-எ-று. (டுள)

பேதமையைமிகவுடைத்தாய்தன்னுயிர்க்கும்பிறவுயிர்க்கு...*
மேதமுறுபெருந்துயருங்கேடுமேவிபற்றுவதா ... .*
யாதபமுட்பிணியுமுழன்றுற்றகிற்பவருந்தவந்தான் ... ...*
தாதலருமிக்குமுடிபார்த்தாமதமாந்தவங்காணே...............*

(இ-ள்.) பூந்தாதுசொரிந்திரமலர்ந்த மாலையைத்தரித்த கிரீடமுடைய அருச்சுனா மிகுந்த அறியாமையையுடையதாய்த் தன்னுயிர்க்கும் அன்னியசீவனுக்குந் துன்பமுள்ள பெரியதுக்கமுங் கேடுஞ் செய்வதாய் வெய்யலிலும் மிடாநிழலும் உடம்புசெயலிம் ...ரியதவமானதுதாங்கண்டாய் தாமததவமாவது-எ-று. (டுஅ)

முன்செய்காரியப்பொருட்டின்றியெழுந்திதனும்......*
பின்பொருட்பயன்விளைக்குமென்பதனும்பேறாதே... ...*
நன்குடைநற்காலத்தேநல்லிடத்தேநல்லவர்க்கும் ... ...*
தன்பொருளைக்கொடுக்குமதுசாத்துவிகத்தானமே... ..... *

(இ-ள்) முன்பொருவன்செய்த காரியநிமித்த மல்லாமலேமுடிக்கவிருறுமேலேபின்புறுருநல்லப்பிரயோசனத்தைவிளைக்கு மென்கின்றஆசையுமுண்யாமலே நன்மையுடையகாலத்திலே நல்லவிடத்திலே நல்லவர்களுக்குந் தன்னுடைய திரவியத்தைக் கொடுக்கின்றது சாத்துவிகத்தானம் -எ-று (நல்லவிடமாவது தேசம் நல்லவர்களாவது, பாத்திரந்தன்பொருளென்கிறது குலாசாரத்தால்வந்த திரவியமென்றும் அல்லாமலும் தன்னிடத்திலிருந்த அன்னிய னுடைமையைக் கொடுக்கலாகாதென்றுமாம்ஆகையால் முன்பெற்ற உபகாரநிமித்தமும் பின்பலனையிச்சித்துஞ் செய்யாமல்தேசகாலபாத்திர மறிந்து தன்பொருளைக்கொடுக்கவேண்டுமென்பது)

கொண்டுசெயத்தகுங்கரும மெனுங்குறிப்பொன்றின்றியே *
பண்டுசிலர்செய்தற்காப்பரிவினொடுபண்ணினவும் ... .. *
உண்டிதனுஞ்சேமல்வினைவென்றுணர்வோடுகொடுத்தனவு .. *
மெண்ணுதலையுமிதை ...ராசதமாந்தானமே..................*

(இ-ள்.) உபகாரங்கொண்டு செய்யத்தக்கது காரியமென்று சொல்லப்பட்ட நினைப்பொன்றில்லாமலே முன்னாளிலே சிலபேர்செய்த உபகாரத்துக்காக அன்புடனே பண்ணினகொடையும் இப்போது கொடுக்கின்றவிதனால் இனிமேற்பலனுண்டென்று நினைவோடிக்கொடுத்ததுவும் எட்டுத்திக்குநிறைந்த கீர்த்தியையுடைய அருச்சுன இராசததானமாம்-எ-று.

வாயாததொருபொருளை வழங்காதகாலத்தே ....*
யேயாதநிலத்திடையே யிழிந்தகுலத்தவர்களுக்கே.........*
யாயாதவறிவினொடு மப்பிரியத்தொடுங்கொடுத்தல் ....*
காயாதபெருந்திறலாய் தாமததானமே.................*

(இ-ள்) யாராலுஞ் சாயாத பெரியதிறமையையுடைய அருச்சுன் கிடையாததொருசெல்வத்தைக் கொடுக்காதகாலத்திலே இசையாத நிலத்திலே இழிகுலத்தவர்க்கு விசாரியாத அறிவுடனே பிரியமில்லாத உதாசினத்தோடுங் கொடுக்கிற தானந் தாமததானம்-எ-று. * (கிடையாத்திரவியமாவது வார்த்தைவருமென்றுபொய்சொல்லி அவைகளைவாங்கிக்கொள்ளென்றல் ஆயாதவறிவு மூடம்,) (௨௧)

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

ஒப்பரிதாயவுண்டியோடியாக்முறுதவந்தானமென்றுரைத்த ....*
வப்படியெல்லாமறிவகையுனக்கு முரைத்தனனடைய்மற்றையா ......*
வெப்படியாகுமிவற்றினைச்செய்தால் வீடுபெற்றுயர்நெறியாவ... ....*
தெப்படியென்னிலதனையுமுனக்குத் தெரிவகையியம்புவன்கேணீ ... *

(இ-ள்) ஒப்பில்லாத ஆகாரத்தோடு யாகம் உறுதியான தவந்தானமென்றுசொன்ன அந்நாலுவிதசுபாவமெல்லாம் அறிகின்றபடிக்கு உனக்குச் சொன்னேன் இவைகளெல்லாம் எப்படியாகும் இவைகளைச்செய்தால்மோட்சம்பெற்றுயர்ந்தவழியாவதெப்படியென்னில் அதனையுமுனக்குத் தெரியும்படிசொல்லுவேன் நீகேளையா-எ-று. (௨௨)

ஓமென்கின்றதனியெழுத்து முரைத்தற்கரியத்ற்பதமும்...... ......*
தாமங்கமழுமதற்குமேற் சத்தென்கின்றதனிப்பதமு.......... ....*
மாமென்கின்றவிவைமூன்று மறிவின்ெ..ற்றியிவற்றாலே... ....*
யாமுன்புணருமறையோரியா கத்தேதோன்றிற்றெனவறியாய்... ...*

(இ-ள்) ஓமென்றுசொல்லுகின்றதனியெழுத்தும் சொல்லுதற்கரிதானதத்துவென்கின்றசொல்லும் இதற்குமேல்சத்துஎன்று சொல்லுகின்றதனிச்சொல்லும் * ஆமென்றுசொல்லுகின்றஇவைமூன்றும்அறிவினுடையசுபாவம் ஒளியும் மணமுமுடைய * பூமாலையைத் தரித்தமார்பையுடைய அருச்சுன இந்தமூன்றினாலே நாம்முன்பு அறியபபட்ட * ஓதவரியவேதபாராணனான பிராமணனுடைய யாபத்திலே பொருந்திற்றென் றறிவாய்-எ-று. * (பதமாவது சொல்) (௨௩)

ஓமென்றுரைத்தேவினைசெய்வார் விதிப்படிவர்விதறுபவர்க...... *
டாமுன்புரைத்ததற்பதத்தை யுரைத்தேசெய் வார்சத்தென்றே...... *
யாமென்றிருந்தேவினையாகு மிவைமுற்றுமயினைவெல்லோய்...... *
காமபலத்தின்மேலின்றிச் செய்வாரறிஞர்சதிர்வேலோய்...... *

(இ-ள்) பிரகாசமுள்ள வேலைத்தரித்த அருச்சுனா, மோட்சம்பெற்ற பிரமஞானிகள் ஓமென்று பிரணவத்தைச் சொல்லியே கருமத்தைச் செய்வார்கள்-மோட்சத்தைப்பெறுகிறவர்கள் தாங்கள்முன்சொன்ன தத்தென்று சொல்லியே கருமத்தைச் செய்வார்கள் - சத்தென்று சொல்லியே நாமென்றிருந்த கருமமாகும், இது அருச்சுனா - எல்லாம் வினையபலத்தின்மே லில்லாமற் கருத்தை யுடையவர்கள் செய்வார்கள் என்றவாறு. * ஓம் ஆவது பிரமசொரூபம், தத்தாவது- அதென்றுபேர், அதுவென்ற அந்தப் பிரமத்தைச்சொன்னது- சத்தென்பது, நல்லதென்றுபேர் - உலகத்தாரும் நல்லகாரியம் பண்ணினவனைச் சற்கருமம் பண்ணினானென்பார்கள் - ஆகையாற் சற்குணமே பிரதானமென்பது கருத்து. அல்லாது செய்தால் அசத்தாமென் றருத்தாபத்தி.) (௨௪)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஈதலாலிந்தப்பதங்கண்மூன்றினையுங் கற்றுணர்ந்தவரெலாங்கருத்தா... *
லோதலாம்வகையாலுரைத்தலாற்றவமுந் தானமுமுதலியவுயர்ந்தா ... *
ராதலாலிந்தப்பதங்களைவிரும்பி வினைசெயத்தகுமென்றளித்தான்... *
தீதிலாதுலகந்தன்னுளேயுதித்த தேவகிதிருவயிற்றுதித்தோன்......... *

(இ-ள்) ஆசையினாலே இந்த ஓம் தத்து சத்து என்ற சொல்லுக்கள் மூன்றையுங்கற்றறிந்த பெரியவர்களெல்லாங் கருத்தினாலே யோதலாகும்படியான வாக்கினால் சொல்லுதலினாலே தவந்தான முதலானவைகளாலே மேலானார்கள் - ஆதலால் இந்தமூன்றுசொல்லையும் இச்சித்துக் கருமத்தைச் செய்யத்தக்கதென் றருளிச்செய்தார்- தீங்கில்லாம லுலகமானது தன்னுக்குள்ளே பிறக்கத் தாம் இந்த உலகத்திலுள்ளவர்களிலொரு தேவகியினுடைய திருவயிற்றிலே திருவவதாரஞ் செய்தருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. (௨௫)

௰௭-வது-சிரத்தாததிரவியவிபாகயோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-௰௭-க்குக்கூடியசெய்யுள்- ௪அ௰.





பதினெட்டாவது

உபநிஷத்துப்பிரதிபந்தனமோட்சயோக அத்தியாயம்.

(*) * (*)

கலி விருத்தம்.

ஏகமேகருதுவா ரிதயமேவிளைவதோர்......... ... ...*
யோகமேயுலகிலோர் பொருவிலாவொருவனே.........*
நாகமேயமளியாய் நளினமேமால்வதோர்...... ... ...*
மேகமேபணியெனு விசையன்மேல்வினவுவான்... ...*

(இ-ள்) ஒன்றான பிரமத்தையே தியானிக்கிறவர்களுடைய யிருதயத்திலே விளையாடப்பட்ட ஒப்பில்லாத யோகமே, உலகத்தி லுள்ளோர்களில் ஒப்பில்லாத கர்த்தனே, சேஷனாகிய பாம்பே சயனமாகிய தாமரைகளே மலரப்பட்ட தொரு நீலமேகத்தையொப்பானவரே, அனுக்கிரகம் பண்ணுமென்று சொல்லி அருச்சுனன் மேற்கேட்கின்றான் என்றவாறு. (௧)

இதுவுங் கலிவிருத்தம்.

சன்னியாசமாவதுந் தகுந்தியாகமாவது...............*
றென்னியாயமாகவெம் பிராணியம்புகென்னவே... ...*
வன்னிவாயுவானமாகி மண்ணுநீருமாதியோன்... ... *
றுன்னியபொருட்டொகைத் திறஞ்சொலத்தொடங்கினன்

(இ-ள்) நீர்சொன்ன சத்தியுடைய நியாயமான சன்னியாசமாவதும், அதற்குத்தக்க தியாகமாவதும், எந்தநியாயமாக இருக்கும், எங்கள்சுவாமியே சொல்லுமென்ன, ஆகாசம் வாயு அக்கினியாகிய பின்பு நீரு மண்ணு மாகிநின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி பழையநியமமுள்ள பொருளினுடைய தொகையின்வகையைச் சொல்லத்தொடங்கினார் - எ - று. (௨)

காமமென்றிரும்பயன்செய் கன்மமானயாவையுந்......*
தாமடங்கவேயிருத்தல் சன்னியாசமாவதின் ... ...*
கேமமின்றியேவினைப் பயன்களான்யாவையுந்.........*
தீமையென்றறத்துடைத் திருத்தரியாகமாவதே...... *

(இ-ள்) இந்தப் பிரபஞ்சத்தில் இச்சைபொருந்திய பிரயோசனத்தைச் செய்யப்பட்ட கருமமான சகலமு மடங்கத் தாம் ஏகமாக இரு

க்கிறது, சந்நியாசமாவது இன்பமில்லாமலே கருமபலன் களனைவ சகலமும் பொல்லாதென்று அதைத் துறந்திருக்கிறது தியாகமாவது என்றவாறு. (௫)

நீக்கிபற்றுகின்றதி வினைத்திறங்கள் யாவையே ....*
ஏக்கிபற்றுநல்வினைத் திறங்களாமவையும் ....*
மாக்கியப்பயின் விட்டிருத்தலே யருத்தமாம் ... .*
சாங்கியத்தையோதியே தவத்துளோருரைப்பரால் ....*

(இ-ள்) தியாகமாவது பொல்லாங்கு செய்கிற பாவவினைகளை விட்டாற்போலவே இங்கே செய்யப்பட்ட புண்ணியங்களான சகல கருமமுஞ் செய்வதில்லாமல் விட்டிருக்கிறதே தியாகமென்று அர்த்தமாகப்பட்ட சாங்கியத்தைச் சொல்லாநின்ற தவத்தையுடையவர்கள் சொல்லுவார்கள்-எ-று. (௬)

ஞானகாரணங்களாத யாகமோடு தந்தவம் ... .*
தானமோடு காத்தலைத் தகாதென்றுரைப்பரோ ... .*
ஞானகாரணத்தை யறிந்திடங்கினோர்க்கலா ... .*
வினைமாமிவற்றை விட்டிருத்தலென்றிருத்தலே ... ...*

(இ-ள்.) ஞானத்துக்குக் காரணங்களாகையால் யாகத்துடனே நல்ல தபசு தான மிவைகளை விடுகிறதைத் தகாதென்று சொல்லுவார்களொரு சிலர்; யாகந் தவந் தானமென்கிற இவைகளை விட்டிருக்கிறதென் றிருத்தல் இவைகளாலே ஞானமுண்டான காரணத்தை யறிந்து அடங்கினவர்களுக்கல்லாமல் அறியாதவர்களுக்கு கிடைக்கூடாது-எ-று. (௭)

கலி விருத்தம்.

தியாகமூன்று வகைப்படுஞ்செப்பக்கேள் ... .*
யாகமுந்தவந் தானமுமென்றிவை... ....*
மயலறுக்கு மனத்தினையாதலா ....*
லயர்வுறாத்தல் விடுகையாகாதால் ... .*

(இ-ள்.) இந்தத் தியாக மூன்றுவிதப்படும், அதைச் சொல்லக்கேள் அருச்சுனா யாகமுந் தவமுந் தானமுமென்ற இந்தக் கருமமானவை மனதிலுள்ள மயக்கத்தை யறுக்குமாகையால் விடுகலென்று சொல்லுதல் மயக்கத்துச்சொல்லுதல், ஆகையால் அந்தக்கருமத்தை விடுவது ஆகாது என்றவாறு. (௮)

என்னசெய்வதெனவிவ்வினைகளாம் ....*
பின்னைவிட்டது பெரும்பலனாவது ....*

தன்னைவிட்டுச் செயத்தகுமென்பது ....❋
முன்னையோரு மெனக்குமுடிவுரோ...............❋

(இ-ள்.) இந்தக்கருமமானது ஞானகாரணமாகையால் விடப்படாதாகில்மேலதிகமாவது என்னசெய்வதென்றுகேட்கில்இந்தக்கருமங்களாலே பிறகுவரப்பட்ட பெரியதான பிர்யோசனமாவதை இச்சியாமல் விட்டுக் கருமத்தைச் செய்யத்தகுமென்று சொல்வது பழையவர்களான பெரியவர்களுக்கும் எனக்குஞ் சந்தேகந்தீர்ந்த நிச்சயம்-எ-று. (எ)

நித்தமாய நெறியின்வினையினை ....❋
மத்தர்போல வொருவன்மயக்கினாற் ....❋
பித்தனாய்விடுகின்றவன்பெற்றியைச் ....❋
சித்ததாமத் தியாகமென்கின்றதே ....❋

(இ-ள்) சித்தியையுடைய அருச்சுனா "அழியாத நித்தியமாகிய விதியினையுடைய கருமத்தை (உன்மத்தரைப்போல) ஒருவன் மயக்கத்தினாலே பித்தனாகிவிடுகிற அந்தத்தியாகத்தைத் தாமதத்தியாகமென்று சொல்லுவது என்றவாறு. (அ)

மெய்வருத்த முண்டென்றுவிடுவதுக்............❋
கையமில்லை யிராசத்தியாகமாங் ....❋
கைவரும்பல னாசைகைமாறவே ... .❋
செய்வசெய்வது சத்துவத்தியாகமே... ....❋

(இ-ள்) இப்படி ஞானகாரணமென்று கருமம் பண்ணும்போது சரீரவருத்த முண்டென்று விடப்பட்ட அந்தத்தியாகத்துக்குச் சந்தேகமில்லை, அது ராஜத்தியாகமாகச்செய்த கருமத்துக்குக் கையில் இருக்கின்ற பலனில்லாத ஆசை கைவிடவேசெய்யவேண்டியது செய்வதென்றிருக்கில் அவை ஞானகாரணமான சாத்துவிகத்தியாகம்-எ-று. (௯)

யாதின்மாட்டி னுமையமொன்றின்றியே... ......❋
தீதின்ஞானியுந் தியாகியுமானவன்..............❋
கோதிலின்பமுந் துன்பமுங்கூர்வினை ....❋
மீதில்வேண்டல் வேண்டாமையும்வீடுமால்......❋

(இ-ள்) எந்தத்தத்துவத்தினிடத்திலும் சந்தேகமொன்றில்லாமல் தெளிந்த குற்றமில்லாத ஞானியுந் தியாகியுமான ஒருவனுக்குக் குற்றமில்லாத சுகமுங் குற்றமுமுள்ள துக்கமுஞ் சிறக்கக்கொடுக்கப்பட்டகருமத்தின்மேலே ஆசையும் வெறுப்புங்கெடும் -எ-று. ❋ (சுகங்கொடுக்கின்ற கருமமாவது புண்ணியமான நல்வினை துக்கங்கொடுக்கின்றகருமமாவது பாவமானதீவினை, வேண்டலாவது விருப்பு, வேண்டாமையாவது வெறுப்பு, வேண்டுதல் வேண்டாமையில்லாதவனாகவே நானே அவன், அவனே நான், ஆகையாலே அவனேபிரமமென்பது கருத்து) (௰)

யாக்கைபோமெனச் சிறுவினை.........*
நீக்கலாவனவல்லவெத்திறம்.........*
யொக்கயாவினைப்பயன்விட்டனர்.........*
போக்கலாமினியாவையும்போக்கினார்.........*

(இ-ள்.) உலகத்தி லிடத்திலே சரீரத்தோடேபொருந்தி யியல்பினாலே வினையென் றிரண்டாகவிருந்த கருமத்தைச் சரீரமிருக்கையில் நீக்கலாவதல்ல ஆகையாலே வளர்ந்ததாகிய கருமபலனைப் போக்கினவர்களே திரிமூர்த்தி முதலானவர்களோடும் போக்குதற்கு அரிதாகிய எல்லாவற்றையும் போக்கினவர்கள்-எ-று. * (இவ்வடி கருமத்தியாகமென்பது) (௧௧)

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

இன்னாதனவினியனவுமிரண்டுமிச்சமுமிணைந்தவாறா.........*
மூன்றுமியம்புவினையென்றுமவற்றின்வருபயனுமேவுபொருளும்.........*
பொன்னுலகுஞ்சேர்தலும்போலிருக்குமதுப்பொய்மெய்ய..*
யுன்றுதவர்க்கேயுள்ளதினையுணர்ந்தோர்க்குளவாயுதியாவரல்...*

(இ-ள்) ஆகாததான அநிஷ்டமும் இனிதான இஷ்டமும் அவையிரண்டுங்கூடி யிசைந்ததாகிய மிசிரமுமாகி நினைக்கப்பட்ட கருமமும், அந்த மூன்று கருமத்தாலும்வந்த அவ்வவற்றுக்கு முடிந்தபொருளானது அநிஷ்டகருமத்துக்கு நரகமும் இஷ்டகருமத்துக்குச்சொர்க்கமும் மிசிரகருமத்துக்குப் பாரியா புத்திராதி சம்பத்தும் என்றும் தெரிவிக்கப்பட்ட பூஷணமும்போல விருக்கும் அப்படிப் பொய்யாகிய மெய்யை நினைத்து விசாரித்து இது மெய்போலக்கண்ட பொய்யென் றறியாதவர்களுக்கே இந்தக் கருமபலமான நரகசொர்க்க சம்பத்தாகிய அனுபவமுள்ளது இது கானற் சலம்போலக்கண்டு பொய்யென்று தெரிந்தவர்களுக்கு உண்டாய்த் தோன்றாது-எ-று. (௧௨)

கலி விருத்தம்,

ஓங்கியவுலகினிலுயர்ந்தநன்மையைத் ....*
தீங்கினையாம்வினையாவுஞ்செய்தற்குச் ....*
சாங்கியநூலிலேசமைந்தசாதனை..................*
யீங்குளவைந்தனையெடுத்துக்கூறுவாம்.........*

(இ-ள்) உன்னதமானவுலகத்தில் உயர்ந்ததான நன்மையையுந் தீமையை யுண்டாக்கப்பட்ட கருமமெல்லாஞ் செய்வதற்குச் சாங்கிய சாஸ்திரத்திலே உண்டான சாதனம் ஐந்துண்டு அந்தச் சாதனமான காரணத்தை இப்போது எடுத்துச் சொல்லுவோம்-எ-று. * (இக்கவியெடுத்துக் கூறுவாமெனவும் ஐந்துள வெனவுமோதுக) (௧௩)

இருப்பிடமாமுடம்பியற்றுமாருயிர்க்... ....*
கருத்தினைமுதலியகரணங்காற்றினால்............*
விருப்பொடுவருந்தொழிலிவற்றின்மெய்த்தொழிற் *
கருத்தமாமொழிதெனவாகவைந்தரோ... ... ...*

(இ-ள்) ஆதாரவாவது ஆதாரமானவுடம்பு நடத்தப்பட்ட சீவன்மன முதலான அந்தக்கரணம் பிராணபாநாதி வாயுக்களினாலே ஆசையுடனே வரப்பட்டதொழில் இந்தவுடம்பு சீவன் கரணந்தொழிலென்ற நாலினுடைய உண்மைத்தொழிலுக்கு அருத்தமாகப்பட்டசோதியனதெய்வமென்பதொன்று முன்சொன்ன நாலினுடனேதெய்வமென்று கூட ஆக அஞ்சு-எ-று. (௧௪)

வாக்கினாலாதன்மெய் மனத்தினாகுத............ ......*
லாக்கையாலாதலிவ் வுலகில்யாவரும்............ ......*
வீக்குவார்சிலையினாய் வினையிரண்டிலொன்............*
றாக்குநாளிங்கிவை யைந்துமவேண்டுமால...... ......*

(இ-ள்) வாராவிறுகக்கட்டின வில்லையுடைய அருச்சுனா வாக்குமனங் காயத்தாலாகுதல்இவ்வுலகில் எல்லாரும் நல்வினை தீவினை இரண்டிலொன்று செய்யும்போது இப்போதுசொன்ன இந்தவுடம்பு சீவன் கரணந்தொழில் தெய்வமென்ற அஞ்சும் வேண்டும்-எ-று. (௧௫)

இவ்வகையேவரு வினையிரண்டையு.......... ....*
மெய்வகையேயா னன்றிவேறிலேச்................ ......*
செய்வகையானெனச் சிந்தைமேயினா.................*
றுய்வகைவேறிலா துணர்வுமாய்ந்துளான்...... ......*

(இ-ள்.) இந்தப்படியேவரப்பட்ட கருமமிரண்டையு மெய்யானபடி பொருந்தினவனானல்லாமல்வேறில்லை இந்தக்கருமத்தைச் செய்யப்பட்ட விதத்தையுடையவனும் நானென்று மனதிலே அகங்காரமடைந்தவனே அந்த அகங்காரமேகெதியல்லாமல் வேறே தப்பிப்பிழைக்கின்ற வகையில்லாதவன் அறிவுகெட்டவன்-எ-று. (௧௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

யாவனொருவன்றன்னுடம்பையானென்றிருக்குமியல்பொழிந்தா..*
னியாவனொருவன்கரணங்களியாதொன்றேடும்விளைந்திரா... ...*
னியாவனவனிவ்வுலகத்தையடையக்கொன்றானாயிடினும்..........*
பாவமில்லையவன்கொன்றபழியுமில்லைபார்மன்னா........ ....*

(இ-ள்.) எவனாகிலும் ஒருவன் தன்னுடையசரீரத்தைநானென்றிருக்கப்பட்ட சுபாவத்தையொழிந்தானோ அவன் எவனாகிலும் ஒருவன் அந்தக்கரணங்களானவை ஏதாகிலும் ஒருவிஷயங்களிலிச்சையாகவிரா

ரே ஆவினையே [illegible]
பாவபிப்பில் ஆவனி கொ [illegible] *
வழுக்கப்படி [illegible]
வி [illegible] (௧௯)

அநீ [illegible] ... *
செ [illegible] *
செப் [illegible]
கு [illegible]

(இ-ள்) [illegible] இப்
பொருளும் இல்லை [illegible]
விதிக்கின்ற [illegible] உடைய [illegible] கெடாமல் [illegible]
கருமம் [illegible] செய்விப்பனவும் [illegible]
உரக்கு [illegible] என்று [illegible]
முடிந்திருப்பது [illegible] (௨௰)

ஆதி [illegible] மக்களுடைய [illegible] .... *
மூன்றவனாருடைய [illegible] .... *
தோன்றவினைபுவின்படி [illegible] ......*
மூன்றுவகை [illegible] கள் ....*

(இ-ள்) [illegible] ஞானத்தில் செய்கின்
றகருமமும் [illegible] என்று [illegible]
தியாக [illegible] நிருத்தியென்று [illegible]
ஞானிகள் [illegible]
த்தன் [illegible]
முக்குணத்தொடர்ச்சி [illegible] என்றவிதமாம் அவைகள் [illegible] உடைய
த்தைதான் சொல்லுகிறேன் [illegible] (௨௧)

நன்றுப் ஞானத் [illegible] ....*
பொன்று [illegible] .... *
பொன்று [illegible] ....*
யன்றுமென்றார் [illegible] ... ...*

(இ-ள்) நன்றுபி ஞானத் [illegible] வெத்து [illegible]
ஆ [illegible] பட்ட [illegible] ஆடி பாதபொருளாகி [illegible]
பதாயிட ஆத்மாவானவென்னை அப்படியேயறிகின்ற [illegible]
விகஞானமென் [illegible] பார்கள் ஆல்லவென்றுசொல்லார்-எ-ற. (௨௨)

[illegible] பொருளைபுணர [illegible] ... ...*
[illegible] ஞான [illegible] .... *

ஞானத்திரளாய்நின்றதையோருடம்பினிடையுநாட்டிடையோ ...❋
தானத்திடையுமடங்கக்காண்பதுதாமதமாஞானமே ... .❋

(இ-ள்) நாசமாகிற குற்றமுண்டாகிய இந்தச்சரீரங்கள்தோறுமுள்
ள ஆத்மாவையொன்றென் றறியாமலே பிராமணாதிவர்ண பேதங்களிலும்
பிரமசாரியாதி யாசிரமபேதங்களிலும் பேதப்படவிருக்கிறதாக வெண்
ணி இனமுண்டாகக்காணுகிறஞான மிராசதமான ஞானமேயாகும் ஞா
னம் திரண்டதாகிய பூரணமாகி நித்தியமாகிநின்ற ஆத்மாவையோருடம்
பினிடத்திலும் நாட்ட லொருஸ்தலத்தி னிடத்திலுமடங்கமற்றவிடங்க
ளெல்லாம் பார்றாக்காண்பது தாமதமாகியஞானம்-எ-று ❋ (ஆத்மாவாவ
து பிரமம் இந்த ஆத்மாவை வர்ணாசிரம பேதங்களிலும் பேதமாக இரு
க்கிறதாக நினைத்து ஈனநிக்கங்களாலே ஈலமீனநிக்கமாமென்று ஆதிக்க
மாகவருகிறபலனை இச்சித்து வர்ணாசிரமங்களிலாதிக்கமுள்ளவர்ணாசிரம
கருமம் அனுஷ்டானம் பண்ணுகிறதினாலே இனமாகக்காணுகிற விராசத
ஞானமென்றார் இப்பால் தாமதகுணத்துக்கு ஓருடம்பு ஒருதானமுமெ
ன்றது கல்லு நவலோகங்களினாற்செய்த விக்கிரகங்களேஓருடம்புநாட்டி
லொருதானமாவது மலை நதி குளம் மரம் இவ்வமுதலானவனேக தான
ங்கள் இவைகளை விரிக்கில் வெகுவாம்) (உக)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வீய்தலும்பற்றுமேலாவினைப்பயன்வேண்டல்வேண்டாக்...❋
காய்தலொன்றின்றிச்செய்யுங் கருமஞ்சாத்துவிகக்கன்ம ...❋
மாய்தரும்பலத்திேனாடும் வருங்காரணத்திேனாடு...... ......❋
மேய்தருகருமமெல்லா மிராசதகருமமேயாம்......... ......❋

(இ-ள்) சாகிறதுஞ் சமுசாரத்திலே கட்டுப்படுகிறதும் வேவத்தக்கதா
க கருமபலனை ஆசைப்படுதலும் வெறுப்பாய் கோபித்தலு மிவற்றிலொ
ன்றுமல்லாமற் செய்யபபட்டகன்மஞ் சாத்துவிகக்கன்மம் அந்தக்கரும
த்தாலுண்டாய் அழியப்பட்ட பலத்துடனும் அந்தபபலத்திலிச்சையா
ய்ப் பொருந்திவரப்பட்ட அந்தக்காரணத்துடனுங்கூடி இசைந்துசெய்ய
ப்பட்ட கருமமெல்லாம் இராசத கருமமேயாகும்-எ-று, (உஉ)

கொலைபெரும்பற்றுமேலோர் கூறியநீதியோடுங்...... ......❋
கலைதெரிந்துணர்ந்துமேன்மை கடைபபிடியாமையார்க்கு .❋
மலைதருங்கேடுசூழ்த லினைத்தினுமொன்றிச்செய்யத் ... ...❋
தலைவருங்கருமமெல்லாந் தாமதகருமமேயால்..............❋

(இ-ள்) கொல்லுகிறது பேராசையாகியகட்டு பெரியவர்கள்சொன்ன
நீதியோடுஞ்சாஸ்திரத்தையோதித்தெளிந்து மேலான காரியத்தை மற
வாத கடைபிடியாமல் எவர்களுக்கும் அலையச்செய்யப்பட்ட கேடு
சூடச்செய்கிறது முதலான பொல்லாதகருமமெல்லாவற்றிலும் மனது

ஒருமையாகச்செய்ய அதுவே முத்திதராகவரப்பட்ட காரியமெல்லாந் தாமதகருமம்-எ-று (உ௩)

பற்றுமாங்காரந்தானும் பழுதறத்துறந்துபால்..............*
முற்றெழுமுயற்சியோடு நிலைபிறழ்வின்றியென்றி...... ...*
பெற்றமோரிழிவுபெற்றி துன்பமேழன்பமென்றுந் ... ...*
சற்றுமோர்சலிப்பிலாத தலைவன்சாத்துவிகனென்பான் ... *

(இ-ள்) கருமபலத்தி லிச்சையு மாங்காரமுங்கெட எல்லாம்விட்டுத்தன்னிடத்திலிருந் தெழும்புகின்ற வுச்சாகத்தோடும் நிலையோடும் வசனமுமொருமித்து யாதாகிலுமொரு போக்குவரத்து என்ற லாப நஷ்டங்கள் துக்கம் அவற்றுடனே சுகமென்றவிவைமுதலாகியன வந்தாலென்னைகுஞ் சற்றாகிலுமொரு சலிப்பில்லாத கர்த்தன் சாத்துவிகனென்று சொல்லப்படுவன்-எ-று. (உ௪)

கலிவிருத்தம்.

வினைப்பயன்றனை வேண்டலும்வேட்கையு......... ...*
மெனைத்துமியார்க்கு மிடாமையுந்தூய்மையு...... ...*
நினைப்பினீடலு நெஞ்சின்மகிழ்தலு........... ... ...*
மினைப்பவாழ்பவ ராசதமாந்தரே.................... *

(இ-ள்) செய்கிற கருமத்தின்பலனை யிச்சித்தலும் சகலசுகமுந்தனக்கேவேணுமென்கிற ஆசையு மெவ்வளவாகிலும் யாருக்குங் கொடாத லோபமுஞ் சுற்றமும் பலசித்தியாகிறதற்குமுன்னே நினைகிற நினைப்பிலே ஆமோ ஆகாதோவென்று அனேகநீளமாக நினைக்கிறதும் பலசித்தியானபேர்க்கு மனதிலே சந்தோஷப்படுகிறதும் இந்தவிதமாக வாழ்கிற மனிதர்-எ-று. (உ௫)

மனமொருக்கலும் வான்கலைநூல்களைத்......... ... ...*
தனமுருக்கொடு கற்றலுந்தக்கவ..... ....*
ரினமகிழ்த்தலு மின்றியுண்டாக்கிய........... ... ...*
சினம்விடுக்கிலார் தாமதஞ்சேர்ந்துளார்........... ...*

(இ-ள்.) மனதுபலவழியோடாமல் கொடுக்கிறதும் பெருமையுள்ள கலை சாஸ்திரங்களைத் திரவிய சிலவு பண்ணிக்கொண் டாகிலும் கற்கிறதும் பெரியவர்களின் கூட்டத்தை சந்தோஷிப்பிக்கிறதுமல்லாமல் உண்டாகின கோபத்தை விடமாட்டாதவர்கள் தாமதகுணஞ் சேர்ந்தவர்கள் என்றவாறு. (உ௬)

ஈனமற்ற துறவுறமில்லற...................... ... ...*
ஞானமெய்ந்நெறி நல்வினைதீவினை......... ... ...*

யானதஞ்சுவ தஞ்சத்தகாதெண......................*
தானறிந்தது சாத்விகபுத்தியே........ ....*

(இ-ள்) ஒருகாரியத்தை நினைக்கிறபோது இதுகுற்றமற்ற துறவறமோ இல்லறமோ ஞானமோ பந்தமோ இதுபுண்ணியமோ பாவமோவென்று விசாரித்தா லது இதுசாஸ்திரவிதியல்லாததினாலே பயப்படுவது இது சாஸ்திரவிதியாகையாற் பயப்படத்தக்க தல்லவென்று தான் நிச்சயமாகவறிந்து சாத்துவீகபுத்தி-எ-று. (உஎ)

தருமம்பாவந் தனக்குச்செயத்தகுங்................ ...*
கருமஞ்செய்யத் தகாதகருமங்க......................*
ளருமையாலறி யாதவறிவோர.................. ... ...*
விருமையாய விராசதபுத்தியே.................... ...*

(இ-ள்) தர்மம் பாவந் தனக்குச் செய்யத்தக்க காரியஞ் செய்யத்தகாதகாரியங்கள் இவைகளை யருமையினா லறியாத அறிவு சாத்துவிக தர்மதமான விரண்டுவிதமுங் கலந்ததாகிய இராசத புத்தி-எ-று. * (தனக்கென்று அவரவருக்கு விதித்த குலாசாரப்படியே தனக்குச் செய்யத்தக்கதென்றார்.) (உஅ)

பாவமாகத்தருமத்தைப்பார்க்கிலு......... ....*
மாவதாமென் றடாததுநோக்கலுங்.................. ...*
தீமைசெய்கின்ற சிந்தனை தீங்கிலே.....................*
போவதாவது தாமதபுத்தியே...........................*

(இ-ள்) தருமத்தைப் பாவமாகப்பார்க்கிறதும், அடாத பாவத்தை ஆவதான தருமமாகப்பார்க்கிறதும், பொல்லாததைச்செய்யென்றமனது பொல்லாதிலே போவதாகியது தாமதபுத்தி-எ-று. (உகூ)

மனஞ்செயுந்தொழின் மன்னுயிரின்றொழி...... ... ...*
வினஞ்செய்திந்திரியஞ் செய்தொழிலென்றிவை... ...*
கனஞ்செய்தேறினுங் கண்டுபொறுத்தலுஞ்... ... ...*
சினஞ்செயாமையுஞ் சாத்துவதிருத்தியே........ ...*

(இ-ள்) மனதுசெய்கிற தொழில் நிலையான பிராணவாயுவினுடைய தொழில் ஐந்தென்று கூட்டஞ்செய்த இந்திரியங்கள்செய்கின்ற தொழிலென்றுசொல்லப்பட்ட கருமங்கள் கனமாகச்செய்து அதிகமானாலும் அவைகளை வெவ்வேறேயாகக்கண்டு பொறுமையுங் கோபமுஞ் செய்யாத் பொறுமையுஞ் சாத்துவிகத்தைர்யம்-எ-று. (௩௰)

பண்ணிக்காமந் தருபயனைக்கொள்வா..................*
னெண்ணித்தாங்கும் திருத்தியிராசதன்............ ...*

கன்னெறிச்சோகங் களிப்புமயக்கம்...... ... ...*
நன்னெறித்தாக்குந் தடைப்பொருளாமே ... ...*

(இ-ள்.) கருமத்தைப்பண்ணி யத்தனிக்கையானது தாப்பட்டபய னைக் கைக்கொள்ளவேண்டியிருந்து மனது பிராணனாய்ப் இந்திரிய ங்களுடைய தொழிலைத்தாக்குகிற திருத்தியானது இராசத தயிரி யம். பொறுமை நிறுத்தி இவை மூன்றுமென்று இப்பாவிசாரிக்கிற சு கம் மதம் நித்திரை பய பிவைகளுண்டாகிற விஷயங்களை நிச்சித்து மனது பிராணனாய் இந்திரியங்களின் தொழிலைக்கெடுத்திடுந்தன்மையுந் தாங்கப்பட்ட தயிரியந் தாமததயிரியம்-எ-று. (௩௧)

துன்பமாவது பொன்று துடக்கு...... ....*
வின்பமாகி விளைவிடையாவர்க்கு...... ....*
மன்பவாரமு தேயமாவது.................... ...*
மென்பசாத்து விதக்தருமின்பமே...............*

(இ-ள்.) யோகிகள் ஒருசுகத்தை முதல்பழகுகையில் துன்பமா வதை யொப்பாகியிருந்து பழக்கந்தீர்ந்தபிறகு சகல கருமத்துடக்கும் அறத்தக்கதாகச் சுகமாகி விளைகிறவிடத்திலேயெல்லாருக்கும் கிடையா த அமிர்தமென்று சொல்லாவதாகுமென்பது சாத்துவிகம் கொடுக்கிற சுகம்-எ-று. (௩௨)

பொருத்தமாம்புல னோடுபொறியிலே...........*
யருத்தமாமெழுந் தாரமுதென்னப்... ... ...*
விருத்தமாய்விளைத் தாவிடமாகியே...... ... ...*
யிருத்தலாகு மிராசதவின்பமே.................*

(இ-ள்) இந்திரியங்களுடனே பொருத்தமாகிய விஷயங்களிலே விசுவாசமாயெழுந்தால் அமிர்தமென்றுசொல்லாகிவெறுப்பாயெழுந்தா ல் விஷயமாகியிருக்கிறது விராசதசுகமாகும்-எ-று. (௩௩)

துடருறக்க மயக்கொடுசோம்பே...... ... ...*
படவுதித்ததை பண்ணும்பொருதிறம்.........*
கடன்விளைத்து முடிந்தகாலத்திறு... ... ...*
மிடர்விளைப்பது தாமதவின்பமே......... ......*

(இ-ள்) எந்நாளுந் தொடர்ந்துவருகிற நித்திரை மயக்கம் அதனுடை ய சோம்பு இது அதிகப்படவுண்டாகி அவைகள்செய்யும்போது அதுமு றைமையாகவுண்டாகி முடிந்தபோதும் ஆத்மஞானசுகம் பிறக்கவொட் டாமல் தன்மையுண்டாக்குவது தாமதசுகம்-எ-று. (௩௪)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

இந்தவியற்கையினலிக் குணங்களைவிட்டவரில்லை... ... ...*
அந்தணர்க்கும்வணிகர்க்கு மரசருக்குஞ்சூத்திரர்க்குந்..... *
தந்தமியற்கையினற் குணமூன்றின்றன்மையினல்... ... ...*
வந்தவினைத்திறமவற்றை யுணர்த்தக்கேண்முடிமன்ன......*

(இ-ள்.) இந்தசுபாவத்தினலே யிந்தக்குணங்களை விட்டவர்களில்லை பிராமணருக்கும் யிராஜாக்களுக்கும் வைசியருக்கும் சூத்திரருக்குந் தங்கள்தங்கள் சுபாவத்தினலாகிய மூன்றுகுணத்தினுடைய சுபாவத்திலேவந்த கருமவிதங்கள் அவைகளையுனக்குந் தெரியச்சொல்லக்கேள்கிரீடந்தரித்த ராஜாவே-எ-று. (௰௫)

கலி விருத்தம்.

களைசெயைம்புலன்களைக் காணநான்குடன்... ... ...*
துறைதுறையடக்கலுந் தவமுந்தூய்மையும்... ... ...*
பொறையொடுகல்வியும் பொருந்துஞானமு... ... ...*
மறையவர்தொழிலென வகுக்கவேண்டுமே............*

(இ-ள்) குற்றத்தைச்செய்கின்ற பஞ்சேந்திரியங்களை அந்தக்கரணநாலுடனே அவையவைகளை அந்தந்த துறைகளிலும் அடக்கிறதும்தேகமும் போகங்களைவிட்ட தபசும் சாஸ்திரவிதியாசாரமான சவுசாதிசுத்தமும் படித்தவர்களிடத்தில் விகாரமில்லாத பொறுமையும், அவற்றுடனே பரத்துவத்தை யறிகிறகல்வியும், வேதசாஸ்திரார்த்தமும், பாதத்துவநிச்சயமும்பொருந்தின ஞானமும்பிராமணர்களின் கருமமென்று சொல்லவேணும்-எ-று. (௰௬)

தலைமையுங்கொடையொடு தறுகணாண்மையும் ... ...*
நிலைமையுங்கீழ்ப்படா நெஞ்சினிட்டமுங்...... ......*
கொலைபயில்போர்களிற்புறங்கொடாமையுஞ்...... ...*
சிலைமலிதோளினரசாசெய்கையே......... ....*

(இ-ள்) வில்லுச்சண்டைமிகுந்த தோளையுடைய அருச்சுன கர்த்தத்துவமுந் தானமும் அதினுடனே ஆக்கிரமான ஆண்மையுஞ்சலியாத நிலைமையான தயிரியமுங் கீழ்மைப்படாத மனதுடைய மேன்மையுங்கொல்லுகின்றதைச்செய்யபபட்ட சண்டைகளிலே ஓடாம லெதிர்நடக்கிறதும் அரசர்களின்தொழில்-எ-று. (௰௭)

உழுதொழில்பசுக்களை யோம்பல்வாணிபம்... ... ...*
வழுவறச்செய்கையே வணிகர்வாழ்க்கையாம்... ....*
பழுதறவிவர்களைப் பாதுகாத்தலே......................*
விழுமியதொழில்கள்வே ளாளர்க்கென்பதே... ... ...*

(இ-ள்.) உழவுதொழில் பசுப்பரிபாலனம் பண்ணுகிறது வாணிபம் முதலானதுஞ் செய்கிறது இவைகள் பழைமையானவைகளுடைய தொழிலாகும் இந்த மூவகையுங் குற்றமற்ற இடையர்களைக் காக்கிறதுமேயாகிய வேளாண் தொழில்கள் செய்கிறது இந்தத்தொழில்கள் சூத்திரர்களுக்குரியனவென்று சொல்வது எ-று. (கூ௯)

கலிவிருத்தம்.

திராவகைகதஞ்செயலேசெயவே ....*
நாராயணனை நலமுறுக ... .*
காராதலையாமநலமெய ....*
வாராவழியாமவரேதருமாம் ... .*

(இ-ள்,) இந்நாலுவருணத்தாருந் தங்கள் தங்கள் தொழிலையே செய்யவே அவை (நாராயணனுக்கு) திருவாராதனமாய்த் தருகிறதுப் பூசையாம் அதனாலே அந்த நாராயணனே இவர்களை திரும்பவராத வழியாகிய மோக்ஷமாகப்பட்ட யாத்திரைக்குத் தருவார் எ-று. ✻ (அன்னிய வருணாசாரத்தைச்செய்தவர்கள் நரகில்வீழ்வரென்பது அருத்தாபத்தி) (௬௧)

அல்லாவினைதானழகாவிருந்து ....*
சொல்லார்பெரியோரதைச்செய்தகலார் ... *
நல்லாகுலமேதொடருந்தொழிலே ......*
பொல்லாவெனினுஞ் செயலேபொருளே.

(இ-ள்.) சுத்தமல்லாத அன்னிய வருணத்தாருடையதொழிலழகாயிருந்தாலும் பெரியோர்கள்தங்கள் கருமங்களைவிட்டு அன்னியகருமங்களிலே போகார்கள் அன்னிய வருணத்தாருடைய கருமம் நல்லதென்று அந்தக்கருமத்தைச் செய்வதிலும் பழையதான தங்களுடைய குலத்துக்கு அன்றுமுதலாகத் தொடர்ந்ததொழில் பொல்லாததாகிலும் தங்களுடைய குலாசாரம் செய்கின்றதே நல்ல திரவியம்-எ-று (௬௨)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

கனையெரிபுகையோடன்றிக்காணமுடியாமையேபோல ... ...*
வினைகளுங்குற்றந்தன்னைவிட்டிராதாதலாலே ....*
யனையதென்றிகழ்தலாகாவடுத்தகாரியங்கடம்மை...........*
நினைவருந்தருமமென்பேசெய்கையேநீதியெல்லாம் ....*

(இ-ள்.) சத்தமுடைய நெருப்புப்புகையுடனே காண்பதல்லாமல் புகையில்லாமல் நெருப்பை மாத்திரங்காண்பதற்கு எதிர்ப்படாததுபோலக்கருமங்களுங்குற்றத்தைவிட்டு நிர்மலமாயிராது ஆகையாலே அப்படிக்குற்றமுடையதென்று செய்யாமல் வெறுத்துவிடுவதாகாது தங்கள் தங்கள்குலத்துக்கு அடுத்தகருமங்களை நினைக்கப்படாதபிரமமாகியதரு

னமென்று எல்லாஞ்செய்வதேவிதி-எ-று. * (எல்லாமென்பதேனென்னி ல் ஒருகுலத்துக்குவிதித்தகருமம் அனேகத்தில்வெகுகருமம் நல்லதாயி ருக்குஞ்சிலகருமங்குற்றம்போலத்தோன்றும் அந்தகுற்றமாகக் கண்ட தைவிடாம லெல்லாஞ் செய்வதேநியமமென்று நிதியாவது சிருஷ்டிக்கு முன் நியமமானது.) (சக)

இதுவுமது.

வெல்லப்பட்டமனத்தினனுப்வேறொன்றினையும்வேண்டாதே ... *
யல்லற்பற்றுமுடம்பற்றுமறவேயறுத்தான்வினையாவுந் ... .*
செல்லச்செல்லவெறுத்தவனுயதனுற்சித்தமுடிவாகச் ....*
சொல்லப்பட்டகரணங்களுன்குந்தூய்தாய்விடுமென்றே ... .*

(இ-ள்.) கெலிக்கப்பட்ட மனதையுடையவனும் என்னைத்தவிரவே றொன்றையும் இசைப்படாமல் துக்கத்தொடாச்சியான ஆசைப்பற்றுந் தேகத்தொடர்ச்சியான ஆசைப்பற்றும் ஒருக்காலு மில்லாமலறவே வெ றுத்தவனும் கருமங்களெல்லாம் நடக்க நடக்க அந்தந்தப்புலன்களைவெ றுத்தவனும் அதிலே மனமுதலாகச் சித்தமுடிவாகச் சொல்லப்பட்டநா லுகரணங்களுஞ் சுத்தபவுத்திரமாகிவிடுவன்-எ-று. (சஉ)

சொன்னகரணமவைநான்குந்தூய்தாய்விடுமத்தூய்மையினு ....*
லுன்னவறியாப்பெரும்பொறையை யுடையனுகுமப்பொறையா ... ...*
லின்னல்செய்யும்பொழினையந்துமிராகத்துவேஷமெனுமிரண்டு ... ...*
மன்னதன்னை நலியாமலாற்றுமதனைமாற்றினுன் ... .*

(இ-ள்.) என்னைத்தவிர வேறொன்றையும் இச்சியாம லறவிட்டால் மனம் புத்தி யாங்காரஞ் சித்தமென்றுசொன்ன கரணமான நாலும் நிரு மலமாகிவிடும் அந்தக்கரண சுத்தியினுலே நினைக்க வறியாத பெரியபொ றுமையாகிய தயிரியத்தை யுடையவனுகும் அந்தப் பொறுமையினுலே துக்கத்தைச் செய்யப்பட்ட அஞ்சுவிஷையமும் விருப்பு வெறுப்பென் கிறவிரண்டும்அந்தவேழுந்தன்னை வருத்தாமல் அவைகள்செய்யப்பட்ட தொழிலைப்போக்கினவன் - எ-று. * (ராகமாவது ஆசை துவேஷமாவது பிணக்கு தூயதாயுமென்றுமற் றூயதாய் விடுமென்றது நிருமலமாய்முன் னிருந்தழுலம் விடுமென்பது). (சஙூ)

காடுமலையுமலைமுழையுங்கடுநாமுதலைநலிவில்லா............*
வோடும்புனலாற்றுள்ளிட்ட விடமேயுறையுளாக்கொண்டு...*
தேடும்பொருளொன்றின்றியேசிறிதேயுண்டுசென்றெங்கு *
மாடுமனவாய்மொழியாக்கையடக்கப்பெறுமாலவனேயால். .*

(இ-ள்) காடும் மலையும் முழையுங் கடினமான நாக்கையுடையமுதலை யினுலே வருத்தமில்லாமல் ஓடப்பட்ட சலத்தையுடைய ஆறுமிவை களுள்ளிட்ட விடமே யிருக்கிறவிடமாக விருந்துக்கொண்டு தேடப்ப ட்டபண்ட மொன்றுமில்லாமலே கொஞ்சமாக ஆகாரம்பண்ணி - யெ

க்குக்கிரிக்கு சூக்காட்ட [illegible] காரணங்களையுடைக்கப் பெருமானைக் [illegible] -எ-று. * [illegible] கவிலைவெவ் [illegible] காலேன்றுரைப்பது. (௩௯)

சொன்னவிளைவுபோவைக் [illegible] *
பென்னதியாகினென்கின் [illegible] .. *
முன்னபிறக்குமாக்கிடி [illegible] ... *
பின்மைடையாகென்றுமிக்கைடை [illegible] ருவாய் .... *

(இ-ள்) உளம் வாக்கு காய மென்று சொன்ன மூன்றுத் திரிவிதகரணங்களும் அடங்கிப்போகவே முன்னமே யுண்டாக்கப்பட்டவெல்லாம் ஆசையும் எனதென்கிற அகங்காரமும் நான் கருத்தனென்கிற அகங்காரமும் நெருப்பை யொப்பான கோபமும் இவைகளுடனே பலரும் இவைகளை நினைப்பதை விட்டுச் சாந்தி பெறுவன் இச்சராசரங்களைப் பெலே ஓரிடத்திலும் உண்மையாக விடைவிடாமல் [illegible] மல்கின்ற பிரமத்திறுடைய பெரும்பொருளேவன்-எ-று. (௪௰)

அந்தவுருவானவன்பின்னையாகேவிழுதுமிரு ... .*
வீந்தவுலகத்துயிர்க்கெல்லாமெனக்கே [illegible] குமிக்கவனும் *
பந்தமுவிட்டென்னையுமிபத்தியெய்துப்பக்தியிறும் ...... *
சிந்தையிடை [illegible] தெளியுமதனாலென்னைசேருவாய்*

(இ-ள்) அந்தப் பிரபஞ்சாரூடனானவன் [illegible] குளன்னவன்தாலும் அதில் இச்சையாட்கெட்டான் இப்பப் பிரபஞ்சத்திலுள்ளயிலனுக்கெல்லாம் இவனுஞ் சமனாயிருப்பன் பாசபந்தமுவிட்டு என்னையுமறியப்பட்டபத்தி பெறுவன் அந்தபத்தியினாலேமனதினிடத்திலே என்னைத்தெளிவான ந்தத்தெளிவினாலே என்னையேசேருவான்-எ-று. (௪௧)

என்னைப்பற்றிக்கொள்ளவேசெல்லாவினையுமியற்றிலும்..............*
பின்னைப்பிறவாப்பெறும்பதமென்னருளினாலேபெறுங்கண்டாய்.....*
இன்னைத்தொடரும்வினையெல்லாமென்னையினைந்தேசெய்வினைக ... *
டன்னைக்கடத்தக்கருந்துன்பமெல்லாங்கடக்கத்தகுதியால்... ....*

(இ-ள்) உறுதியாக வென்னை இச்சித்துக்கொண்டுஎல்லாக்கருமத்தை யுஞ்செய்தாற் பிறகுபிறவாதபெரும்மோட்சத்தை என்னுடைய கிருபை யினாலே பெறுவன் கண்டாய் அருச்சுனா ஆகையால் உன்னைத்தொடரப் பட்டகருமத்தை யெல்லாமென்னையேநினைத்துச்செய்தால் அந்தவினை களை அவைகளால்வரப்பட்ட கடக்கிறதற்கரிதான துக்கமெல்லாங் கட க்கத்தக்கவனாவாய் - எ - று. * (என்னையே நினைப்பதாவது கருடப்பன

ணுகின்றவனும் பண்ணிவிக்கிறவனும் பதத்தையடைகிறவனும்நானே யென்றென்னை நினைத்துச்செய்யென்றார் நின்னைத்தொடரும் வினையென்றதனால் நீ வினையைத்தொடராதிரும் என்பது குறிப்பு.) (சஎ)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

ஒன்றியமனத்திலேயானுரைக்கின்றவுண்மை ... ...*
நன்றிதென்றுணராயாகிலுசமேயடையுமற்றி ....*
தன்றியுமரசர்க்கெல்லாமடுத்தகாரியமாயுள்ள ....*
வென்றியையுடையாயேனும்வேறுநீவிளைவகேளாய்...*

(இ-ள்) ஒருமையான்மனதிலேநான்சொல்லுகின்றவுண்மை இதுநல்லதென்றறிந்து கொள்ளாயாகில் நாசத்தையே யடைவாய் இதுவல்லாமலும் இராசாக்களுக்கெல்லாம் அடுத்தகாரியமாயிருக்கின்ற வெற்றியை நீயடையாயாகிலும் இனிவேறொன்றுவிளைவதுண்டோ அதைச்சொல்லுகிறோம்கேள் அருச்சுனா-எ-று. (சஅ)

கலி விருத்தம்.

விரைசெய்தார்மன்னவேண்டலையாயினுங் ......*
கரைசெய்துன்றனைக்காலுறவார்த்திடு... ....*
மரசர்தங்குண மாகியவாண்மையே ... .*
புரைசெய்வாளமர்க் கேபுகுவிக்குமால் ... .*

(இ-ள்) பரிமளிக்கின்றமாலையைத்தரித்த ராசாவே நீ என்வசனத்தையுந்தள்ளிச் சண்டையைவேண்டாதவனானாலும் வங்கிஷக் கிரமமாகக்கட்டுப்பட்ட ராஜாக்களுடைய சுபாவகுணமாகிய ஆண்மையான சேவகமே அநேகமென்கின்றவகையினாலே உன்னைச்சேர்த்து நான் சொல்லப்பட்ட பெரியசண்டைக்கேபுகுதப்பண்ணும்-எ-று. (சகூ)

பொறிகளுண்ணின் றவற்றின்புணர்ப்பெலா... ... ...*
மறியவாட்டினன் போலவராக்கைகள்.................*
வறிதுநின்றுதன் மாயையினால்வினைக்........... .....*
குறிகள்செய்விப்ப னீசனென்றேகொள்வாய்... ......*

(இ-ள்.) சகலசீவன்களுடைய விஷயங்களுக்குள்ளே நின்று அந்த விஷயங்களுடைய பொருத்தமெல்லாமறிய ஆட்டுகின்றவனைப்போலத் தன்னுடைய மாயையிலே அவர்களுடைய சரீரங்களானவை விருதாவாகநின்று கருமத்தினுடையகுறிகளைச் செய்யப்பண்ணுகின்றவன்ஈஸ்வரனென்றே யறிந்துகொள்வாய்-எ-று. * (இவை சேவகம்வேண்டாமென்றிருந்தால் ஈஸ்வரனுடைய ஆக்கியாசக்கரந் திரும்பாமல்விடாதென்பதுகருத்து.) (சுய)

வேறுபட்டொரு வற்குவிளம்புவ.................*
மாறுபட்டபொருளின் வகையெலாங் ... .*

கூறப்பட்டதுனச் சிக்குறிகளை............ ....*
யேறப்பார்த்துனக் கேறியவைசெய்வாய்... ....*

(இ-ள்) வேறுவசப்பட்ட ஒருவருக்குச் சொல்லாமல் விலக்கப்பட்ட ரகசியமான பொருளினுடைய வகையெல்லாம் உனக்குச் சொல்லப்பட்டது-இந்தக்குறிகளை யுனக்கேறப் பார்த்துப்பொருந்தினபடி செய்வாய்-எ-று. * (ஏறப்பார்த்தலாவது மனங்கொள்ளவிசாரித்தல்) (௫௧)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

நீதகலாதனவுளவோ வினவேண்டிலெனத்தேறி......... ...*
யோதலினானினைத்தலினா லெனைப்போக்கியொன்றறியா ...*
யாதலினாலியாவர்களு மறியாததொருபொருளைக்... ... ...*
காதலினாலுனக்கின்ன முரைக்கின்றேன்கடைப்பிடிநீ ... ...*

(இ-ள்) இவன்வேண்டினாற்போகாத பொல்லாங் குண்டோவென்றுமன்துதேறி ஓதுகிறதினாலும் நினைக்கிறதினாலும் என்னைத்தவிர வேறொன்றை யறியாதாகையினாலே எல்லாருமறியாத ஒரு பொருளை ஆசையினாலே இன்னமுனக்குச் சொல்லுகிறேன் அருச்சுனா மறவாத கடனாகக் கொள்ளுவாய்-எ-று. (௫௨)

என்னையேநினைந்தெழுவுன் மனத்தினையென்னிடையேவைத்
தென்னையேநினைந்திருமற் றெனக்கேபூசனைசெய் ... ...*
என்னையேகுருவாக்கொள் ளுதிசெய்யிலெப்பொழுது......*
மென்னையேவந்தடைவ திதுமெய்யென்றுணர்நீயே......*

(இ-ள்) என்னையே நினைந்தெழும்பு, உன்மனதை யென்னிடத்திலே வைத்து என்னையேநினைந்திரு, எனக்கேபூசனைசெய், என்னையே குருவாகக்கொள்ளு, இதை வேறொராகிலுஞ் செய்தாலெப்போதும் வந்து என்னையேசேருவார் இதுமெய்யென்றறி அருச்சுனா நீ-எ-று. (௫௩)

இருவேறுவகையாய வெவ்வேறுவினைகளையு......... ... ...*
மருவேனென்றறவிட்டு மாயையினான்மறைப்பரிய... ... ...*
வொருவனையேபற்றுதியேல் பற்றினைக்காலுனைப்பிறவிக் ... *
கருவேரைக்களைந்தேறக் கைதருவேன்கதிர்வேலோய் ... ...*

(இ-ள்) இரண்டுவிதமாய் வேறுபட்டதாகிய பலவான் எந்தக்கருமங்களையுங்கூடேனென்று அறவிட்டு மாயையினாலே மறைக்க அரிதாகிய ஏகமான என்னையேசரணமடை சரணமடைந்தால் உன்னை யலையப்பண்ணுகின்ற பிறவியினுடைய கெற்பவேரைப்பிடுங்கி மோட்சக் கரையிலேற நான்கைகொடுப்பேன் பிரகாசமுள்ள வேலைத்தரித்த அருச்சுனா-என்றவாறு. (௫௪)

மற்றுனக்குச்சொல்லியவிம் மறைப்பொருண்மாதவமிலர்க்குங் ... ... *
குற்றமறுத்தறிவருளுங் குருவழிபாடிலாதவர்க்குஞ்......... ... .*
செற்றமனச்சழக்கினர்க்கு மெனைநினையாத்திறத்தவர்க்கும்... ... .*
பற்றமறத்தெரிந்துரைக்கை யடாதென்றேயறிகண்டாய்......... ... ...*

(இ-ள்) மற்றப்படி யுனக்குச்சொன்ன இந்த ரகசியப்பொருளைப் பெரியதவமில்லாதவருக்குங் குற்றமான அஞ்ஞானத்தைத்தீர்த்து ஞானத்தைக்கொடுக்கப்பட்ட குருவைப்பூசைபண்ணவில்லாதவருக்குங் கோபமுடைய மனதுள்ள பாவிகளுக்கும் என்னைநினையாத காமியகருமிகளுக்கும் சமையமறத்தெரிந்துசொல்லுகின்றது ஆகாதென்றறிவாய் கண்டாயருச்சுனா-எ-று. * (சமையமாவது-அவர்களுடைய குற்றந்தீர்ந்த சமையம்.) (௫௫)

எல்லாப்பொருட்கும்பரமாமிப் பொருளையென்னன்பர்க்கிசையச்......*
சொல்லாற்றெரிவிப்பார்தம்மை யறியச்சொல்லவேண்டுமோ ... ...*
நல்லார்களின்மற்றெனக்கினிய நன்மைசெய்கின்றாருமல...............*
ரல்லாதவரிப்பொழுதில்லை மேலுமவருளராகார்............ ... .*

(இ-ள்) எல்லாப்பொருளுக்கு மேலான இந்த அருத்தத்தை என்னுடைய பத்தருடைய மனதுக்கிசையச் சொல்லினாலே தெரியப்பண்ணுகிறவர்களை அறியச்சொல்லவேண்டுமோ அருச்சுனா உலகத்திலுள்ள நல்லவர்களிலெனக்கின்பமான நன்மைசெய்கிறவர்களும், என்னை அடைகிறவர்களும் அவர்கள் அல்லாதவர்கள் இப்பொழுது எனக்கு நல்லவர்களுமல்ல ஆகையால் அவர்களிருந்தாலும் இல்லாதவர்கள் இனிமேலும் அவர்களுள்ளவர்களாகார் எப்பொழுதுமில்லாதவர்களே-எ-று. (௫௬)

ஏயவிருவோம்பேசியவிவ் வறநூலினையேயெடுத்துரைப்ப........ ...*
ஞயஞானயோகத்தா லென்னையேயாராதிக்கின்றான்.............. ... ...*
மேயபொருண்மைதனைவிட்டு விருப்பாலொக்கக்கேட்பானுந்...... ......*
தீயவினைகளறவிட்டுத் தேவருலகஞ்சேருமால்............ ... ...*

(இ-ள்) நாமிருவரு மிசையப்பேசின இந்தத் தருமசாஸ்திரத்தையே யெடுத்துச் சொல்லுகிறவனும், நிறைவேறிய ஞானயோகத்தினாலென்னையே பூசிக்கிறவனும், மனதிலேசேர்ந்த பொருண்மையைவிட்டு ஆசையினாலே மனது ஒத்துக்கொள்ளக் கேட்கிறவனுஞ் சொல்லுகிறவனும் பொல்லாத பாவங்களை அறவிட்டுத் தேவர்களுடைய வுலகத்திலே சேருவார்கள்-எ-று. (௫௭)

கலிநிலைத்துறை.

என்னதுமொழியினா னியம்பியஞானத்தாலே... ....*
முன்னவவுனக்குருவன் மயக்கெலாங்கெட்டதேயான் ... ...*
சொன்னவிப்பொருள்களெல்லாந் துணிந்தனைகொல்லோவென்று
நன்னகைகூறிநின்றநாயகனருளிச்செய்தான்.......... ...*

[illegible] இறும் காப்பென்ன [illegible]
[illegible] அந்தராலமெல்லாம் [illegible]
[illegible] ராஜரேவும் [illegible] த்தங்களெல்லாம் ஏகமனதுடனே கேட்டு [illegible]
[illegible] என்று துணிந்தாயோவென்று கப்பசி [illegible] த்தேடுகின்
[illegible] ஸ்ரீகிருஷ்ணசுவாமி அருளிச்செய்தார் - எ - று. (௱௪)

விருத்தம்.

மன்னவனென்னைப்பகை [illegible] *
முன்னைவினையால் [illegible] *
என்னை [illegible] *
தன்னைகமந் [illegible] *

(இ-ள்) இராசாவே [illegible] என்னைப்பகைத்து, இனி [illegible] என்று பரயாகமேவனுகிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி வேதசாஸ்திரம் [illegible] முன்னே [illegible] வார்த்தையினாலே சொல்லத் தன்மனது சந்தோஷமாகக் [illegible] அருளாய் சொல்லு வான்-எ-று. (௱௫)

பையரவின்மேலினிது பள்ளிகொள்வோனே... ... ... *
வையமுறு [illegible] உயிர்கள் [illegible] *
செய்யவினையற்றது [illegible] *
மெய்தெளியின் முன்வினை [illegible] *

(இ-ள்.) படத்தையுடைய பாம்பின்மேலே சுகமாகப் பள்ளிகொ ள்ளுகிற சுவாமி பிரபஞ்சமும் இந்தப்பிரபஞ்சத்தில் வாசமான சகலஜீ ன்களும் உண்டாகச்செய்த [illegible] இந்திரனும் மெய்யாகத்தெரிந்துபார்க்கில் நீ முன்வினையாடப்பட்ட [illegible] வோ என்றவாறு. (௱௬)

அனைத்தையு [illegible] *
கணித்தல [illegible] கடல்கடந்தேன்... ... ... *
பிணித்தபெருமாயை [illegible] *
பணித்த [illegible] *

(இ-ள்) [illegible] உம்முடைய கிருபையினாலே கணக்கிடப்படாத [illegible] ந்தேன் இந்தப்பிறவிக்கடல்களிலே [illegible] ரியமாயையினுடைய விசாலமானது [illegible] னே நீர்கட்டளையிட்ட எவ்வளவுமல்லாமல் வேறுயேவல் செய்யப் படுவது உண்டோ இல்லை-எ-று, * (பிறவிக்கடலைக் கடக்கவே மோட்சத்தையே [illegible] மாயை நாசமாகவே ஞானம்பெற்றேனென்றும் சந் [illegible] மருத்தாயத்தி.) (௱௭)

வையமுழுதுண்டதிரு வாய்மொழிதிறந்த
மெய்யவடியேன்முனுனா செய்தவுரையாலே...... *
ஐயமுமகன்றதென வாகுமறவிட்டேன்... ...... *
செய்ததினியுந்தனருளிச்செயல்களன்றோ... ...... *

(இ-ள்) பிரபஞ்ச மெல்லாவற்றையும் பொசித்தருளிய திருவாய்மொழியைத்திறந்து அடியேன் மாயையைவிட்டு தப்பிப்பிழைக்க அடியேன் முன்னே யருளிச்செய்த திருவார்த்தையினாலே சந்தேகம்போயிற்று-என்னுடைய சுயமாகவிசாரிக்கிற தருமபாவ விசாரணையையுஞ்சுகத்தையுஞ் சுத்தமாக அறவிட்டேன் இனி உம்முடைய அருள்வாக்குச்செயல்களேயல்லவோ அடியேன்செய்வது-எ-று. * (அற்புமறவிட்டேனென்று பாடமோதில் என்னவர்களென்றவர்கள்மேல்வைத்த அன்புமறவிட்டேனென்பது கருத்து) (சுஉ)

வேறு

தோன்றுதனவுந்தோன்றவையுஞ்செய்யுந்... ... . *
தொழினிமித்தமாய்த்திகழுஞ்சூழ்கதிரோன்போலச்
சான்றாகிநின்றதனைத்துங்காரணங்கள்செய்யும் .... *
தகைமைகளுக்கெல்லாந்தனிநிமித்தமாகி... ...... *
வான்றனெனவோர்வடிவின்றியொத்து...... ... . *
வரம்பிகழ்ந்துநின்றவிம்மன்னுயிர்களெல்லா ... ... *
மீன்றலுங்காத்தழித்தல்செய்தலுமுன்ற... .... *
வியல்பொருமொருகாததெவ்வகையோவெந்தாய் ... *

(இ-ள்) நினையாததை நினைப்பிக்கிறது சத்த பரிச ரூப ரச கெந்தமென்கின்ற ஐந்துகாரியத்துடனே செய்தொழிலென்றுந் தொழில் நிமித்தியமா யெங்கும்பிரகாசிக்கும் சூரியனைப்போல சாஜீயமாயிருந்து மனம் புத்தி சித்தம் ஆங்காரமென்கின்ற கரணங்கள்செய்யும் காரியங்களுக்கெல்லாம் நானிமித்தமாகிக் கூடிவாழ்கின்றவன் என்றும் ஒருவடிவுமில்லாமல் ஞானயோகத்தினாலே யெதுவுஞ்சேராமல் இருக்கின்றவனென்று மன்னுயிர்களையெல்லாம் காத்தழித்து உண்டாக்குகின்றது முன்னுடைய வியல்பினாலே ஆகின்றது அல்லாமல் பின்னையொன்றினாலேயு மாகின்றதில்லையென்றுசொன்னார் அருச்சுனராஜன்-எ-று. (சுஙு)

எரியாயதவனுக்குவெம்மைதானே.................. *
வடிவாகியிருந்தாப்போலியாதுமொன்றுந்... ...... *
திரியாதமெய்யறிவினுருவாயேதுந்.................. *
திரியாமையெவ்வடிவாங்காண்பயாவும்... .... *
பிரியாதுநினைப்பற்றுநின்னைசித்தம்...................... *
பெருந்தொழில்கள்புரிகின்றபெற்றிகண்டாய்... ... *
கரியானேயுனதடிமைத்திறமைபூண்டு...... ... ... *
காதலியாற்கியலாதகருமமுண்டோ... ... ... *

...ள்.) அக்கினிக்கு வெம்மையானது வடிவா... ...போலே ...ருஞ்சேராமல் ... ... இருக்கி...வானவனேயென்றுங் காரியமெல்லாம் ... ...ன்னைத் ...யானி...த்திருந்தபேருக்கு ஊனானவனேயென்றும் பெருந்... ... ...டபேருக்கு மரியவனேயென்று மூலக்க... ... ...பெறுமென்றபேருக்கு நீ ...த்த காரியமெல்லா மாகுமென்று சொன்னார் அருச்சுனராஜன் என்றவாறு. (௬௪)

ஆறுவிதமாங்காரணங்களேனு…………………*
...றுகாதகனுவினையுங்... ... ...*
காருமதனிலுமுழுங்காரணக்கட்டென்பா... ……*
காரணமாய்நின்றவாகளாமிப்படியெல்லாக் ...*
தானுகும்வகைகாட்டியகாரணந்தோறும் ………*
தனித்தனியே ...றுதலைமயாயிருந்து ... ……*
யானுமுன்னையவையேதுமென்று ……………*
மறியாதவகைநிற்பதெவ்வகைநீயையா ... ……*

(இ-ள்) ஆறுவிதமான வெல்லாஞ்சேர்ந்தரூபமுண்டானவனேயென்றும் நல்லபுலன்களென்கிற காட்டிலே யுழலுகின்ற கரணங்களுக்கெல்லாங்காரணமாய்நின்றவனேயென்றும் காரணங்கள்காணுகின்றதெல்லாந் தானுகின்ற வகைகாட்டினவனேயென்றும், அந்தக்கரணங்கள்தோறும்பிறம்புபிறம்பாயிருந்து அறிவைத் தாராமலிருந்தாயானாலுன்னைக்காரணங்களேது மறியா வென்றும் தேவரீரிருக்கின்றவகை இந்தவகை ஐயாவென்றுஞ்சொன்னார் அருச்சுனராசன்-எ-று. (௬௫)

ஆடியினில்வேறுபடத்தோன்றுகின்ற…………… *
வங்கிழலுமுணர்வினாலுணர்ந்துபார்க்கிற் ………*
கூடியவங்கிழல்போக்கிவேறில்லாமை……… ……*
குறியாலேநிகழ்ந்தாற்போற்குணங்களாலே……*
தேடியவிவ்வுடலூறுந்தோன்றித்தோன்றிச் ... ...*
சிவனாய்த்திகழுகின்றதிகழ்ச்சிதானும் ... ……*
பாடியவிம்மறைநெறியேயுணர்ந்துபார்க்கிற் ... ...*
நீயல்லாவகையுண்டோபரமயோகி……………*

(இ-ள்) கண்ணாடியிலே வேறாய்காணுகின்ற நிழலை அறிவினாலேயறிந்து அந்நிழலைப்போக்கி வேறில்லாமல் குறிப்பினாலேநீசொன்னமார்க்கப்பிரகாரம் பார்த்தால் மூன்றுவித குணத்தினாலே வந்த சகல தேகங்கள்தோறும் பிறந்து சிவனாய்த்திரிகின்ற இகழ்ச்சியெல்லாம் உலகத்திலே உன்னையல்லாமல் வேறேவகையுண்டோ பரம யோகியென்றுஞ்சொன்னார் அருச்சுனராஜன்-எ-று. (௬௬)

செறிவாகுமாடியிலாதிடத்திலங்கே ....*
திகழ்கின்றமுகநீழற்செய்கைதானும் ....*
பிறிவாகிவேறுபடத்தோன்றுதேமுன்..............*
பேசுகின்றமுகமேயாய்ப்பேதமகன்றுப்போ ... *
னெறிவாழுங்கரணங்களெல்லாமெய்த்து...........*
நீயேயாயொழிவின்றிநித்தியாகி ....*
யறிவானுமறிபொருளுமன்றியொன்றே ....*
யாயிருக்குமதுவேநின்னியற்கையாதி ....*

(இ-ள்.) கண்ணாடியிலேகண்ட முகத்துநிழலுடைய செய்கையை ப்பிரிவாய் வேறாகவெண்ணாமல் துலக்கமான கண்ணாடியில்லாத இடத்திலே இருக்கின்ற முகம்போலப் பேதமில்லாமலும் நெறிவாழ்கின்ற காரணங்களல்லாமலும் போக்கி நீயேயாகி ஒழிவில்லாமல் நித்தியமாயறிகிறவனு மறிந்தபொருளான வஸ்துவும் புறம்பும் இல்லையென்றாக விருக்கின்றது மதனாலே உன்னுடைய இயற்கையென்று மாதியாயிருக்கின்றவனேயென்று சொன்னார் அருச்சுனராஜன்-எ-று. (௯௭)

ஆதித்தன்றானொருவனாகிநின்றே ....*
யகமேறுமமர்ந்திருந்துபுனல்கடோறும் ... .*
பேதித்துப்பலவாகித்தோன்றினாற்போற் ... .*
பிறிதின்றிநீயேயாய்ப்பிணக்கிறந்துநின்றே...... *
வாதித்தமதியாகிகரணந்தோறு ....*
மற்றவைபோற்றோன்றுகின்றமாயவனேமெய்ம்மை.
சோதித்துநின்பெருமைசொல்லுதற்குமேலைச் ... *
சுருதிகடாமல்லவோசொல்லிறந்தசோதி ... ...*

(இ-ள்.) சூரியனானவன் ஒருவனாக இருந்தும் வீடுகள்தோறும்வைத்திருக்கிற குடத்துத்தண்ணீர்கள்தோறும் பேதித்து பலவாய்க்கண்டதுபோலப் பிரியாமலெங்கும் நீயாய்சாந்தமடைந்து ஆதித்தனைப்போல் ஏகமாய்கரணங்கள்தோறும் காணுகிறமாயனேயென்று உன்னைச்சோதித்து உன்பெருமையைச்சொல்லுதற்குச் சுருதிகளாலுஞ்சொல்லி முடியாது சொல்லிறந்த சோதியென்றுசொன்னார் அருச்சுனராஜன் என்றவாறு.

நிலையொன்றிச்சலிப்பின்றியொருவனேயாய்.........*
நின்றாலும்வானிரவிநிழலன்றாலே ... .*
யலையொன்றுநீரோடேயலைந்துமற்றும் ... .*
கசலமாநீரதனோடசலமாயுந் ....*
தலைநின்றுவரும்படிபோலறிவுதோன்று ....*
மவற்றுக்குத்தகநிற்குந்தகையோவுன்னை ... ...*
கலைநின்றமறைதெரியவல்லவாகக் ... .*
காட்டுவதுஞ்சிலர்கண்டாலாவதென்னோ ... ... *

(இ-ள்.) நிலையில்லாமலு மசைவில்லாமலும் எங்கும் பரிபூரணமா ருவனாகையாயிருந்தும் ஆகாயமெல்லாம் நிறைந்தும் நீராய் நீரோடே

[illegible] ப்போய்
லோகமிருக்கிறதுக்கு சேறு நுவாய் [illegible] திலே [illegible] பொருந்தி
திருக்கும் உனக்குக் கடைப்பிடியாய் [illegible]
திரங்களிலே [illegible] அப்படிக்கொத்த
[illegible] மையைக் கருமிகளுக்குக் காட்டுகிற [illegible] என்றும் [illegible]
[illegible] என்றுஞ்சொன்னார் அருச்சுனராஜன் எ-று. (௬௯)

ஒரொன்றுமற்றிலபமிருள்கள ....*
[illegible] பொருள்களைத் [illegible] ...*
சிலொன்றுகன்மகதிரவிகாட்டுந்து......... ....*
செயல்போலப்பாவர்களுஞ்செய்வினைகளெல்லா *
மாரொன்றுகன்மகதிரா [illegible] பானே.........................*
யருங்காலமொன்றிலேயிருந்து [illegible]..........*
னொன்றுபுனைபொழிந்து செய்கின்றாய்நீ... .....*
நிற்கின்றவருளுடைய [illegible] யென்றோ ....*

(இ-ள்) பூலோகத்து [illegible] சீவராசிகளெல்லாவற்றுக்கும் [illegible] கமாயிருக்கிற சூரியன் [illegible] ஸ்தானத்திலே [illegible] இராத்திரிக்கு இருள்காட்டினதுபோல எவர்களுஞ்செய்கிற வினைகளெல்லாம் நீயேயென்று ஏகமாயிருந்து சத்துரு சகசரத்தைத் [illegible] யென்றும் ஒருகாலத்திலே யிருந்து [illegible] என்றும் ஒரு தேரின்மேலிருந்து பூலோகத்திலே சஞ்சரிக்கிற சூரியனைப்போலிருக்கிற ஞானவான்கள் [illegible] அறியேனென்றுஞ்சொன்னார் அருச்சுனராஜன் என்றவாறு. (எ0)

அலர்கதிரோன்காட்டிடவெப்பொருளுக்கண்டாய் ... *
கலைஞுழியப்பொருளை [illegible] ... ...*
விலகுறும்வெங்கதிர்காட்டற்கேதுவாகி......... ......*
யியாதொன்றுங்காட்டுமதுதானுமொன்றாய்........*
நிலவுறுமப்பொருளதுநின்வடிவமென்று....... ....*
நிறையிறைன்மறையின்முடிவிறந்ததேது...........*
பூலகமியக்குநுதாதிரினைமேக்கு....... ... .*
முரவோனையாருன்னையுணர்கிற்பாரோ... ....*

(இ-ள்) பிரகாசம்பொருந்திய சூரியனாலேசகலமான பொருளும் காணப்படுமென்று அந்த சூரியனையல்லாமல் சகல பொருள்களையும் விழிப்பியாதென்றும் ஆகாசத்தைபோல எங்கும் வியாபகமாயிருக்கிறவன் அவைக்காட்டுகிறதற்கு ஏதுவாகி எல்லாவற்றையும் காட்டுகிறவன் நீயேயென்றும் ஏகமாயிருக்கிறபேர் ஈறிவார்கள் அப்படி யிருக்கிறபேர் உன்னுடையவடிவமென்றும் [illegible] வேதத்தினுடைய முடிவுசொன்னதிலே உலகத்தார் அறிய ஆடக்குமாதிய பசுக்களை மேய்க்கிறவனேயென்றும் லோகத்திலேஉன்மகிமையை ஆரறியப்போகிறாரென்றுஞ்சொன்னார் அருச்சுனராஜன்-எ-று. (எக)

விண்ணினூற்கின்றமுகிற்படலமூடத்தன்னுடைய *
விழியதனைமறைப்பமேற்போய்க்... ... .*
கண்ணினூடுருவக்காண்கிலாதான் ... .*
கதிரோனையொளியிலனாய்க்கருதினாப்போ ... ...*
லெண்ணிலாதவர்களெலாமுன்னைமெய்யே ....*
யிறந்துபிறந்துழலுநீயென்றுகொள்ளப் ....*
பண்ணினுமுன்னுடையபான்மைபார்க்கிற்..........*
பற்றுண்டோவீடுண்டோபரமமூர்த்தி ... .*

(இ-ள்) ஆகாயம்போல மேகபடலமானது தன்னுடையகண்ணை மறைத்தபிறகு கண்ணினாலே யூடுருவப்பார்த்தபேர் சூரியனை மறைத்ததாகநினைத்ததுபோல உன்னைத்தியானம்பண்ணுகிறதற்கு அன்பில்லாதபேரெல்லாரும் பிறந் திறந் துழல்கின்றா ரோகமொன்றும் உன்னுடைய மகிமையைப்பார்க்கி லுனக்குப்பற்றுண்டோ வீடுண்டோபரமமூர்த்தியே யென்றுஞ்சென்னார் அருச்சுனராஜன்-எ-று. (எஉ)

உலவாதபெருவானமெங்குந்தானே. ... .*
யூடுருவிநின்றாலாங்கதனோடொன்றுந் ... .*
கலவாதவகைபோலிவ்வுலகமெங்குங்...... ....*
கலந்துனையாநின்றாலுங்கணித்தற்காகாப் ... ...*
பலவாயவுலகங்களுன்னோடொன்றும்...............*
பற்றாதவகைநின்றபரிசுகண்டாற்... ... .*
குலவாயமகனாகியனெய்யுண்டு........ ....*
கோகுலமேய்த்திடுவதற்குக்குறைபாடுண்டோ. *

(இ-ள்) விஸ்தாரமான ஆகாயம் அசைவில்லாமல் எங்கும் வியாபித்து ஊடுருவியிருந்தாலும்அத்தோடே ஒன்றுஞ்சேராது அந்தவகை போல இந்த உலகமெங்குங்கலந்து நிறைந்திருந்தாலும் பலவிதமான உலகங்கள் நின்னோடே ஒன்றுஞ்சேராது, ஒன்றுஞ்சேராம லிருக்கிறவருக்கு ஆயர்குலமகனாகி ஆ னெய்யுண்டு பசுக்களை மேய்த்தாலொன்றாலுங் குறையுண்டோவென்றுசொன்னார் அருச்சுன ராஜன்-எ-று. (எ௩)

விடுத்ததொழிலினவாகிநின்றவேறும்...... ....*
வேறுசிலகூடுதலால்விகாரம்போன்றிட்.......... ...*
டடுத்ததுங்காட்டும்பளிங்குநீரினோடே...... ....*
யலைகின்றவவிர்மதியம்போலவாங்கே......... ......*
தொடுத்தமனமுதலாயகரணந்தோறு...... ....*
மாங்கவற்றின்தொழில்புரிவாயாகித்தோன்றுங்......*
கடுத்ததிறலாழியுங்கையுடையாயுன்னை... ... .*
கண்ணினாற்காண்கின்றார்கண்டபரிசுண்டோ ... ...*

(இ-ள்.) ஒருகாரியமுஞ்செய்யாமல் விட்டுவிட்டு இருந்தாலும்மன முதலான காரணங்கள் வேறேன்று அத்துடனேயும்சேருகிறத்தினாலே விகாரஞ்செனிக்கும் அதெபபடியென்றால் பளிங்கிலடுத்தது காணுகி

பாலும், நீ செய்ய ப்ரசந்திரமே உன்னுடைய தொழில்ச்சட்டப்பாயென்று சங்குசக்கரம் தரித்த கையனேயென்றும் கண்ணிலே காண்ப்பதற்கு சமயமுண் டோவென்றுஞ்சொன்னார் அருச்சுனராசன்-எ-று. (எச)

பொற்புடையகுடத்துவிளக்கொன்றுட்டுவை ......*
புகழ்தோறுமவ்விளக்கெல்லாமு ......*
பற்பலவாமெனத்தோன்றும் போலப் .. ..*
பரிசோதித்தெழுந்துள்ளடப்புருவே........ *
நிற்பனவாநடப்பனவாமுடம்பதோறு ....*
நின்றுப்போலிருக்கின்ற நீயேமைகண்டா .... *
லற்புதம்வேறிதிலுண்டோமாயாவுன்னை .... *
யாராயாவறிவுடையோர்க்கறியலாமே .... *

(இ-ள்) சல்லடைக்கண்போலிருக்கிற குடத்திலே திருவிளக்கைத் துப்பார்க்கப்பார்க்க நிதானப்படாமல் பலபலவாய்க்காணும், அதுபோல் அன்பில்லாமல் மனவழுக்கினாலே பிறந்ததாபரசங்கமமாய்ப் பிறக்கிற ரூபங்கள்தோறும் வியாபித்திருக்கிற நிலைமையைக்கண்டால் அற்புதமான அதிசயம்வேறேயுண்டோவென்றும் மாயவனே உன்னையறிவிலே ஆராயாதபேருக்கு அறியப்போமோவென்றுஞ்சொன்னார் அருச்சுனராசன் எ-று. (எரு)

கதிரொளியைக்கண்காணுங்கண்ணுள்ள ....*
காத்திமிரத்தையந்தக்கதிரோன்காணு ....*
மதிசயமேயெனதுன்னையுலகுகாணு ... .*
வல்லுலகைநீகாண்டியாதலாலே ....*
விதமொழியுஞ்சாஸ்திரமுந்தெரியமட்டா ... . *
மெய்ப்பொருளேயுனைக்காணவேண்டிமேலாந ...*
துதியெனநின்றவைசொல்லிமலர்கடூவிச் ....*
சுரர்களுமுனிக்கணமுந்துதிப்பதெல்லே ...*

(இ-ள்) சூரியப்பிரகாசத்தைக் கண்ணறியாது, கண்ணிலுண்டான காசபடலத்தை அந்தச்சூரியனறிவான், அதுபோல அதிசயமான உன்னை உலகமறியாது; அந்த உலகை நீயறிவாய், அதுவுமல்லாமல் வேதசாஸ்திரமும் உன்னைக்காணமாட்டாது, உன்னைக்காண மெய்யான வஸ்துவேயென்றுந் தேவகணங்களும் முனிகணங்களும்மேலானஸ்துதி பண்ணி புட்பங்களினாலே அருச்சனைபண்ணுவாரகளென்றுஞ் சொன்னார் அருச்சுனராசன்-எ-று. (எகு)

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

பிணித்தபிறவிப்பெருந்தளையைப்பெயர்க்கும்பெருப்பேறுமாயகோவை
தணித்தவாசேயெனக்கதுதான் மகாமேருபாகத்தமாகத் ....*

துணித்தவிறல்வன்போரினையே தொடங்கென்றே நீயெனக்கிங்குப் ..
பணித்தபடியேசெய்வனெனப் பார்த்தனவனுமுடன்பட்டான்........

(இ-ள்) கடினபிறவியாகியபெரிய விலங்கையறுத்து நீக்கினேன்பெரிய அஞ்ஞானமாகிய வியாதியைத்தீர்த்த கர்த்தனே, எனக்கு அந்தச்சண்டையாகாததே, ஆனதாகட்டும் எப்படியாகிலுந்துணிந்ததாகிய வெற்றியுள்ள பெரியசண்டையையே தொடங்கென்று நீரிங்கே ஏவினபடியே செய்வேனென்று அருச்சுனனுஞ்சமதித்தான்-எ-று. (எஎ)

கலி விருத்தம்.

மாதவனுந்தனஞ்சயனுந்தங்களிலேயடுத்துரைத்த ... ...*
வோதரியபொருளினைநீயுணர்ந்தவாறெங்ஙனெனில் ... ...*
வேதவியாசனனுடையமெய்யருளேமிகவுடையே ....*
ஞாதலினலறிந்தனன்வேறறியலாம்வகையுண்டோ ... .*

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் அருச்சுனனும் தங்களிலே இப்படி சந்தோஷப்பட்டுச் சொன்னதையாவராலுஞ்சொல்லவரிதான அர்த்தத்தை நீயறிந்தவழி யெந்தவழியென்றுகேட்டீராகில் சொல்லுகிறேன் கேளும் திருதராட்டிர மஹாராஜாவேயென்று (சஞ்சயன்) சொல்லுகிறான் (வேதவியாசமஹாமுனிடைய சத்தியமான கிருபையை மிகவுமுடையவனானபடியினாலே அறிந்தேன்) அவர்கிருபையல்லாமல் வேறுவிதங்களிலே அறியலாகும் வகையுண்டோயில்லை-எ-று. (எஅ)

அப்பொருளைநினைந்தோறுமற்புதமாமகமகிழ்வ ....*
மெய்ப்பொழுதுவருமவன்றனிருக்கின்றவகைவிரித்த.......*
வொப்பரியதிருக்கோலமுணர்தோறுமுணர்தோறுஞ் ......*
செப்பரியபெருங்களிப்பின்சிந்தையிலேசிறக்குமால் ... ...*

(இ-ள்) அவர்களிருவரும் பேசிக்கொண்ட அந்த அருத்தத்தை நினைக்கிறபோதெல்லாம் அதிசயமான ஆனந்தமும் நிஷ்டையும் எப்போதும்வருகின்றன அந்தக்கிருஷ்ணசுவாமிதாமிருக்கின்ற விராட்டுரூபவகையைவிரிவாகக்காட்டின ஒப்பில்லாத விசுவரூபமாகிய திருக்கோலத்தையும்போதெல்லாம் என்னுடையமனதிலே சொல்ல அரிதானபெரியமனக்களிப்பு மென்மேலு மதிகமாகுது-எ-று. (எகூ)

எஞ்சவிலாப்பொருளதனையிப்படியேபுகுந்தேனச் ....*
சஞ்சயனின்றெடுத்துரைப்பநூற்றுவர்க்குத்தாதையாய் ...*
வஞ்சனையேகண்ணாகவாழ்கின்றான்மற்றிவர்க்குப் ... .*
பஞ்சவரேவலியவரென்றிவ்வண்ணம்பகராலுற்றான் ....*

(இ-ள்) குறைவில்லாத இந்த அருத்தத்தை இந்தப்படியேநடந்ததென்று வகையாக வெடுத்து நின்று சஞ்யன் சொல்லக் கௌரவர் நூறு பேருக்குந் தகப்பனாகிய முகத்திலே கண்ணில்லாமல்வஞ்சனையே கண்ணாகவாழ்கின்ற திருதராட்டிரன் இவர்களாகிய கௌரவர்க்குப் பாண்டவர்களான பஞ்சவரே வலியவர்களென்றறிந்தபடி சொல்லுகிறான்-எ-று

கலி விருத்தம்.

ருவநீதிசெயம்புகழெல்லா, மருவருமாயைசெய்மாதவன்வாய்மை *
நருமம்விடாததனஞ்சயனென்று, மிருவருநின்றவிடத்தனமென்றான் *

(இ-ள்.) அழகுள்ள தருமம் நீதி செயம் கீர்த்தி இதுவெல்லாம் எங்கயிருக்குமென்றால் யாருங்கண்டு கூடப்படாதமாயை செய்யப்பட்ட ஸ்ரீகிருஷ்ணசுவாமி சத்தியத்தையும் தருமத்தையும் விடாத அருச்சுனனென்று சொல்லப்பட்ட இருவரும் நின்றவிடத்திலிதுவெல்லாம் இருக்குமென்றான் எ-று. (௮௧)

என்றபொருட்டிறமிப்படியென்றுக்..................*
குன்றமெடுத்தருள்கொண்டல்பணிப்பான்..........*
வென்றகுலத்தின்வியாசன்விரிப்பா...... ....*
னின்றவருக்கிதுநேர்படவன்றே............ ....*

(இ-ள்) என்றுசொல்லப்பட்ட பொருளினுடைய வகையை இப்படியென்று அந்தக் கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத்தடுத்துப் பசுக்களையு மிடையரையுங்காத்த மேகரூபமான ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொல்லுவார் அவர் சொன்னதை யெல்லாகுலத்துக்கு மேலான வெற்றிபொருந்திய பிர்மரிஷியாகியவேதவியாச மஹாமுனி விரிவாகப்பாடுவாரிவர்களிருவருமே உபதேசிக்கவும் பாடவும் வல்லவர்கள் அல்லாமலிவர்களைத்தவிர நின்றமற்றபேர்களுக்கு இதுசொல்லவும் பாடவு முடன்படமாட்டுமோ மாட்டாது-எ-று. * (உடன்படல்மனதுக்கெட்டுதல்.) (௮௨)

இதுவுங் கலிவிருத்தம்.

வேதநூல்களின்முடிவினைவியாசனிற்பின்ன ... *
ரோதநீள்கட லுலகிலுண்டாக்கியபுரவோன்......*
கோதிலாநெறியுணர்ந்தகோவிந்தமாமுனியின்...*
பாததாமரைப்பற்றிவிட்டின்பமேயடைத்தான் .*

(இ-ள்.) இந்தவேதாந்தத்தை வியாசமஹாமுனிக்குப்பிறகு நீளமுடைய கடல்சூழ்ந்த வுலகத்திலுண்டாகிய பெரியவரா குற்றமில்லாத முத்திமார்க்கத்தையறிந்த கோவிந்த மகாமுனிய பாதாரவிந்தத்தைத் தெப்பமாகப்பிடித்துப் பிறவிக்கடலைக் மோட்சமாகிய கரையிலேறி பிறவிக்கடலை லலைந்த அனேககால முந்தீர்ந்து ஆனந்த சுகத்தைப்பெற்றவர் எ-று.

கலிவிருத்தம்.

ஆற்றியல்வழுவியபுலன்களைந்தையும்......... ...*
பாற்றியசங்கரபகவற்பாதனென்....................*
றேற்றியபெயரினனருளினலியான்.................*
சாற்றியதிப்பெருந் தருமநூலையே......... ....*

(இ-ள்) மோட்ச மார்க்கத்தினுடைய சுபாவத்தைத் தவறின அந்த புலன்களையு மொன்றுபடச்செய்தவராகிய சங்கரபகவற் பாதன் ஏற்றி

வைத்த பெயரையுடைய கிருபையினாலே இந்தப்பெரிய தருமசாஸ்திரத்தை நான்சொன்னது-எ-று,

அறுசீரடியாசிரியவிருத்தம்;

சேயமாமதுரைநின்றுஞ்செம்மையாய்ப்பாடிதேடி ....*
யாயனுப் மாயனூர்தாமவதரித்தருளினாலே...... ....*
போயநான்மொழிந்தகீதை புலன்கடலடைந்தார்க்கன்றித். .*
தூயமாதவர்க்குமிந்தச் சுருதிநூல்கருதொணாதே... ... ...*

(இ-ள்) செவ்விய பெருமையுள்ள மதுராபுரியில்நின்றுந் திருவவதாரஞ்செய்தருளிச் செம்மையுள்ளதிருவாய்ப்பாடிதேடி இடையனாய்ப்பேர்ய்க்கிருபையினாலே அந்த அவதாரகாலத்திலேஅருளிச்செய்த (கீதையானது) பஞ்சேந்திரியக்கடலை யடைந்தவர்களாலே நினைக்கலாம் அவர்களல்லாமல் மற்ற சுத்தமான பெரியதவஞ்செய்கிறவர்களுக்கு மிந்தவேதாந்தநூலை நினைக்கப்படாது-எ-று. (அ௬)

தேற்பட்டகன்றுக்கன்று சேய்தனைச்சிதைசோழற்கு... ...*
நாற்பத்திரண்டுசென்ம நன்மையைத்தரித்ததாலே.........*
மேற்பட்டவேளானுதி வேதாப்பட்டாகானேனும்..........*
பாற்பட்டபத்திதன்னாற் பரமார்த்தமுண்டாமென்றார்... ...*

(இ-ள்) தேரிலேயகப்பட்ட பசுக்கன்றுக்குப்பதில் முன்னாலே பிள்ளையைத்தேரிலேகொடுத்த நீதிராசனாகிய சோழனுக்கு அந்நாள்முதல் நாற்பத்திரண்டு சென்மத்துக்கு நல்லதவமானபடியினாலே மேற்பட்ட வேளான்குடிமுதல் வேதாப்பட் டாகான யேயவருடையவுறுதியான பத்தியினாலே யுண்டானபரமார்த்ததெரிசனமென்றுஞ்சொன்னார்-எ-று.

கலித்துறை.

கட்டார்மயலிருட் காதபச்சோதி கலைநிரம்பி.................*
எட்டாதுயர்ந்தின்ப மாக்கலின்மாமதியெவ்வினையும் ... ...*
விட்டார்கள்விட்டபின் வேதச்சுடரொளிமெய்யுணர்ந்த ... *
பட்டாகனருளாம் பரமார்த்ததெரிசனமே... ....*

கனைபும்பே க்கள்(இ-ள்) உலகத்திலே யிருட்போன்ற மயலைக் கட்டார்களென்று மிருளுகாத புத்தியைச்சோதிப்பிரகாசமாய் எங்குமெட்டாம லுயர்ந்த இன்பமாகினபேர் எந்தவினையும்விட்டுவிட்டவர்கள் விட்டபிறகு வேதச்சுடரொளியை மெய்யா யறிந்த பட்டாகனிட கிருபையினாலேஅவர்களுக்குப்பரமார்த்ததெரிசனமென்றுஞ்சொன்னார்-எ-று. (அஎ)

௰அ-வது-உபநிஷத்துப் பிரதிபந்தன மோட்சயோக அத்தியாயம் முற்றுப்பெற்றது

ஆ அத்தியாயம் ௰அ-க்கு-கூடியசெய்யுள்-ருஎக.

பகவற்கீதை மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.